அ

குப்ர

ஒரு நற்ட

அல்லது

சாவித்திரி

குர்ஆனின் அபூர்வ தெய்வீக சக்தி

பப்ளிஷர்

9 APR 1932

மௌலவி அஹ்மத்ஷயீத் சாயபு

ஸைபுல் இஸ்லாம் ஆசிரியர்

சென்னை

ஸைபுல் இஸ்லாம் பிரஸில் அச்சிடப்பட்டது

—[*]—

து] 1931 [விலை ரூபா 1—0—0

27:21
N31
8838

குப்ரிஸ்தானில்

ஒரு நற்பாக்கிய ஆத்மா

அல்லது

சாவித்திரி

குர்ஆனின் அபூர்வ தெய்வீக சக்தி

பப்ளிஷர்

மௌலவி அஹ்மத்ஸயீத் சாயபு

ஸைபுல் இஸ்லாம் ஆசிரியர்

சென்னை

ஸைபுல் இஸ்லாம் பிரசில் அச்சிடப்பட்டது.

———[*]———

ரிஜிஸ்தர் செய்தது] 1931 [விலை ரூ 1—0—0

"அமயாத்தப குபரிஸ்தானில
ஒரு நற்பாக்கிய ஆத்மா"
அல்லது சாவித்திரி

என்ற இச்சரிதையை வட இந்தியா வாசியும் ~ரித்திர ஆராய்ச்சி நிபுணரும் டில்லி ஜமீஅத்துல் உலமா பிர மமெம்பருமான ஜனாப் ஷம்ஸ்ஷல்இஸ்லாம் அவர்கள்நவீன வலின் தோரணையில் வரைந்து "அல்ஜமீஅத்து" பத்திரிகை ல் தொடர் வியாசமாக வெளியிட்டு வந்தார். பின்னர் அதை த்தகரூபமாக வெளியிட்டுள்ளார். அப்புத்தகத்தில் அவர் ரைந்துள்ள முகவுரையில் அல்ஜமீஅத்து பத்திரிகா வாசகர் ில் ஏராளமானவர்களின் வேண்டுகோளுக் கிணங்கியே புத் மாக இதை பிரசுரித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

நாம் நமது "ஸைபுல் இஸ்லாத்"தில் இதன்ஒருபாகத்தை ாடராகபிரசுரித்ததைக்கண்ட ஸைபுல்இஸ்லாம்வாசகர்களில் நூற்றுக்கணக்கானவர்கள் இதைபுத்தகமாகவெளியிடவேண்டு மெனகோரிக்கொண்டனர். மேலும்இந்நூலில்நமது பரிசுத்த திருவேதமாகிய குர்ஆனின் தெய்வீக அபூர்வசக்தி வெளியா வதோடு முஸ்லிமல்லாதார் குர்ஆன் கட்டளைகள் மீதும் இஸ் லாம் மார்க்க சட்டங்கள் மீதும் கொள்ளும்சந்தேகங்களுக்கும் கேள்விகளுக்கும் அவர்கள் திருப்தி அடையுமாறு புத்திக்குப் யுக்திக்கும் சுருதிக்கும்ஏற்றவாறுதக்கபதில்அளிக்கப்பட்டிருக் கிறது.ஆனதுபற்றிஇதைகண்ணுறும்முஸ்லிம்அல்லாதார்கட்கு இஸ்லாம் மார்க்க கட்டளைகள்மீது உதிக்கும்சந்தேகங்கள் முற் றும் நிவர்த்தியாகிவிடுமென்பதிலும் இஸ்லாம் மார்க்க கட்டளை கள் மீது இதர மதவாதிகள் சந்தேகங்கள் கொண்டு வினவும் ஐயவினாக்களுக்கு தக்கபதில் அளிக்கும் ஆற்றலும் திறமை யும் இதைக்கண்ணுறும் முஸ்லிம்கட்கு உண்டாக்கி விடுமென் பதிலும் சந்தேகமில்லை. இதுகாரணம் பற்றியே இந்நூலை நாம் வெளிப்படுத்தி யுள்ளோம். குர்ஆன் ஷரீபின் தெய்வீக சக்தியானது இஸ்லாம் மார்க்க பக்தியும் தூய்மை யான இருதயமுமுடைய முஸ்லிம் பெரியார்கள் அநே

[illegible]

மார்க்கத்திற்கு ஈர்ந்து கொண்டிருப்பதை கேட்கும் சிலருக்கு ஆச்சரியமோ சந்தேகமோ உண்டாகலாம். ஆனால் உண்மையில் அவ்வாறு சந்தேகிக்க ஞாயமில்லை. ஏனெனில் இவ்வித நற்பாக்கியம் ஆண்டவனது கருணைகடாக்ஷத்தினால் உண்டாகக் கூடிய நேர்வழியாகும். "அதை நான் நாடிய அடியார்கட்கு அருள் புரிவேன்" என ஆண்டவனே கூறியிருக்கின்றான். நமது நபிகள் நாயகம் திரு குர்ஆனை ஜனங்களுக்கு ஓதிக் காட்டி பிரசாரம் செய்யும் காலத்தில் சிலர் நேர்வழிபெற்றும் சிலர் நேர்வழி பெறாமலும் இருந்து வந்தனர்கள் என்பது வெளிப்படை. அச்சந்தர்ப்பத்தில் ஜின்களின்கூட்டமொன்று குர்ஆன் ஷரீப் ஓதப்படுவதைக் கேட்டதினால் அந்த ஜின்களின் இருதயம் கவரப்பட்டு அந்த ஜின்கள் தங்கள் இனத்தாரிடம் தாங்கள் செவியுற்ற குர்ஆன் ஷரீபின் தெய்வீக சக்தியையும் மகிமையையும் எடுத்துக்கூறிய விபரம் குர்ஆன் ஷரீபின் சூரத் ஜின்னில் வருகிறது. இவற்றையெல்லாம் கவனிக்கில் இந் நூலின் கதாநாயகியான பெண்மணியின் இருதயம் குர்ஆன் சக்தியால் கவரப்பட்டது ஆச்சரியமாகாது. இதைப்போன்ற உதாரணங்கள் பல சரித்திரங்களில் காணப்பட்டுள்ளன. இக் காலத்திலும்கூட மேனாட்டில் பல மேதாவிகள் புத்திமான்கள் மலிந்து இருக்க அவர்களில் சிலர்களின் ஹிருதயத்தில் குர் ஆன் ஷரீபின் தெய்வீகசக்தி ஒளிபாய்ந்து ஊடுருவிச்சென்று அவர்களை இஸ்லாம் மார்க்கத்தில் சேரும்படி செய்துவருவதை கண்கூடாகக் காண்கின்றோம். ஆனதுபற்றி இதை அசம்பாவிதமென்றோ ஆச்சரியமென்றோ கருதுவதற்கில்லை என்பதே எமது துணிபு. இந்நூலை வாசிக்கும் நேயர்கள் முக்கியமாக முல்லாஜி பெரியார் கூறும் சந்தேக நிவாரண விடைகளையும் குர்ஆன் ஷரீபின் அரிய தத்துவங்களையும் நன்குணர்ந்து ஞாபகத்திலிறுத்திக் கொள்வார்களாக. இப்படிக்கு,

(மௌல்வி) அஹ்மத் சயீத்.

(ஸைபுல் இஸ்லாம் ஆசிரியர்) சென்னை.

அயோத்திய குப்ரிஸ்தானில் ஒரு நற் பாக்கிய ஆத்மா

பரிசுத்த குர்ஆனின் தெய்வீக சக்தி

(பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர்ரஹீம்)

அத்தியாயம்—1.

காரீ குதா பக்ஷ் என்பவர் இனிய சாரீரம் மிக்க காரீயாக (குர்ஆன் ஓதக் கூடியவராக) இருந்தார். பரிசுத்த குர்ஆனை அதற்குரிய சட்ட ஒழுக்கத்தோடும் அராபியத் தோரணையில் மனதைக் கவரும் இனிய குரலோடும் வாசித்து வருவார். இவர் ஓதுவதைக்கேட்கும் ஜனங்களின் மனதில் ஒரு அற்புதமான குணமும், வசியமும் எற்பட்டு வருவது சகஜமாய் இருந்தது. அனுதினமும் விடியற்காலை "சுபஹா" தொழுகைக்குப் பின் ஒன்று அல்லது இரண்டுமணி நேரம் வரை பரிசுத்த குர்ஆன் ஷரீபை பாராயணஞ் செய்வது இவரது நித்திய வழக்கமாய் இருந்து வந்தது. இந்த காரீசாஹிப் மஸ்ஜிதின் முற்றத்தில் உட்கார்ந்து மிகவும் இனிய சாரீரமாய் உருக்கத்தோடு ஆண்டவனின் கலாம் ஷரீபை ஓதும்போது அதை தற்செயலாய் கேட்கும் வழிப்போக்கருங்கூட ஒரு க்ஷண நேரம் நின்று கேட்டுச் செல்வார்கள்.

நமது காரீசாஹிப் இருந்து வந்த பள்ளிவாயிலானது பெரும்பாலும் ஹிந்துக் குடிகள் வசித்துவந்த பகுதியிலேயே இருந்து வந்தது. அதன் சுற்றுப் பக்கங்களில் ஒரு முஸ்லிமின் வாசஸ்தலத்தைக்கண்ணுறுவதும் மகாசிரமமாகவே இருந்தது. ஆனால் அந்த பள்ளிவாயிலை அடுத்து பண்டிதராம் கோபால் என்பவரின் வீடுதான் மகாசிறப்பாய்க் காணப்பட்

டது. இந்த மூர்க்க ஹிந்துவோ, காலையில் எழுந்து ஒரு முஸ்லிமின் முகத்தைப் பார்த்துவிடுவதாயும் மகாக் கொடிய பாபமாய்க் கருதக்கூடிய கட்டாக் காபிராக இருந்தார். அவர் வீட்டில் வாழும் ஒவ்வொரு குழந்தையுங்கூட முஸ்லிமின் பேரைக் கேட்பதையும் பெருத்த துவேஷமாய்க் கருதி வந்தது. ஆனால் அப்படிப்பட்ட இல்லத்தில் ஒருபரிசுத்தஆத்மாவும் இருந்து தான் வந்தது. இது பரிசுத்த குர் ஆன் ஷரீபை தவறாமல் அதிக இன்பத்தோடு செவி சாய்த்துக் கேட்டுக் கொண்டு வந்தது. இந்த நற்பாக்கிய ஆத்மா யாரெனின், அந்த பண்டித ராம் கோபாலின் யௌவன இள மருமகள் சாவித்திரியே யாவள். இவள் ஒரு முறை தற்செயலாய் நமது காரீஸாஹிப் கலாம் ஷரீபை ஓதுவதைக் கேட்டு இன்புற்றாள். எனவே, அது தொடுத்து தினமும் தவறாமல் (மஸ்ஜிதை யடுத்துள்ள) தம் வீட்டு மேன்மாடியில் ஒளிந்து கொண்டு குர் ஆன் ஓதப் படுவதை கேட்டுக் கொண்டு வந்தாள்.

இந்த சாவித்திரி என்னமோ ஒரு கட்டா பிராம்மணனின் வம்சத்தில் ஜன்மம் எடுத்து விட்டாள். இவள் அங்ஙனே வளர்ந்து பெரியவளாய் யௌவன குமரியாகவும் ஆய்விட்டாள். அவள் வாழ்க்கைப்பட்ட வீடும் பல மாதங்கள் வரைக்குங்கூட முஸ்லிமின் பேரையும் கேட்டுணராத கொடிய காபிரின் புக்கிடமாகவே இருந்தது. நிலைமை இங்ஙனமிருந்தும் இப்புனித வதியை ஆண்டவனின் வேதத்தில் விசுவாசங் கொண்டுள்ள உத்தமியென்றே கூற வேண்டும். ஏனெனின், இவ்வனிதா மணியின் ஹிருதயத்தில் கலாம் ஷரீப் ஓதப்படுவதை உருக்கமாய் கேட்க வேண்டுமென்ற பெருந்தவசிய ஆசை வேரூன்றி போய் இருந்தது. எனவே அவள் தினந்தோறும் குர்ஆன் பாராயணத்தை செவியேற்றுக் கொண்டே இருந்தனள். இந்தப் பக்கலில் (பள்ளி வாயலில்) காரி சாகிப் குர் ஆன் திலாவத்தை ஆரம்பிப்பார். அப்பக்கம் (தன் புக்கத்தில்) சாவித்திரி மாமி முதலியவர்களின் கண் மறைவில் தன் மேன்மாடியிலுள்ள அறையின் ஜன்னலுக்கருகே இருந்து கொண்டே கேட்டாள். எதுவரைக்கும் குர்ஆன் ஓதப்படுகிறதோ அதுகாறும்

அவள் அவ்விடத்தை விட்டு ஒரு கணமும் அகலாமல் இருப்பாள். அவளின் மனத்தே பரிசுத்த வேதவாக்கியங்களை கேட்டுக் கொண்டே இருக்க வேண்டுமென்ற ஒரு வித சத்தியக் கிளர்ச்சியும் அவாவும் எழும்பிக் கொண்டே இருந்தன. இப்படிப்பட்டவள் குர்ஆனைக் கேட்டுக்கொண்டிருக்கு மிடையே தன்னையு மறியாது சித்தப் பிரமையும் கொண்டவளாயும் ஆய் விடுவாள். அக்காலை அவளின் மீ லோசன நீரூற்றினின்றும் கண்ணிர் துளிகள் முத்துசரம்போல் தானேஉதிர்ந்துகொண்டிருக்கும்.

நாம் மேலே பிரஸ்தாபித்தவாறு நமது சாவித்திரி உண்மை யுணர்ந்தறிய மௌடீக மூதாதைகளிட மிருந்து முஸ்லிம்களைப்பற்றி இவர்கள் வஞ்சகர்கள் துஷ்டர்கள் கொடியவர்கள் என்றும் மற்றும் விதமாகவும் அறிந்திருந்தாள். எனவே அவளுக்கு முஸ்லிம் இஸ்லாம் மத வேதத்தைப்பற்றிய எப்படிப்பட்ட தத்துவமென்று தெரிந்து கொள்ள முடியாமலேயே அவளுடைய நிலைமை இருந்து வந்தது. மேலும் அவளின் உள்ளத்தில் சுயமே உண்மையை உணர்ந்து கொள்ளுவதற்குரிய ஞான சக்தியும் இருக்கவில்லை. பரிசுத்த குர்ஆன் வாக்கியங்களில் மிலர்ந்திலங்கும் அர்த்த புஷ்டிகளையும் அவளால் கிரகித்துக் கொள்ள முடியாமலுமிருந்தது. ஆனால் குர்ஆன் ஷரீபின் வெறும் பதங்கள் மட்டுமே அவளின் மனத்துள் சித்திரம் போல் பதிந்து உறுதிப்பட்டுப் போயிருந்தன. இதனால் இவ்வரிய வேதத்தில் தெய்விக சக்தி மிக்க நீதி போதனைகளிருக்கலாம். அவைகள் எவரின் மனத்தையும் பரிசுத்தப்படுத்தி ஒழுக்கத்துக்குக் கொண்டு வரலாமென்ற உண்மையானது அவளின் மனத்தே உதித்து விளக்கியது.

பல நாட்கள் இவ்வாறே கழிந்து கொண்டு போயும் நமது சாவித்திரி தேவியின் உள்ளக் கிடக்கையில் எத்தகைய விகல்பமும் ஏற்படவே இல்லை. அவள் அனுதினமும் குறிப்பிட்ட காலத்தே மேன்மாடியிலுள்ள தன்னறையில் ஜன்னலருகே வந்து விடுவாள். காரீ சாகிபால் ஓதப்படும் குர்ஆன் ஆயத்துகளை செவி சாய்த்து கேட்டு நிற்பாள். மேலும் அ

ளின் மனத்துள் எப்படியேனும் இப்பரிசுத்த வேத வாக்கியங்களின் தத்துவப் பொருள்களை தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வமானது அதி உறுதியாக ஏற்பட்டு விட்டது. இந்த ஆசையானது அதிகம் அவளை தூண்டிக் கொண்டுதான் வந்தது. ஆனால் பலன் தரும் வழிதான் அவளுக்குப் புலப்படாமல் சிக்கலாய் இருந்தது. ஏனெனின் இவ்விஷயத்தில் பற்பல விதமான தடைகளும் குறுக்கிட்டுக் கொண்டிருந்தன. அதாவது இவள் சுயமே காரீ சாகிபிடம் சென்று இதைப் பற்றி விசாரித்துணர வேண்டுமெனபது ஒரு ஹிந்துப் பெண்ணால் எளிதில்ஆகக்கூடிய காரியமாயில்லை. மேலும்அத்துடன் தான் வாழ்க்கைப்பட்ட அவ்விடத்திலுள்ள எவரிடத்திலேனும் இதைப் பற்றி கேட்டறியலாமென்றாலோ அங்குள்ள சின்னஞ் சிறுவர்களுங்கூட முஸ்லிம் என்ற பேரைக் கேட்பதிலும் வயிறெரிந்து கொண்டிருந்தனர். அப்படித் துணிந்து அவள் அங்குள்ள எவரிடமேனும் கேட்டுவிடுவாளாயின் இப்போது அவள் அனுதினமும் அன்போடு செவியிலேற்று வரும் குர்ஆனின் இனிய ஓசையும் அன்றோடு அற்றுப்போகும். எனவே இப்படிப்பட்ட குழப்பத்தினூடே அவளின் மனப் பிராப்தம் பலனடையாமலிருந்து வந்தது.

இவ்வாறே சில நாட்கள் தான் கழிந்துகொண்டு வந்தன. இதுவரைக்கும் யாவருக்கும் சாவித்திரியின் இந்த மனமாறுதல் தெரியாமல்தான் இருந்தது. ஆனால் மாமியாரும் நாத்தினாளும் இவள் தினமும் அதிகாலை எழுந்ததும் மேன் மெத்தைக்குச் சென்றுவிடுகிறாள். ஒரு குறிப்பிட்ட ஜன்னலருகே குந்திக்கொள்கிறாள். ஆகிய இச்சமயத்தைக் கண்ணுற்றது அவளைப்பற்றி பலவிதமான தீய எண்ணங்களைக் கொள்வாராயினர். ஆனால் நமது சாவித்திரி முஸ்லிம்களின் மத வேதத்தை கேட்கவே மேலே செல்கின்றாளென்ற உண்மை எண்ணம் மாமி நாத்தி எவளுடைய பகுத்தறிவிலும் ஏறவேயில்லை. இதற்குப் பதிலாக சாவித்திரியின் நடத்தைகளில் தவறான விதமாக சந்தேகங்களையே கொள்ளலாயினர். எனவே அது தொடுத்து சாவித்திரியின் ஒவ்வொரு நடத்தைகளையும் இரகசியமாய் உள

வறிய ஆரம்பித்தனர். சாவித்திரி மேன் மாடிக்கு ஏறி வரும் போதெல்லாம் மாமியேனும் நாத்தியேனும் ஒளிந்தொளிந்து கண்ணேட்ட மிட்டுக்கொண்டே இருப்பர். திடுமென அவள் முன்னும் சென்று என்ன செய்கிறுள் என்றும் ஆராய்வர். ஆனல் அங்கு சாவித்திரியின் எத்தகைய துர் நடத்தையையும் அவர்கள் கண்டுகொள்ளவில்லை.

உத்தம சுந்தரியான சாவித்திரியைப்பற்றி மாமியும் நாத்தியும் கொண்டுள்ள துரெண்ணப்படி அவள் ஒரு சிறிதும் ஒழுங்கீனமாய் நடந்துகொள்ளவேயில்லை. அவர்கள் தீய அபிப்பிராயத்துக்கும் இவளின் சத்திய சிந்தனைக்கும் வெகுதூரம் வித்தியாசமிருந்தது. சாவித்திரி ஜன்னலில் எட்டிப் பார்ப்பதையும் அவ்விருவர்களும் தடை செய்திருப்பார்கள். ஆனல் இந்துக்களின் ஒழுக்சாசாரத்திலும் அவர்களின் ஜாதீய வ்ழக்கத்திலும் கோஷா இல்லாமல் அலேவதைப்பற்றியோ ஜன்னலில் எட்டிப் பார்த்துக்கொண்டிருப்பதுபற்றியோ எத்தகைய விலக்கலும் இல்லாமலிருந்தமையால் இவர்கள் தடையுத்தரவு பிறப்பிக்க வகையற்று இருந்துவிட்டனர். மேலும் முதன்முதல் சாவித்திரி மேன்மாடிக்கு வந்துகொண்டிருந்த போது ஜன்னலின் வாயிலாய் அப்புறமும் இப்புறமும் எட்டிப் பார்த்துக்கொண்டுதானிருந்தாள். அதன்பின் இவள் குர்ஆன் வேத வாக்கியங்களை உருக்கமாய்க் கேட்க ஆரம்பித்தது தொடுத்து கீழே எட்டிப் பார்க்கும் வழக்கத்தை முற்றும் விட்டுவிட்டாள். மேலும் இப்பத்தினி "நான் தினமும் இங்கு வந்திருந்து செல்வது மாமி வீட்டாருக்குத் தெரிந்துவிடுமாயின் என்னைப்பற்றி அவர்கள் தவருக சந்தேகம் கொள்வார்கள். இரகஸியமாகவும்என்னைபின்பற்றிஆராயத்தொடங்குவார்கள். அத்துடன் மேலிருந்து நான் கீழே எட்டிப் பார்ப்பதைக்கண்டு கொள்வார்களானல் அவர்கள் என்னை வெறுப்பதோடு நான் ஏதோ துராகிருதக் கருத்தோடு மேன்மாடிக்குச் செல்வதாக எண்ணிக்கொள்வார்கள். அதின்பின் முடிவாய் நான் மேன்மாடிக்கே போகக்கூடாதென்று முற்றும் தடுக்கப்பட்டுப் போவேன்" என்றெல்லாம் சிந்தித்துருகினுள். எனவே, அதன்

பின் அவள் மேன்மெத்தைக்கு வந்தால் அங்கும் இங்கும் எங்கும் எட்டியே பார்க்கமாட்டாள். மௌனமாய் உட்கார்ந்து தலை தாழ்த்திய வண்ணமே க்ரீ சாஹிப் ஓதும் குர்ஆன்வாக்கியங்களை உருக்கத்தோடு கேட்டுக்கொண்டிருப்பாள்.

எவ்வாறு, சாவித்திரி மேன்மாடிக்குச் செல்வதைக் கூடாதென்று விலக்கிவைப்பது ஆசாரத்துக்கு முடியாததாயிருந்ததோ, அவ்வாறே மாமி நாத்திகளின் மனத்தில் சாவித்திரியைப்பற்றி குடிகொண்டு போன தவருன எண்ணங்களில்ஒரு சிறிதை விலக்கிவிடுவதும் இயலாததாகவே இருந்தது. இவர்கள் தீயபிப்பிராயங்கள் தினேதினே வளர்ந்து பெருகிக்கொண்டுதானிருந்தன. சாவித்திரிமெத்தைக்கு போகுந்தோறெல்லாம் இவர்கள்தங்களுக்குள் சுட்டிக்காட்டிக்கொண்டு அவளைப்பற்றி மறைவில் குறைகூறிக் கொண்டிருப்பது போய், இறுதியில் சாவித்திரி மேல் மாடிக்குச் சென்ருல் அவளின் பிறகே எவரேனுமொருவர் உடன் சென்று அவளுடன் உட்கார்ந்து கொள்ளும் நிலைமையும் வந்து வாய்த்து விட்டது.

அத்தியாயம்—2.

நமது சாவித்திரி மறந்துங்கூட தப்பித்தவறி பலகணி வழியே பார்ப்பதேயில்லை. மாமியேனும் நாத்தியேனும் தன்னுடன் அக்காலை வந்திருப்பதால் எப்படிப்பட்ட சிரமமும் அவகாசமும் நேரிடுவதுமில்லை. ஆனல் சாவித்திரி ஏகாந்த வாசத்தில் மட்டும் மாமி நாத்தியின் வருகையில் முட்டுக்கட்டை விழுந்து விட்டது. ஏனெனின் அவர்கள் இவளுடன் எதையேனும் தொண தொணவென்று பேசிக்கொண்டிருக்கத் தூண்டுவர். இவளோ மௌனமாயிருப்பதை விரும்புபவள். ஏனெனின் தனிமையாய் மௌனித்திருந்து குர்ஆன் ஓதப்படுவதை கேட்டுக் கொண்டிருந்தாற்ருன் அவளின் உள்ளம் பரமஆனந்தமடையும். இதற்கு அவர்கள் தடையாயிருந்தனர்.

வழக்கமேபோல் சாவித்திரி ஒருதினம்மேன்மாடியில் பரிசுத்த கலாம் ஷரீப் ஓதப்படுவதைக் கேட்டுக் கொண்டிருந்தனள். அக்காலை தன்னினும் இளைய நாத்தியான பார்வதி

ஆங்கு உட்கார்ந்து கொண்டிருந்தாள். அத்துடன், இரு வயதுச் சிறுவனான கிருஷ்ணன் (சாவித்திரியின் அருமை புத்திரன்) அருகே வந்து விளையாடிக் கொண்டிருந்தான். இது காலை அதி உருக்கமாய் குர்ஆன் ஓதுதலை கேட்டுக் கொண்டிருந்த சாவித்திரியின் அழகிய நுண்ணிய நோக்குடைய கண்களிரண்டினின்றும் நீர்த்துளிகள் திடீரென வருஷிக்க ஆரம்பித்தன. சாவித்திரியின் இந்தச் சம்பவம் இதுதான் முதன் முறையாக வாய்க்கவில்லை. இவளின் உண்மையான மனோ உருக்கம் பன்முறையும் கண்ணீர் வடியுமாறு செய்து விட்டிருக்கிறது. ஆனால் பார்வதி அழகிய சாவித்திரி அழுவதைக் கண்டுக் கொண்டது இது தான் முதன்முறை. பார்வதிக்கும் சாவித்திரியின் விஷயத்தில் தூஎண்ணங்கள் இருந்த போதிலும் சாவித்திரி உண்மை யுரைப்பாளாயின் ஒப்புக் கொள்ளக் கூடியவளாயிருந்தாள். மேலும் அரிய சகோதரரின் பிரிய மனைவியாயும், அவளுக்கு சம வயதுடையவளாயுமிருந்தாள். எனவே, இவள் சாவித்திரி அழுவதைக் கண்டு தானும் துக்கித்தாள். கண்கள் கலக்கத்தோடு இருக்கும் சாவித்திரியை நோக்கி விசாரிக்கலானாள்.

பார்வதி:—சாவித்திரி! ஏன் நீ அழுகின்றாய், எனக்கு அதன் உண்மையைக் கூறு.

சாவித்திரி இதற்கு யாதோர் பதிலையும் கூறவில்லை. பழையபடியே பார்வையைக் கீழே செலுத்திக் கொண்டுகண்ணீரை முத்துப்போல் உதிர்த்துக் கொண்டிருந்தாள். மீண்டும் பார்வதி சாவித்திரியின் கழுத்தில் அன்போடு வலக்-கரத்தைப் போட்டுக் கொண்டு மேலும் வினவினாள்.

பார்வதி:—என்னருஞ் சாவித்திரி உன் அழுகைக்குக் காரணம் யாதென்பதை எனக்குக் கூறக்கூடாதா? அதென்ன எனக்கு கூறத்தகாதது ஏதேனும்ஓர் மறைத்து வைக்க வேண்டிய விஷயமா?

சாவித்திரி:—(மிகுந்த தணிந்த குரலில்) பார்வதி! அப்படிப்பட்ட விஷயமொன்றுமில்லை. இருந்தாற் போலிருந்து

மனம் ஏற்று வாட்டமுற்று விட்டது. அதுதான், வேறெந்த காரணமுமில்லை.

பார்வதி:—இல்லை. நீ எனக்கு அதை சொல்லக் கூடா தென்று மறைக்கிறாய். ஏதேனும் ஒரு காரணம் இருக்கத் தான் செய்யும்.

சாவித்திரி:—நேற்றைய முன் தினம் என் அன்னையிட மிருந்து கடிதம் வந்தது உனக்குத் தெரியும். அதில் தாயார் நோயுற்று இருப்பதாய் எழுதப்பட்டிருந்ததல்லவா? அதை தான் இப்போது நினைத்துக் கொண்டேன். துக்கம் வந்து விட்டது!

இந்த சம்பாஷணையும் இத்துடன் முடிவாய் விட்டது. அடுத்த மஸ்ஜிதில் காரீ சாகிபும் குர் ஆனை ஓதி விட்டு போய் விட்டார். சாவித்திரியும் பார்வதியும் மாடியை விட்டு இறங்கி வந்து விட்டனர்.

பார்வதி தனது அண்ணி சாவித்திரி இல்லாதிருக்கும் சமயம் பார்த்து தனது தாயிடம் மேல் மாடியில் சாவித்திரி கண்ணீர் விட்டழுததை பாடம் ஒப்பித்து விட்டாள். இவ் வழுகைக்கு சாவித்திரி கூறிய காரணத்தை அப்படியே எடுத்து வெளியாக்கி விட்டாள். ஒன்றும் விசேஷம் நடை பெறாமலேயே சில நாட்கள் சென்றுவிட்டன. வழமையைப் போல் மேன் மாடியில் உட்கார்ந்து சாவித்திரி பரிசுத்த கலாம் ஷரீப் ஓதப்படுவதைக் கேட்டுக் கொண்டிருந்தாள். என்ன மோ அதுகாலை அவளின் மாமியாரும் அவளருகே வெறும னே உட்கார்ந்து கொண்டிருந்தாள். தன்னையு மறியாது திடீரென சாவித்திரியின் கண்களினின்றும் கண்ணீர் துளி கள் வடிந்திருந்ததை மாமியார் நன்றாய்க் கண்டு கொண் டாள். முன்னரும் ஒருமுறை இவள் இவ்வாறு கண்ணீர் விட்டழுததாக தன் மகள் பார்வதி கூறக் கேட்டிருந்தாளன் றோ? இப்போதும் இவள் நேருக்கு நேராக அழுவதைத் தெ ரிந்து என்னென்னவோ யோசித்து இறுதியில் தன் மருமகள் சாவித்திரியை நோக்கி உசாவலானாள்.

மாமியார்:—சாவித்திரி நீ ஏன் இவ்வாறு மனவாட்ட முறுகிறாய். முன்னர் ஒரு முறை அழுது இருந்தாய். அதற்குக் காரணம் உன் தாயின் ஞாபகம் வந்து விட்டதென்று சமாதானம் கூறிவிட்டாய். இன்று அழுததற்குக் காரணமென்ன?

சாவித்திரி:—(சற்று நேரம் மௌனமுற்றிருந்ததன் பின் கூறலுற்றாள்) மாமியம்மா! நான் எதைச் சொல்வேன். என் மனதோ ஒரு நிலையிலுமில்லை. அது எனக்குட்பட்டு மில்லை. என் தாயகத்து ஞாபகம் வந்து விடுந்தோறெல்லாம் எனக்கு அழுகை தான் வருகிறது.

மாமியார்:—நீ இங்கு வந்து வாழும் இந்த இரண்டு மூன்று வருட காலம் வரை ஒன்றுமில்லா திருந்து சமீபமாய் சின்னாட்களாய் பெரிதும் அழுகையே மேற் கொண்டிருப்பதாய்க் காணப்படுகின்றாயே? ஏன்?

சாவித்திரிக்கு இதற்கொன்றும் பதில் சொல்ல இயலவில்லை. எனவே மௌனமாய் உட்கார்ந்து கண்ணீர் வடித்துக் கொண்டே இருந்தாள். சாவித்திரியின் அந்த மாமியார்க் கிழவிக்குத் திட்டத் தெரியாத தென்பதில்லை. சாவித்திரி கூறிய இந்த மெய்யற்ற காரணத்தை அவள் கேட்டு நிச்சயங் கொள்ளவில்லை. அவளின் ஆலோசனை வெகு தூரம் சென்றலைந்துக் கொண்டிருந்தது. அவள் அழுவதற்கு ஏதேனும் காரணம் இருக்கத்தான் செய்யும். ஏனெனில் அவளுக்குப் பகல் முழுதும் தாயகத்து நினைவு வருவதாய்த் தெரியவில்லை. வேறெந்த நேரங்களிலும் அழுவதைக் காணோம். ஆனால், இங்கு மெத்தைமேல் அதுவும் இந்த ஜன்னலருகில் வந்து உட்கார்ந்திருந்தால் தான் அழுகை வந்துவிடுவதின் காரணம் தான் தெரியவில்லை. இவ்வாறு அந்தக் கிழவி நீண்ட ஆலோசனையிலாழ்ந்திருந்ததன் பின் "சரி, இனிமேல் சாவித்திரியை மெத்தைமீது வரவொட்டாமல் தடைசெய்வதுதான் சரியான மார்க்கமாகும்" என்று, தீர்க்கமாய் முடிவு செய்துகொண்டு, சாவித்திரியை நோக்கி வினவினாள்.

மாமியார்:—சாவித்திரி, நீ இனிமேல் மேன்மாடிக்கு வர வேண்டாம். ஏனெனின் இங்கு ஏதோ காற்றுதோஷம் இருப்பதாய் சந்தேகிக்கிறேன். அதனுல்தான் உனக்கு இப்படிப்பட்ட மனமாறுதல் ஏற்படுகின்றது.

சாவித்திரி:—அம்மையே! இங்கு அப்படியொன்றும் தோஷங்களில்லை. எனக்குத் தாயகத்தின் ஞாபகம் வந்துவிட்டால்தான் இச்தகைய மாறுதல் ஏற்படுகின்றது.

மாமியார்:—அப்படியல்ல. இதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். நீ இங்கு வருவதை நான் சற்றும் சம்மதிக்க மாட்டேன்.

அருமை சாவித்திரிக்கு இஃதோர் பெருத்த துன்பமாகக் காணப்பட்டது. இவ்வாக்ஞையை ஏற்றுக்கொள்ளுவதென்பது அவளாலும் இயலாததாயிருந்தது. இத்தடை யுத்தரவை கேட்டதும் அவளின் (குர்ஆனை மோகித்த) மனது பெரிதும் பதறித் துடித்தது. அவளுடைய சுவாசப் போக்குவரத்தின் ஒழுங்கும் தவறியது. அவளின் அந்நேரத்து நிலைமை நடைப்பிணம் போல் காணப்பட்டது. வேறெவரேனும் அப்படிப்பட்ட உத்திரவைப் பிறப்பித்திருப்பார்களாயின் இவள் உடனே அதை எதிர்த்திருப்பாள். ஆனால் அந்த மாமி பெருந்துர்க்குணியாயும் ஒழுக்கமற்ற நாரியாயுமிருந்தமையால் சாவித்திரியால் ஒன்றும் எதிர்த்துச்செய்ய முடியவில்லை. இறுதியில் இப்புனிதவதி இரு கையையும் கூப்பிக்கொண்டு கூறலுற்றாள்.

சாவித்திரி:—மாமியம்மா! என்னை அப்படியெல்லாம் தடை செய்யாதீர்கள். எனது வாழ்க்கை நிலைமை இப்போது மிகவும் நொந்துப்போயிருக்கிறது. மீண்டும் என் விருப்பத்தைத் தடை செய்தால் என்னுடைய தேகசுகம் பாதிக்கப்பட்டுப் போகும்.

மாமியார்:—இல்லை, இது முடியவே முடியாது. நீ இங்கு வருவது என் விருப்பத்துக்கு முற்றும் விரோதமாகும். நான் ஒருபோதும் இங்கு வரவிடமாட்டேன். மேலும் எனக்கு மாற்றமாய் இருப்பாயானல் ஆண்பாலரிடம் சொல்லி உன்னைப் பிரஷ்டம்செய்யச் சொல்வேன்.

இரக்கமற்ற மாமியின் இக்கொடிய வசனத்தைக் கேட்டு சாவித்திரியின் மனம் பிளவுபட்டுப்போனது. பெருத்த துக்கமென்னும் பர்வதம் இடிந்து அவள்மேல் விழுந்ததே போலானது. இத்துன்பத்தைக் தடுத்தொழிப்பதென்பதற்குரிய மார்க்கமொன்றும் அவளுக்குப் புலப்படவில்லை. இறுதியில் சற்றே துணிந்து மற்றொரு முறையும் அதற்காக முயன்றாள். அதாவது சாவித்திரி தன்னையொரு பெருத்த குற்றவாளியெனக் கருதிக்கொண்டு மாமியாரின் பாதங்களைப்பற்றி கெஞ்சிப் பிரலாபித்துக் கூறலானாள்.

"அம்மையே நான் உங்களுக்கோர் அடியாளாக இருக்கிறேன். என்மீது கருணை கூர்ந்து நான் இங்கு மெத்தைமீது வருவதைத் தடைச் செய்யாதீர்கள். நான் இங்கு எத்தகைய கெட்ட எண்ணத்துடன் வருவதே இல்லை. என்னுடையமனம் இங்குதான் சந்தோஷமாய்க் காணப்படுகிறது. என்னிடமிருந்து ஏதேனும் தவறு நேர்ந்தால் அதை எனக்கு அறிவியுங்கள் நான் திருத்திக்கொள்கிறேன். (மேலும் அழுதுக் கொண்டு) மாமியாரே! இனிமேல் நான் எப்போதும் இங்கு அழமாட்டேன். அப்படி அழுகை வந்தாலும் அதை அடக்கிக் கொள்வேன். கண்ணீர் வடிக்கமாட்டேன். இதை சத்தியமாகக் கூறுகிறேன். (தேம்பிக் கொண்டு) என் நல்ல மாமி! என்னை தங்கள் பார்வதி, கமலா இருவர்களில் ஒருவராயும் உங்கள்மக்களில் ஒருவராகவும் கருதி நான் செய்த குற்றத்தை மன்னித்தருளுங்கள். இனிமேல் அழாமல் இருக்கிறேன்."

சாவித்திரியின் அவயவங்களும் ஓய்ந்து காணப்பட்டன. விக்கி விக்கி அழுது கொண்டிருந்தாள். தன் சீர்மிக்க சிரசைக் கூட அந்தத் தன் கொடிய மாமியின் பாதங்களில் வைத்துக் கெஞ்சினாள். மேல்மாடிக்கு வந்து போக அனுமதி மாத்திரம் தருமாறு வேண்டினாள். சற்றும் மனமிரங்காத கன்மனத்தினளான மாமி, அவ்வணிமணியின் புலம்பலைப் பொருட்படுத்தினாளில்லை. சாவித்திரி இவ்விஷயத்தில் நயந்து எத்துணை தாழ்ந்து வேண்டிக் கொண்டாளோ அத்துணைக்கும் அந்தக் கிழவியின் துரெண்ணங்கள் பெருகிக்

கொண்டு தான் சென்றன. சற்றேனும் அவள் தன் மனதைத் தளரவிட வில்லை. மிகவும் அலக்ஷியத்தோடு சாவித்திரியை சினந்து கூறலுற்றாள்:—

"போடிச் சிறுக்கி! எனக்கென்ன நையாண்டியா காட்டுகிறாய் கட்டாயமாய் உன்னை நான் மேன்மாடிக்கு வர விட்டுத் தரவே மாட்டேன்."

மாமியின் இந்த மனதைப் புண்படுத்தும் வார்த்தைகள் சாவித்திரியின் வாயையடைத்து விட்டன. கொஞ்சம் மிச்சமாயிருந்த அவளின் நம்பிக்கையும் சந்தோஷமும் கூட மண்ணாய்ப் போயின.

மாமியின் கட்டுப்பாட்டினால் சாவித்திரி பல நாட்கள் மட்டும் மேன்மாடிக்குச் செல்ல முடியாமல் இருந்து விட்டாள். மேலும் இம்மங்கை, யாருடனும் பேசாமல் மௌனமாய் சித்தப் பிரமைப் பிடித்தவளே போல் தன் கட்டிலில் படுத்துக் கொண்டிருப்பாள். ஒவ்வொரு நேரத்திலும் அவள் ஹிருதயத்துள் குர்ஆன் ஷரீப் ஓதப்படும் எதிரொலியே முழங்கிக் கொண்டிருந்தது. இதைத் தடுக்கவும் அவளால் இயலமாட்டாதிருந்தது. இதை விலக்கி வைக்க முயற்சிக்குந்தோறெல்லாம் குர் ஆன் ஓதலை கேட்க வேண்டுமென்ற மனவேதனையே பெரிதும் வாட்டிக் கொண்டிருந்தது. சாவித்திரியை மேன்மாடிக்குப் போகக் கூடாதென்று மிகவும் கொடிய கட்டுப்பாடு செய்து வைத்திருந்தனர். அவளின் ஹிருதயக் கமலம் மாத்திரம் ஒவ்வொரு வினாடியும் மேன்மாடியிலுள்ள அறையின் பல கணி வழியே வரும் காரீ சாஹிபின் ஓதுங்குரலை எதிர் பார்த்துக் கொண்டிருப்பதை எவராலும் தடுத்து வைக்கமுடியவில்லை. முன்னர் குர்ஆனின்மீதிருந்த மனோவசியத்தைவிட இப்போது அளவுக்கதிகமாகச் சிக்கப்பட்டிருந்தது. இரவும் பகலும் இவளுடைய செவிகளில் பரிசுத்த குர்ஆனின் வாக்கிய உச்சரிப்புத்தொனியே ஒலித்துக் கொண்டிருந்தது.

இப்போது சாவித்திரி நூறு விதமான வியாதிகள் ஒருங்கேசேர்ந்து வாட்டப்பட்டவளேபோல் காணப்பட்டாள். மனதைக் கவரும் அவளின் முகவசீகர தேஜஸெல்லாம் காணமற்

போயின், எப்போதும் அன்றுமலர்ந்த புஷ்பத்தைப்போல் இரு ந்துவந்த இவளது முகாரவிந்தம் இன்று வாடிப்போன சருகே போல் காணப்பட்டது. இதற்கு முன் அதி சிங்காரமாய் சீவி முறிக்கி விடப்பட்டு காணப்படும் கன்னகிருதா (ஜுல்ப்) சிக் கறுப்பாரற்று அந்தமற்று காணப்பட்டது. அவளின் மலர்க் கன்னமும் வாடியிருந்தது. அவளின் நீலோர்ப்பலக் கண் களும் அழுதழுது அந்தங்கெட்டு இருந்தன. சாவித்திரியின் தேகமும் காய்ந்த துரும்புபோல் காணப்பட்டது.

சாவித்திரியின் எளிய வாழ்க்கைக்கு இஃதோர் பரிதாபக ரமான மாறுதலாய் இருந்தது. சதா தான் சந்தோஷ சாகரத்தி லாழ்ந்தவளா யிருந்துகொண்டு பிறரையும் தன் நியமனங்க ளால் களிப்புறச் செய்துகொண்டிருந்த சாவித்திரி இன்று தானே ஓர் துக்கச் சிலையாய் செய்யப்பட்டுவிட்டாள். கண்ணீர் வடிப்பதும், படுக்கையில் உறங்குவதுமே அல்லாது வேறொன் றையும் இவளால் செய்ய முடியவில்லை.

மாபாவி மாமிக்கும் அவளைப்போன்ற நாத்திக்கும் இவ ளைப்பற்றி யாதோர் அக்கரையும் உண்டாகவில்லை. பண்டித ராம்கோபால் ஒருவர் தான் இவளின் க்ஷேமத்தைக் கோருபவ ராயிருந்தார். அவர் தமக்குரிய தொழிலில் பெரிதும் ஈடுபட்டி ருந்ததால் அவருக்கு சாவித்திரியைப்பற்றிய எந்த விஷயமும் தெரியவில்லை. அடிக்கடி வீட்டுக்கு வந்துபோகவும் அவருக்கு அவகாசம் கிடைப்பதில்லை. இதனல் பல நாட்கள் வரை வீட் டுக்கு வராமலும் இருந்துவிடுவார். மேலும் சாவித்திரியின் அருமைக் கணவனை பாலகிருஷ்ணனோ வியாபாரத் தொல்லை யில் ஈடுபட்டு பம்பாயில் இருந்துவந்தார். எனவே, இங் குள்ள நிலைமையில் ஒரு சிறிதும் அவருக்கும் தெரியாமலே யிருந்தது. ஆனல் பாலகிருஷ்ணனுக்கென்னமோ சாவித்திரி யின் மீது அளவுக்கதிகமான விசுவாசம். ஆதலால் தான், அங்கிருந்துகொண்டு ஒவ்வொரு மூன்று நாட்களுக்கொரு முறைத் தவருது க்ஷேமக் கடிதம் எழுதுவார். சாவித்திரி யின் கடிதமும் தவருது வாரமிருமுறை அவருக்குக் கிடைக் கும். ஆனல், இப்போது துர்அதிர்ஷ்டவசமாய் இரண்டு

மூன்று வாரங்களாக பாலகிருஷ்ணனுக்கு சாவித்திரியின் கடிதமொன்றுமே கிடைக்கவில்லை. சாவித்திரிதான் தன் புக்ககத்தில் சித்தவியாகூலமுற்று வாடுகின்றாளே. அவனுக்கு கடிதம் எங்கிருந்து கிடைக்கும். பாலகிருஷ்ணன் எழுதும் கடிதங்களெல்லாம் தவறாமல் இங்கு வந்து கொண்டு தானிருந்தன. அதைத் திறந்து பார்ப்பதற்குக் கூட இவளுக்கு மனம் இடம் கொடுக்கவில்லை.

பாலகிருஷ்ணனுக்கு மணமானதன் பின் தன்னருமைக் காதலியின் க்ஷேமக்கடிதங்கள் இத்துணை நாட்கள்வரைகிடைக்கப் பெறாமலிருந்து மனதை வாட்டியது இதுதான் முதன் முறையாம். இவன் தன் பத்தினியின் லிகிதம் கிடைக்கலாமென பெரிதும் பல நாட்கள் எதிர்ப்பார்த்திருந்து விட்டு பலவாறு சித்தவியாகூலமடைந்தான். சாவித்திரியின் கடிதங்கள் வராமற்போயினதால் அப்பத்தினிக்கு யாது நேர்ந்ததோவென்றுக்கருதி அயோத்திக்கு வர முடிவு செய்து கொண்டான். எனவே அன்றிரவே கல்கத்தா மெயிலில் புறப்பட்டு பைஜ் ஆபாதுக்கு வருவதானான்.

அடுத்த மூன்றாமிரவு நமது பாலகிருஷ்ணன் அயோத்திக்கு வந்து சேர்ந்து விட்டான். முதன் முதல் வெளியிலுள்ள தன் தந்தையின் அறைக்குள் சென்று அவரைக் கண்டு தெரிசித்தான். பின்னர் அன்னையின் இருப்பிடத்துக்குச் சென்று அன்னையைக் கண்டு க்ஷேமந் தெரிந்தான். அங்கு பாலகிருஷ்ணன் பம்பாயிலிருந்து வந்து விட்ட செய்தி குழந்தை முதல் எல்லோருக்கும் தெரிந்து விட்டது தாயினிடம் பேசிக் கொண்டிருக்கும் போதே அவன் தங்கை பார்வதி மற்றும் தம்பி சகோதரர் முதலிய எல்லோரும் வந்து கூடி க்ஷேமம் விசாரிக்கலாயினர். ஆனால் பாலகிருஷ்ணனின் இரு நேத்திரங்களும் அங்கு வந்தவரெல்லோரையும் வெறிக்க வெறிக்க நோக்கிக் கொண்டிருந்தன. அவனின் கண்கள் எந்த உருவத்தை தரிசிக்க வேண்டுமென்று ஆவல் கொண்டிருந்தனவோ அந்த தோற்றம் மாத்திரம் தான் அவ்விடத்தில் காணப்படவில்லை.

முன்னெல்லாம் பாலகிருஷ்ணன் இவ்வில்லத்துக்கு வந்தால் முதன் முதல் சாவித்திரி தான் இவ்வருகையைத் தெரிந்துகொண்டு தன்னருங் கணவனை வெகு அன்போடும் குதூகலத்தோடும் முன் வந்து உபசாரங்கூறி வரவேற்பாள். இன்றும் இதை தான் பாலகிருஷ்ணன் எதிர்பார்த்து கொண்டிருந்தான். அந்த பாக்கியந்தான் இச்சமயம் அவனுக்குகிடைக்காமற் போயிற்று. அவனின் கண்கள் தன் காதலியைக் கண்டு கொள்ளாமற் போகவே! அவனின் உள்ளம் பதறியது ஆத்மா துடித்தது. அவனின் எண்ணங்களின் பல குழப்பங்கள் புகுந்து கொண்டன.

“ஆம் இதில்ஏதோவிகல்பமானவிஷயங்கள்இருக்கத்தான் செய்கிறது. இன்றேல், அவள் நல்ல நிலையில் இருப்பாளாயின், அவள் வழமையைப்போல் என்னை வந்து கண்டுக்கொள்ளாமலிருப்பாளா?” என்றெல்லாம் யோசித்தான். அவளின் கடிதங்கள் பல நாட்கள் வரை கிடைக்காமைக்கு உண்டானஅவன் மனக்கிலேசமும் அவன்முன்வந்துஉருத்தியது. இதனைத்தும் அவனையொரு பெரும் குழப்ப துக்கசாகரத்திலாழ்த்தின. மேலும் தனது தாயேனும் தங்கையேனும் சாவித்திரியின் விஷயத்தைப்பற்றி ஏதேனும் கூறுவார்களென்றுஎண்ணினன். ஆனல் எந்த நபரின் வாயினின்றும் சாவித்திரியின் க்ஷேமலாபத்தைப் பற்றிய அணுவத்துணை விஷயமும் வெளிவரவில்லை. எனவே, அவனின் மனக்கிலேசம் இன்னும் அதிகமான கொந்தளிப்பிலாய் விட்டது. இதுவரைக்கும் மனைவியைப்பற்றி முதலில் எவரிடமும், விசாரிக்கக்கூடாதென்று கொண்டிருந்தநாணத்தையெல்லாம் அந்தரத்தில் தூக்கி எறிந்து விட்டு, தன் சிறிய தங்கையை நோக்கி “என் மகன் கிருஷ்ணனுடைய தாய் (அதாவது தன் மனைவி) எங்கே இருக்கின்றாள்” என்று வினவினன்.

பார்வதி:—(தங்கை) அண்ணா! அது தன்னுடைய படுக்கை யறையில் தூங்கிக்கொண்டிருக்கும்.

பாலகிருஷ்ணன்:—அவளுக்கென்ன நான் வந்திருக்கும் விஷயம் தெரியாதா?

பார்வதி:—தெரியாமலென்ன? நான் போய் அண்ணியை எவ்வளவோ தூண்டினேன். அது எழுந்திருக்கவேயில்லை. அது தான் இப்போது தினமெல்லாம் ஒழியாமல் தூங்கிக் கொண்டே இருக்கிறதே.

பாலகிருஷ்ணன்:—முடிவாய் அதற்கென்ன காரணம்?

பார்வதி:—அதற்குரிய காரணம் எனக்கொன்றும் தெரியாது.

இதனால், சாவித்திரி இங்குதான் இருக்கின்றாள் என்றும், பார்வதியின் வார்த்தைகளினால் அவள் யாதோர் பிணியிலும் பீடிக்கப்பட்டிருக்கவில்லை யென்றும் அவனுக்கு நன்றாய் விளங்கிற்று.

அத்தியாயம்—3.

தன் காதலியை சந்திக்குங்கால் ஆடவர்களுக்குண்டாகும் மனச்சுபாவம் போல் இவனுக்கும், "சரி, என்பிரிய சாவித்திரி தூக்கத்திலாழ்ந்திருப்பாள். நான் அவளருகே சென்று என் அணைக்கடங்காத அன்பின் பிரவாகக் கன்னிகைக்கு என்னுடைய பேரன்பை என் இனிய முத்தங்களின் மூலமாய் வெளியாக்கி வைப்பேன். அவளின் பவழ இதழ்களுக்கு முத்தமீந்தே அவளை எழுப்புவேன்" என்றெல்லாம் யோசித்துக் கொண்டான்.

எனவே, பாலகிருஷ்ணன் தன் புத்திரன் கிருஷ்ணனை தூக்கியணைத்துக் கொண்டு, காலடிகளை பூமியில் மெதுவாக வைத்து நடந்து சாவித்திரியின் படுக்கை யறைக்குள் பிரவேசித்தான். சாவித்திரி தன் படுக்கையில் நெடுக சயனித்துக் கொண்டு கிடந்தாள். அவள் விழித்துக்கொண்டு தானிருந்தாள். அவளின் கண்களும் திறந்துகொண்டு தானிருந்தன. அவை அங்குள்ள யாவற்றையும் கூர்ந்து நோக்கிக்கொண்டு தானிருந்தன. ஆனால் அங்கு என்ன நிகழ்ந்து கொண்டிருக்கின்றனவென்பது அவளின் உள்ளத்துக்கொன்றும் புலப்படாமலே இருந்தது.

பாலகிருஷ்ணன் மெதுவாய் அவளின் தலைப் புறமே உட்கார்ந்து கொண்டு சாவித்திரியின் அழகிய சிரத்தை மெல்லத்

தூக்கித் தன் துடைமீது வைத்துக் கொண்டான். சாவித்திரியின் நீண்ட கேசங்கள் வெகு நாட்களாகத் தைலம் பூசப்படாது கோதுகள் நிறைந்து காணப்பட்டன. சாவித்திரியின் கூந்தல் அவ்வாறு காய்ந்து சிதறிக் கிடப்பது பாலகிருஷ்ணனுக்குப் பெருத்த வருத்தத்தைத் தந்தது. மேலும் சாவித்திரியின் ரோஜா மலரையொத்த செவ்விய வதனமும் வாடிப் போயிருந்ததைக் கண்டு பாலகிருஷ்ணனின் மனம் வாதனையுற்றது. இதுகாறும் சாவித்திரியின் அதிஉல்லாச ஜோதி மிக்க வசீகர முகவிலாசமானது பாலகிருஷ்ணனின் மனோயாசத்துக்கு மூல மருந்தாயும் நொந்த மனதுக்கு இன்பமளிப்பனவாயும் எத்தனை துக்கமிருப்பினும் ஒரு புன் சிரிப்பினால் அவ்வனைத்தையும் போக்கி விடக்கூடியதாயு மிருந்தது. அப்படிப்பட்ட தேஜோ மயமான சந்திர வதனம் இன்று ஒளி வற்று காணப்பட்டதை நோக்கி பாலகிருஷ்ணன் மனங் கசிந்துருகிப் போனான். இதற்குமுன் எப்படிப்பட்ட உறுதியான ஹிருதயத்தையும் தனதொரு நோட்டத்தால் வசியப்படுத்தி விடக் கூடியதாயிருந்த அவளின் அதி அழகிய நேத்திரங்களும் ஜோதிக்குன்றி குழியுண்டு அந்தமற்று காணப்பட்டதுடன் அவளின் ரோஜா இதழினும் அதிமிருதுவான வெண் கன்னங்களும் வெளுத்து காணப்பட்டன. முடிவாய் அவளொரு நெடுங்காலமாய் நோய் வாய்ப்பட்டு நொந்துபோன ஸ்திரீயே போல் காணப்பட்டாள்.

பாலகிருஷ்ணன் தன் காதலி சாவித்திரியின் மிருதுவான கன்னத்தின் கண் தனது செவ்விய வாயிதழ்களை அவளுக்கின்பம் அளிக்கலாம் என்ற நோக்கத்தோடு, ஒட்டிவைத்து முத்தாமிர்தமீய்ந்து, சாவித்திரி தன்னுடன் அன்போடு சம்பாஷிப்பாளெனப் பெரிதும் எதிர்பார்த்து நின்றான். ஆனால் சாவித்திரியின் அழகிய வாயினின்று அவள் திணரக் கூடிய சப்தமே அல்லாமல் வேறொன்றும் வெளிவரவில்லை. பாபம் பாலகிருஷ்ணனின் மனப்பதற்றம் இன்னும் அளவை மீறியே சென்றது. அவன் எதிர்பார்த்திருந்த இன்பத்திற்குப் பதிலாக மனவேதனையே பெருகியது. அவனறிவு சுழலன்றலை

வதே போலிருந்தது. உடலில் அவனின் ஆத்மாவும் மிகவும் பதறிக் கொண்டிருந்தது. அவன் போக்கற்றவனாய் மற்று மொருமுறை இக் கண்ணுமணியோடு அளவளாவ முயன் முன். எனவே அவளை நோக்கி • அன்போடு அழைக்க லுற்றுன்.

பாலகிருஷ்ணன்:—என் பிரிய சாவித்திரி! உனக்கென்ன துக்கம் வந்தணுகியதோ? எனக்குக் கூருயா? என்னைப் பார். எத்தனை நேரமாய் உனக்காக பரிதபித்துக் கொண்டு வாடு கிறேன். உன்னைப் பார்த்துச் செல்வதன் நிமித்தமே யான் பம்பாயினின்றும் இங்கு வரலானேன். உனக்குள்ள டினக் கிலேசத்தை எனக் கொளியாமல் கூறிவிடு. அதை நீக்கும் விஷயத்தில் உனக்காக என் உள்ள மனைத்தையும் அர்ப்பணம் புரிந்து விடுகிறேன். (என்று பிரலாபித்துக் கொண்டிருக்கும் போதே குழந்தை கிருஷ்ணனும் அழத் தொடங்கினுன். பால கிருஷ்ணனும்கூட துக்கக் கண்ணீர் வடித்துக் கொண்டு குழ ந்தை கிருஷ்ணனை சாவித்திரியின் பக்கத்தே விற்றினுன். மீண்டும் தன் காதலியை யடைநது) அன்பாய்! உன் குழந்தை கிருஷ்ணன் அழுகின்றுனே; அவனை யேனும் தேற்ற மாட் டாயா?".

சாவித்திரி:—(மிகச்சிரமத்தோடு வாய்திறந்து) என்னைத் தொந்தரை செய்யாதீர்கள். விட்டு விடுங்கள்.

பாலகிருஷ்ணன்:—என் அன்பே! உன்னை யார் தொந்த ரைச் செய்கிருர்கள்? அதை எனக்குச் சொல். உன்னைப் போல் மோஹ சொரூபியை ஹிம்சிப்பவர்களும் உலகி லுண்டோ?

சாவித்திரி:—போங்கள் என்னை வம்புச் செய்யாதீர்கள். என்னை மன்னியுங்கள். நான் இனிமேல் மேன்மாடிக்குப் போகிறதில்லை.

பாலகிருஷ்ணன்:—எந்த மேன்மாடியின் மேல் போக மாட்டாய்? ஏன் போகமாட்டாய்? நடந்த விஷயமென்ன? நீ ஏன் இப்படி பயப்படுகிருய்? இதை யெல்லாம் விளக்கமாய் சொல்லலாகாதா?

சாவித்திரி பின்னரும் மௌனமாய்ஒன்றையும் உணர்ந்து கொள்ள இயலாதவளாய் இருந்து விட்டாள்.

சாவித்திரி எப்போதும் போதிய ஆகாரம் சரியாய் உட்கொள்ளாமையினல் பெரிதும் பலஹீன தேகியாய் காணப்பட்டாள். மேலும் இவள் ஒருவிதமான நற்குணத்தினள். அதிகம் புசிப்பதினுல் புத்தியும் உற்சாகமும் மந்தப்படுகிறதென்ற தேகக்கூறு தத்துவத்தை தெரிந்தவளாதலால் எப்போதுமே சிறிதளவு உணவையே உட்கொள்வாள். அதுவுமன்றி அவளின் மாமியும் நாத்தியும் தான் மேன்மாடிக்குச் சென்று குர் ஆன் ஓதலை கேட்பதை தடைசெய்து விடவே, அவள் மனக்கிலேசத்திற் சிக்குண்டு சாதாரணமான ஆகாரம் உட்கொள்ளுவதையும் கூட குறைத்துக்கொண்டாள். அன்றைய இரண்டுநாட்களாகஅவள் சரியான போதிய உணவருந்தவில்லையாதலால் தான் இப்போது களைப்படைந்துப்போனுள். இந்த உண்மையை உணர்ந்து கொள்ளமுடியாமல், நமது பாலகிருஷ்ணன் மீண்டும் தன் சாவித்திரியின்சிரசைப்பற்றி சிறிதசைத்து கூப்பிட்டான்.

பாலகிருஷ்ணன்:—சாவித்திரி! நீ என் இப்படி சித்தப்பிரமை கொண்டவளேபோல்காணப்படுகின்ருய்? உனக்கென்ன பேச முடியவில்லையா? என் மேல் ஆணையாக நீ உன் உண்மை நிலைமையை எனக்குக் கூறுவாயாக. உனக்கென்ன துன்பம்? நீ என் இப்படி வியாகூலமாயிருக்கின்ருய்? நீ இப்படி இருப்பதைக் காணக்காண என் ஆத்ம நிலையிலும் ஊனம்ஏற்படுகிறது. கடவுளுக்காகவேனும் உன் நிலையைக் கூறமாட்டாயா?

சாவித்திரி மீண்டும் வாய்திறந்து பேசாமல் சற்று இப்படியுமப்படியுமாக புறண்டு தன்னிரு கரங்களாலும் சிரசை பிடித்துக்கொண்டு, தேம்பி அழ ஆரம்பித்தாள்.

பாலகிருஷ்ணன்:—என் அன்பிற் கிசைந்த சாவித்திரி! என்னை என் இப்படி மனக் கலக்கத்துள்ளாழ்த்துகிருய்? காரணம் யாது? உன் குழந்தை கிருஷ்ணனைப்பார். அவன் எவ்வளவு ஆர்வத்தோடு உன்னைப் பார்க்கின்றுன்! அழகிய இளநங்காய்! என்பால் தயை கூர்ந்தேனும் உன் பரிதாப நிலைமைக்

கும் உன் இக்கதிக்கும் காரணம் இன்னதென்பதை எனக்குக் கூறி ஆறுதல் அளிப்பாயாக.

சாவித்திரி:—(முகத்தில் பயக்குறியைக் கொண்டவளாய்) நான் உங்களைத் துன்புறுத்தவில்லையே. உண்மையாக நான் மேன்மாடிக்குப் போவதை அடியோடு ஒழித்து விடுகின்றேன். நானும் என் காயத்தை இத்தரணியை விட்டும் ஒழித்துக் கொள்கிறேன். போதும்! போதும்!! இனிமேல் எனக்குத் துன்பத்தைத் தராதீர்கள்.

கணவன் பாலகிருஷ்ணனுக்கோ அவன் எத்துணையோ படித்திருந்தும் அவள் கூறிய இவ்வசனங்களின் தாத்பரியம் இன்னதென்பதே விளங்கவில்லை. முன் நிகழ்ந்தவைகள் தெரிந்தால்தானே மேன் மாடிக்குப் போகும் விஷயத்தின் தாத்பரியம் விளங்கப்போகிறது. இரவின் காலமும் அதிகமாய்விட்டது. அவ்விட்டிலுள்ள மற்றைய யாவர்களும் நித்திராபின்பத்துள் அதிகம் ஆழ்ந்து போயிருந்தனர். குழந்தை கிருஷ்ணனும் தூங்கிவிட்டான். ஆனால் நமது பாலகிருஷ்ணன் மாத்திரம் தன் கட்டழகி சாவித்திரியின் பரிதாப நிலைமையையுன்னி ஆழ்ந்து சிந்தித்து துக்கித்துக் கொண்டிருந்தான். அவனின் தூக்கமெல்லாம் பறந்தது. வெறுமனே அவன் சாய்ந்து கொண்டு அன்றிரவை இத்தகைய சிந்தனை வியாகூலத்திலேயே பெரிதும் கழித்தான். நிசியின் காரிருள் சென்று, துல்லிய கிரணங்களோடுகூடிய பாஸ்கரன் உதயமாய், பொழுது புலர்ந்து விடிந்ததும் நமது பாலகிருஷ்ணன் தனது தங்கையான பார்வதியை அழைத்து அவளிடம் சாவித்திரியின் நிலைமைக்குரிய விருத்தாந்தத்தைப்பற்றி விசாரிக்கலானான்.

பாலகிருஷ்ணன்:— தங்காய் பார்வதி! சாவித்திரிக்கு என்ன நேர்ந்தது. ஏன் அவள் அத்துணை விசனத்துள் சிக்கி நொந்தவள்போல் சித்த சுவாதீனமிழந்து காணப்படுகின்றாள்?

பார்வதி:—எனக்கொன்றும் தெரியாது. சாவித்திரியின் இந்நிலை என்ன திக்கத்தினால் வந்தணுகிற்றென்பதும் எனக்குத் தெரியாது.

பாலகிருஷ்ணன்:—தெரியா விட்டால் போகிறது. இங்கு நீயும் உன் தாயும் தந்தையும் இத்தனை நபர்களிருந்து அதற்குரிய பரிகாரம் ஒன்றும் செய்யவில்லையா?

பார்வதி:—என்ன சிகிச்சை செய்ய முடியும்? இன்ன நோய்தானிருக்கிறதென்று தெரிந்தாற்ருனே ஏதேனும் பக்குவஞ் செய்யலாம். அது தான் எங்கட்கு யாதும் தெரியவில்லை. அவள் தினம் இரண்டொரு வேளை ஆகாரம் உட்கொள்ளாமலேயே பட்டினியும் பசியுமாய் வாடி வதங்குகிருள். இப்போதும் இரண்டு வேளைப் புசியாத பட்டினியா யிருக்கின்ருள்.

இதை யுணர்ந்தும் பாலகிருஷ்ணன் சாவித்திரிக்காக பாலையும் பழத்தையும் ஹல்வாவையும் கொஞ்சம் கொண்டு வரச் செய்தான். பாலை பார்வதியிடம் கொடுத்து சாவித்திரிக்கு புகட்டுமாறு கூறினன்.

பார்வதி:—நான் புகட்டினல் பாலை சாவித்திரி அண்ணி குடிக்கமாட்டாள். நீங்களே பருகச் செய்தால் தான் நல்லது. உங்களுக்கு அஞ்சியேனும் பருகலாம்!

பாலகிருஷ்ணன்:—(இதில் என்னமோ மர்மம்இருப்பதைப்போல் தான் காணப்படுகிறதென தனக்குள் எண்ணிக்கொண்டு) பார்வதி! சரி நீ இங்கிருந்து சற்று வெளியே போயிரு அவளுக்குப் பால் புகட்டுகிறேன்.(பார்வதிபோய் விட்டாள்.)

பிறகு பாலகிருஷ்ணன் சாவித்திரியின் அருகே சென்று, "காதலி! பார் நன்ருய் பொழுது புலர்ந்து காலையாய்விட்டது. எழுந்திருந்து கால் கை முகங்களை கழுவிக் கொண்டு இந்தப் பால் பழங்களை சற்று சாப்பிடு" என்று வேண்டினன். சாவித்திரி சற்றும் உணர்ச்சி யில்லாமலேயே வீழ்ந்து கிடந்தாள். எனவே பாலகிருஷ்ணன் தன் காதலியை தூக்கி எடுத்து மார்போடு சாய்த்தணைத்துக் கொண்டு தன் சொந்த கைகளாலேயே அவளின் முகம் கைகளைமெல்லஜலங்கொண்டு கழுவித்துடைத்தான். பிறகுஎத்துணையோ கெஞ்சி வேண்டியின் மிகச் சிரமத்தோடு சிலதுண்டுபழத்தையும் சிறிதுபாலையும்காதலியின்வயிற்றுக்குள் செலுத்தினன். அவள் பசியும்சற்றேதணிந்துவதனம் மலர்ந்தது.

அத்தியாயம்—4.

எனவே இப்போது சாவித்திரி இரவில் இருந்த நிலைமைப்போய் சற்று நல்ல ஸ்திதியில் காணப்பட்டாள். பசியின் களைப்பால் முன்னிருந்த சித்தப் பிரமையானது பால் உட்சென்றதின் பயனுய் சற்று நீங்கிப்போதிய வலிமையைத் தந்தது. உணர்வு பெற்ற பாவை தன் மிளிரிய கண்களைப் பறக்கத்திறந்தனள். நாலுபக்கங்களையும் நோக்கலுற்ருள். ஆனல், தன்னெதிரே நெருங்கி வீற்றிருந்த பாலகிருஷ்ணனைத்தான் அந்தப் பாலிகை அதிகமாய் வெறிக்க வெறிக்கப் பார்த்தாள்.

இதைக் கண்ணுற்ற பாலகிருஷ்ணன் அவளின் செயல்களால் அவளின் நிலைமை சற்று ஒழுங்குற்றிருப்பதாய் உணர்ந்து கொண்டு, மீண்டும் சாவித்திரியை நோக்கிவினவலுற்ருன்.

பாலகிருஷ்ணன்:—நங்காய்! இப்போது உங்கன் தேகநிலை எவ்வாறிருக்கிறதென்பதை சற்றே கூறு.

சாவித்திரி:—எனக்கென்ன? ஒன்றுமில்லையே. நான் நல்ல நிலைமையில் தானே இருக்கின்றேன்.

பாலகிருஷ்ணன்:—நான் நேற்றிரவு தொடுத்து இங்கேயே யிருந்து கொண்டு, உனது மூர்ச்சையை நீக்கி உணர்ச்சியளிக்க எத்துணைச் சிரமப்பட்டுக் கொண்டிருந்தேனென்பது உனக்குத் தெரியுமா? நான் எத்தனையோ கேள்விகள் கேட்டும் நீ எதற்கும் ஒழுங்கான பதில் சொல்லவே யில்லையே. என்னென்னமோ உன்னையுமறியாது பிதற்றினுயே.

சாவித்திரி:—எனக்கொன்றும் தெரியாதே. தாங்கள் எப்போது வந்தீர்கள். க்ஷேமந்தானே.

பாலகிருஷ்ணன்:—முதலில் நீ என் க்ஷேமத்தை கோரியதைப்பற்றி யான் மிகவும் சந்தோஷிக்கின்றேன். ஆனல் உனக்கு என்ன வியாதி ஏற்பட்டிருக்கிறது. இப்படி இளைத்து மெலிந்து துரும்பாய்ப் போய்விட்டாயே.

சாவித்திரி:—எனக்கு எந்த விதமான நோயு மில்லையே. நான் நல்ல தேகாரோக்கியத்தோடு தானே இருக்கின்றேன்.

பாலகிருஷ்ணன்.—இல்லை, நீ ஏதோ ஒரு விசுமான நோயால் தான் வாட்டப்படுகிறாய். இன்றேல் உன்னை இந்நிலைமைக்குக் கொண்டு வந்தமைக்கு ஏதேனுமோர் விசனமாவது மூலகாரணமாயிருக்கலாம். அக்குறையை என்பால் எடுத்தோது.

சாவித்திரி:—"நிச்சயமாக எனக்குளக்கசையபநோயுமில்லையென்றே எனக்குப்புலப்படுகிறது. நான் இப்படி இருப்பதையே பெரிதும் விரும்புகிறேன். எத்தனை காலம்இவ்வாறே நாம் வாழவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறேனோ, இந்த நிலைமையிலேயே கழிக்க நிச்சயிக்கின்றேன். கூடிய துரிதத்தில் பகவான் என்னை இவ்வுலகினின்றும் பிரித்துத் தம் சமுகத்துக்கழைத்துக் கொள்வாரென்றான் நம்புகிறேன்" என்று சாவித்திரி கூறிக் கொண்டே கண்களில் நீர்க்கலக்கமுற்றாள். அவள் முகம் துக்கத்தால் வாடியது. முன்னர் காரீ சாஹிபின் குர் ஆன் ஓதலை கேட்கும் விஷயத்தில் ஏற்பட்ட வில்லங்கனங்களையும் மாமி நாத்திகளின் தடைகளையும் ஒன்றன்பின் ஒன்றாய் நினைத்து உருகினாள். மாமியின கொடுமைகளும் அவள் மனத்தே குறுக்கிட்டன. எல்லாவற்றையும் விட குர் ஆன் ஷரீப் ஓதப்படும் அழகிய சப்தமே அவளின் காதில்பிரதிபலித்து அவள் மனதையும் கலக்கிக் கொண்டிருந்தது.

சாவித்திரின் இத்தகைய முகக்குறி மாறுபாடுகளையெல்லாம் கண்ணுற்று வரும் பாலகிருஷ்ணனின் மனதில் நீக்க முடியாத துக்க மலை சரிந்து வீழ்ந்தது. சாவித்திரி கூறிய மனக்குறை மிக்க வாக்கியங்களெல்லாம் அவன் மனதைப் படு காயப்படுத்தின. எனவே மீண்டும் அதி ஆர்வத்தோடு தன் கண்ணாட்டியை நெருங்கி தனனோடு அணைத்துக் கொண்டு மிகுந்த நயத்தோடு விசாரிக்கலுற்றான்.

பாலகிருஷ்ணன்:—என தன்பிற் கெழுமிய சாவித்திரி! இப்படிப்பட்ட வார்த்தைகளைக்கூறி என்மனதைப் புண்படுத்தி விடாதே. நான் இரவிலிருந்து உன் க்ஷேமத்தைக் கோரியே மனம் பதறிக் கொண்டிருக்கின்றேன். என்னை உனக்குகந்த கணவனென்பதை மனதில் வைத்து எதையும் ஒளிக்காமல்

உண்மை வரலாற்றை அப்படியே கூறி விடு. எனக்காகவென்று நீ இரக்கப்படாவிடினும் உனது பரிதாப நிலைமையுன்னியேனும் சற்று வருந்திப்பார். கண்ணாடியை யெடுத்து உனது வதனத்தின் பிரதிபிம்பத்தை சற்று கூர்ந்து நோக்கு. உனது இயற்கை வனப்பு வாய்ந்த செவ்விய செந்தாமரை வதனத்தின் கண் எத்தகைய மாறுதல்கள் ஏற்பட்டு விட்டனபார். உனது ஒளி பொருந்திய தோற்றத்துள் எத்துணையோ கண் காட்சிகளெல்லாம் மிளிர்ந்திருந்தனவே; அவையனைத்தையும் உனது இந்நிலைமை எங்கு ஒளித்து வைத்துக் கொண்டனவோ. மலரினும் மிருதுத் தன்மை மிக்க சாவித்திரி! உனது பழைய புன்முறுவலையும், இனிய செஞ்சொற்களையும் நடைச் சாயலையும் சிந்திக்குந்தோறெல்லாம் சித்தங் கலங்கி வருந்த வேண்டியதாயிருக்கின்றதே. முன்னர் நீயொரு அழகின் வடிவாய் இருந்தனையே. சவுந்தரிய சிற்பங்களுக் கெல்லாம் அணிகலனுயுமிருந்தனையே. உன் பிரிய சாவித்திரி! ஜோதி உருவாயும், யௌவனப் பாவையாயுமிருந்து ஜ்வலித்த உன் தேஜோமயமெல்லாம் இந்த க்ஷணம் எங்கு சென்று துலைந்தனவோ? இன்று என் நிலை எவ்வாறுனதோ? என இவ்வாறெல்லாம் தன் காதலியை நோக்கி பிரலாபித்துக் கொண்டிருந்த பாலகிருஷ்ணனின் ஆத்மாவும் மிகவும் தளர்வுற்று நொந்தது. சாவித்திரி இந்த பரிதாப நிலையிலிருந்தும் ஒன்றும் அவள் சொல்லாதிருத்தலை யெண்ண யெண்ண அவனுக்கு அதிகமான திகிலுண்டாகியது. எனவே மீண்டும் அவன் தன் சாவித்திரியை நோக்கி "மான்விழி மருவிய மங்காய்! நம் இரு சாராரின் க்ஷேமத்தைக் கோரியேனும் உனது மாசில்லா மனதுடன் உனது இந்நிலைமைக்குள்ள காரணத்தைக் கூறுய்"? உனக்கென்ன நோய் சம்பவித்தது? என்று வினவினன்.

சாவித்திரி:—எனக்கு யாதொரு நோயுமில்லையே நான் நல்ல நிலையில் தானே இருக்கிறேன். நான் நல்ல ஸ்திதியிலிருப்பதாக என் மனம் கூறுகிறது. கண்ணாடிப் பார்ப்பதில் எனக்கதிக வெறுப்பா யிருந்தது. எனக்கு பழைய வாழ்வைப்பற்றி புகழ்ந்துரைத்தீர்கள். முன்னைய தேகக்கூற்றை

விட இதுபோழ்துள்ள நிலைமையே எனக்கு உத்தமமாய் காணப்படுகிறது. இன்னும் என் நிலை அதிக சேவலமுள்ள என் ஆத்மா பரலோக பதியடைந்தாற்றான் எனக்குத்திருப்திகரமுண்டாகும். அக்காலை நான் பரம சாம்ராஜ்யத்தையடைந்துய்வேன்.

பாலகிருஷ்ணன்:—கருணைக்குரிய சாவித்திரி! என்பால் சற்று கருணைக்கொள். என்னின் மனத்தடுமாற்றம் என்னால் சகிக்க முடியவில்லை. நீ உண்மையில் வியாதியஸ்தளாய்தானிருக்கிறாய். அது மனவேதனைதான் உனது மெல்லிய இருதயத்தை எவரோ மகா கொடிய சொல்லம்புகளால் புண்படுத்தியிருக்கிறார்கள். அதனாற்றான் நீ உன் வாழ்வை சீர்கெடுக்கத் துணிந்தாய். இந்த உன் துன்பத்தை என்னின்றும் மறைக்க முயல்கின்றாய். இம் மனக்கவலையே உன் தேகாரோக்கியத்தைப் பாழ்படுத்தி விட்டது. பெண்கள் சில விஷயத்தில் தங்கள் வாழ்வை முற்றும் பறிகொடுத்த போதிலும் உள்ளத்தே வாட்டும் மர்மம்மிக்க மனக்கிலேசத்தை வெளியிடார்களென்பது முற்றும் உண்மை. இதை உன்னிடத்தே தான் கண்டேன். என்னரும் பத்தினி! நான் உனக்கு கணவன்என்னும் முறையில் உனதுசர்வதுக்கங்களிலெல்லாம் சமபாதிபங்குடையதென்பது உண்மையன்றோ? உன்னோடு நானும் கலந்து துக்கமேற்கொள்ள தகுந்தவனல்லவோ? உனது இன்ப துன்பத்தில் நானும் கலந்தில்லாவிடில் இத்தரணியில் நான் வாழ்ந்து என்னபலன்? நீ வாழ்க்கைத் துறப்பதைப்பற்றி மீண்டும் கூறுவாயாயின் உன் முன்னிலையிலேயே நானும் பலியாய்போவேன். நீ என்னை பொருட்படுத்தவில்லை யென்ற குற்றத்தை கடவுளின் முன்னிலையில் உன்பால் சுமத்துவேன். உனது வாட்டத்தைக்கண்டு உனது உள்ளம் இதுகாலை எத்துணை துணுக்குகளாய் சிதறிக் கிடக்கின்றன வென்பதை என்னால் விளக்கவும் இயலவில்லையே. சாவித்திரி! நான் உண்மையை கூறுகிறேன். நீஎன்துணைவியாய் இத்தரணியில் ஒரு க்ஷணமும்இல்லாதிருப்பின்என் வாழ்வும் அத்துடன் தொலையுமென்பதுமுற்றும்உண்மை. ஆதலின் அன்பாய்! உன் உள்ளத்திலுள்ளதை அப்படியே எனக்குக் கூறிவிடு. நிச்சயமாய் உனது சகல துக்கத்தையும்

போக்க நான் முற்றும் உழைக்கின்றேன். இதற்காகவென்று என் ஆவியை அர்ப்பணஞ்செய்யவும் பின் வாங்கேன் என்று நம்பு.

இதை கூறிக்கொண்டு வருங்கால் பாலகிருஷ்ணனின் உள்ளம் துளும்பியது. கண்களினின்றும்நீர் துளிகள் பிரவாகித்துச்சிந்தின. எனவே அவன் குளரிய சப்தத்தோடு, "சாவித்திரி! எனக்காகவென்று கருணைக்கூர்ந்து உண்மையை உறைக்க முன்வரா விடினும் இதோ இந்த உன் இளங்குழவியான கிருஷ்ணன்பால் வாஞ்சை கொண்டேனும் உன் மனக் கிலேசத்தை வெளியிடு" என்று வேண்டினன்.

மேலும் கணவன், தமது குழந்தை கிருஷ்ணனை தூக்கி அவளின் அருகாமைகிடத்தி, "நங்காய்! இதோபார். இவன் உன் செல்வக் குழந்தை. பத்துமாதம் மகாபற்றோடு சுமந்து யீன்ற பாலன், பல மாதம் உனது உதிரச்சத்தான அமிர்தமுண்டு வளர்ந்த இளஞ்சிறுவன். இவனின் க்ஷேமத்துக்காக வென்று நீ பல இரவுகளிலும் தூக்கங்கெட்டு இன்பமற்று மருந்துண்டு பாடு பட்டாயன்றோ? குளிர்க்காலங்களின் இப்பாலகனை நீ இரவெல்லாம் மார்போடணைத்து கொஞ்சிக் குலாவி பாதுகாத்தாயன்றோ? சில சமயம் நீ நனைந்து குளிர் வுற்று வாடியபோதிலும் உன் கிருஷ்ணனுக்கு சிரம மேற்கொண்டாயன்றோ? இவன் சற்று அழுது விடுவதற்கும் மனந்தாளாத நீ இப்போது அத்தகைய •அரிய பாலகனை எறிட்டுப் பாராமலும், அவனை தூக்கி அணையாமலும், அவனின் வருங்கால நலத்துக்கேனும் உன் நிலையை வெளியிடாமலுமிருப்பது ஏனோ? என்னமோ? நீ இந்த இளங் கிருஷ்ணனின் மேலாணையாக உனது பிணியின் வகையை வெளியிடுவாயாக. சாவித்திரி! யான் இத்துணை வேண்டியும் நீ ஒன்றையும் உணர்ந்து கொள்ளாமல் மௌனமுற்றிருத்தலைக் கண்டு இதோஉன் குழந்தையும் அழுது புலம்புகிறான் பார். அழுது அழுது அவனின் கண்களும் செந்நிறம் பெற்று விட்டனவே. அவனின் குரலும் கம்மினவே" என்றெல்லாம் கணவன் பாலகிருஷ்ணன் எடுத்தோதி கதறினன். எதையும் சா

வித்திரியின் அறிவு சற்றும் கிரகித்துக் கொள்ளவேயில்லை. அவள் முன்போலவே அசைவற்றுக் கண்திறந்து விழித்துக் கொண்டிருந்தாள்.

பாலகிருஷ்ணனின் நேத்திரம், கண்ணீர் உதிர்ந்த காரணமாய் சிவந்து மஞ்சனித்தது. அவனின் தொண்டையும் துக்கத்தால் விக்கிற்று. எனவே அவன் உலகாசை முற்றும் துறந்த துறவிபோல் ஒரு சிறிது நேரத்துக்குக் காணப்பட்டான். வாழ்வே அவனுக்கு அதிவெறுப்பாய் அக்காலை புலப்பட்டது. எல்லா எண்ணத்தையும் தொலைத்து ஒரு சிறிது நேரம் மௌனமாய் தலைதாழ்த்திக் கொண்டு கிடந்தான்.

ஆ! சந்தோஷம். உத்தம கணவனான பாலகிருஷ்ணனின் அதிருஷ்ட வசமோ! அறியாக் குழந்தையான கிருஷ்ணனின் நற்பாக்கிய வசமோ!! யாதோ!!! நமது சாவித்திரி சற்றே கண் திறந்து அங்குமிங்கும் நோக்கினாள். மேலும் மெதுவாய் எழுந்துட்கார்ந்து அதிக ஆர்வத்தோடு தன் கால் மாட்டில் கிடந்த குழந்தையை தூக்கி மார்போடணைத்துமுத்தி முகந்தாள். கண்களினின்றும் சில துளி நீர்களைச் சொட்டினாள். திரும்பித் தன்னருங் கணவரை நோக்கி கூறலுற்றாள்.

சாவித்திரி:—என் தலைவரே இன்னும் இங்கேதானா வீற்றிருக்கிறீர்? எனக்கென்ன நோயென்று இதுகாறும் கேட்டுக் கொண்டிருந்தீர்? எனக்கு யாதொரு விதமான நோயுமிருப்பதாய் தெரியவில்லையே. இதில் உங்களுக்கு நிச்சயமேற்படாவிடின் எந்த வைத்தியரிடமேனும் பரிசோதித்துப் பார்க்க ஏற்பாடு செய்யுங்கள்.

பாலகிருஷ்ணன்:—என் குலக் கொழுந்தே! உனக்கு வியாதி யாதொன்றும் இல்லாவிடினும் ஏதோ பல விசனங்களும் வருத்தங்களும் உன் உள்ளத்திலிருக்கின்றன வென்பது உண்மை. வைத்தியரிடத்தில் பரிசோதிப்பதனால் நாடியின் மூலமாய் மனக்கிலேசத்தின் வகையை இன்னதென தெரிந்துக் கொள்வது ஒரு சிறிதும் முடியாது. உன்னை எவரேனும் கண்டித்துக் கூறியிருக்கலாம். அல்லது உன் இஷ்டப் பூர்த்தியை எவரேனும் தடுத்து அபகரித்திருக்கலாம். இதுவே

எனது அபிப்பிராயம். எனவே உனது மன மாய்கைதா னென்ன? கூறுவாயாக.

சாவித்திரி:—என்னை எவரும் குறைகூறவில்லை. யாரும் என் கோரிக்கையை தடைசெய்யவுமில்லை. எவரைப்பற்றியும் தோஷம் கற்பிக்க எனக்கு விருப்பமுமில்லை.

அத்தியாயம்—5.

சாவித்திரியின் இவ்விடையால் பாலகிருஷ்ணனின் மனத் திக்கு யாதோர் சமாதானமுமேற்படவில்லை. இதற்கு ஏதே னும் சிகிச்சை செய்து பார்ப்போமென்ற எண்ணம் அவன் மனத்துள் வாட்டியது. எனவே அவன் மறுதினம் அதிகாலை சென்று அவ்வயோத்தியின் பிரபல வைத்தியராய் கருதப்பட்டு வந்த ஜெயராம் என்பவரை தன் இல்லத்துக்கு அழைத்து வந் தான். சாவித்திரியின் நாடியை அவரை பரிசோதிக்குமாறு கூறினன். வந்த வைத்தியரும் சாவித்திரியின் கை நாடியை பெரிதும் பரிசோதித்துப் பார்த்தார். அதிலிருந்து அவர் சாவித்திரிக்கு எப்படிப்பட்ட வியாதி யிருப்பதாயும் கண்டு கொள்ள முடியவில்லை. சாவித்திரியின் வெளி நிலைமையே தன்னுள் தேக சம்பந்த நோயில்லை யென்றும் மன வேதனையே வந்திருக்கிறதென்றும் பழக்கமுள்ளவைத்தியருக்குத் தெள்ளற எடுத்துக் காட்டிற்று. ஆனல் அவர் அதை வெளிக்குக்காட்ட இஷ்டப்படவில்லை. உண்மையில் நோயில்லாவிடினும் பொது வாய் வைத்தியர்கள் நோயிருக்கிறதென்றே கூறி தம் ஜீவ னம்ஸ வழியை அங்கிருந்து வைத்துக் கொள்வர். அவ்வாறே இந்த வைத்திய ஜெயராமும், நமது சாவித்திரிக்கு 'ஹிருதயக் கமல நோய்' இருக்கிறதென்றும் அதின் கூறுபாடே இத்தனை நிலைமைக்குக் காரணமென்றும், அதைத் தாம் நிவர்த்திப்பதாக வும் கூறி மருந்து பரிகாரம் செய்யலானர். ஒருவார காலமாக என்னென்ன அவுஷதங்களையோ கொடுத்து இல்லாத வைத் திய முறைகளை யெல்லாம் கையாண்டு விட்டார். சாவித்திரி யின் நிலைக்குலைவில் எத்தகைய சுக நிலையும் கண்டு பிடிக்க முடிய வில்லை. சாவித்திரியின் நிலைமை இருபதினின்றும்இரு

பத்தொன்றாய் பெருகிற்றே யல்லாது பத்தொன்பதாய் குறை யவே இல்லை.

அவருக்குப் பிறகு பைஜாபாதிலிருந்து வேறொரு புரா தன வைத்தியரும் அழைத்து வரப்பட்டார். இவர் நமது சாவித்திரின் கை நாடியை பரிசோதித்து மிகவும் ஆழ்ந்த ஆராய்ச்சி செய்தவரேபோல் இருந்து விட்டு, மிகவும் வருந்து பவரேபோல் ஒரு பெருத்த மூச்சு விட்டார். அதன்பின் இவர் கூறலுற்றார்.

வைத்தியஜீ:—அப்பா! இந்தப் பெண்ணை ஏன் இப்படி எலும்பும் தோலுமாக ஆக்கிக் கொண்டிருக்கிறீர்கள்? இந்த அம்மாளுக்கு நோய் நொடி யொன்றுமில்லையே.

பாலகிருஷ்ணன்-—வைத்தியஜீ, அப்படியா இப்பெண் ணுக்கு நோய் நொடி ஒன்று மில்லாவிட்டால் பிறகேன் இவ ளின் தேகம் தினேதினே பாதிக்கப்பட்டு வருகிறது.

வைத்தியஜீ:—இப் பெண்ணின் மீது ஏதோ காற்று (பைசாசு) தோஷம் ஏற்பட்டு இருக்குமென்றே நான் நம்பு கிறேன்.

பாலகிருஷ்ணன்:—சரி இருக்கட்டும். இதற்குப் பரி காரம் செய்யக்கூடிய தகுந்தவர் யார் இருக்கிறார்?

வைத்தியஜீ:—அப்படி பிரமாதமான தொன்றுமில்லை. யாரேனுமொரு மந்திரவாதியிடம் காட்டினால் சொஸ்தமாய் விடக்கூடும்.

இந்த நல்ல வைத்தியர் தமக்குத் தெரிந்த இந்த யோச னையை மட்டும் கூறிவிட்டு தமதருப்பிடம் சென்றார். நமது பாலகிருஷ்ணனை இன்னும் அதிகமான விசனங்களும் விசா ரங்களும் பிடித்து வாட்ட ஆரம்பித்தன. தனது தாயாரிட மும் தங்கையிடமும் சென்று சாவித்திரிக்கு இப்படிப்பட்ட மாறுதலான கதி எப்போதிருந்து வந்து வாய்த்து வருகிற தென்று விசாரித்தான். இவனின் தாயும் தங்கையுமான சாவி த்திரியின் மாமியும் நாத்தியும், நடந்தவற்றை முதலில் ஒளித் துக்கூற முயன்றார்களாயினும் பின்னர் ஒருவாறு நிகழ்ந்தவ ற்றை கூறலாயினர்.

"சாவித்திரி தினந்தோறும் தவறாது காலை நேரத்தில் மேன்மாடிக்குச் செல்வாள். அங்குள்ள மஸ்ஜிதை யடுத்த ஜன்னலருகே ஒருவேலையும் செய்யாமல் வெறுமனே மௌன மாய் உட்கார்ந்திருந்து வந்தாள். இப்படியிருந்தவள் அடிக் கடிபலமுறை அக்காலைகளில்தேம்பித்தேம்பி அழுதுபுலம்பவும் ஆரம்பித்தாள். இதையெல்லாம்நாங்கள்பார்த்துணர்ந்து காற்று தோஷமாயிருக்கலாமென நினைத்து அது தொடுத்து அவளை மேலே போக வேண்டாமென்று முற்றும் தடுத்துவிட்டோம். அது தொடுத்து அவளின் மனமும் தேகமும் மாறுபட்டு தின மும் க்ஷீணதிசையையே அடைந்து கொண்டு வருகிறது.

இவற்றைக் கேட்டுக் கொண்ட சபல சித்தனான பாலகிருஷ் ணனின் மனத்தில் நிச்சயமாய் சாவித்திரியின் மீது மஸ்ஜிதின் பக்கமாயுள்ள ஜின் பைசாசத்தின் தோஷம் தாங்கி விட்ட தென்று ஏற்பட்டு விட்டது. எனவே ஒரு க்ஷணமும் தாமதி யாமல் எந்த மந்திரவாதியையேனும் அழைத்து வரவேண்டு மென்று புறப்பட்டுச் சென்றான். வழியில் இவனின் பழைய சிநேகிதனொருவனை சந்திக்க நேரிட்டது. சாதாரண வந்தன உபசாரத்துக்குப் பின் அந்த நண்பன் பாலகிருஷ்ணனை விசாரிக்கலானான்.

நண்பன்:—நேசா! இத்தகைய மன விசாரத்தோடும் அத் துணையவசரமாகவும் எங்கு செல்லப் புறப்பட்டாய்.

பாலகிருஷ்ணன்:—நான் என்ன சொல்லட்டும். என் குழந்தை கிருஷ்ணனின் தாய் (தன் மனைவி சாவித்திரி) பல நாட்களாக என்னமோ விதமான நோயால் பீடிக்கப்பட்டிருக் கிறாள். எம்மட்டோ சிகிச்சைகள் புரிந்தும் சற்றும் குணத் தைக் காண்கிலோம். அவளை பைசாசஜின் தோஷம் சார்ந்து விட்டதென்று எல்லோரும் கூறுகிறார்கள். அதற்காகத்தான் எவராவதொரு மந்திர வாதியை அழைத்துவரச்செல்லப் புறப் பட்டேன். அவருடைய மந்திரத்திலாவது குணம் ஏற்படுமல் லவா? மந்திரம் செய்து குணப்படுத்தக்கூடிய எவரேனும் உனக்குத் தெரிந்திருந்தால் அவரைப்பற்றிய தகவலை எனக் குக் கூறு.

நண்பன்:—பாலா! இக்காலே மந்திரம் தந்திரங்க ளெல்லாம் செய்து (மாங்காய் விழ வைப்பதாயும், வானத்தை வில்லாய் வளைத்து மணலையும் கயிறுய் திரித்து விடுவதாக) மோசம் செய்யும் எத்தனையோ பேர்கள் பெருத்து மலிந்து போயிருக்கின்றனர். ஆனல் பள்ளி வாயலில் ஒரு மியான் சாஹிப் இருக்கின்றார். அவர் உத்தம பெரியார். எல்லோருக்கும் அவர் குருவாய் விளங்குகிறார். எனக்குத் தெரிந்த மட்டில் இவ் விஷயங்களில் அவர் சிறந்தவரே யாவர். எங்கள் வீதியிலும் ஒரு பெண்ணுக்கு ஜின்தோஷம் பிடித்திருந்தது. எத்தனையோ பேர்களிடத்திலெல்லாம் பரிகாரம் செய்யப்பட்டும் அது குணப்படவில்லை. இறுதியில் அந்த மியான் சாஹிபுடைய மந்திர சக்தியினுல் தான் அந்த ஜின் ஓடிப்போய் விட்டது. பார்க்கப்போனுல் சமஸ்கிருத மந்திரங்களுக்கெல்லாம் அதிக தெய்வீக சக்தியில்லைபோலும்; ஆனல் முஸ்லிம்கள் ஓதக்கூடிய குர்ஆன் மந்திரத்தில் தான் எப்படிப்பட்ட நோயும் பைசாச தோஷமும் பறந்தோடிப் போவதாக ஜனங்கள் கூறுகிறார். என்னமோ நான் சொல்லி விட்டேன். அதன்பின் உன் இஷ்டப்படி செய்யலாம்.

பாலகிருஷ்ணன்:—அந்த மியான் சாஹிப் முஸ்லிமாயிற்றே. நாங்கள் பிராம்மணர், எங்கள் வீட்டிற்குள் முஸ்லிம்களை வரவிடுவது வழக்கமில்லையே. முஸ்லிம்களை தொடக்கூடாதென்றும் எங்கள் பெரியோர்கள் கூறியிருக்கிறார்களே. இதற்கென்ன செய்வது!

நண்பன்:—அதைப்பற்றி என்ன? சிகிச்சை விஷயங்களிலெல்லாம் இத்தகைய வேற்றுமைகளைப் பார்த்தால் காரியம் சித்திக்குமா? இப்படிப்பட்ட விஷயங்களிலெல்லாம் ஜாதி வேற்றுமை தீண்டாமைகளை யெல்லாம் நான் பார்ப்பதில்லை. நம்மைப்போலவே அவர்களும் மனிதர்கள்தானே அவர்களைத் தீண்டக்கூடாதென்று கூறுகிறார்களே.அதுவென்னென்பதுஎனக்கொன்றும் புரியவில்லை. நானும்உன்னைப்போன்ற பிராம்மணனுயிருந்தும்இவ்விதமானபூசல்களைகவனிப்பதில்லை. நான்இவ்வாறெல்

லாம் கூறுகிறேனென்று பார்க்க வேண்டாம். உன் இஷ்டப் படி செய்.

பாலகிருஷ்ணன்:—நீ கூறுவதெல்லாம் சத்தியமாகத்தா னிருக்கின்றன. ஆனல் எங்கள் வீட்டிலிருப்போரெல்லாம் இதற்குடன்பட மாட்டார்களே. என் மனைவியும் கூட ஒரு முஸ்லிமின் சிகிச்சையை விரும்புவாளோ என்னமோ தெரிய வில்லை. அவர் வேண்டாம்.மற்றெவரையேனும் காட்டிக்கொடு.

நண்பர்:—சரி அப்படியானல், நமக்குத் தெரிந்த சுவாமி யார் ஸாயின்ஜீ கோபிதாஸ் தான் இருக்கின்றூரே அவர்பால் சென்று அழைத்துப்போய் சிகிச்சை செய்து பார். அவராலே னும் உங்களுடைய கோரிக்கைப் பூர்த்தியாகலாம்.

எனவே நமது பாலகிருஷ்ணன் தனது நண்பனிடம் விடை பெற்றுக்கொண்டு நேரே சென்று ஸாயின்ஜீயைப் போய் பேட்டி கண்டான். மிகவும் பணிந்து தமது மனைவியின் கதியையும் மற்றும் நிகழ்வுற்றன வனைத்தையும் எடுத்தோதி வந்து சிகிச்சாப் பரிகாரம் செய்யுமாறு மிகவும் வேண்டிய ழைத்தான். எனவே அந்த ஸாயின் தமது பண்டைய படாபுத் தகக்கட்டையும் ஓலைச் சுவடியின் சுருளையும் சுருட்டிக் பக்கத் தில் அடக்கிக்கொண்டு பாலகிருஷ்ணனைப் பின்பற்றி பண்டி ராம கோபாலின் வீடென்று வழங்கிவந்த பலாகிருஷ்ணனின் இல்லத்துக்குவந்து சேர்ந்தார்.

அத்தியாயம்—6.

மந்திரம், தந்திரம், ஆரூடம் யாவும் தெரிந்தவரென போற் றப்படும் இந்த ஸாயின்ஜி அவ்வீட்டின் ஒரு குறிப்பிட்ட இடத்தைத் தமது ஆதீனத்தி லாக்கிக்கொண்டு அவ்விடத்தை புதுச் செம்மண்ணைக்கொண்டும் சாணத்தைக்கொண்டும் மெ ழுகி புதுப்பித்துக்கொண்டார். அதற்கு சாம்பிராணி தூபத் தையும், கற்பூரப் புகையையும் போட்டார். அப்படிப்பட்ட (சாணி மெழுகிய) பரிசுத்தமான இடத்தில் விபூதிச் சக்கரங் கள் பல போட்டு அதின்மீது அமர்ந்துக்கொண்டு கையில் ஜப மாலையைப்பற்றி வெகு நேரம் மட்டும் முணுமுணுவென!யாரு

க்கும் தெரியாத மந்திரங்களைக்கொண்டு உருப்போட்டு முடித்துவிட்டு சாவித்திரியை அழைத்து வருமாறு ஆக்ஞாபித்தார். தெய்வீக சக்தியென்னும் நோயால் பீணிக்கப்பட்டுதளர்வுற்று வாடிய சாவித்திரிக்கு மாமியும் நாத்தியும் மகா சிரமத்தோடு ஸ்நானம் செய்வித்து ஈரத்துணியோடு அழைத்துவந்து அந்த முணுமுணுக்கும் சாமியாருக் கெதிரில் அவர் போட்டு வைத்திருந்த சக்கரத்தின் மீது உட்காரவைத்தார்கள். பாவம்! சாவித்திரி பிணியாலும் குளிராலும் ஒடுங்கி நடுக்குற்றிருந்தாள். ஸாபின்ஜீ சாமியார் கற்பூரத்தை ஏற்றிவைத்து சாவித்திரிக்கும் சாம்பிராணி புகையைப் போட்டார். அதன் பின் எதிரிலிருக்கும் சாவித்திரியை நோக்கி கேட்கலுற்றார்.

ஸாபின்ஜீ:—ஏய்! சொல் உன் பெயரென்ன?

அந்தோ பரிதாபம்! தன் நிலையை சற்றும் கவனியாது எல்லோரும் சேர்ந்து புரியும்இவ்வெல்லா அனுவசியமானவிபரீதச் செயல்களை யெல்லாம் கண்ட சாவித்திரிதனது இக்கோலா காலத்துக்காகப் பெரிதும் வருந்தித்துக்கித்தாள். தன்னை இப்படியெல்லாம் ஹிம்சிப்பார்களென்று கருதி முன்னமே தன் கணவன் பாலகிருஷ்ணனிடம், நீங்கள் புரியும் இப்படிப்பட்ட விபரீத சிகிச்சா முறைகளிலெல்லாம் எனக்கு ஒரு சிறிதும் குணம் ஏற்படாதென்று தடுத்துக் கூறியிருந்தாள். இவள் இப்படி கூறுவதும் இவள் மேல் சார்ந்து கொண்டிருக்கும் பைசாசத்தின் தன்மைதானென்று அவன் எண்ணிக் கொண்டு அவளின் வசனங்களைப் பொருட்படுத்தாமலேயே மௌடீகனாய் இருந்து விட்டான். தனி மனுஷியான சாவித்திரியால் என்ன செய்ய முடியும்?மேலும் "உன் பெயர் என்ன"வென்று சாமியார் வீணே கேட்ட கேள்விக்கு ஒன்றும் பதில் சொல்லாமல் தாமதஞ் செய்து கொண்டிருந்தாள்.

தாம் விடுத்த வினவுக்கு விடையளிக்காமல் மௌனமாயிருக்கும் சாந்த சாவித்திரியை வெறிக்கப் பார்த்து உறக்கச் சப்தமிட்டு மீண்டும் வினவலானார்,

ஸாபின்ஜீ:—சொல்! உன் பெயரென்ன? நீ யார்? எங்கு இருப்பது?

சாவித்திரி:—(பொறுமையோடு) என் பெயர் சாவித்திரி. நான் சாவித்திரிதான் நான் இந்த வீட்டில் தானிருப்பது.

ஸாயின்ஜீ:—இல்லை, உன் பெயர் சாவித்திரியல்ல. உன் பெயரென்ன வென்பதை உள்ளதுள்ளபடி கூறி விடு. இன்றேல் உனக்குச் சரியான பூஜைகளை (அடிகளை) கொடுப்பேன். இக்காலை அந்த சாமியாரின் முகம் வெறி பிடித்த புலியின் முகம்போல் காணப்பட்டது. கண்களை சிவக்கச்செய்து மகா குரூரத்தோடு பார்த்தார். தொண்டை கிழித்து கத்தி அதட்டிக் கொண்டு சாவித்திரியிடம் நாமதேயத்தை பற்றியே விசாரித்துக் கொண்டிருந்தார். பாபம்! சாவித்திரியின் இளகிய மனம் சாமியாரின் இடி முழக்கம் போன்ற கர்ஜனையால் ஒவ்வொரு முறையும் துணுக்குற்று துடித்தது. அவளின் காதுகளும் அவரின் பெரு முழக்கத்தால் செவிடுபட்டன. ஓயாது முன் விடுத்த வினவையே அந்த மௌட்டீகச் சாமியார் வினவிக் கொண்டிருந்தார்.

இதற்கு நல்லறிவு சுவாதீனத்தோடிருக்கும் சாவித்திரி என்ன பதில் சொல்லுவாள். "நான் சாவித்திரி தான் என் பெயரும் சாவித்திரி தான். நான் இங்கு தானிருப்பது" என்ற உண்மையே பல முறை திருப்பித் திருப்பிக் கூறினாள்.

இவ்வளவுதான் வந்துவிட்டது அந்தசாமியாருக்கு ரௌத்திராகமும் ஆக்ரோஷமும். இவர் மேல் வந்து விட்ட கோபம் என்னும் பைசாசத்தை தன்னாலும் அகற்றிக் கொள்ள முடியவில்லை போலும்! சாந்தவதியான சாவித்திரிக்கு இது காறும் கொடுத்த இத்துணைச் சிரமமும் போதாமல் "தீச்சட்டியில் அடுப்புக்கரிகளைப் போட்டு செந்தணலை மூட்டி அதில் இரும்புக் குறடை காயவையுங்கள். மயிலே மயிலே இறகு போடென்றால் போடுமா? இப்படி நாம் சாதாரணமாய் கேட்டால் உண்மையை வெளியிடாது. இந்த பைசாசம் மகாக் கொடியதாய் இருக்கிறது. இதை விடக் கூடாது" என்று அதட்டி உத்தரவிட்டார். மூட ஸாயின்ஜீ என்னும் சாமியார்.

மூடக் கொள்கைகளை யெல்லாம் எளிதில் நம்பிவிடும் பாலகிருஷ்ணன் ஸாமின்ஜீயின் உத்தரவுப்படி அக்கினி பாண்டத்தைக் கொண்டு வந்து வைத்தான். சாமியார் ஒரு தீக்குறடை (சிமிட்டாவை) நெருப்பில் சுடவைக்கலானார். மீண்டும் சாவித்திரியின் பக்கம் வெறிக்கப் பார்த்து கோபத்தோடு அதட்டி "எய் இப்போதாகிலும் ஒளியாமல் உள்ளதைக் கூறிவிடு. நீயார்? இங்கு ஏன் வந்தாய்? இந்தப் பெண்ணை ஏன் பிடித்தாய். இன்றேல் உன்னைச் சுட்டுக் கரியாக்கி சம்பலாய் ஊதிவிடுவேன்" என்று கூறினார்.

சாவித்திரி ஒரு பெண் பாலே. இவளின் ஹிருதயமும் மிக மிக இளகியத் தன்மை வாய்ந்ததே. அந்தச் சாமியார் முன் வைக்கப்பட்டிருந்த நெருப்புச் சட்டியை இடிக்கியையும் பார்வையிட்டாள். இவை எதற்காக கொண்டு வரப்பட்டன என்பனவற்றையும் யூகித்துக் கொண்டாள். மடக்கி மடக்கி கேட்கப்படும் ஸாமின்ஜீயின் வினவுக்கு தன் பெயர் சாவித்திரி தான் என்பதல்லாமல் வேறென்ன தான் சொல்ல வேண்டுமோ? சாவித்திரிக்கு தனது ந.மதேயங்கள் என்னவென்று தெரியாதா? நன்குய் தெரியும். மந்திரவாதிகளென்போர் இப்படிப்பட்ட குதர்க்க வாதங்களைத் தான் புரிவதென்பதையும் அவள் தெரிந்து கொண்டாள். ஆனால் என்ன சமாதான மொழிகளை கூறினால் சாமியார் சாந்தமுறுவார் என்பதற்குரிய மார்க்கத்தை யோசித்துக் கொண்டிருந்தாள். அவரை சமாதானப்படுத்தி விடுவதற்குரிய பொய் மொழிகளைகூறி ஏமாற்ற அவளுக்குத் தெரியும். ஆனால் எத்தகைய துன்பத்துக்கும் இம்சைக்குமஞ்சி மெய்யை மறைத்து பொய்ப்புகல அவள் ஒரு சிறிதும் சம்மதிக்கவில்லை. என்ன துன்பம் நேர்ந்தாலும் சத்தியத்தை விடலாகாதென்று அவள் திடசித்தம்பூண்டு மிகுந்தபணிவோடு சாமியாரை நோக்கி சாந்தமாக கூறலுற்றாள்:—

சாவித்திரி:—அய்யா பெரியவரே! உண்மையை மறைத்துப் பொய் புகல எனக்கு சற்றும் சம்மதமில்லை. நான் கூறவுமாட்டேன். மீண்டும் நான் கூறுகிறேன். என் பெயர் சாவித்திரி தான் இதோ இருக்கும் பாலகிருஷ்ணர்தான் எனது சத்

தியக் கணவர். இந்த குழந்தை கிருஷ்ணன் தான் எனது மகன். இது எனது மாமியார் வீடு. இதுகளே உண்மை.

ஸாபின்ஜீ:—இல்லை! இல்லை!! அது பொய்! பொய்!! முழுதும் தவறு என்று மீண்டுமவர் பிடித்த பிடிவாதத்தை விடவேயில்லை. அந்த மஹா மூர்க்கனான சாமியாருக்குக் கோபம் தலைக்குமேல் பொங்கி எழுந்து கண்கள் தீப்பொறி பறக்கச் சிவந்தன. ஆக்ரோஷம் அவரின் உடலைப் பதறச் செய்தது. எனவே இப்பாதகன் சாவித்திரியின் அருகே நகர்ந்துச் சென்று அவளின் அதிமிருதுவான கூந்தலை தன் முரட்டுக் கரத்தால் எட்டிப் பிடித்து அவளின் சிரசை ஆட்டி உதறினான்.

அந்தோ பரிதாபம்! வாதனை பொறுக்கமாட்டாத சாவித்திரி பரிதாபகரமாய் கதறிப் புலம்பினாள். அவனின் ராக்ஷஸப் பிடியினின்றும் விடுவித்துக்கொள்ள முயன்றாள். இதனால் இவளின் சிரா ரோமக்கால்க ளெல்லாம் அதிகமான வாதனையை யளித்தனவே யல்லாமல் விடுபட முடியவில்லை. சாமியாரின் இக்கொடுங் காரியத்தால் சாவித்திரி உடல் நொந்துக் கத்திப் புலம்பலானாள்:—

“அய்யா கடவுளுக்காகவென்று என்பால் கருணைக் கூர்ந்தேனும் என்னை விட்டு விடுங்கள். என்மேல் எத்தகைய பேய் ஜின் முனியின் தோஷமுமில்லை. இது உண்மை. நான் நல்ல ஸ்திதியில் தானிருக்கிறேன். எனக்கு மேன்மேலும் துன்பத்தை யீந்து என் ஆவியைப் போக்காதீர்கள்.”

ஸாபின்ஜீ மீண்டும் கோபாவேசக் குரலோடு “இது முடியாது. இதெல்லாமல் பைசாசத்தின் தந்திர வார்த்தைகள் தான் “செறுப்படிப்பட வேண்டிய பேய் சும்மாயிரு வென்றால் இருக்குமா? என்று கண்டித்தான்.

சாவித்திரி இத்துன்பங்களை யெல்லாம் சகிக்கமாட்டாது பதறிக் கத்தித் துடித்துக் கொண்டிருந்தாள். பார்ப்போர் மனமும் அழுகையை கேட்போர் மனமும் இளகி உருகத்தக்க விதமாக அக்கன்னிகை வேதனைப்பட்டாள். இவளின் கண்கள் அடிக்கடி தன் கணவனான பாலகிருஷ்ணனை நோக்கி அபயம்

கோருவதேபோல் காணப்பட்டன. இதை யெல்லாம் பார்த்துக் கொண்டுதானிருந்த கணவன் நடப்பனவை யெல்லாம் தன் மனைவியின் பிற்கால அனுகூலத்துக் கென்றே யாகுமென்று மௌட்டியத் தனமாய் தவறுக்க் கருதிக்கொண்டு மௌனமாக இருந்து வந்தான். ஆனால் இவனின் உள்ளம் மாத்திரம் தன் மனதுக்கினிய சாவித்திரியின் அழுகைப் புலம்பலுக்கும் சகிக்கமாட்டாத் தன்மைக்கும் பெரிதும் வருந்தி பரிதாபப்பட்டது. எனினும், சாவித்திரி சற்று சிரமத்தை மேற்கொள்வதால் அவளுக்குப் பிடித்திருக்கும் எல்லா சனியன்களும் தொலைந்து சுகமுண்டாகுமென்று மனச்சமாதானம் கொண்டான்.

பாலகிருஷ்ணனின் முகவாட்டத்தை கண்ணுற்ற அந்த முட்டாள் ஸாமின்ஜீ 'ஐயா நீர் மனப்பதற்ற மடைய வேண்டாம். இதோ இன்னும் சில நிமிடத்துக்குள் பாரும். அவள் நல்ல நிலைமைக்கு வந்து விடுவாள். அவளின் பைசாசமும் பறந்தோடி விடுகிறது. நெருப்பிலுள்ள குறடு நன்றாய்ப் பழுக்கக்காய்ந்திருந்தால் அதை என்னிடம் கொண்டுவாரு'மென்று தோற்றினார்.

சாவித்திரியின் துரதிருஷ்டவசமாய் குறடும் செந்தணலைப்போல சிவக்கக் காய்ந்திருந்தது. அதை பாலகிருஷ்ணன் ஸாமின்ஜீயிடம் கொண்டு வந்து கொடுத்தான். இதுகாறும் அக்கொடிய பேயோட்டியின் கரங்கள் சாவித்திரியின் கருங்கேசங்களை விட்டபாடில்லை. சாவித்திரியின் பரிதாபகரமான அழுகையும் பதற்றமும் ஓய்ந்தபாடில்லை. அந்த சாமியார் இன்னமும் பெருத்த குரலில் அதட்டிக் கூறலானார்.

ஏ! பைச்சாசமே என் கரத்திலிருப்பது என்னவென்பதைப்பார். இஃதோடு நீயும் உன் காயமும் அழிந்து மாண்டனவென்பதை தெரிந்து கொள். இப்போதும் கூறுகிறேன். உனக்கு வேண்டுமானால் உனது நாமதேயத்தை உண்மையாகக் கூறிவிடு. இந்தப் பெண்ணை விட்டு நீ எங்கேனும்ஓடிப்போய் விடு. இன்றேல், ஒரு க்ஷணத்தில் உன்னை சுட்டுக்கரித்து சாம்பலாக்கி விடுவேன். ஜாக்கிரதை!

அந்த மூடச்சாமியார் தலை ரோமத்தை பிடித்து வாட்டிய துன்பத்தின் காரணமாய் சாவித்திரிக்கு சுய உணர்ச்சியுமில்லாது போயிற்று. ஸாயின்ஜீ கூறியவைகளை விளங்கி அதற்குரிய பதில் சொல்லவும் உணர்வில்லாமற் போயிற்று.

தான் அதட்டிக் கேட்ட வினைக்களுக்கு சாவித்திரியின் வாயினின்றும் எத்தகைய பதிலும் கிடைக்காமற்போகவே பேயோட்டி சாமியாருக்கு மீண்டும் ரௌத்திராகாரம் பொங்கியெழுந்தது. அவளின் கூந்தலை விட்டு விட்டு அவளின் கரத்தைப்பற்றிக் கொண்டார். சற்றும் மனமிரக்க மில்லாத கொடும்பாதக ஸாயின்ஜீ நமது மெல்லியளான சாவித்திரியின் அதிமிருதுவான மலர்போன்ற உள்ளங்கையில் காய்ந்து சிவந்திருந்த சிமிட்டாவினல் கொடிய தீச்சூடொன்றை இழுத்து விட்டான்.

அந்தோ பரிதாபம்! நமது சாவித்திரியின் மலர் காங்கள் இதுகாறும் நெருப்பின் பக்கங்கூட சென்று சூடுண்டறியாது. அத்தகைய கரத்துக்கு ஸாயின்ஜீயின் அக்கிரமத்தினல் செந்தணல் சூட்டின் தழும்பே கதியாய்விட்டது. அந்த வனிதாமணியின் உள்ளங்கைத் தோலும் சூட்டின் காரணத்தால் பிய்ந்து சுருங்கிப்போயிற்று. சாவித்திரி மிகவும் துடிதுடித்துப் போய் அழுத பேரழுகையினல் அவள் முற்றும் உணர்வற்றும் மூர்ச்சித்துப் போனுள். தன் கண்ணுட்டியான சாவித்திரியின் நிலைமை இப்பரிதாபகரமான கதிக்கு வந்தமையைப் பார்த்த பாலகிருஷ்ணனின் கண்களினின்றும் நீர்த்துளிகள் சிந்தின. எனவே அவன் தன் துக்கத்தை யடக்கிக் கொள்ளமாட்டாது ஸாயின்ஜீயைப் பார்த்து வேண்டினுன்.

பாலகிருஷ்ணன்:—ஐயா பெரியாரே! நிறுத்திக் கொள்ளுங்கள். அவள்மீது ஆண்டவனுக்காகவே தயை கூறுங்கள். இவள் அதிக பலஹீனதேகியாயிருக்கின்ருள். அதிகச் சிரமத்தைத் தாளமாட்டாள். இன்னும் அவளுக்கு மேன்மேலும் துன்பத்தைத் தாராமல் இத்துடன் விட்டுவிடுங்கள்.

ஸாயின்ஜீ:—அப்பா! அவசரப்படாதே இன்னும் சற்று நேரம் உன் மனதை தைரியப்படுத்திக்கொண்டு பதருமல் இரு.

இவள் மீதுள்ள பிசாசை சும்மா விடக்கூடாது. இவளின் மறு கையில் இன்னொரு சூடு கொடுத்தால் தான் அது வழிபட்டு வரும் அப்புறம் சாவித்திரியின் • மேலும் எல்லா சனியனும் தோஷமும் அடியோடு தொலைந்து போகிறது பார்.

பாலகிருஷ்ணன்:—வேண்டாம்! வேண்டாம்! பெரியோரே! மீண்டும் அந்த மெல்லியாளுக்கு துன்பம் தரவேண்டாம். இவளை இந்த கதியோடேனும் விட்டுவிட்டால் உங்களுக்கு மிகவும் புண்ணிய முண்டாகும்.

இதற்கிடையே சாவித்திரி முற்றும் மூர்ச்சை யற்றுப் போய் சாய்ந்துவிட்டாள். அங்கு கூடியிருந்தோர் எத்துணையோ கூப்பிட்டுப் பார்த்தும் சாவித்திரிக்கு வானம்பூமி ஒன்றுமே தெரியாமலிருந்தது. சாவித்திரி முன்னர் அழுது புலம்பிக் கொண்டு இப்போது அடியோடு மௌனமுற்று அவகதியுற்றுப்போனதை கண்டு பாலகிருஷ்ணன் மிகவும் நொந்துப் போனான். ஸாமியின்ஜீ இழைத்த வீண் துன்பத்தாலேயே இவள் மூர்ச்சித்துப் போனாள் என்பதை நன்கு தெரிந்துகொண்டான். இன்னும் சற்று அதிகமான துனபங்களுக்கு அவள் ஆளாகியிருந்தால், அடியோடு இத்தாணியைவிட்டு பரகதியை படைந்திருப்பாளென்று அவன் மனதில் ஊனறியதாலும் சாமியாரிடம் பெரிதும் கெஞ்சியழுது அவரின ஆக்ஷியினினறும் சாவித்திரியை விடுவித்துக் கொண்டான.

சாமியார் கூறியவற்றை யெல்லாம் பகிஷ்கரித்து விட்டு உணர்வற்று பிரேதம்போல் கிடந்த சாவித்திரியை ஒரு குழந்தையை தூக்குவதே போல் எடுத்துச் சென்றுஅறையிலிருந்த படுக்கையில் கிடத்தி அவளறிவை மீட்டுவதற்காக எத்துணையோ சிகிச்சா முறைகளை யெல்லாம் கையாண்டான், பல பரிகாரங்களையும் புரிந்தான் ஆனல் சாவித்திரி பூர்த்தியாய் 2 மணி நேரங்கள் வரை சுய உணர்வுப் பெருபலேயே வீழ்ந்து கிடந்தாள்.

பற்பல பரிகார முறைகளை யெல்லாம் கையாண்டதன்பின்னரே சற்று திடம்பெற்று சாவித்திரி தனது சுய உணர்ச்சியைப் பெற்றாள். ஆயினும், அவளின் தேக சக்தி நிலைமை

யானது, பிறரின் உதவியில்லாது சுயமே அம்படியேனும் இப்படியேனும் பிறழ்வதற்குமுரிய சுய சக்தியில்லாத அத்துணை சேவைமான பலஹீனத்தால் . சாவித்திரி வாட்டப்பட்டுப்போனாள். இரக்க மற்ற சாமியார் பேயோட்டும் மௌடீகத்தால் சாவித்திரியின் கரத்தில் சூடிட்ட வேதனையானது அவளின் ஹஸ்தம் முழுதையும் அசைவற்றிருக்க செய்து விட்டது. அந்தப் புண்ணும் தினேதினே பெருகி ரணமாய் விட்டது. எனவே அக்காயத்தின் மீது தினமும் மருந்திட்டு கட்டுக்கட்டி வந்தனர். சாவித்திரியைச் சுட்ட அந்த அக்கினிச் சுவாலையில் என்ன விஷ சக்திமிருந்ததோ தெரியவில்லை. அந்த ரணம் ஒரு சிறிதும் குறையாமல் அனுதினமும் வளர்ந்து சாவித்திரியின் நிலைகுலைந்த ஸ்திதியை இன்னும் அதிகமான ஆபத்திலேயே ஆக்கி வந்தது. சாவித்திரியின் தேகத்தில் ஒவ்வொரு வேளையும் ஒவ்வோர் விதமான கொடிய மாறுதல்கள் ஏற்பட்டு அவளை நெக்குறுகச் செய்து வந்தது. சாவித்திரியின் சரீரப்பாங்கு பெரிதும் மாறுபட்டு இம்சைக் குள்ளானது போலவே அவளின் உண்மைக் கணவனை பாலகிருஷ்ணனின் மன நிம்மதியும் தினேதினே மாறுபட்டுக் குழம்பி அவனைப் பெரும் வேதனைக்குட்படுத்தி வாட்டி வந்தது. இம் மட்டுமா? சாவித்திரியின் சிரமபரிகாரத்திற்காகவும் அவளுக்குரிய பணிவிடைக்காகவும் இவன் நேரங்களில் பெரும்பான்மையை தினந்தோறும் செலவிட வேண்டியதாய் முடிந்தது. அத்துடன் தன்குழந்தை கிருஷ்ணனை சம்ரக்ஷிப்பதற்கும் அவன்வாழ்வையும் பாதுகாத்துக் கொள்வதற்குங்கூட பெருமித காலத்தை போக்க வேண்டிய சங்கடங்களும் இவனுக்கு ஏற்பட்டு விட்டன. இத்துணை கஷ்டப்பட்டு உழைக்கும் இவனோடு தனது தாயும் தங்கையும் எம்மட்டு தூரம் வாஞ்சையும் கருணையும் கொண்டு உதவி புரிகின்றார்களென அவன் நன்கு ஆராய்ந்துப் பார்த்தான். எனவே இவர்களின் நடத்தைகளைக் கொண்டும் மனப்பான்மையைக் கொண்டும் இன்னோர் தன் இல்லாளான சாவித்திரியின நிலைமையில் சற்றும் அக்கரைக் கொள்ளாமலேயே இருந்து வருகின்றன ரென்பதை ஐயமற விளங்கிக்

கொண்டான். ஆதலின உள்ளக்கிடக்கைச் சற்று மற்ற அவர்களிடம் எப்படிப்பட்ட உதவியையேனும் கோருவதை முற்றும் திரஸ்கரித்து சுயமரியாதை பூண்டவனுனன். மானுஷ்யப் பற்றில்லாத அந்த மாமியும் நாத்தியும்கூட உள்ளத்தில் துவேஷங் கொண்ட காரணத்தினிமித்தம் சாவித்திரிக் கருகே அடிக்கடி வந்து சமாதான வசனங்கள் கூறுவதையும் முற்றும் நிறுத்திக் கொண்டனர். சாவித்திரியின் வாழ்வை கத்தரித்துவிட வேண்டுமெனபதே அன்னோரின் உள்ளக்கிடக்கைப் போலும்! மேல் நோக்காய் இவற்றை யெல்லாம் சற்றே உணர்ந்த பாலகிருஷ்ணன் அது தொடுத்து தன் தாய் தந்தையின் உதவியை எதற்கும் கோராது தன்னந்தனியே இருந்து தன் காதலிக்குரிய சிரமபரிகாரங்களைப் புரிந்து வந்தான். குழந்தை கிருஷ்ணனை வளர்த்து சம்ரக்ஷிக்கும் பாரமான பொறுப்பையும் தன் தோள்மேல் சுமந்து கொண்டான். இரவும் பகலும் ஓயாது தொடர்ந்து நின்ற இவனுடைய சிரமமும் விசனமும் இவனையே பாதித்து தொடங்கின இவனுடைய தேக நிலையையும் சிறுகச் சிறுக பாழ்படுத்தத் தொடங்கின. சால் கரங்களிலும் ற்றே சாதாரண அயர்ச்சியும் வாதனையும் காண ஆரம்பமாயின. இராவிழிப்பினுல் கண்ணெளியும் சற்று மயங்கி, அதிகரித்த சிந்தனு அவஸ்தையால் மூளை சக்தியும் அயர்ச்சியடையத் தொடங்கிற்று. இவனுக்கு சமயா சமயத்தில் சாதாரணமான ஜுரமும் காணப்பட்டது. இவ்வெல்லா அவஸ்தைகளும் ஒருங்கே கூடி இவனுடைய சுக வாழ்விலேயே ஒரு குழப்பத்தைச் செய்து விட்டன.

அத்தியாயம்—5.

எனவே இத்துணைச் சிரமங்களினூடே இங்குதன் காதலியை அதிகரித்த அவஸ்தையில் வைத்திருப்பதை காட்டிலும், சாவித்திரியை அவளின் தாயகத்துக்கு அழைத்துச் சென்று அவ்விடத்தில் ஏதேனும் சிகிச்சை செய்து அவளின் சுகத்தை மீட்பிக்கலாமென அவன் பெரிதும் எண்ணினுன். இவ்வாறு திடீரெனச் செய்து விடுவது தாய் தங்கைகளுக்கு அதிருப்தி

யையும் பொறுமையையும் கிளப்பி விடுமென்பது ஒரு பக்கல் கிடக்க சாவித்திரியும் இவ்விஷயத்துக்குச் சம்பந்தப்படாதவளாக இருக்கவேண்டி யிருந்தாள். எனவே பாலகிருஷ்ணன் தனது சாவித்திரியின் தற்போதிய சர்வ நிலைகளையும் எழுதி தினமும் மாமி விட்டார்க்குத் தெரிவித்து சாவித்திரியின் பெற்றோர்களையும் உதவிக்குக் கோரலாமென முடிவு செய்தான் அவ்வாறே அன்று துவரிந்து கரதலியின் சாவ விஷயங்களையும் மாமி விட்டாருக்கு விளக்கினான். எனவே மறுதினமே அங்கிருந்து பாலகிருஷ்ணனின் மாமியாரும் மைத்துனியும் அயோத்தியாவுக்கு வந்து சேர்ந்தனர். அக்காலை சாவித்திரியின் பணிவிடைப் பரிகாரங்களுக்கென்று பாலகிருஷ்ணன் ஒரு வேலைக்காரியையும் நியமித்துக் கொண்டான்.

சாவித்திரியுடைய மாமியும் நாத்தியும் கணவனும்சேர்ந்து புரிந்த சிகிச்சைகளினால் அவளின் கரத்திலிருந்த சூட்டுப் புண் இரணங்களெல்லாம் சிறுகச் சிறுக முற்றும் குணப்பட்டு விட்டன. ஆனால் அவளின் மனம் சரீர நிலைமைகள் மாத்திரம் சற்றும் ஒழுங்குக்கு வரவில்லை. அவளின் உள்ளத்தின்கண் இருந்த பதற்றமும் ஒரு விஷயத்தின் பாலிருந்த பற்றும் இதன் காரணமாய் உண்டான நிலைகுலைவும் ஒரு சிறிதும் மாறுபடாமல் பழையபடியே இருந்து வந்தன.

தன் செல்வப் புத்திரி சாவித்திரியுடைய விதவிதமான மாறுதல்களையும் கேவல ஸ்திதியையும் கண்டு கண்ணீர் வடித்து வந்த சாவித்திரியின் அருந் தாயார் ஒருநாள் பாலகிருஷ்ணனை யணுகி வினவலுற்றாள்.

சா-தாய்:-பாலா! இவளையேன் இவ்வாறு போட்டுவைத்து அவஸ்தைப்படுத்தி உருக்கச் செய்கின்றீர்கள்? இதற்குரிய தகுந்த சிகிச்சைகளை என் புரிதல் கூடாது?

பாலகிருஷ்ணன்:—இதற்குரிய எத்தனையோ சிகிச்சைகளையும் பரிகாரங்களையும் புரிந்து பார்த்துவிட்டோம். இவைகளால் எப்படிப்பட்ட பலனும் கிடைப்பதாய் தெரியவில்லையே. இதற்கென்ன செய்யலாம்?

சா-தாய்:—நானும் இங்குவந்து சில நாட்களாய்விட்டன. தினமும் பார்த்துத்தான் வருகின்றேன். இவளை இப்படியே வெறுமனே கிடத்திவைத்துக் கொண்டிருக்கின்றீர்களேயல்லாது ஏதேனும் மருந்தீய்ந்து உபசரிப்பதாய் நான் ஒருநாளும் காணவில்லையே.

பாலகிருஷ்ணன்:—அன்னாய்! அங்ஙனமன்று. நீங்கள் வந்தபிறகு ஏதும் சிகிச்சை புரியவில்லையென்பதுண்மைதான். ஆனால் இதற்குமுன் எத்தனையோ வைத்தியர்களிடமும் ஹக்கீம்களிடமும் காட்டி சிகிச்சைச்செய்து பார்த்துவிட்டோம். எனினும் எவருடைய ஔஷதங்களாலும் சாவித்திரிக்கு ஒரு சிறிதும் குணம் ஏற்படவே காணோம். இறுதியில் நம் சாவித்திரிக்கு எவ்வண்ணமான பிணியுமில்லை யென்றும், ஏதோ ஒரு விதமான பேய் பைசாசத்தின் தோஷமே தாங்கியிருக்கிறதென்றும் ஒரு வைத்தியஜீ கூறிவிட்டுச் சென்றார்.

சா-தாய்:—அப்படியானால் பின்னர் ஏன் அத்தகைய சிரம சிகிச்சையேனும் செய்து பார்த்தல் கூடாது.

பாலகிருஷ்ணன்:—அஃதில்லாமலா? அவ்வாறும் செய்து பார்த்தோம். நமது ஸாமின்ஜீ அவர்கள் அழைக்கப்பட்டு பேயோட்டுவதற்கான எத்தனையோ கை முறைகளையெல்லாம் செய்து பார்த்தார். அவராலும் முடியவில்லை. அவர்தான் நம் ஸாவித்திரியின கரத்தில் சூடிட்டுச் சென்றவர்.

ஸா-தாய்:—சரி அவருடைய மந்திர உச்சாடனத்தால் தான் ஒரு பிரயோஜனமுமுண்டாகாமற் போயிற்று. பின்னர் அவரினும் திறமையுடைய வேறெவரையேனுமேன் அழைத்துப்பார்த்துக் கொள்ளலாகாது?

பாலகிருஷ்ணன்:—வேறுயாரைப்போய் அழைத்துவருவதென்பதுதான் தெரியவில்லை. ஆனால் இரண்டொருவரை விசாரித்தறிந்ததில், நம் பக்கத்தே இருக்கும் பள்ளி வாயிலில் இருந்துவரும் முல்லாஜீ தான் இவ்விஷயத்தில் மகா வல்லுஞராய் இருக்கிறாரென்ற தகவல் கிடைத்திருக்கிறது. ஆனால் அவர் ஒரு முஸ்லிமாய் இருக்கின்றார். இதனால் தான் அவ

ரை நம் இல்லத்துக்கு அழைத்துவரக் கூடாதவனு யிருக்கின்றேன். இதற்கு என்ன செய்வது என்று ஒன்றுமே புரியவில்லே. எல்லாம் சங்கடமாகவே இருக்கின்றது.

ஸா தாய்:—என்ன! இந்த சங்கடத்துக்காகவென்று இவ்வாறே சிறுகச் சிறுகக் குனறவைத்து அவளே மாளச் செய்ய வேண்டுமென்ற நோக்கம் போலும்! வேறு நல்ல திறமை வாய்ந்த யோக்கியமான ஆசாமி சிகிச்சைக்காக கிடைக்கவில்லேஎன்கிறீர். ஒருவரே தான் அப்படிப்பட்டவர் இருக்கிருரென்றும் கூறுகிறீர். அத்துடன் அவரும் முஸ்லிம் ஜாதியாராய் இருப்பதாய் அவரை அழைத்து வந்து சிகிச்சை செய்ய முடியாதென்றும் ஆக்ஷேபிக்கின்றீர். உங்கள் இப்படிப்பட்ட வாதங்களால் சாவித்திரியை உயிருடன் வைத்திருக்க வேண்டிய அவசியமில்லேபோல் தோன்றுகிறது. இப்படிப்பட்ட ஆபத்தான வேளேயில் ஒரு முஸ்லிம் பெரியாரை யழைத்து அவர்மூலமாய் அதை போக்கி சுக முண்டாக்கிக்கொள்வதில் எனக்குஎப்படிப்பட்ட ஆக்ஷேபணேயுமில்லே. ஆபத்துக்குதவ யாரிருந்தால்தானென்ன இதை நமது கட்டுப்பாடுங்கூட மறுக்காதே.

பாலகிருஷ்ணன்:—தெரியும். நீரென்னமோ உமது மகளின் பால் கொண்டுள்ள வாஞ்சையால் ஜாதி மத ஆசாரத்தையும் பாராமல் ஆகாத கருதத்தைக் கூட ஆகுமெனக் கூறி விடுகின்ருய். உண்மையை உற்றுணருமிடத்து, அப்படியே நான் ஒரு மிலேச்ச ஜாதியினரை நமது கிரகத்துக்குள் அழைத்துக் கொண்டு வந்து விட்டால் இக்காலத்தோர் என்னே தூஷிக்க மாட்டார்களா? எங்கு நோக்கினும் • நமது குடும்பம் கெட்டுப் போனதென்றே அபவாதம் கிளம்புமே, நம் மூதாதைகளின் நற்பெயரும் கண்ணியமும் கூட கெட்டுப் போகுமே. கடைசியில் இது என்னுடையவும் சாவித்திரியுடையவும் குடித்தனத்தின் சகுனம் என்றும் தூஷிக்கப்படுமே பன்னெடுங்காலமாய் எப்போதும் பெரும் துஷ்டர்களும், மிலேச்சர்களுமான முஸ்லிம்களே விட்டும் பரிசுத்தமாய் இருந்த நமது வீடு நம் துராகிருதர்களின் துஷ்கிருத்தியங்களினுல்அசுத்தமாய்தீட்டுடையதாகி விட்டதென்று அபவாதம் பிறக்குமே.

ஸா-தாய்:—ஏ! பாலகிருஷ்ணா! சற்று உனது சுய அறிவைக்கொண்டு பேசு. முஸ்லிம்களைப்பற்றிய கொடிய பதங்களை உபயோகிக்காதே. முன்னர் ஹிந்துக்கள் முஸ்லிம்களை மிலேச்சர்களென்றும் துடுக்கர்களென்றும் விதண்டாவாதம் புரிந்து அவர்களின் பெயரைச் சொல்வதுங்கூட விரும்பத்தக்கதல்லவென்று மௌட்டியத்தன்மையைக் கொண்டிருந்த நம் பண்டை காலமெல்லாம் இன்று மலையேறிவிட்டது. இதுகாலை எத்தனையோ நம் ஹிந்து சிற்றரசர்களும், மகாராஜாக்களும் முஸ்லிம் பாதுஷாக்களுக்குத் தங்கள் குமாரிகளை மணமுடித்துத் தருவதை தங்கள் கண்ணியத்துக்கும் பெருமைக்கும் காரணமெனக் கொள்ளும் விஷயங்களெல்லாம் உமக்குத்தெரியாது போலும்.

பாலகிருஷ்ணன்:—சரி, அது போகட்டும். ராஜா மகாராஜாக்களின் கதைகளெல்லாம் வேண்டாம். அவர்களெல்லோரும்தங்கள் தேயங்களைப்பத்திரப்படுத்திவைத்துகொள்வதற்கென்றேஇத்தகையவிந்தையானவழக்கத்தையெல்லாம் கையாண்டு இருக்கலாம்.நமக்குதான் இப்படிப்பட்டநாணமில்லாதாமசங்கடங்கள் நேரவில்லையே. மற்றும் வேறெங்கஹிந்துவையேனும் தேடி அழைத்துக் கொண்டு வந்து பரிகரித்தால் போகிறது.

ஸா-தாய்.—அப்படியேனும் திறமைவாய்ந்தவரை தேடிப் பிடிக்க எந்த நாளை நன்னாளாக நினைத்திருக்கின்றீரோ? முன்னர் ஒரு முறை எப்படி ஒரு மௌடீக சாமியாரை அழைத்து வந்து பேயோட்டுவதாய் இன்னும் அதிகமான துன்பத்துக்குட்படுத்தினீர்களோ, அவ்வாறே மற்றுமிந்த முறையும் வேறெந்த அன்னடிப் பையனையேனும் அழைத்து வந்து விடுவீர்களோவென்று தான் நான் பெரும் அச்சப்படுகின்றேன், என்னை கேட்டால் நான் ஒரே அபிப்பிராயத்தை கூறுவேன். அதாவது, எப்போது எல்லா பொதுஜனங்களும் அந்த முஸ்லிம் பெரியாரைப் போற்றுகின்றார்களோ, அவரிடமே நமது சாவித்திரிக்கு சிகிச்சைச் செய்வதே உத்தமம். பாலகிருஷ்ணா முஸ்லிம் ஜாதியார்களையும் கடவுள் நம்மைப் போன்ற மானுஷ்ய வர்க்கமாக தானே படைத்திருக்கின்றான். நாம் மாத்தி

ரம் அத்தகையோர்களை வெறுத்துத் தள்ளுவதே போல் அவர்களும் உயர்ந்தவர்களாக சொல்லிக்கொள்ளும் நம்மனைவர் களையும் மிலேச்சர்களென்றும் அக்கிரமிகளென்றும் வஞ்சகர்க ளென்றும் எதிர்த்து, தூஷித்து முற்றும் பகிஷ்காரம் செய் யத் துணிந்து விடுவார்களானால் நம்போன்ற சிறுபான்மை அந்தணக் கோஷ்டியார்களின் கதியாதாகும்? இக்கால பிராம் மணர்களை விட முஸ்லிம் ஜாதியாருக்கே அதிகமான பேராதரவு யும் இராஜாங்க ஆதரவையும் இருந்து வருகின்றன. முஸ்லிம் சமுகத்தைச் சேர்ந்த அரசர்கள் பலர் உளர். இவ்வுலகில் நமக்கு அனுசரணையாக எந்த பிராம்மண அரசனேனும் எந்த திக்கிலேனும் இருக்கின்றானா? இந்த நிலைமையில் அவர்களும் சுய மரியாதைப்பூண்டு ஒரு சிறிதே நம்மீது அதிருப்தியைக் காட்டி வெறிக்க ஆரம்பிப்பார்களானால் ஒரு நொடிக்குள் நம் மெல்லோர்களையும் இவ்விந்திய நாட்டினின்றும் தூரத்துரத்தி விட அவர்களுக்குப் போதிய சக்தியிருக்கின்றது. அவ்வா றில்லா விடினும் நம்மவர்களைப்பலாத்காரமாய் தங்கள் மதத் தில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று துணிந்து கிளம்பி விடுவார்களானால் நம் இந்தியாவில் பேருக்கொரு ஹிந்துவே னும் எஞ்சி இருக்கமாட்டானென்பதும் உண்மை. ஆனால், முஸ்லிம்கள் அவ்விதம் செய்ய அவர்கள் மதபோதனை சற்றும் இடந்தரவில்லை.

பாலகிருஷ்ணன்:—அன்னாய்! நீரும் பெண்பால் தான். இவர்களின சுவாம்போல் தைரியமிழந்து நீரும் இத்தகைய பயங்கொள்ளித்தனமான வசனங்களைப் பாவிக்கின்றீர். ஒரு சிறு பிடியுமில்லாத சிறுபான்மையான அன்னிய தேசத்திலிரு ந்து இந்தியாவுக்கு வந்த பரதேச முஸ்லிம்களுக்கு, சிம்ஹ விரம்மிக்க பாரத சற்புத்திரர்களாகிய நம் ஹிந்துக்களுடன் எதிர்த்து நிற்க இத்தகைய வீரமும் இருக்கிறதா? இவர்கள் மாத்திரம் சற்றேனும் ஏறுமாறாய் நடந்து கொள்வார்களானால் இத்தேசத்தின் இமாசலத்தினின்று கன்னியாகுமரி வரையிலு ள்ள நம்மவரின் உறைகளினின்று வாட்கள் வெளிவந்து பற க்காதா? க்ஷத்திரிய வரணத்திலுதித்து தங்கள் உயிர்களை தர்ம

த்துக்காகவென்று அர்ப்பணம் புரிந்து விடுவதன் நிமித்தம் எப்போதும் தயாராய் முன்வந்து நிற்கும் சுத்தவீரர்கள் ஒரு மிக்கச்சேர்ந்து ஒரு நொடிக்குள் அந்தத் துர்த்தர்களை யெல்லாம் துண்டகண்டங்களாக்கி குவித்துவிட மாட்டார்களா? முன்னொரு காலத்தில் ரஜபுத்த சுத்தவீரர்கள் இந்தக் கேவலஸ்தர்களை எதிர்த்தக்கால் இவர்கள் எப்படிப்பட்ட பாடுபட்டு எக்கதிக்குள்ளானார்களென்பது உனக்குத் தெரியாதா? நம் அப்பண்டைக்காலத்தில் வதிந்த நம் ராயபுத்தூரிடைய எழும்பிய ஒரு கிளர்ச்சியின்போது இவ்விந்தியாவின் சிற்றரசர்கள் மஹாராஜாக்களெல்லாம் தங்கள் தங்கள் ராஜதானிகளையெல்லாம் விட்டுப்போட்டு ராயபுத்தூராரின் கொடி நிழலின் கீழ் சரணமடைந்துப் போனார்களென்பதை நீர் கேள்விப்பட்டதில்லையோ? இன்னுங்கூட நம் ஹிந்து தர்ம ஊழியத்துக்காகப் பொது மக்கள் அழைக்கப்படுவார்களானால் இப்பாரத பூமியிலுள்ள ஒவ்வொரு சிறு குழந்தைகளுங்கூட தமது உயிர்களை தியாகம் புரிய தயாராய் விடுவார்கள். இப்படியானல் முஸ்லிம்களின் உயிர்களில் திகில் விழுந்துப் போகுமென்பது உண்மையேயாகும்.

ஸர்-தாய்:—நீர் கூறினும் கூறுவிடினும் நான் ஒரு பெண்பாலென்பது உண்மைதான். ஆனல் நான் உலகத்தின் சகல விருத்தாந்தங்களையும் பண்டைச் சம்பவங்களையும் தெரிந்திருக்கிறேனென்பதும் உமக்குத் தெரியாததன்று. நீர் இப்போது கூறிய தப்புந் தவறுமான விஷயங்களைக் கொண்டு உமக்கு பண்டைக் கால சரித்திரமாகவேனும், இஸ்லாமிய ராஜீய வெற்றிகளைப்பற்றியேனும் ஒரு சிறு ஞானமுமில்லை யென்பது விளங்குகிறது. இதனல் தான் சரித்திர உண்மைக்கு விரோதமாய் கூறினீர்.

நீர் கூறியவைப்போல் உண்மையில் முஸ்லிம் சமூகத்தார் அத்துணை பயங் கொள்ளிகளாகவும் வீரமற்ற வீணர்களாகவும் இருந்திருப்பார்களாயின் (எங்கும் ஹிந்து முஸ்லிம் கலவரம் தலைதூக்கி வரும்) இக்காலத்தில் உங்கள் ஹிந்து தேச பராக்கிரம வீரர்கள் நினைத்தபோது பிறநாட்டு முஸ்லிம்களை ஒழிக்கக்கூடிய சக்தியுடையவர்களாக யிருந்தால் இக்கால இந்தியா

வை அன்னிய நாட்டார் ஆக்ஷிப்புரிந்து வர வேண்டிய முகாந் தரம் ஏற்பட்டிராதோ? பண்டை காலத்தில் உலக ஜயமடைந்து ஆக்ஷி செலுத்தி முஸ்லிம் அரசர்கள் ஆசியா கண்டத்தின் கரையோரமுள்ள இத்துணைப் பெரிய பூபாகமான இந்தியா வைப் பிடிப்பதற்கென்று தங்கள் எதிரிகளின் சேனைகளைப் போல் அத்தனை சரிசமானமான பட்டாளங்களை கொண்டுவந்து யுத்தம் நடத்தினார்களென்றுவது. அல்லது நயவஞ்சகத்தன மாய் தூங்கிக் கொண்டிருந்த ஹிந்துக்களின் மீது வீழ்ந்து வீரமான யுத்த சின்னம் ஒன்றுமில்லாது இந்தியாவை அக்கிர மமாய் அபகரித்துக் கொண்டார்களென்றுவது எந்த சரித்தி ரத்திலேனும் படித்திருக்கின்றீரா? இவ்வாறு ஒருகாலமும் அவர்கள்செய்ததில்லை. உண்மையில் அந்தப்பரதேசிகளானசிறு பான்மை முஸ்லிம்கள் சுத்த வீர தீர பஹாத்தூர்களே யாவர் தங்கள் புஜபல பராக்கிரமத்தின் சக்தியால் இந்தியாவைக் கோழை கனத்தினரான ஹிந்துக்களிடமிருந்து வாங்கி தங் கள் சுயாட்சியை புரிந்தார்கள். இதுவே சரித்திர உண்மை. பாலகிருஷ்ணு! ஹிந்துக்களின் வீரத்தைத் தூற்றியும் முஸ் லிம்களின் பராக்கிரமத்தைப் போற்றியும் வாதிக்கின்றே னென்று நீர் என் மீது க்ஷாத்திரமேனும் துவேஷமேனும் கொள்ளல் கூடாது. எனக்குத் தெரிந்தவரையில் இன்னும் கூறுகின்றேன்:—முஸ்லிம் வீரர்கள் சில சமயங்களில் கிளப்பும் "அல்லாஹு அக்பர்" (ஆண்டவனே மகாப் பெரியவன்) என்று கோஷிக்கும் தெய்வீகத் தொனி காதில் வேகமாய் விழும்போதெல்லாம் முற்கால வீரம் மிக்க ரஜ புத்தர்களின் ஹிருதயங்களுங்கூட ஆட்டங் கொடுத்துப் போய் விட்டனவென்றும் கேள்வி யுற்றிருக்கின்றேன். மே லும் ராயபுத்துராவுடைய கொடியாக்ஷியின் கீழ் இந்தியாவின் எண்ணற்ற சிறிய பெரிய இராஜாக்களெல்லாம் கீழ்ப்படிந்து அவருக்கு பக்க பலமாய் கூடியிருந்தார்களென்பதும் அவர் களுக்கெல்லாம் எண்ணத்தொலையாத அத்துணைப் பெருகிய சேனு சமுத்திர மிருந்ததென்பதும் உண்மைதான். ஆனாலும், இத்தனைப் பெரும் ஆதிக்பம் பெற்ற சேனு சமுத்திர வீரா

கூட்டங்களையெல்லாம் சில நூறு அல்லது ஆயிர முஸ்லிம் சுத்தப் பராக்கிரமசாலிகள் வென்று அழித்து தவிடுபொடி யாக்கி விட்டரென்பதை எவரிடமும் நீ கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

மேலும் இறுதி மூச்சு வரைக்கு நின்று யுத்தம் புரிவதாக சபதம் கட்டிய உதவி அரசர்களுங்கூட எவ்வாறு பயங் கொள் ளித்தனமாய், முஸ்லிம்களின் வீரத்தனத்துக்கு எதிர்த்து நில் லாமல் தலைமேல் கால்பட விரண்டு ஓட்டம் பிடித்தனர்களென் பதையும்கேட்டுணர்ந்து கொள்வாயாக. எவர்பாலும்நிஷ்பக்ஷம் பாராட்டாமல் நீசமாய் கூறவேண்டுமானால் முஸ்லிம்களே மா பெரும் வீரர்களாகவும் வாக்கு வன்மை மிக்க உத்தமர்களாக வும் தங்கள் மத தர்மத்தின் அணுவத்துணை தர்மத்தையும் நிரஸ்கரியா பக்த சிரோமணிகளாயு மிருக்கின்றன ரென்று நாம் ஏகமாய் கூறியே தீரவேண்டும்.

பால கிருஷ்ணன்:—(பேச்சை மறுத்து) அண்ணாய்! அப் படியல்ல. முஸ்லிம்கள் மகாதுர்த்தர்கள், வஞ்சகர்கள், வழிப் பறிக் கொள்ளைக்காரர்கள். கொள்ளையடிப்பதும், பிறரை துன்புறுத்துவதுமே இவர்களின் மதமாக இருந்து வருகி றது. இவர்கள் ஒருபோதும் சுத்த வீரர்களாகார். அதற்கு பதிலாய் கொடிய இரத்த வெறிக்கொண்டவர்களே யாவர். ஆதியில் நம் இந்திய நாட்டில் மலிந்திருந்து வந்த வளப்பும் பொருளாதாரப் பெருக்குமே பொறாமைக் குணம் யடைந்த இவர்களை இந்துஸ்தானின் பக்கம் இழுத்தது. இதனால் தான் இக்கூட்டத்தார் தங்கள் பாலைவன பூபாகத்தை விட்டுவிட்டு இந்தியாவுக்கு ஓடி வந்தனர். இஃதன்றி இவர்கள் ராஜீய வாஞ்சைப் பூண்டு இங்கு பிரவேசித்திருப்பார்களானால், இவர் களுக்கு இராஜாங்கத்தை நிர்வகிக்கவும் ஆக்ஷிப்புரியவும் என்ன தெரியும்? என்ன செய்தார்கள்? இதுவரைக்கும் எத் தனை முஸ்லிம் அரசர்கள் இவ்விந்திய நாட்டின்மீது படை யெடுத்து வந்தனரோ அவர்களெல்லோரும் இந்தியாவிலுள்ள வளப்புகளைக்கொண்டு நல்ல சுகமனுபவித்து அதை வெறுமை யாக்கித் தொலைத்து விடவேண்டுமென்ற துரெண்ணத்தைக்

கொண்டுதான் இப்பணியில் ஈடுபட்டனர். மேலும் அத்தகை யோர்களின் சுயநலம், இந்தியப் பொருட் பாக்கியங்களை யெல் லாம் கவர்ந்து சென்று தங்கள் காட்டில் சேமித்துக் கொள்ள வேண்டு மென்பதுவுமா யிருந்தது. உதாரணமாய், கஜ்னீன் தேசத்தைச் சேர்ந்த மஹ்மூத் கஜ்னவி என்பவர் இத்தகைய நோக்கத்தைக் கொண்டே சோமநாத ஸ்வாமியின் ஆலயத்தைத் தகர்த்தெரிந்து அதிலிருந்த விலை மதிக்கொணு அரிய நவரத் தினங்களை யெல்லாம் கவர்ந்து தமது கஜ்னீன் நாடடுக்குக் கொண்டு சென்றார். அதன் பின்னரும் பல முஸ்லிம் அரசர் களின் தொழிலும் இவைகளாகவே இருந்தன.

ஸா-தாய்:—ஏ! பாலகிருஷ்ணு! நீர் இப்போது கூறிவந்த தூஷணைகளெல்லாம் உமது முழு அறியாமையினுலும் குரோ தகுணத்தாலுமே உதித்ததெனக் கருதுகின்றேன். உண் மை விருத்தாந்தத்தை கண்டறியுமிடத்துமுஸ்லிம் சமூகத்தார் இயற்கையிலேயே வீரம் மிகுந்து யுத்தம்புரிய வேண்டுமென்ற சுபாவமும், நாடுகளின்மீது ஜெயக் கொடி நாட்டவேண்டு மென்ற வெற்றியாசையும் தேசங்களை தம் சுவாதீனப்படுத்திப் புகழ்பெற்று செங்கோலோங்கச்செய்யவேண்டுமென்ற பிற நல நோக்கமுமே கொண்டிருந்தவர்களாயிருந்தார்களென்று தெரிய வருகின்றது. மேலும் நீர், உலக சரித்திரத்தை நல்ல முறை யில் ஆழ்ந்து நோட்டமிட்டுப் பார்ப்பீரானல் முஸ்லிம் வீரர் கள் அசைக்க முடியாத ஆதிக்கமும் ராணுவ பலமும் யுத்த நவீன சாதனங்களும் பெற்ற மேனாட்டு வல்லாசுடன் எத் துணைத் தீரத்துடன் சற்றும் பின்னடையாது அகோர யுத்தங் களை நிகழ்த்தி வந்துள்ளார்களென்பதும், தங்கள் வீரத்தனத் தை இராணுவத்துவப் படிப்பின் தன்மையை எவ்வாறு சிறப் பித்துக் காட்டினுரென்பதும் நன்குத் தெரிந்துபோகும். யுத்த வீர சித்தர்களான முஸ்லிம் மன்னர்களும் வெறும் பொருட்க ளைக்கவர்ந்து சென்று சுகபோக பாக்கியங்களை அடைய வேண் டுமென்ற சுயநலச் சிந்தனை கொண்டவர்களாகவே இருந்தன ரென்பது கூறி நிற்கிறீர்கள் அல்லவா? உண்மை அவ்வாறில்லை மஹ்மூத் கஸ்னவீ மன்னரின் கருத்து இந்திய சோமனுதரின்

விக்கிரஹத்தை யுடைத்து அதிலுள்ள பெருமிதமான நவரத்தினங்களை யெல்லாம் தன்னாட்டுக்குக் கொண்டு சென்று விட வேண்டுமென்றில்லை. ஏனென்னின் அவருக்கு அதற்கு முன்னரே அவ்விக்கிரஹத்தினுள் நவரத்தினங்களிருக்குமென்ற விஷயமே முற்றும் தெரியாது. அவர் தம்முடைய மத தருமப்பிரசாரக் கடமையின்படியே விக்கிரஹத்தை யுடைத்தெரிய தமதாட்களுக்குத் தாம் உத்தரவிட்டார். மேலும் இதுகாலை சோமனாத ஆலயத்தின் பூஜாரிகளெல்லாம் மஹ்மூத் கஸ்னவி மன்னரிடம் வந்து எங்கள் சோமனாத விக்கிரகத்தை மாத்திரம் யாரும் ஊனப்படுத்தாது அப்படியே விட்டு விட்டால் அதற்கீடாய் தங்களுக்கு கோடிக் கணக்கான ரூபாய்களை தருகின்றோமென்றும் என்றுவேண்டிக் கொண்டனர். உண்மையில் அந்த ஸுல்தான் மஹ்மூதுக்குபொருட்பாக்கியத்தின்மீது பேராசையிருந்திருக்குமேயாயின் அத்துடன்தம்மதக்கொள்கையின்காரணமாய்விக்கிரகத்தையுடைக்கவேண்டுமென்றஎண்ணமும்இருந்தில்லாதிருக்குமேயாயின் யாதோர்சிரமமுமின்றி விக்கிரகத்தை உடைத்தெறியாது அதிலிருந்து கிடைக்கக் கூடியவைகளைவிட அதிக பெருந் தொகையான கோடிக் கணக்கான திரவியங்களை பூசாரிகளிடத்திலிருந்து பெற்று மகிழ்ந்திருப்பார். ஆனால் அவர் அப்படி இலஞ்சம் வாங்கி எக்காரியத்தையும் புரியவேயில்லை. பொருட் பாக்கியங்களைவிட மதப் பொருப்பையே அவர் மேலெனப் பாராட்டி நடந்தார். அவர்களின் எக்கடவுள் வணக்கத்துக்கிணையாக இருந்த விக்கிரகத் தொழும்பையே சம்ஹாரம் செய்தார்கள். சோமயிற் பண்டாரங்களின் வேண்டுகோளையும் திரஸ்காரம் செய்தார். இவைகளெல்லாம் அவருடைய மதப்பற்றையும் நிஷ்பட்சத்தையும் பெருந் தன்மையையுமே எடுத்துக் காட்டுகின்றது. எனவே அவருக்கு அவ்வாலயத்தினின்று பெருமிதமான பொருட் பாக்கியம் கிடைத்து விட்டது.

பாலகிருஷ்ணா! நீவிர், மீண்டும் இத்தகைய விதண்டா வாதத்தில் உழன்று நமது அரிய நேரத்தை வீணாகப் போக்க வேண்டாம். உம்முடைய குறுகிய குரோத கொள்கைக்கும்

எனது தாராள நிஷ்பக்ஷப் பான்மைக்கும் வெகு தூரம் விகற்ப்பம் இருக்கின்றது. இதற்குக் காரணம் யாதெனில் நீவிர் பெரும்பான்மையும் முற்றும் ஹிந்துக்களே வசித்து வரும் இவ் அயோத்தியாவில் வதிந்து வருகின்றீர். முஸ்லிம்களைப் பற்றிய எப்படிப்பட்ட தத்துவச் சங்கிரஹங்களைக் கேட்டுணர்வதற்கு உமக்கிங்கு யாதொரு வசதியுமில்லை. என் ஸ்திதி அவ்வாறன்று. முஸ்லிம்களும் அவ்விதமாகவே வதிந்து வரும் லக்ஷ்மணபுரி, (லக்னோ) நகரில் வசித்து வருகின்றேன். அங்கு எனக்கு முஸ்லிம்களுடைய மதாசார சம்பந்தமான ஞானந் தத்துவங்களையெல்லாம் ஆராய்ந்து தெரிந்து கொள்வதற்காக சாதனங்கள் பெரிதும் ஏற்பட்டு வருகின்றன. எனக்கு முஸ்லிம் சகோதரர்களின் விஷயத்தில் எப்போதும் நல்லெண்ணமேயிருந்து வருகின்றது. அதற்கேற்ப அன்னாரும் நடந்து கொள்வரென்பதும் திண்ணம். எனவே நமது சாவித்திரியின் ஸ்திதியை இவ்வூர் பள்ளிவாயலிலிருந்து முல்லாஜி அவர்களிடம் தெரிந்து சிகிட்சா பரிகாரம் பெறுவதில் நிச்சயம் பயனுண்டாகலாமென்று பூரணமாய் நம்பிக்கை கொள்கிறேன். இங்கு இருந்துகொண்டு உங்கள் பந்துக்களில் அதிருப்தியோடு முல்லாஜியிடம் சாவித்திரிக்கு சிகிட்சை செய்ய உமக்கு விருப்பம் இல்லாவிடில், எனக்கு அனுமதியைத் தந்து விட்டால் நானேனும் எமது சாவித்திரியை லக்னோவுக்கு அழைத்துச்சென்று முல்லாஜீயை அவ்விடத்தாங்கே அழைத்து வந்து சிகிட்சை செய்து கொள்கிறேன்.

பாலகிருஷ்ணன்:—மாதாஜீ! முல்லாஜீயிடம் சாவித்திரிக்குப் பரிகாரம் தேடினால் நிச்சயம் சுகம் ஏற்படுமென்ற, பூரண நம்பிக்கையிருப்பது. அது மேன்மேலும் நமக்கு நலமே. ஆனால் லட்சுமணபுரிக்கு சாவித்திரியை அழைத்துச் செல்லுவதால் அவளுக்கும் அதிகமான வாதனையேற்படுவதோடு ஒருக்கால் பைசாச தோஷமும் அதிகரித்துத் துன்புறுத்தவுங் கூடும்.

மேலும் முல்லாஜீகூட இங்குள்ள மஸ்ஜித் குரு வேலையை விட்டுப்போட்டு லக்ஷ்மணபுரிக்குச் செல்லமாட்டார். எனவே எனக்கொரு தந்திரமான வழி காணப்படுகின்றது. அதாவது இராக்காலத்தில் யாரும் அறிந்து கொள்ளா வண்ணம் இரகசியமாய் நாமிருவருமே சாவித்திரியை முல்லாஜீயிடம் அழைத்துச் செல்லலாமென்று கருதுகின்றேன். ஆ! இதில் இன்னொரு சங்கடம். நாம் நமது கோயிலில் முஸ்லிம்களைப் பிரவேசிக்கக்கூடாதெனத் தடுப்பதேபோல் ஹிந்துக்களாகிய நம்மையும் அந்த முல்லாஜீ தமது மஸ்ஜிதுக்குள் வரக்கூடாதென்று தடுத்து விட்டால் என்ன செய்வது?

சா-தாய்:—அப்படியல்ல. முஸ்லிம்களின் வழக்க ஒழுக்கக் கொள்கைச் சம்பிரதாயங்களில் இத்தகைய குறுகிய நோக்கமெல்லாம் இருப்பதில்லை. அவர்கள் ஆசாரத்தில் பல நன்மைகள் பெறுவதா யிருப்பதோடு ஜாதி வித்தியாசங்களும் அவர்களிடம் காணப்படுவதில்லை. மேலும் ஹிந்துக்கள் மஸ்ஜிதுக்குள் போகக்கூடாது என்ற கட்டுப்பாடுமில்லை. முஸ்லிம்கள் தங்கள் கடவுளை வணங்குவதற்குரிய பரிசுத்தத்தேவாலயமாய்க் கருதிவரும் மஸ்ஜிதுக்குள் அதற்குரிய கண்ணிய மரியாதையோடும் சரீர சுத்தத்தோடும் எவரும் எந்த ஜாதியாரும் பிரவேசிக்கலாம் என்று முஸ்லிம் பெரியார்கள் கூறியிருக்கிறார்கள். நம் சமுகங்களில் இருந்துவரும் தீண்டாமை, தீட்டுப்போன்றசனியன்களெல்லாம் முஸ்லிம்கள் சமுகத்தில் ஒரு சிறிதும் இல்லை. நம்முடைய கோயில்களில் எவனேனும் அன்னிய ஜாதியான் நுழைந்து வந்துவிட்டால் போச்சு, வர்ணாஸ்ரதர்மம் போச்சு, தீட்டாய் விட்டது என்று கூச்சல் போடுகின்றோம். இவைகள்தான் நம் சமுகத்தின் குறுகிய நோக்கத்தை எடுத்துக் காட்டுகின்றன. சரி போகட்டும். நமது சாவித்திரியை நிசிக்காலத்தில் முல்லாஜீயின்பால் அழைத்துச் செல்வதில் எனக்கு எதும் ஆக்ஷேபணையில்லை. அதை முழுதும் சம்மதிக்கின்றேன். அவ்வாறே சென்று முல்லாஜீயிடம், உள்ள நிலைமைகளை எடுத்துக்கூறி சிகிட்சா பரிகாரத்துக்குரிய மார்க்கத்தை வேண்டலாம்.

பாலகிருஷ்ணன்:—அப்படியானால் நான் மற்றொரு வேலையையும் இதற்கனுகூலமாகப்புரிந்து கொள்ளுகிறேன். நான் தனியே முல்லாஜீயிடம் சென்று சாவித்திரிக்குள்ள நிலைமைகளை எடுத்துக்கூறி இதற்கென்ன செய்யலாம்; எந்த முறையில் சிகிட்சை செய்யலாம் என்பவைகளை நன்கு தெரிந்து கொண்டுவந்து விடுகின்றேன். அதற்கப் பெரியார் எங்ஙனம் புகல்கின்றாரோ அவ்வண்ணமே நாம் காரியாதிகளை ஒழுங்குப்படுத்திக் கொள்வோம் சரிதானே. இதற்கு தங்கள் விருப்பம் யாது?

சா-தாய்:—இது மிகவும் உத்தமமானதே. குதிப்பதற்கு முன் பார்த்து குதி என்பதுபோல் நாம் ஒரு காரியத்தைப் புரிவதற்குமுன் அதைப்பற்றி நன்கு ஆலோசனை செய்து, திருந்தச் செய்தலே சாலச்சிறந்ததாம். ஆதலால் அப்படியே செய்வோமாக. எதுவரை இயலுமோ அத்துணைத் துரிதத்திலேயே பரிகாரங்களைப் பூர்த்திப்படுத்த வேண்டும். ஏனெனின் நம் சாவித்திரியின் தேகநிலை நாளுக்கு நாள் பாதிக்கப்பட்டே குன்றி வருகிறது.

பாலகிருஷ்ணன்:—சரி அப்படியானால் நான் இன்றிரவே அப்பெரியாரிடமேகி கண்டுபேசி பரிகாரத்தைத் தெரிந்து வருகின்றேன் இதனாலேனும் நம் சாவித்திரிக்குப் பகவான் பூர்ண சுகத்தை அளிப்பாரென்று நம்புகின்றேன்.

அத்தியாயம்—6-

பள்ளிவாயலிலுள்ள பெரியாரான முல்லாஜி அவர்கள் அஸ்தமன (மக்ரிப்) தொழுகையை நிறைவேற்றிக் கொண்டு அப்பள்ளிவாயிலின் ஒரு புறத்தே உள்ள தமது அறைக்குட் செல்லலானார். மஸ்ஜிதின் வெளி வாயற்படியருகே எவரோ ஒரு அன்னிய மனிதன் நின்று கொண்டு தம்மை நோக்குவதை கண்டு கொண்டார். அம்மனிதன் ஒரு ஹிந்துவாக காணப்பட்டான். அவன் என் இங்கு வந்து தனியே நிற்க வேண்டுமென்று சற்று நின்று ஆலோசித்தார். மனச்சமாதானம் எற்

படவில்லையாதலால், இப்பெரியார் அந்தமனிதனருகே சென்று உசாவலானார்.

முல்லாஜீ:—அப்பா! நீவிர் யார்? ஏன் இங்கு தனியே தயங்கி நின்று கொண்டிருக்கின்றீர்.

அன்னியன்:—(இரு கரங்களையும் கூப்பி நமஸ்கரித்து) நான் பெருந்துன்பத்தில் சிக்குண்ட துர்ப்பாக்கியன் ஒரு முக்கிய வியவகாரத்தைப்பற்றி தங்களுடைய பெருந் தயவைக் கோரியே இங்கு வந்தேன்.

முல்லாஜீ:—சகோதரரே! உமக்கென்ன கோரிக்கையோ அதை தாராளமாய் சொல்லலாம். இவ்வெளியேனால் முடியக் கூடியதாயின் போதிய சகாயம் புரிவேன்.

அன்னியன்:—அது மர்மமான செய்தியானதால் நான் அதை இவ்வெளியிடத்தில் கூற விரும்பவில்லை. பிரத்தியேகமான ஒரு தனியிடத்தில் சென்று தான் அதை தங்கள்பால் கூறவேண்டும்.

முல்லாஜீ:—சரி! அப்படியானால்என்னுடைய தனியறைக்குள் வாரும். அங்கு வேறெவருமிலர்.

அன்னியன்:—ஐயா பெரியாரே! இதுஉங்களுடையபள்ளி வாயிலாயிற்றே. ஹிந்துவாகிய நான் அதனுள் பிரவேசிக்கலாமோ? நான் உள்ளே வருவதால் ஏதேனும் பாதகம் ஏற்படுமோ?

முல்லாஜீ:—அதைப்பற்றி ஆக்ஷேபமில்லை. பிற ஜாதியார் எங்கள் மஸ்ஜிதுக்குள் வரக் கூடாதென்ற குறுகிய கட்டுப்பாடுகள் எங்களிடமில்லை. ஆனால் பாதரக்ஷையை மாத்திரம் கழற்றி சுத்தமாகி வரலாம்.

முல்லாஜீ ஹஜ்ரத்தவர்களுடைய அனுமதியின்படிநமது அன்னிய மனிதன் அவருடன் சென்று அவரின் அறைக்குள் நுழைந்தான்.

முல்லாஜீ:—அப்பா! நீ என்ன கோரிக்கையாக என்பால் வந்தாய்? கூறுவாயாக.

அன்னியன்:—பெரியாரே! மூன்று நான்குமாத காலமாக என் மனைவி என்னமோ விதமான வியாதியால் பீடிக்கப்பட்டி

ருக்கிருள். எத்தனையோ விதமான மருந்துகளை யீந்தும் பத்திய பரிகாரங்கள் புரிந்தும் எள்ளத்தனை குணமும் காணப்படவில்லை. பின்னர் எங்கள் குடும்ப ஜனங்களெல்லோரும் என் மனைவிக்கு பைசாச தோஷம் உண்டாய் விட்டதென்று கூறியதன்மேல், ஒரு மந்திரவாதியான ஸாமின்ஜீ என்பாரை அழைத்து வந்தோம். அவருக்குத் தெரிந்த "அரைக் கல்வி முழு மொட்டை" பரிசார முறைகளை யெல்லாம் கையாண்டு குணத்துக்கு மாருய் அதிகத் துன்பத்தையே இழைத்துச் சென்ருர். வியாதி சற்றும் சொஸ்தப்படவே யில்லை. அதன்பின், உத்தம மகானுகிய தாங்களே பேய் பைசாச ஆவேச ஜின்தேவ் தோஷங்களை நிக்ரஹஞ் செய்வதில் நல்ல விற்பன்னரென்று கேள்வியுற்று தங்களின் பேராதரவை கோரியே இங்கு ஓடி வந்தேன். தங்களால்தான் என் குடும்பம் இனி சந்தோஷ சாகரத்திலாழும் என்று கருதுகின்றேன். சாஹிபய்யா! மற்ருெரு முக்கிய விஷயத்தையும் தங்கள்பால் கோரிக் கொள்ளுகின்றேன். நாங்கள் பிராம்மண ஹிந்துக்களாய் இருக்கின்ருேம். எங்கள் வருணசாரத்தில் முஸ்லிம் ஜாதியாரை அறவேவெறுக்கின்ருர்கள். எங்கள் வீட்டினர் முஸ்லிம்களுடைய சிகிச்சையைவிரும்பார்கள். எங்கள் சிலருக்கு மாத்திரம் உங்களின்மீது தான் பூரண நம்பிக்கை யிருக்கிறது. எனவே நான் தங்களைக்கொண்டே யாரும் தெரிந்து கொள்ளாவண்ணம் ரகஸ்யமாக சிகிச்சை செய்துகொள்ள கருது கின்றேன். இவ்வாறு செய்தால் தான் எங்களைப்போன்ற ஜாதியினர்களின் அபவாதங்களினின்றும் நாங்கள் தப்பித்திருத்தல் இயலும் ஆதலின் தாங்கள் பெருமனம் செய்து என் அபிப்பிராயத்தை முடிப்பீர்களாக.

முல்லாஜீ:—அப்படியா! பரிதாபம். எனக்கு பேயோட்டும் மாந்திரீக மெல்லாம் தெரியுமென்று உனக்கு யார் உன்னுது கூறிவிட்டனரோ? இவ்விஷயமான மாந்திரீக சக்தி என்பால் பிரமாதமாய் யாதுமில்லையே. பகவான் முன்னிலையில் நான் ஒரு பாவியா யிருக்கிறேன்.

அன்னியன்:—அப்படிக் கூறுதீர்கள். தங்களைப் போன்ற உத்தம மஹான் இவ்வூரில் எவருமிலரென்றே நான் கூற

வேன். மேலும் தாங்கள் ஓதி ஊதும் சக்தியால் எத்தனையோ தோஷங்களெல்லாம் நீங்கி குணமேற்பட்டிருக்கிறதென்றும் கணக்கற்றதோஷம்தாங்கியவர்தங்கள்சிகிச்சைஆசீர்வாதத்தால் முற்றும் தேறியுள்ளனரென்றும் கேள்வியுற்றிருக்கிறேன். தங்கள் மீது எனக்குப் பூரண நம்பிக்கையுண்டு. இலவசமாய் நான் தங்களை அழைக்கவில்லை. தாங்கள் என்ன சன்மானம் கேட்கின்றீர்களோ அதைவிட அதிகமான தக்ஷிணையை நான் நிச்சயமளிக்க வல்லேன்.

முல்லாஜீ:—வேண்டாம். அத்தகைய வசனத்தை என்முன் கூறற்க. நான் ஒருவரின் தாக்ஷண்யத்தை யேனும், பொருளாசையை யேனும், தயவையேனும்கோரி உதவி புரிபவனன்று. என் ஆண்டவனுக்குப் பொதுவாய், பரோபகாரத்தை நாடி இலவசமாகவே என் வாக்கு மனக் காயத்தாலாகக் கூடிய சகாயத்தைப் புரிய ஆயத்தமா யிருக்கின்றேன். பிற மாந்திரீக வாதிகளென் போர்களின் சாகசத்தைப்போல் நான் பொருட் பறிக்கும் பேராசைக்குட் பட்டவனன்று. இவ்வாறிருந்தால் பகவான் என் ஓதுதலில் பலனையும் சக்தியையும் தரமாட்டான்.

அன்னியன்:—மன்னிக்க வேண்டும். தவறுக தெரியாது பிதற்றி விட்டேன். சரி! எங்கள் ஜாதியில் உயிர் போவதாயினும் முஸ்லிம்களின் சகாயத்தைப் பெற முன்வர மாட்டார்களென்பது தங்களுக்குத் தெரிந்திருக்கலாம். ஆதலின் தாங்கள் தயை கூர்ந்து அனுமதி தந்தால் வாதைப்படும் என் மனைவியை இங்கு தங்கள் சமூகத்திற்கு அழைத்து வருகின்றேன். அதன் பின்னர் இவ்விஷயமும் ஹிந்துக்களெவருக்கும் தெரிந்து விடுதலுங் கூடாது. தெரிந்து போனால் இவ்வூர் ஹிந்துக் குழந்தைகளுங்கூட எங்கள் மீது அபவாதங் கூற ஆரம்பித்துக் கொள்ளுவார்கள்.

முல்லாஜீ:—இதற்கெல்லாம் நீ சற்றும் அஞ்சவேண்டாம். உமக்கிஷ்டமானால் நோயாளியை என்பால் அழைத்து வருவதில் எனக்கு ஆக்ஷேபணையில்லை. ஆனால், யாரும் அறிந்துகொள்ளாவண்ணம் இராக் காலத்தில் அழைத்துக்கொண்டு

வாரும். இவ்விஷயம் ஒரு அணுவத்தனையும் பிறர் காதில் செல்லாதென்பதை உண்மையாய் நம்புவீராக.

அன்னியன்:—ஆம்! இம்முறையையே யானும் ஏற்றதெனக் கருதுகின்றேன். இன்று வெகு நேரமாய் விட்டது. இப்போது அழைத்து வருவதென்பது சிரமம். எனவே, நாளை இரவு இதே நேரத்தில் என் நோய்வாய்பட்ட மனையாட்டியை இங்கு அழைத்து வருகின்றேன். ஆனல், என்னுடைய கௌரவமும் மரியாதையும் தங்கள் வசம் சிக்குண்டிருக்கிறது. எனது கண்ணியத்துக்கு ஈனம் வராது மர்மத்தை மறைத்து கௌரவப் படுத்துவீர்களென்றே கருதுகிறேன்.

முல்லாஜீ:—நீரென்ன சபலசித்தரா யிருக்கின்றீரே தைரியத்தோடு இருப்பீராக. உமது குடும்ப விஷயம் ஒரு அணுவத்தனையும் வெளியே போகாதென்பதைத் திடமாய் நம்பிக்கொள்ளுவீராக.

காரிருள் சம்மிய இவ்விராக் காலத்தில் இத்துணை ரகசியமாய் முல்லாஜீயவர்களிடம் வந்து தன் குடும்ப விஷயமாய் சம்பாஷிக்கும் ஆசாமி யாரென்பதை நம் வாசகர்கள் அதை எளிதில் யூகித்துக்கொண்டிருக்கலாம். இவ்வன்னிய மனிதனே. சாவித்திரியின் பிரிய பர்த்தாவான பாலகிருஷ்ணன் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை. தன் காதலியின் க்ஷேமத்தை முன்னிட்டு அவன் தனது குல ஆசார குறுகிய ஜாதி வேற்றுமையை லக்ஷியம் செய்யாது ஒரு முஸ்லிம் பெரியாரிடம் உதவியைக் கோரி இருப்பது, பெரிதும் போற்றத் தக்கதே. எனவே அவனுக்கும் அவனது அரும் பத்தினிக்கும் பகவானின் அனுக்ரஹம் என்றென்றும் நிலவுக.

அத்தியாயம்—7.

மேலும் பாலகிருஷ்ணன் முல்லாஜீ சாகிப் அவர்களிடமிருந்து விடைபெற்று மஸ்ஜிதைவிட்டு வெளிப்போந்து வீதி வழியே தன்னை எவரும் கண்டுக் கொள்ளாவண்ணம் மறைந்தொளிந்து தனது இல்லம்போய் சேர்ந்தனன். சாவித்திரியின் தாயிடம் (தனது மாமியிடம்) முல்லாஜீயைப்பற்றிய சர்வ

விருத்தாந்தத்தைப் பற்றியும் விளக்கினன். தன் செல்வக் குமாரியின் சிகிச்சா க்ஷேமத்துக்காக முல்லாஜியவர்கள் மன மிசைந்தாரென்ற சந்தோஷச் செய்தியை செவியுற்ற சாவித் திரியின் தாய் பெரிதும் திருப்தியடைந்து மனம்பூரித்தாள்.

வாடிவதங்கி வற்றலாய்ப் போயுள்ள நம் சாவித்திரியின் தேகக்கூறு தற்போது வெகு பெரிதும் பாதிக்கப்பட்டே வந் தது. பிறரின் பக்க உதவியில்லாது அவள் தனியே படுக்கை யைவிட்டெழுந்து உட்காரவும், அசையவும் இயலாதவளாயிரு ந்தாள். ஆயினும், தன்னைப் பற்றி எவர்களேனும் ஏதேனும் பேசுவார்களானால் அதை வெகு உன்னிப்பாய் செவிதாழ்த்திக் கேட்பாள். மேலும் அம்மங்கைக்கு இதினினும் பன்மடங்க திகமான ஆர்வம், டெல்லியிலுள்ள முல்லாஜீயவர்கள் விஷ யமாய் நடக்கும் சம்பாஷணையிலே இருந்து வந்தது.

பாலகிருஷ்ணன் முல்லாஜீயிடமிருந்து இல்லம் வந்து சேர்ந்து சாவித்திரியின் தாயோடு பேசிக்கொண்டிருந்தபோது சாவித்திரி விழித்துக் கொண்டு தானிருந்தாள். முல்லாஜீ யின் சிகிச்சை சம்பந்தமாய் அவன் கூறிய ஒவ்வொரு பதங்க ளையும் அவள் நன்கு உன்னிக் கேட்டுக் கொண்டாள். இதனால் அவள் உள்ளத்தில் ஒருவிதமான பெருத்த சந்தோஷமும் உதித்தது. ஆனால் அவள் அதை வெளியாக்கிக் கொள்ளத் துணியவில்லை. மேலும், எங்கு இவ்விஷயத்தில் தடையேற் பட்டு, முல்லாஜீயுடைய சிகிச்சா பாக்கியம் தனக்கில்லாமற் போகுமோவென்று பெரிதும் வியந்தாள். ஆயினும் தன் கண வனும் தாயும் பேசிக் கொண்டதிலிருந்து நாளைக்கு நிச்சயம் முல்லாஜீயிடம் செல்லும் பாக்கியம் கிடைக்குமென்று திடங் கொண்டு மனப்பூரிப் பெய்தினள்.

பிறகு பாலகிருஷ்ணன் தன் மாமியாரை நோக்கிக் கூற லானன்:—

பாலகிருஷ்ணன்:—அன்னையே! நம் நல்லதிருஷ்டவச மாய் முல்லாஜீயவர்களும் நம் சாவித்திரிக்குச் சிகிச்சைச் செய்ய மனம் இசைந்து கொண்டார். ஆனால் சாவித்திரியை நாம் அவர் இருப்பிடத்துக்கு எவ்வாறு அழைத்துச் செல்ல

முடியும்? அவளோ முழுமையும் பலஹீனியாய், நோயால் நொந்தவளாய் இருக்கின்றாள். வண்டி ஏதேனும் வைத்தமர்த்தி அழைத்துச் செல்வோமாயின், ஊரார் கண்டு கொண்டு நம்மனோரை ஏளனஞ்செய்வர். இத்தர்ம சங்கடத்துக்குநாமென்ன செய்வோம்?

சா-தா:—நானும் இதைப்பற்றித் தான் பெரிதும் யோசித்துக் கொண்டிருக்கின்றேன். இக்காரியத்தை நாம் மர்மமாய்ச் செய்யாமற்போவதானால் பகிரங்கமாகப் பல விதத்திலும் சிரமமின்றி அழைத்துச் செல்லலாம். நாமோ எவரும் அறிந்து கொள்ளாதபடி காரியத்தைச் செய்யப் போகின்றோம். இத் தொல்லைக்கு நிவாரணமென்ன?

பாலகிருஷ்ணன்:—ஆமாம். இது பெருஞ் சங்கடமாகத்தானிருக்கிறது. இதோடு நாம் மற்றொரு விஷயத்தையும் முதன் முதல் கவனிக்க வேண்டியவர்களா யிருக்கின்றோம். நமது சாவித்திரி பிற ஜாதியினரான முஸ்லிம் முல்லாஜீயிடம் சிகிச்சைப் பெற இசைவாளோ? இசைய மாட்டாளோ? நாம் இத்துணைவரை ஏற்பாடு செய்திருந்தும் அவள் மறுத்து விடுவாளாயின் சர்வ சித்தியும் நாசமாய் போமன்றோ?

சா-தாய்:—ஆம். உண்மை தான். இதை முதன் முதல் சாவித்திரியிடம் இப்போதே விசாரித்து அவள் அபிப்பிராயத்தைத் தெரிந்து வருகிறேன்.

என்று அப்பெரியம்மையார் கூறி விட்டு தனியே தனது புதல்வியினருகே வந்தணுகினாள். சாவித்திரி அயர்ந்தவளே போல் தோன்றியதால் நித்திரையிலாழ்ந்திருக்கின்றன ளென்றெண்ணி அம்மா! சாவித்திரி! சாவித்திரி! என இருமுறை அவள் செவியருகே கூவி யழைத்தாள். சர்வ சம்பாஷணைகளையும் அந்த வனிதாமணி நேத்திரங்களை மூடிக் கொண்டு கேட்டுக் கொண்டே தானிருந்தாள். மேலும் தனது அன்னையின் இனிய குரல் தன் செவியருகே ஒலித்ததால் சாவித்திரி கண் திறந்து, முகந்திரும்பி தன் தாயை நோக்கினாள்.

சாவித்திரி:—அம்மா! ஏன் அழைக்கிறீர்?

சா-தா:—என் குலக்கொழுந்தே! கண்ணே! உனது தேக நிலைமை பல தோஷங்களாலும் தினே தினே பாதிக்கப்பட்டு குன்றி வருகிறது. இதற்கு எத்தகைய ஔஷதமும், எப்படிப்பட்ட பரிகாரமும் பயன்படாதெனத் தோன்றுகிறது. இதனால் உனக்கு வியாதி யொன்றுமில்லை யென்றும், ஏதோ தோஷம் தாங்கி பாதிக்கிறதென்றும் நன்கு புலனாகின்றது. எனவே நீ சம்மதப்படுவாயாயின், நம் இல்லமடுத்த மஸ்ஜிதிலுள்ள முஸ்லிம்கள் குருவான முல்லாஜீயிடம் உனக்கு சிகிச்சை பெறலாமென்று நம்பி யிருக்கின்றோம். இதற்கு உனது சம்மதமென்ன?

சாவித்திரியின் உள்ளமென்னவோ முல்லாஜீயின் சிகிச்சை விஷயத்தில் தனது உண்மை நோக்கத்தை தெரிவித்துவிட வேண்டுமென்றே தூண்டிற்று. ஆனால், உய்த்துணராது திடுமென விடை கொடுத்து விட்டால் ஏதேனும் தன் மேல் சம்சயங்கள் கொள்ளக்கூடுமென்றஞ்சி சமாதானத்தோடு தன் தாயிடம் தன் கோரிக்கையை வெளியிடலானாள்.

சாவித்திரி:—என்மேல் தாங்கியிருப்பதாய் கூறப்படும் பைசாச தோஷத்திற்காக இனி எவரிடமும் பரிகார சிகிச்சைப்பெற நான் சம்மதப்படேன். முன்னர் என்பால்பிடித்துள்ள பேயை யோட்டி விடுவதாய் எனக்கு மந்திரஞ் செய்த ஸாமின்ஜீ என்னை வதைத்துக் குற்றுயிராக்கி விட்டுச் சென்றார்! எனது தோஷத்தை நீக்குவதற்கென மீண்டும் அத்தகைய பரிகாரத்தை வேறெவரால் செய்வதானால், எஞ்சியிருக்கும் எனது குற்றுயிரும் பறிக்கப்பட்டுப் போய் நான் இவ்வுலகை விட்டுப் பரகதி யெய்துவேனென்பது உண்மை.

சா-தாய்:—மகளே! முஸ்லிம் உத்தமரான முல்லாஜீயவர்களையும் மூர்க்க குணம் படைத்த ஸாமின்ஜீ என்று கருதிக் கொள்ளாதே. இவர் மகா தயாளவந்தர். ஒரு சிறு எறும்புக்கும் இன்னலிழைக்க மனந்தாளாதவர் உனக்கொரு சிறு சிரமத்தையும் தாரார். அவருடைய சாந்த பரிகாரத்தால் உனக்கு

முற்றும் சுகமும் சந்தோஷமுமே உண்டாகுமென்று நான் முழுதும் நம்புகின்றேன்.

சாவித்திரி:—அப்படியானால் அவர் அன்னிய (முஸ்லிம்) ஜாதியாராயிருக்கின்றாரே. நாம் எப்படி அவருடைய சிகிச்சைப்பெறுதல் தகும்? நம் குலத்தோர் நம்மைத்தூற்றுவரே.

சா-தாய்:—அதெல்லாம் வேண்டாம். ஒருவரிடம் நோயுக்கோ, சங்கடத்துக்கோ பரிகாரம் பெறுங்கால் சாதிச்செறுக்கைக் குறுக்கே கொண்டுவந்து நுழைப்பது நமது அவிவேகமேயாகும். ஒரு முஸ்லிமின் சகாயானுகூலத்தால் நம்மவரொருவரின் பிராணனே நல்கதி யடையுங்கால் ஜாதிப்பூசலை பெரிதென்றெண்ணுவது மதியீனமே யாகும். மேலும், அவர்கரத்தால் தொட்ட மருந்தையோ மாயத்தையோ நீர்வாங்கி புசிக்க வேண்டிய பிரமேயமேயில்லை. அவ்வாறிருந்தால் தானே ஆசாரதென்பது குறுக்கிடும்?

சாவித்திரி:—தாயே! தாங்கள் கூறுவதன்படி நடந்துகொள்ள எனக்குப் பூர்ண சம்மதம்தான். ஆனால், எனது பர்த்தா இதற்குடன்படுவரோ?

சா-தாய்:—முதலில் அவரும் உன்னைப்போல்தான் ஒரு முஸ்லிம் ஜாதியினரிடம் சிகிச்சா சகாயம்பெறுவதா? என தயங்கினார். நான் அதன் உண்மையை எடுத்து விளக்கியதன்மேல் இப்போது இவ்விஷயத்தில் பூரண சம்மதத்தோடு தானிருக்கின்றார். அவரும் உனது விருப்பத்தையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்.

சாவித்திரி:—பிரதான முக்கியஸ்தர்களாகிய நீங்களிருவருமே சம்மதித்திடுங்கால் நான் அதற்கு எவ்வாறு மறுத்து கூறல் தகும். தங்களிஷ்டம்போல் செய்யலாம்.

சா-தாய்:—மகளே! மற்றெல்லா ஏற்பாடும் சித்திப்பெற்றுவிட்டது. ஆனால், ஒன்றுண்டு நீயோ எழுந்திருக்கவும் நடக்கவுமாகாத அத்துணை பலமிழந்த தேகியாய் குன்றியிருக்கின்றாய். உனது சிகிச்சைக்காக முல்லாஜீயை இங்கு அழைத்து வருவதோ நம் குலத்தாரின் அபவாதங்களுக்கும் ஜாதிப்பிரஷ்டத்துக்கும் நம் மூவரை ஆளாக்கி வைத்துவிடும். உன்னை

மர்மமாய் யாரும் தெரிந்து கொள்ளா வண்ணம் பள்ளிவாயில் வரைக்கும் எவ்வாறு அழைத்துச் செல்வதென்ற எண்ணம் தான் எங்களுக்கு பெரும் குழப்பத்தை தருகிறது.

சாவித்திரி:—அப்படியா! முல்லாஜீயிடம் எப்போது போக வேண்டும்?

சா-தாய்:—நாளை இரவின்போது.

சாவித்திரி:—தாங்கள் சிந்தித்துருக வேண்டாம். நான் எவ்வாறேனும் நடந்து அவ்வளவு தூரம் வந்து விடுவேன்.

மலர் வதனத்தொடு மேற்கூறிய வசனத்தைப் புகன்று விட்டு, நமது சாவித்திரி புதுச் சக்திப்பெற்று தானே எழுந்துட்கார்ந்தாள். பொதுவாய் ஹிந்து ஸ்திரீகள் ஒரு சின்னஞ்சிறு விஷயத்திலெல்லாம் சகுன தோஷ நலன்களைக் கவனிப்பது வழக்கம். எனவே பல மாத காலமாய் எத்துணைச் சந்துஷ்டியும், சுறுசுறுப்பும் பெற்று எழுந்துட்காராத சாவித்திரி இப்போது திடீரென எழுந்துட்கார்ந்து பெரிதும் சந்தோஷித்தனள், முல்லாஜியின் சிகிச்சையால் முற்றும் நிச்சயமாய் சாவித்திரிக்குப் பூரண குணமுண்டாய் விடுமென்று, சாவித்திரியின் தாய் இதிலிருந்து நற்சகுனத்தையும் ஆருடத்தையம் கண்டு பிடித்துக் கொண்டாள். அதோடு அவள் பெருஞ் சந்தோஷமும் பெற்றவளாய் பாலகிருஷ்ணனிடம் சென்று தனது அபிப்பிராயத்தைக் கூறலானுள்.

பாலகிருஷ்ண: ஒரு சில நோய்களின சகுணம் வெகு நல்லதாகவே வாய்க்கின்றது. நமது இக்காரியத்தில் நல்லறிகுறி காணப்படுகிறது. எனவே நாம் கருதிய கர்மத்தைப் புரிவதில் வீண் காலவியர்த்தம் கூடாது! கட்டாயம் முல்லாஜீயின் சிகிச்சையால் சாவித்திரியின் தேகநிலே கூறுபடுமென்றே நான் திடமாய் நம்புகின்றேன். மேலும் சாவித்திரி இன்று படுக்கையினின்றும் குதூகலத்துடன் எழுந்துட்கார்ந்ததை மறைவிலிருந்து பாலகிருஷ்ணனும் பார்த்துக் கொண்டிருந்தான். எனவே அவனும் இவ்விஷயத்தில் நன்னம்பிக்கை கொண்டான். மறுநாளிரவில் அவசியம் சாவித்திரியை முல்

வாஜீயின் சமுகத்துக்கு அழைத்துச் செல்ல வேண்டுமென் றும் முடிவு செய்து கொண்டான்.

அன்றிரவு இவர்கள் வேறு பல விஷயங்களைப்பற்றி பேசிக் கொண்டிருந்து விட்டு வழக்கம்போல் அவரவர்களுடைய படுக்கைக்குச் சென்று நித்திரையிலாழ்ந்து விட்டனர். விடியற் காலை எல்லோருக்கு முன் படுக்கையினின்றும் எழுந்த நபர் நமது சாவித்திரியே யாவள். அன்று அவள் சுந்திரவதனத் தில் என்றென்றுமில்லாத புதியதோர் வசிகர ஜோதி காணப் பட்டது. மேலும் இன்று தான் அவள் பல மாதங்களுக்குப் பின் தன் கட்டில் படுக்கையினின்றும் கீழே இறங்கினாள். உடனே தனது தாயின் படுக்கை யருகே சென்று உட்கார்ந்தாள். சாவித்திரியின் அன்னை இன்னும் நித்திராதேவியின் வசமே சிக்குண்டு கிடந்தாள். குழந்தை கிருஷ்ணன் தனதுபாட்டியின ருகே ஒட்டிப் படுத்துக் கொண்டிருந்தான். சாவித்திரி தனது செல்வக் குழந்தையாகிய கிருஷ்ணனை எழுப்பி தூக்கி யணைத்து அன்பு முத்த மீந்தாள். இதற்குள் சாவித்திரியின்தாயும் விழித்தெழுந்து கண்ணைக் கசக்கித் தன்பக்கலில் தோன்றிய தோர் அருங்காக்ஷியைக் கண்குளிரக் கண்டாள். பல மாதமாய் பிணியும் படுக்கையுமாய் கிடந்த தன் குமாரத்தி சாவித்திரி இன்று நல்ல நிலையடைந்து தன் பக்கத்தே தனது குழந்தையைத் தூக்கி முத்தாமிர்தம் அளிக்கும் காக்ஷியை தரிசித்து அவ்வன்னை இணையில்லா சந்தோஷ சாகரத்திலாழ்ந்தாள்.

சாவித்திரியின் கணவன் பாலகிருஷ்ணனும் இவளின் இளைய சகோதரியும் தூக்கத்தினின்று எழுந்து இவ்விடத் திக்கு வந்தனர். அவர்களும் சாவித்திரியின் சுகதேக சந் தோஷ நிலையைக்கண்டு பகவானைப் போற்றிப் புகழ்ந்தனர்.

இன்று சாவித்திரியுடைய மனக்கண் தோற்றத்தில் முஸ்லிம் பெரியார் ஒருவர் பரிசுத்த குர்ஆன் வேதவாக்கியங்களை ஓதும் காக்ஷியே பிரதிபிம்பித்துக்கொண்டிருந்தது. குர்ஆனின் தெய்விக சக்தி மிக்க, வசன உச்சரிப்புதொனிகள் அவளின் செவியில் நிறைந்து எதிரொலி எழுப்பின. மனத்தின் கண்

புதியதோர் தெய்வத்வமாறுதல் ஊசலாடிக் கொண்டிருந்தது. இதற்கெல்லாம் காரணம் ஒன்றுண்டு. இன்றிரவு தான்? வெகுகாலமாக ஆவ்லோடு எதிர்ப்பார்த்து கிடைக்குமோ? கிடைக்காதோ? வென்று ஏங்கி உருகிக் கொண்டிருந்த அத்தகைய மனப்பிராப்தமொன்று சித்திக்கப் போகிறதே என்ற பூரிப்பே அந்நங்கை இத்துணை உற்சாக கோலத்துக்கு இழுத்து வந்தது. அப்பிராப்தமென்ன? "பரிசுத்த குர்ஆன் ஓதுதலைக் கேட்பதேயாகும்.

இன்று அழகிய வனிதாமணியான சாவித்திரி உற்சாக உல்லாசவதியாய் காணப்பட்டாள். முழுதும் கழிந்த ஒன்றரை மாதங்களுக்குப்பின் இன்று தான் ஸ்நானஞ் செய்து சுகதேகியானாள். பிணிவாய்பட்டு நொந்துப் போயிருந்து இன்று ஸ்நானஞ்செய்வதால் எங்கு அவளின் சரீர சுகம் பாதிக்கப்பட்டு அதிகம் கெட்டுப்போகுமோ வென்ற அஞ்சிய சாவித்திரியின் தாய் குளிக்க வேண்டாமென்றுத் தடுத்திருந்தாள். ஆனால், சாவித்திரி தான் ஸ்நானஞ்செய்வதால் தனக்கு யாதொரு தீமையும் நேரிடாதென்றும் ஸ்நானஞ் செய்வதால் இன்னும் நல்ல ஆரோக்கியமே ஏற்படுமென்றும், என்றியம்பித் தன்மீது அன்புகூர்ந்து தனது கோரிக்கையான அவள் சம்மதப்படும்படி வெந்நீர் ஸ்நானம் செய்ய விட்டு விடப்பட்டாள்.

மணவதியான சாவித்திரி ஸ்நானபானஞ் செய்து முடிந்ததன் பின் தன் நீண்ட அழகிய அளகபாரங்களை சிக்கறுத் துலர்த்தி தைலம் பூசி வாரி முடித்துச் சீவி பின்னலிட்டுக் கொண்டாள். மேலுமோர் மெல்லிய தூய்மையான நீல நிறச் சேலையையும் நவீன முறையில் அணிந்து தன்னழகு பெறும் ஒல்லியசாயலை மேன்மேலும் சுந்தர ஜோதி வடிவாகச் செய்து கொண்டாள். அந்நீல வர்ண பட்டாடை அவளின் ரோஜா நிற தேஜஸுக்கு மிகவும் பொருந்தியதாய் காணப்பட்டது. இவள் சென்ற தொடர்ந்த ஐந்தாறு திங்களாகநோய்வாய்ப்பட்டு தேக திடங்குன்றி மெல்லிய மின்னற் கொடியாளாய் ஆய்விடினும் அவ்வொல்லியற் தோற்றம் இன்றென்னமோ புது வித

மான தேஜஸைப் பெற்று அப்ஸர ஸ்திரீயின் ரமணீகரச்செய லாய் நிர்ணயித்துக்காட்டிற்று. இவளின் இம்மனோஹரக்கோலம் இதற்குரியவனான ஒருவனை பெரிதும் வசீகரப்படுத்தக் கூடிய மனமோகனமாயும் காணப்பட்டது. மேலும் இவள் நெடுநாட்கள் மட்டும் வெறுமனே விட்டு விட்டிருந்த தன் மீனலோசனங் கட்கு கரிய அஞ்சன பஸ்பத்தை (ஸுர்மா) தீட்டினாள். சாதா ரண நேரங்களிலேயே எதிர்ப்படுவோர் உள்ளத்தை ஊடுருவிச் செல்லும் இவளின் கண்ணுண்மணி கருவிழிகள் அஞ்சனந் தீட்டிய பின் எத்தகைய நீலோர்ப்பலங்களாய் இருக்குமென் பதைக் கூறவும் வேண்டுமோ? மேலும் நஞ் சாவித்திரி தங்க ஜோதியையும் பழிக்கும் தன் பொன்னிற இருகரமணிக்கட்டு களுக்குத் தங்கத்தாலாய வளையச் சௌடிகளையும் கங்கணத் தையும் அழகு பெறப் பூட்டினாள். மலாரும்பு போன்ற சில விரல்கட்கும் இரண்டொரு கணையாழிகளையும் அணிவித்தாள். கால்களுக்கும் இருவிதமான பண்டை வழக்கக் காப்புகளைப் பூட்டினாள். இவளுடைய இணையில்லா இயற்கையழகினூடே இத்துணை செயற்கை சௌந்தர்யங்களும் இந்நாரீமணியை அப்ஸர மாதைப்போல் ஜகன்மோகினியாக ஆக்கிற்று. இவ் வெல்லா ஒழுக்கங்களை இவள் செய்து கொண்டு அன்ன நடை மின்னற்கொடிபோல் ஊசலாடி நடந்து வந்து மீண்டும் தன்ன ருந்தாயை தரிசித்து அவள் பாதநமஸ்காரம் புரிந்து நின்றாள்.

சாவித்திரியின் தாய் தன் இள மகள்பால் என்ன கண் டாள்? சாவித்திரியின் முன்னைய சுந்தரக் குலையெல்லாம் மாறி ஒரு நவீன தேஜோமய பூரிப்புத் தன்மையை தன் குமாரியி னிடம் கண்டாள். மங்கையின் மலர்க் கன்னங்கள் புது வித இரத்தத்தால் ஊறி சௌந்தரீகரமான செவ்விய பளபளப்பைப் பெற்றிருந்தன. முகத்தோற்றமோ ஓர் பூரண சந்ரோதய மென விளங்கிற்று. நேத்திரங்கள் வசீகர நோக்குடன் பிரகா சித்தன. சாவித்திரியோ மெல்லிய சரீரம்பெற்ற ஜோதி உரு வாய் தெய்வரம்பையைப்போல் தன் அன்னையின் கண்களுக்கு அக்காலை காணப்பட்டாள். எனவே சாவித்திரியின் இத்தகைய வசீகரத்தைக் கண்டு அவள் தாய் இணையில்லா பூரிப்பெய்தி

மனம் காயம் யாவும் மகிழ்வெய்தினுள். எனவே தன் செல்வக் குமாரியை வாரியெடுத்து அளவில்லாவாஞ்சையோடு அளவளாவி நெற்றியை முத்தமிட்டு ஆனந்த பாஷ்பம் சொரிந்தாள்.

இதுகாலே கண்ணுமணியின் கணவன்வெளியில் இருந்து இப்போதுதான் இவர்கள் இருப்பிடத்துக்குள்ளே நுழைந்து வந்தான். ஆங்குஇவன் எதை தரிசித்தான்? தனது சாவித்திரியின் இணையில்லா அழகு ஜோதியையும் முகவசீகர தேஜோமயத்தையும் பன்முறை கண்களை கசக்கி கசக்கி கண்ணுரக் கண்டு பிரமித்தான். என்? பல மாதங்களுக்குப் பின் தன் காதலியின் சௌந்தரிய சிங்கார வனப்பை இன்று தான் அவன் நேத்திரானந்தமாய் கண்டான். எனவே மனம் பூரித்தான். தன் கன்னிகையை புது தோற்றத்தில் கண்ணுற்றதால் ஆனந்த மேலீட்டால் இவனுக்கே ஓர்வித வெட்க முண்டாயிற்று. ஆனுல் தன்னினிய புனிதவதியின் வதனத்தை நன்கு நோக்கி அன்பில் ஊன்றி இரண்டு சொல்லமுதை பாவிக்க ஆசை கொண்டான். கணவனுக்கே தன் காதலியை கண்டு வெட்க முண்டாவதானுல் மனைவியைப்பற்றிக் கேட்க வேண்டுமோ? எனவே சுந்தரியான சாவித்திரி தன்னையும் மீறி மேலெழும்பி வந்த ஆசை யென்னும் நாணத்தால் வெட்கிக் குன்றித் தன் மீனலோசனப் பார்வை கீழே தாழ்த்திக் கொண்டு மௌனமாய் உட்கார்ந்திருந்து, மல்லிகை யரும்பைப் போன்ற தன் வெண் பற்களில் ஒரு அரைக்கால் பாகம் வெளியில் தெரியுமாறு அன்போடு புன்முறுவலுற்றுக் கொண்டிருந்தாள். சாதாரண நேரத்திலேயே பாலகிருஷ்ணனின் மனதை வசீகரிக்கும் இவளின் அழகும், புன்முறுவலும் சிரிப்புச் சுந்தரமும் அவனின் ஆர்வத்தை அதிகரிக்கச் செய்தன. சாவித்திரிக்கிருக்கும் ஆயிரக் கணக்கான சுந்தரங்களில் சிரிக்கும் அழகும் ஒன்றுகும்.

பாலகிருஷ்ணன் சாவித்திரியின் சுந்தரத்தில் மையலாய் அவள் முன் அவளை சிறிது கூர்ந்து நோக்கின வண்ணம் நின்றுன். சாவித்திரி நாணத்தால் தன் சிரசை தாழ்த்திக் கொ

டிருந்தாள். பாலகிருஷ்ணனோ தன்னிரு கண்ணோட்டங்களும் அவன் கருவிழிகளிரண்டின் நோக்கும் ஒன்று கலந்து நான்காய் பரிணமித்து ஆனந்தமாரி பொழிய வேண்டுமென அவன் கருதி சற்றே குனிந்து 'சாவித்திரியின் முகத்தையும் நேத்திரத்தையும் வெகு பிரீதியோடு நோக்கினான். இவன் எத்துணைக்கெத்துணை தலைகுனிந்து சாவித்திரியின்வதனத்தை நோக்க முயல்கின்றானோ, அவளும்அத்துணைக்கத்துணை தனது தலையையும் அதிகரித்தநாணத்தால் அதிகமாகவேகீழே தாழ்த்தினாள். தன் கண்ணாடியின் கருவிழியை நோக்கும்உரிமைகணவனுக்கே யல்லாமல்வேறு யாருக்குண்டு? ஆதலின்அவன்தன் நாணத்தை விடுத்துத் துணிந்து அளவுக்கதிகமாகவே குனிந்து சாவித்திரியின் வதன வசீகரத்தை நன்கு நோக்கி விட்டால் சாவித்திரியும் இவன் முகத்தை அன்போடு நன்கே நோக்கினாள். இருவரின் கண்களும் நான்கு கண்களாய் ஆலிங்கனஞ் செய்தன. (கண்ணொடு கண்ணிணை நோக்கின், வாய்ச்சொற்கள் யாது பயனுமில-குறள்) ஆனால் நாணம், அச்சம்,மடம்,பயிற்பு ஆகிய பெண் தன்மையையே அணிகலனாய் கொண்ட சாவித்திரிக்குத் தன்னாலும் அடக்கிக்கொள்ள மாட்டாத நாணம் ஆனந்தத்தோடு பொங்கி எழுந்தது. எனவே அவள் புன் சப்தமிட்டுக் கலகலவெனச் சிரித்து விட்டு, நவீன நாண மிகுதியின் சுபாவப்படி தன்னிருகரங்களால் முகத்தை மூடிக்கொண்டு அருகே இருந்த தன் தாயின் மடியில் கவிழ்ந்து கொண்டாள். என்னே! என்னே! உண்மை காதலின் தன்மை.

பாலகிருஷ்ணனுக்கு தன் கண்மணியால் இந்நாண நடிப்பால் அளவற்ற இன்பமே ஜனித்தது. சாவித்திரி தன் தாயின் பக்கத்தே உட்கார்ந்திருந்து இவ்வாறு மனதை கவர்ந்து கொண்டிருந்தமையால், மாமியாருக்கெதிரே தன் காதலியோடு கலந்துறவாட அவன் பின்னடைந்தான். ஆனாலும், எதிரே இருந்துகொண்டு மாமிக்குத் தெரியாமல் தன் காதலியை தனதபிநயத்தால் கேலிப்பரிஹாஸம் செய்து பூரித்துக் கொண்டுதா னிருந்தான்.

இவர்கள் இப்படி ஆனந்த கடலில் உழன்று சல்லாபித்துக்கொண்டிருந்து விட்டால் கால நாழிகையும் கழியாமல் காத்திருக்குமோ? எனவே மாலை நேரம் சமீபித்து விட்டது. சூரியன் மேற்கு மூலையை நோக்கி ஒட ஒட சாவித்திரி முல்லாஜீயிடம் செல்ல வேண்டிய காலமும் சமீபித்துக் கொண்டே வந்தது. முல்லாஜீயின் தரிசனத்தையும், ஆசீர்வாதத்தையும், பெறுவோமென்ற அபரிமித ஆர்வமும் சாவித்திரியின் உள்ளத்தே பிரவகித்து வழிந்தது. இவ்வார்வத்தால் ஒவ்வொரு வினடி செல்வதுங்கூட அவளுக்கொரு யுகமாய் அக்காலை புலப்பட்டது. எதிரே "டக் டக்" என சப்தித்தாடிக் கொண்டு மெதுவே நகர்ந்து கொண்டிருந்த கடிகாரமுள்ளையே அவளின் கண்விழிகள் நிமைக்கொட்டாது நோக்கின. மேலும்முல்லாஜீ பெரியார் மற்றொரு முறை தெய்வீக சக்தி மிக்க வேத வாக்கியத்தை போதித்தன. ஆத்மானந்தத்துக்கு புதியதோர் உற்சாக வாழ்வை அளிக்கப்போகும் அரிய நேரத்தை அவள் மனமும் அதிக ஆவலோடு எதிர்ப்பார்த்தது.

சாவித்திரியின் தாயும், அவள் பர்த்தா பாலகிருஷ்ணனும் இவ்வணங்கு மணியின் இற்றைய செவ்விய சந்தோஷ நிலைமையைக்கண்டு மனம் பூரித்து மனத்துள் ஆனந்தத் தாண்டவ மெய்தினர். மேலும் சாவித்திரி ஒரு சிறு காலத்துக்குள் இத்தகைய நன்னிலை யடைந்துவிட்டது. அவ்விருவர்க்கும் அளவிலா திருப்தியையேயளித்தது. ஒருக்கால் முல்லாஜியவர்களை தாங்கள் தரிசித்து வந்ததன்பின் அவர் இராக் காலத்திலே மந்திரஞ்செய்து சாவித்திரிக்கு இத்தகைய சந்துஷ்டி நிலையை உண்டாக்கச் செய்திருக்கலாமென்றும் வியந்தனர். முல்லாஜீயைக் கண்டுவந்த பாக்கியமே தங்களுக்கு இனி நிச்சயம் சுக வாழ்வையளிக்குமென்றும் நம்பினர். எனவே இருவருக்கும் முஸ்லிம் ஹஜ்ரத்தான முல்லாஜீயவர்களின் பால் பூரண விசுவாசமும் திடசித்தமும் உண்டாய்விட்டன. ஆனல், இரவில் சாவித்திரியை எந்தத் தந்திரத்தின்மீது போதித்து முல்லாஜீயிடம் அழைத்துச்செல்வது என்ற சிந்தனையிலேயே அவர்கள் பெரிதும் ஆழ்ந்தனர். இராக் காலத்தில் வெளியில்

போவதாயிருந்தால் வீட்டிலுள்ள மற்றையோர் இவர்கள் எங்குசெல்லுகின்றார்களோவென்று சந்தேகிப்பார்கள். அல்லவா? ஆதலின் யாருடைய மனதையும் பாதிக்காத விதமான பற்பல யோசனைகளையும் புரிந்து பார்த்தனர். ஒன்றும் மனச்சமாதானத்திற்கு ஒத்துவரவில்லை. இவ்வித ஆலோசனையிலேயேதான் சாவித்திரியின் பெருத்தயோசனையும் ஆழ்ந்திருந்தது. எனவே சாவித்திரி ஒரு முடிவுக்கு வந்தவளாய் மலர் வதனம் பூண்டு ஒரு நல்ல மார்க்கத்தை பின்வருமாறு அவர்கள்பால் வெளியிடலானாள்:—“இன்று எனக்கு சற்று சௌகரியம் ஏற்பட்டதால் நாம் முன்னரே சேர்ந்து முடிவுசெய்து கொண்டிருந்தன்படி காளிக்கோயிலுக்குச்சென்று தேவியை தரிசித்து வருவதாய் எல்லோரிடமும் கூறிவிடுங்கள். இப்படி செய்தால்தான் நல்லது. போகுங்கால் நாம் வேறு எவரையும் அழைத்துச் செல்லல்கூடாது. மேலும் காளி கோயிலும் மஸ்ஜிதுக்கு சற்று சமீபத்தில் தானிருப்பதால் நாம் பள்ளிவாயில் வழியாகத்தான் செல்வோம். அக்காலை நம்மை கண்ணுறுவோரும் நம்பால்யாதும் சம்சயங்கொள்ளமாட்டார்கள். நாம் காளிகாதேவி திருச் சன்னிதானத்துக்குச் செல்வதாகவே கருதிகொள்வர்”

சமயத்துக்கேற்ற இவ்வருமையான அவள் தந்திராலோசனையை சாவித்திரியின் கணவனும் தாயும் ஏற்று மெச்சினர். அக்கோதையின் நல்லறிவு ஞான விசாலத்தையும் போற்றினர். இவ்வாறு மற்றும் பல வேறு சம்பாஷணைக்கிடையே சிறுகச் சிறுக நாழிகையும் கழிந்து சென்றது. அன்று பகல் முழுதும் தனது கொடிய வெப்பத்தினால் மாந்தரை வாட்டியவெய்ய ஆதித்தனும் தன் கொடுங்கதிரொளிக்குன்றி மேற்கு திசையே அஸ்தமித்துப்போனன். அக்கொடிய கதிரவனுக்குப்பதிலாய் அவ்விஸ்தானத்தில் குளிர்ந்த ஒளியைத் தந்து மக்களின் மனதை மகிழச்செய்யும் அழகிய பூரணச் சந்திரன் உதயமானன். முல்லாஜீயிடம் சென்று சாவித்திரியின் சுகவீனத்துக்குப் பரிகாரத்தைக் கோரக் கருதிய நம்மூவரும் தம் வியவகாரங்களை அனுஷ்டானத்துக்குக் கொண்டு வர ஆயத்தமாயினர்.

எனவே, பாலகிருஷ்ணன் தனது தாயாரிடம் சென்று, அம்மா! நாங்கள் சாவித்திரிக்கு சற்று சுக சௌக்கியக் குறி

கள் காணப்பட்டால் நம் குல தெய்வமான காளிகா தேவியின் சன்னிதானத்துக்குச் சென்று வலம் புரிந்து தரிசித்து பூஜா அர்ச்சனை செய்து வருகிறோமென்று பிராப்தம் புரிந்துக் கொண்டோம். அவ்வாறே நம் காளியம்மையின் கடாக்ஷத்தால் இன்று நமது சாவித்திரிக்குச் சற்று குணமும், சந்துஷ்டியான நிலைமையும் ஏற்பட்டிருக்கின்றன. இன்று அவள் ஸ்தானம் செய்தும் சுத்தமாயிருக்கின்றாள். இதுகாலையே நல்ல சந்தர்ப்பமாயுமிருக்கிறது. எனவே இப்போது நாங்கள் சாவித்திரியை காளி தேவாலயத்துக்கு அழைத்துச் செல்ல சித்தமாயிருக்கிறோம் என்று கூறினன். சாவித்திரியின் அந்த கொடிய மாமிக்கு உள்ளுக்குள் தம் மருமகள் மீதுக்ஷாத்திரமிருந்தபோதிலும் தன் குமாரனின் முன்னிலையில் அவ்வாத்திரத்தை யவள் வெளியாக்கிக் கொள்ளத் துணியவில்லை எனவே சம்மதித்து அனுமதி தருவதேபோல் அபிநயித்து இருந்து விட்டாள். பொதுவாய் வீட்டை விட்டு கும்பலாய் வெளியில் செல்வதென்றால் தாங்களும் கூடச் செல்ல சிறுவர்களுக்கு குதூகலமும் ஆர்வமும் உண்டாவது எங்குள்ள சுபாவம். அங்ஙனே சாவித்திரியின் சிறிய தங்கையான ஜோதிரீயும்; இவள் குழந்தை கிருஷ்ணனும் தாமும்கூட வருவதாக ஆர்ப்பரித்தனர். அஃதோடில்லாமல் சாவித்திரியின் மாமியும், நாத்தி பார்வதியும் கூட உடன் வருவதாக கூறினர். இவர்களின் வருகை தாங்கள் கோரியுள்ள மர்மமான காரியத்துக்கு முற்றும் முட்டுக்கட்டைகளாக யிருப்பதால் பாலகிருஷ்ணனும் சாவித்திரியின் தாயும் சேர்ந்து அவர்களெல்லோருக்கும் நயமான சமாதானங்களையும், எல்லோரும் வெளிப்போய் விட்டால் வீடு காலியாய் விடுமென்ற போலிக் காரணங்களையும் கூறி அவர்களெல்லோரையும் சமாதானமாய் தடுத்து விட்டனர். கோயிலுக்குச் சென்று அரைமணி நேரத்திற்குள் திரும்பி வந்து விடுவதாகவும் சாந்தப்படுத்தினர். எனவே அவர்கள் யாவர்களும் அரைமனத்தோடு சம்மதித்து வீட்டில் தங்கியிருப்பதாய் மௌனம்

பூண்டனர். குழந்தையும் சிறுமியும் ஒரு பக்கல் விளையாடச் சென்று விட்டனர்.

அத்துணையே, இவர்களெல்லோருக்கும் சமாதானங்கூறி தடுத்து விட்ட பாலகிருஷ்ணன் தன் மனைவியும் மாமியுமிருக்குமிடம் சென்றான். போகுங் காரியத்துக்குக் கொண்டு செல்லவேண்டிய பொருட்களோடுமூவரும் வெளிக்கிளம்பத் துணிந்தனர்.

அத்தியாயம்—8.

இன்றிரவு இஷாத் தொழுகைக்குப்பின் நமதுமுல்லாஜி ஹஜரத்தவர்கள் தமது அறைக்கடுத்துள்ள முற்றத்தில் உட்கார்ந்து ஜெபமாலையை உருட்டிப் பஜித்துக் கொண்டிருந்தார். அக்காலை தமது அறைக்குச் சற்று அருகில் ஒரு மானிட உருவின் தோற்றத்தைக் கண்டார். அத் தோற்றம் இவரிடம் அணுகவே, நேற்றிரவு மக்ரிபு (அஸ்தமனத் தொழுகை)க்குப் பின் தம்மிடம் வந்து சம்பாஷித்துச்சென்ற மனித உருவமே யென்று ஐயமறத் தெளிந்து கொண்டார். மேலும் அவ்வன்னிய உருவை நோக்கி வினவலுற்றார்:—

முல்லாஜீ:—நண்பா! நீர்தானு விஜயம் செய்திருப்பது. வெகு சந்தோஷம்.

அன்னியன்:—(கை கூப்பி நமஸ்கரித்து) ஆம். நான் தான் நேற்று வந்து தங்களை தரிசித்துச் சென்ற தாஸன்.

முல்லாஜீ:—உமக்கு மங்களம் உண்டாகுக. இன்று அழைத்து வருவதாய் தெரிவித்த வியாதியஸ்தினள் எங்கே? அழைத்து வந்தீரா?

அன்னியன்:—ஆம் அழைத்தே வந்திள்ளேன். அவர்கள் அதோ வெளி வாயற்படியண்டை நிற்கின்றனர்.

முல்லாஜீ:—அப்படியாயின் அன்னவரை உள்ளேஅழைத்துக்கொண்டு வந்துவிடுக. இதில் எனக்கு யாதோர் ஆக்ஷேபணையுமில்லை.

அன்னியன்:—ஆபத்பாந்தவரே! அங்ஙனமே யாகுக. ஆனல் அந்த பிணியாளியுடைய அன்னையும் கூடத் துணையாய்

வந்திருக்கின்றார். அவரையும் உள்ளே அழைத்து வர அனுமதி தந்தருளல் வேண்டும்.

முல்லாஜீ:—அதற்கும் எத்தகைய தடையுமில்லை. தாராளமாய் அழைத்து வரலாம். ஆனால் நாம் வெளியிலிருந்தால் எவரேனும் கண்ணுற்று நம் பால் சம்சயங் கொள்ளக்கூடும். எனவே அவ்வெல்லோரையும் திருப்திகரமானால் எனது அறைக்குள் அழைத்துக் கொள்ளலாம். இதுதான் பிறர் நோக்கத்தை விட்டும் நாம் தப்பிக்கத் தகுந்த முறையாகும்.

நமது அன்னிய மனிதன் வெளியே சென்று சற்று வயது சென்ற ஒரு பெரிய ஸ்திரீயையும், அவளின் இள மகளான ஓர் சுந்தர வதியையும் அழைத்துக்கொண்டு முல்லாஜீ அவர்களின் விசாலமான அறைக்குள் அனுமதி பெற்று நுழைந்தான்.

வாசகர்காள்! இம்மூவர்களுள் முல்லாஜீயிடம் முதலில் சம்பாஷித்தவன் பாலகிருஷ்ணனென்றும், மற்றும் இரு மங்கையும் மாது சாவித்திரியும் அவள் அன்னையுமென்றும் நாம் தெரிவிக்கா முன்னமேயே நீங்கள் பகுத்துணர்ந்து கொண்டிருப்பீர்கள். மேலும் இம்மூவர்களும் முல்லாஜீயின் அறைக்குள் பிரவேசித்தவுடன் நமது உத்தமியான சாவித்திரி அந்த முஸ்லிம் பெரியாரின் பாதங்களில் பணிந்து நின்றாள். சாவித்திரியின் தாய் தக்ஷிணையாக முன்னடியாகவே தான் கொண்டு சென்ற மிட்டாய் வகையும் பழவர்க்கமும், சில ரூபாய்களுமுள்ள தாம்பாளத்தை காணிக்கையாய் உடனே முல்லாஜீயவர்களின் ன்னிதானத்தில் சமர்ப்பித்து நமஸ்கரித்தாள். பிறர் உபகாரத்திலோ பொருட்சகாயத்திலோ சற்றும் விருப்பங் கொள்ளுஞ் சுபாவ மில்லாத முல்லாஜீ யவர்கள் எல்லோர்க்கும் ஆசீர்வதித்தார். அவர்கள் சமர்ப்பித்த சன்மானம் அவசிய மில்லாதென்று தெரிவித்தார். ஆயினும் அவர்களின் சந்துஷ்டிக்காக ஏற்று, நன்றி செலுத்தினார். தமது பாத நமஸ்காரம் புரியத்துணிந்த சாவித்திரியை நயமாய் தடுத்து எல்லோரையும் உட்காருமாறு செய்து கீழ் வருமாறு வினவலானார்:—

முல்லாஜீ:—(பாலகிருஷ்ணனை நோக்கி) உங்களில் யார் வியாதியஸ்தர்?

பாலகிருஷ்ணன்:—(தனது மனைவி சாவித்திரியை சுட்டிக் காட்டி) தங்களின் அடியாளான இந்த யுவதி தான் வியாதியுடையவள். ஆனால், நேற்று இவள் விஷயமாய் நான் தங்களிடம்வந்து பிரஸ்தாபித்து அனுமதிபெற்றுச் சென்று இவர்களுக்கு அவ்விஷயத்தை தெரிவித்ததிலிருந்து, இந்தப் பெண்ணுடைய அதிசேவல நிலைபானது ஒரு விசபுதுச் சீருக்கு வந்து செம்மையுற்று காணப்படுகிறது. இது தங்கள்கருணைகடாக்ஷமும், தவத்தின் பாக்கியமுமேயாகும். இதற்குமுன் இம்மங்கை நோயும் பாயுமாகயிருந்தபொழுதோ, படுக்கையில் அப்படியிப்படி பிரளவேனும் எழவேனும் இயலத அத்தனை பலஹீனவதியாயிருந்தாள். ஆனால், தங்களின் சமூகத்திற் கழைத்துவந்து பரிகாரம் புரிவோமென்று பிரஸ்தாபித்த மறுகணமே இந்த யுவதி தானே எழுந்துட்கார்ந்து அதி உற்சாகமுள்ளவளாய்க் காணப்பட்டு, இன்றுஸ்நானஞ்செய்துசந்தோஷரமணீயகர நிலையில் இருந்துவருவது தங்களின் ஆசீர்வாதமும், எங்களின் நல்லதிருஷ்டவசமுமென்றே நம்புகின்றோம்

முல்லாஜீ:—ததாஸ்து! எல்லாம் சர்வமும்வல்ல சத் பரமபொருளான ஏகதெய்வ அல்லாஹ்வின் அனுக்கிரகமேயாகும். என்போன்ற பாமரனின் சுயசகாயம் ஒன்றுமிருக்கக் காரணமில்லை. மேலும் இம்மங்கையின்நேர்நிலையையுன்னிபெரிதும் களிப்பேறுவகைக் கொள்கின்றேன். இன்னமும் அல்லாஹுத்த ஆலாவின் பேருள் இவ்வுத்தமியின் மீது சொரிந்து மேன் மேலும் தெளர் பாக்கிய நிலை ஏற்பட வேண்டுமென்றே பகவானைப் பிரார்த்திக்கின்றேன். அஃதிருக் கட்டும். இவ்வம்மணிக்கு எப்போதிலிருந்து இத்தகைய சுகவீனம் ஏற்பட்டிருக்கிறது? இந்த அசௌக்கியத்தில் என்னென்ன குணவேறுபாடுகளும், தோஷங்களும் காணப்படுகின்றன? விபரமாய் விளக்குவீர்களாக.

பாலகிருஷ்ணன்:—மகானவர்களே! தங்களுக்குத் தெரியாததன்று. சென்ற ஐந்தாறு மாதங்களாகத்தான் இப்பெண்

மணிக்கு பற்பல சுகவீனங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவள் வாழ்க்கை நிலேயே மாறுபட்டிருக்கிறதாய் புலப்படுகிறது. எப்போது பார்த்த போதிலும் நோயும் பாயும் படுக்கையுமாகவே கிடக்கின்றுள். என்னமோ ஸ்ரீ அரிய நற்பாக்கியம்மைத்தவற விட்டுப் போனவளேபோல் சித்தங்கலங்கி வியாகூலப் படுகின்றுள். எவரிடமும் பேசத் துணிகின்றுளில்லே. பலநேரங்கள் ஆகாரத்தை வேண்டாமென மறுத்து பட்டினி யாயும் கிடந்து விடுகின்றுள். சமயா சமயங்களில் எதையோ மிகுந்து ஆழ்ந்து சிந்தித்து கண்ணீர் வடித்தழுகின்றுள். ஆனுல், தங்கள் புண்ணியஆசீர்வாதத்தால்நேற்றிரவிலிருந்து அளவிலா சந்தோஷம்பூண்ட ஆனந்தவதியாய்க் காணப்படுகின்றுள். எல்லோருடனும் குதூகலித்திருக்கின்றுள். முன்போலபட்டினியாய் கிடக்கத்துணியாது பசித்தால் ஆகாரம் வேண்டுகிறுள். மேலும் முதன் முதல் இவளுக்கு தேகம் பாதிக்கப்பட்டுபைசாச தோஷம் தாங்கி அவஸ்தைக்குள்ளான சமயம் நான் ஊரில் இருக்கவில்லே. இவளுக்கு இத்தகைய சுக வேறுபாடு எவ்வாறு தீண்டியதென்பதின் விருத்தாந்தம் எனக்கு ஒன்றும் தெயாது. ஆனுல், இந்த யுவதி தினந்தோறும் தவருது அதிகாலேயில் (எதிரில் காணப்படும் தமது வீட்டில் பலகணி யொன்றை சுட்டிக்காட்டி) அதோ உங்கள் அறைக்கு எதிரே தெரிகிறதே அந்த எங்கள் வீட்டு மேன்மாடி ஜன்னலருகே இவள் வந்து மௌனமாய் வெறுமனே உட்கார்ந்து கொள்ளுவதாகவும், சமயா சமயங்களில் கண்ணீர் வடித்து அழுவதாகவும், இவ்வாறு நேத்திரநீர் உகுத்து அழுவதை பல முறை நேரில் கண்டு இவைகளேத் தடுத்ததாகவும் எனது தாயும் தங்கையும் கூறுகிறுர்கள். மேலும் இவள் மேன்மாடிக்குச் செல்வதால் ஏதோ தோஷந்தாங்கி யிருக்கிறதென்று கருதி இனி மேன்மாடிக்கு முற்றும் போகவே கூடாதென்று இந்த எனது மனேவியான சாவித்திரியை என் அன்னேயும்சகோதரியும்தடைசெய்து விட்டார்களாம். இவள்மேன்மாடிக்கேகுவது தடைபட்டஅன்று தொட்டுஇவளுக்குபற்பலவித சுகவீனங்களும்வாழ்வின்மாறுதல்களும்எற்பட்டு இந்த கேவல நிலேமைக்கும் இவளேஇவ்வாறு

கொண்டுவந்து விட்டதாகவும் தெரிகிறது. அத்துணையேநோய் வந்தவிருத்தாந்தம்.

முல்லாஜீ யவர் தன் பாலகிருஷ்ணன் கூறிவந்த சர்வ விருத்தாந்தங்களையும் ஆதியோடு அந்தமாய் செவி சாய்த்து உன்னிக்கேட்டு அதைப்பற்றி தம் சிந்தனையை யோட்டலானார். இந்த முல்லாஜி பண்டைக்கால வைதீகரின் தோற்றமுடைய வரேயாயினும், இவர் நற்குணமும், மதபக்தியும், தாராள நோக்கமும், பரோபகாரமும் யாவும் ஆத்ம பூஷணமாய் பூண்ட வராயிருந்தார். இன்னமும் தீர்க்க ஞானமும், தீக்ஷண்ணிய புத்தியும், நிதானத் தன்மையும் வாய்ந்தவராயு மிருந்தார். எனவே அவர் பாலகிருஷ்ணன் கூறியவற்றை செவியேற்றதும் இக்கூற்றுக்குரிய மூலகாரணம் என்னவென்பதை தம் சீரிய புத்தியைக்கொண்டு ஆராயலானார். இவர் தம் அறையின் முற்றத்தில் பிரதிதினமும் அதிகாலையில் வழக்கம்போல் பரிசுத்த குர்ஆனைப் பாராயணஞ்செய்யுங்கால், எதிர்வீட்டு மேன் மாடிப் பலகணியருகே அனுதினமுமோர் இள மங்கை வந்திருந்து கொண்டு தாம் ஓதும் வேத வசனத்தை ஆழ்ந்து முழு மனத்தோடு கேட்டுக் கொண்டிருந்ததையும் ஓதல் பூர்த்தியான தும் அக்கோதை நல்லாளும் எழுந்து சென்று விடுவதையும் பலமுறையும் பார்த்திருக்கின்றார். அச்சம்பவத்தையும் இன்று நிகழ்ந்த நிகழ்ச்சியையும் அவர் சீர்தூக்கிப் பார்க்கவே உண்மைப் புலப்பட்டு விட்டது. எதிர் இல்லமேற்றளப் பலகணியி னூடே வேத வசனத்தை உன்னிப்பாய் கேட்டு வந்த வனிதை இப்போது வந்துள்ள யௌவன மங்கையாகத்தானிருக்கவேண் டுமென்பதை பிரத்தியக்ஷப் பிரமாணமாய் அனுமானித்துக் கொண்டார். மேலும் அப்பெண்மணிக்கு வந்துவாய்த்துள்ள வியாதியாதா யிருக்கவேண்டுமென்பதையும் சிந்திக்கலானார்:—

எனவே அவருடைய தீர்க்காலோசனையானது ஒரு சரி யான முடிவுக்கே சென்றடைந்தது. சாவித்திரியின் மீது எத் தகைய பைசாச தேவ்ஜின் தோஷமும் தங்கியில்லை யென்றும் பரிசுத்த குர்ஆன் ஷரீபின் அற்புத தெய்வீக சக்தியே அவளு டைய களங்கமிலா மனத்தை வசியப்படுத்திக் கொண்டதென்

றும், இம்மனோஹரமே இவளுக்குள்ள இந் நிலைமைக்கு மூல காரணமென்றும் ஐயமற அறிந்து கொண்டார். இதுவே உண்மையான விஷயம்.

ஒரு சிறிது நேரமே முல்லாஜீயவர்கள் இத்தகைய சிந்தனைச் சுழலில் ஆழ்ந்து கிடந்தார். இக்காலை பாலகிருஷ்ணனுடையவும், அவனின் மாமியினுடையவும் ஹிருதயங்கள் பற்பல விஷயங்களைப்பற்றி ஊடாடிக் கொண்டிருந்தன. சாவித்திரியைப்பற்றி என்ன நிலைமைகளை முல்லாஜீயிடம் பிரஸ்தாபித்ததும் செவியுற்ற அவர் இத்தகைய சிந்தனைசாகரத்தில் என் மூழ்கிவிட்டார்? என்பதை அவ்விருவர்களும் யோசித்தனர். ஒருக்கால் சாவித்திரிக்கிருக்குப் நோயானது மகா கொடியதோ? சொஸ்தமாகக் கூடாததோ? கேட்டை விளைவிக்கக் கூடியதோ? என்றெல்லாம் அவ்விருவரும் கவலைகொண்டனர். முல்லாஜீ வாயை திறந்து யாது புகலப்போகின்றார் என்பதை அம்மூவரும் எதிர்பார்த்திருந்தனர். இன்னுஞ் சிறிது நேரம் அந்த முஸ்லிம் பெரியார் யாதோ சிந்தனையிலேயே ஆழ்ந்திருந்ததால், பாலகிருஷ்ணன் துணிந்து முல்லாஜீயிடம் வினவலானான்:—

பாலகிருஷ்ணன்:—பெரியாரே! சாவித்திரியின் வியாதி, வந்த விருத்தாந்தத்தை கேட்டுத்தாங்கள் முழுதும் மௌனம் பூண்டது ஏனோ? உங்களாலும் பரிகரிக்க முடியாத அத்துணை கொடிய வியாதியோ தோஷமோ? ஏதேனும் சாவித்திரிக்கு தாங்கியிருக்கிறதோ? உள்ளதை கூறி எங்களுக்கனுகூலம் புரியக் கோருகின்றோம்.

முல்லாஜீ:—சோதரா! அவ்வண்ணம் தீங்கு ஒன்றுமில்லை. நீங்கள் மனமொடிந்துப் போகவேண்டாம். ஆனால் உங்களுக்கு தற்போது வாய்த்துள்ள அவகாசத்தையும் சிரமத்தையும் முன்னிட்டே எத்தகைய முறையில் உங்களுக்கு கஷ்ட சாத்தியமில்லாத துறையில் சிகிச்சை செய்தால் சுகானுகூலமுண்டாகு மென்பதைப்பற்றியே இவ்வாறு இதுகாறும் யோசித்துக் கொண்டிருந்தேன். என்னாலான மட்டும் எளிய முறையில் கூடியவரையில் அப்பெண்ணுக்குள்ள தோ-

ஷத்தை நீக்கி குணத்தையளிக்க வேண்டுமென்பதே என் நோக்கம். ஆயினும் சாவித்திரியின் மீதுள்ள பைசாச தோஷமென்பதோ கடுமையயானதாயிருப்பதால் இதை நிவர்த்திக்க இரண்டொரு நாள் போதாது. குறைந்தது இரண்டுமாத சிகிச்சையேனும் செய்ய வேண்டும். இன்று ஒரு நாளைக்கு நீங்கள் என் சமூகத்திற்கு வருவதற்கே பெரும் சிரம சங்கடமடைந்ததாகத் தெரிவிக்கிறீர்கள். அதல்லாமல் என்பால் வருவதற்கு அனுகூலமேற்படினும் பிறர் கண்டுக் கொள்ளாத விதமும், நீங்கள் நடந்து கொள்ள விரும்புகிறீர்கள். இத்தகைய இக்கட்டான நிலைமையில் எந்த முறையில் சிரம பரிகாரம் புரிவதென்ற மார்க்கம் புலப்படாமல்தான் இத்துணை நேரம் மௌனமுற்று மனங் கலங்கினேன். மேலும் நான் உங்கள் இல்லத்துக்கு வந்து பரிகாரம் புரிவதென்பதும் அசாத்தியம். உங்கள் சமூகத்தார் முஸ்லிம்களின் உபகாரத்தையே வெறுக்கின்றார்களெனத் தெரிகிறது. இத்தகைய குழப்பமான நிலைமையில் உங்கள் சாவித்திரியின் சுகானுகூலத்தை முன்னிட்டு நான் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதே தெரியவில்லை.

முல்லாஜீ யவர்கள் கூறிய இக்காரணங்களையும் சங்கடங்களையும் சாவித்திரி, பாலகிருஷ்ணன், சாவித்திரியின் தாய் ஆகிய மூவரும் கேட்டு பெரிதும் சிந்தனையிலாழ்ந்தனர். முல்லாஜீ கூறியவனைத்தும் உண்மையில் வாய்த்திருப்பனவைகளே. எனவே தன் கோரிக்கை இச்சங்கடங்களால் சித்தி பெருமற் போகுமோவென்று சாவித்திரி இவைகளை உத்தேசித்து மனங் குழம்பினுள். இதற்கு முன்னரே இவள் தன்னுள்ளத்தில், முல்லாஜீயின் தரிசனமும் உறவும் கிடைக்க வேண்டுமென்றும், சிகிச்சையை முன்னிட்டு அவர் தடை கூறி விடாமலிருக்க வேண்டுமென்று அனுதினமும் கடவுளையவள் வேண்டிக் கொண்டு வந்தாள். அதற்கேற்ப இப்போது முல்லாஜீ யவர்கள் கூறியவைகள் சாவித்திரியின் மனக்குழப்பத்தை இன்னும் அதிகரித்தன. எங்கு பாலகிருஷ்ணன் இச்சங்கடங்களுக்காகவென்று முல்லாஜியின் சிகிச்சை அவசிய

மில்லையென்று மறுத்து விடுவானேயென்றும் இவ்விள நங்கை அதைரியப்பட்டாள்.

எனவே சாவித்திரி ஒரு சிறிது நேரம் இத்தகைய சங்கட நிலைமை எவ்வாறு பரிகரிக்கலாம்? என்ன தந்திரத்தை கையாளலாம்? எவ்வாறு இவர்களெல்லோரின் சம்மதங்களையும் தன் கோரிக்கைப் பூர்த்தியடையத் தக்க வழியில் திருப்பலாம்? என்றெல்லாம் நெடுக சிந்தித்துருகலானாள்.

மேலும் இச்சமயம் முல்லாஜீயின் விசாலமான அறைக்குள் நான்கு பேர்கள் சேர்ந்த ஒரு சிறு சபை கூடியிருப்பினும் இவர்களொவ்வொருவரும் சங்கட நிவாரணத்திற்கான ஆழ்ந்த சிந்தனையிலீடுபட்டிருந்தமையால் ஆங்கு முற்றும் நிச்சப்தமே குடி கொண்டிருந்தது. சாவித்திரி தனது மோவாய் கட்டையை தன் முட்டுக்காலில் ஊன்றி சிரம் பணிந்தவளாய் நாணிக்கோணி சிந்தனையிலாழ்ந்து, மற்றை மூவர்களுக்குள் விவகாரம் எவ்வாறு முடிவு பெறப்போகிறதென்பதை ஆவலோடு எதிர்ப்பார்த்துக்கொண்டேயிருந்தாள். ஆனல்,எங்கு அவர்கள் முறை தவறிப் பேசி நிர்வாகத்தை நிர்மூலப்படுத்தி விடுகின்றார்களோவென்றும் அவள் அஞ்சினாள். பல நாள் வெகு ஆவலாய் எதிர்ப்பார்த்திருந்து இன்றே அரிதரிதாய் கிடைத்த முல்லாஜியின்சகவாசம் எங்குபரிபட்டுப்போகிறதோவென்றும் மனம் நெக்குறுகினாள். எனவே இவைகளுக்கெல்லாம் ஒழுங்கானஒருவழியை வெளியிடவேண்டுவதற்காகப்பெரிதும்ஒருகணநேரம் ஆலோசனைப்புரிந்தாள்,ஒன்றன்பின்னொன்றாய் எண்ணத் தொலையாத மார்க்கங்கள் அவள் மனத்தே வந்துகுவிந்தன. மேலும் முட்டுக்காலின் மீது தாங்கிக் கொண்டிருந்த அவளின் அதிமிருதுவான மலர்வதனமானது ஆலோசனை சிரமத்தால் சிறிது ஜோதிமங்கி வியர்த்தது. சரீர முற்றும்கூட வியர்வநீரினால் அபிஷேகஞ் செய்யப்பட்டது. இதற்குள் அவள் மனத்தே பிரவகித்துத் தள்ளப்பட்ட பல யோசனைகளுக்கிறுதியில் ஒரு நல்லவழி தகுந்ததாய்ப் புலப்பட்டது மேலும் அதுவே உத்தமமானதாய் தென்பட்டதால் அவள்

மனத்திருப்தி யடைந்து தனது சுந்திரமுக விலாசத்தைத் தூக்கி தனது அன்னைபக்கந் திரும்பி கூறலானாள்.

சாவித்திரி:—எனதருமைபிரியமான அன்னையே! இத்துணை யதிகமாய் நீங்களெல்லோரும் இவ்வாறு சிந்தனையிலுருக வேண்டுமென்று என்ன அவசியம் நேரிட்டது? ஏன் வீணே நாம் சிரமப்படுதல் வேண்டும்? இன்று என்பால் முல்லாஜீயவர்களை தமது சிகிச்சையை செய்யச் சொல்லுங்கள். அவரின் பரிகாரத்தால் ஏதேனும் அருங்குணம் காணப்படுவதாயின் நாம் நாளை மறுதினம் இனிமேலுக்குரிய காரியங்களுக்கு தீர்க்காலோசனைப்புரிந்து பிறகு பதிலிறுத்துவோம்.

இந்த தனது ஆலோசனையையே மீண்டும் சாவித்திரி தனது கணவன் பாலகிருஷ்ணனை நோக்கி எடுத்தோதினாள். எனவே இம்மூவருடைய ஆலோசனையும் இவ்வாறே முடிவுக்கு வந்தது. இன்று முன் மாதிரிக்காகப் பரிகாரம்பெற்று நாளைக்குவந்து இனியாகவேண்டிய காரியங்களுக்கு விடையளிப்பதென்று மூவரும் தீர்மானித்தனர். ஆகவே பாலகிருஷ்ணன் முல்லாஜீயை நோக்கி கூறலானான்:—

பாலகிருஷ்ணன்:—இவ் விவகாரம் மகா சிக்கலாயிருப்பதனாற்றான் உங்களுக்கு உடனே ஒரு பதிலைக் கூறிவிட முடியவில்லை. ஆதலால்தான் இத்தனை நேரம் சிந்தனையில் போக்கினேம். மன்னிப்பீராக. நாளைக்கு நன்காலோசனைப் புரிந்து மற்றதைவந்து தெரிவிக்கின்றேன். இன்று சாவித்திரிக்குப் புரியவேண்டிய சிகிச்சையை (மந்திரித் தலை) ஆரம்பஞ்செய்யுங்கள். இதனால் அவள் குணம்பெறுவதானால் இறுதிவரை உங்கள் அபிப்பிராயப்படியே நடந்துகொள்ளுகின்றோம். நேரம் அதிகரித்து நடுநிசியும் நெருங்கி வருவதால் இன்று புரியவேண்டியதை நிறைவேற்றி எங்களுக்குப்போக அனுமதி யளியுங்கள்.

முல்லாஜீ:—உங்கள் இஷ்டப்படி செய்யலாம். அதற்குத் தடையாய் என்பால் யாதோர் ஆக்ஷேபனையுமில்லை நீங்கள் உங்களிருப்பிடம் சென்று நன்குபுனராலோசனைப் புரிந்து உங்களுக்கனுகூலமான போழ்து எனக்கறிவிக்கலாம். உங்களிஷ்டப்

படியே இன்று என் சிகிச்சையை (ஓதி மந்திரிப்பதை) ஆரம்பித்துக் கொள்ளுகின்றேன்.

உண்மையில் சாவித்திரியின் நிலைமை இவ்வாறு பாதிக்கப்பட்டுப் போனமைக்குக் காரணம் அவள் மனதுக்கதி விருப்பமான குர்ஆன் ஷரீப் வாசகத்தைக்கேட்க வேண்டுமென்றபிராப்தம் தடுக்கப்பட்டதே யாகுமென்பதை நமது முல்லாஜீயவர்கள் பாலகிருஷ்ணனின் பிரலாபத்தினின்றும் முன்னரே உணர்ந்துகொண்டிருந்தார். மேலும் இனியும் அவ்வனிதாமணியின் முன் திருக் குர்ஆன் ஷரீபின் அரிய வசனங்களைப் பாராயணம் செய்வதே அவள் தேக ஆதங்கத்துக்குச் சரியான நிக்ரஹமாகுமென்பதையும் அவர் தம் மனத்துள் முடிவு செய்து கொண்டார். எனவே சாவித்திரி, இவள் அன்னை, பாலகிருஷ்ணன் ஆகியோர் கோரிக்கைப்படி நமது முல்லாஜீ முகம், கரம், காற்களை ஜலத்தால் சுத்தம் செய்து கொண்டு ஆண்டவனுடைய பரிசுத்த வேதமாகிய குர்ஆன் ஷரீபை கரத்திலேந்தி சாவித்திரிக்கெதிரே தமது இனிய சாரீரத்தோடு பிறர் மனம் போனந்தத்திலாழும் வண்ணம் அழகுபெற ஓத ஆரம்பித்தார்.

நங்கையற்நல்லாளான சாவித்திரிக்கோ இத்தொனியானது பேரின்பத்தைத்தந்து செவியிலும், மனத்திலும் அமிர்தஊற்றை பிரவகிக்கச் செய்தது. மேலும் சாவித்திரியையும், அவள் அன்னையையும் தவிர்த்து பாலகிருஷ்ணனுக்கு மாத்திரம் தற்போது முல்லாஜீயவர்கள் மரைகசியமாய் படிப்பது என்ன கிரந்தம்? என்ன பாஷை? இதேன் இத்துணை ஸ்வாரசியமாயிருக்கிறதென்ற விஷயம் ஒரு சிறிதும் தெரியவில்லை. ஆனால் முல்லாஜி வாயினின்று பிரவர்த்தியாகும் திருக் குர்ஆனின் ஒவ்வொரு தெய்விக சொல் முழுதும் இம்மூவரின் உள்ளத்தையும் ஊடுருவிப் பாய்ந்து வசியப்படுத்தியது. எனவே அம்மூவரும் தங்கள் காயத்தையும் இவ்வுலகையும் மறந்து மெய்த்துறந்த குர்ஆன் ஓதுங் காலத்தில் லயித்து பரமபத மெய்தினவர்களாய் அப்படியே அசைவற்றுச் செவி சாய்த்து கேட்கலாயினர். மேலும் சாவித்திரியின் தாயாரோ லட்சுமணபுரியில் வசிப்பவள். ஆங்கு முஸ்லிம் சமூகம் பெரும்பான்மையுள்

ளனரென்பது உலக விளக்கமாவதால் அவர்களுடைய ஒழுக்க வழக்க ஆசாரங்களை யெல்லாம் இந்தப் பெரியம்மாள் தெரிந்து கொண்டுள்ளவள். முஸ்லிம்களுண்டைய மத சம்பந்தமான பல விஷயங்களும் இவ்வன்னைக்குத் தெரியும். எனவே அவர் நமது காரீமுல்லாஜீ யவர்கள் ஓதக்கூடியது, முஸ்லிம்கள் தங்கள் ஆண்டவனுல் வெளியாக்கப்பட்ட "கலாம் ஷரீப்" என்கின்றனரே அந்த வேதகிரந்தமாகவே இருக்குமென்று நிர்ணயங்கொண்டார். ஆனுல், இத்துணை ஸ்வாரஸியமாயும், தெள்ளறவும், இனிய சாரீரத்திலும் குர்ஆன் வாக்கியங்களை பாராயணஞ் செய்ததை இப்பெரிய அம்மை எங்கும் கேட்டது மில்லை. யாண்டும் நோக்கியதுமில்லை.

மேலும், குர்ஆன்ஷரீபின் ஒவ்வோர் அம்சமும்தெய்வீகம் வாய்ந்ததென்பதுவெள்ளிடைமலைஅதனுடன்முல்லாஜீயுடைய திருவாயினின்றும் வெளிபட்ட ஒவ்வோர் பதமும் அதிக மான மனோவசியம் மிகைத்ததாய் ஒலித்தது. மேலும் இம் மூவரின் உள்ளத்தையும் நெக்குருகச் செய்தமையால் அவர் கள் அங்ஙனமேகற்சிலைபோல சமைந்து இடையருது செவிமி லேற்றுக் கொண்டே இருந்தனர். மேலும் சாவித்திரிக்குதாக் கப்பட்டதாய் கூறப்படும் பைசாச தோஷம் எது? இந்த குர் ஆனை கேட்கவேண்டுமென்ற மனப் பைசாசச் சேஷ்டைதான். ஒருவர்க்கு தான் கோரிய பிராப்தம் கைகூடினுல் வேறு விஷ யத்திலும் சிந்தனைச் செல்லுமோ? அங்ஙனம் சாவித்திரி தன் முழு மனச் சக்தியையும் குர்ஆன் ஷரீபை ஓதுகிற சப்தத் தின் மீதே அர்ப்பணம் செய்துவிட்டாள். என்னேரமும் இத்தகைய தெய்வீக வேத பாராயண சப்தத்தைக் கேட்டுக் கொண்டிருப்பதே பெரும் பாக்கியமென அவள் மனத்துள் கொண்டாள். எனவேஅவள் தன்னையுமறந்து குர்ஆன் ஓதற் சாகரத்தில் ஆழ்ந்துப் போனுள். இங்ஙனமிருக்க சாவித்திரி அன்னையுடையவும் அவள் பர்த்தா பாலகிருஷ்ணனுடையவும் ஹிருதயங்கள் மாத்திரம் இனியில்லா வசியத்துள் சிக்கு ண்டு விட்டன. எனெனின் இத்துணை தாராளமாயும் சாவ

காரசமாயும் இதற்கு முன் இவர்கள் குர்ஆன் ஓதலை கேட்டதில்லை.

மேலும் முல்லாஜீயுடைய அறையில் அன்னியர் உள்ளே பிரவேசிக்கா வண்ணம் கபாட மிடப்பட்டதாயிருந்தது. எனவே அதற்குள் நிர்சப்தம் குடிகொண்டிருந்ததாயினும், அந்தப் பெரியார் அழகுடன்ஓதும் குர்ஆன் வாக்கியத்தொனியின் எதிரொலிகள் சாகரத்தில் பேரலைகளேபோல் ஒன்றன்பின்னொன்ருய் மோதி ஒருவிதமான இன்ப மனோஉல்லாசத்தை உண்டுபண்ணியது. அதுவுமல்லாது இன்று இப்பெரியார் என்று மில்லா மனோற்சாகம் பூண்டு குர்ஆனை ஓதினார். இதனுல் இம்மூவரின் மனங்களும் புதுவிதமான உணர்ச்சியை உட்கொண்டன. எவ்வளவு நேரம் தான் முல்லாஜீ ஹஜரத்தவர்கள் குர்ஆனை பாராயணஞ் செய்து கொண்டிருப்பார், எத்துணை காலம் தான் இம்மூவரும் வெகுஆசையோடு கேட்டுக் கொண்டிருப்பார்? இம்மூவருமென்னமோ எத்தனை மணி நேரம் வாசித்துக் கொண்டிருந்தாலும் அசட்டையின்றி செவி தாழ்த்தத் தயாராகவே இருப்பார். ஆனல் நேரம் அதிகம் கழிகின்றதென்பதை உன்னிய ஹஜ்ரத்தவர்கள் குர்ஆன் ஷரீப் ஓதுதலை நிறுத்திக்கொண்டார். மெய் மறந்து கேட்டுக்கொண்டிருந்த அம்மூவருடைய செவிகளுள் குர்ஆன் ஓதல் தடைப்படினும், அதன் எதிரொலிகள் நுழைந்து கொண்டிருந்தமையால் இன்னும் ஒரு க்ஷண நேரம் அவர்கள் செவி தாழ்த்திக் கொண்டே இருந்தனர். ஆதலின் முல்லாஜீ அவர்கள் மௌனமுற்றதை அன்னார் எவரும் உணரவில்லை. எத்துணை நேரம் தான் எதிரொலியும் முழங்கும்? எனவே மெய் மறந்துட்கார்ந்திருந்த இம்மூவரையும் முல்லாஜீ அவர்கள் கீழ் வருமாறு கூறி வசியத்தை நீக்கி உணர்ச்சி யளிக்கலானார்:—

"நண்பர்களே! நேரம் அதிகம் வியர்த்தமானது. நாழிகையும் ஆகிவிட்டது. நீங்கள் உங்கள் இருப்பிடத்துக் கேகலாம்."

என இவ்வேறு விதமான (குர்ஆன் ஷரீபின் திருவசனமல்லாத) சொற்கள் மெய் மறந்து கேட்டுக் கொண்டிருந்த

அவர்கள் செவிக்கு நுழையவே ஆழ்ந்த தூக்கத்தினின்று எழ
விருப்பமில்லாதவர்களை போல் உணர்வு பெற்றெழுந்தனர்
நேரத்தையறிய முல்லாஜியுடைய அறைக்குள் "டக். டிக்"
என ஓயாது சப்தம் செய்து கொண்டிருந்த டைம்பீஸ் கடியா
ரத்தை நோக்கினர். மணி ஒன்பது அடித்து விட்டது. என
வே இம்மூவர்களும் தங்களில்லம் செல்ல ஆயத்தமாயினர்.
ஆனால், சாவித்திரியின் கால்களும், மனமும் மாத்திரம் வெ
ளிச் செல்ல இசையவில்லை. பாலகிருஷ்ணனுக்கோ, முல்
லாஜீ ஓதிய கிரந்தத்தைப்பற்றிச் சில விஷயங்களைக் கேட்டித்
தெரிந்து கொள்ள வேண்டுமென்று மனம் பிரலாபித்து நேரம்
அதிகமாய் விட்டதால், ஒரு நிமிஷமும் இனி காலத்தைவியர்த்
தமாய் போக்க முடியாதவர்களாயினர். எனவே மூவர்களும்
முல்லாஜிபிடம் வேண்டா மனத்தோடு விடைபெற்று, நாளை
வருவதாய்க் கூறிவிட்டு அவர் சந்நிதானத்தைவிட்டும் வெளி
யாய் இம்மூவரும் தங்கள் வீட்டை நோக்கிச் சென்று தம்
மிருப்பிட மடைந்தனர்.

அத்தியாயம்—9.

மேலே விளம்பப்பட்ட அத்துணையே யல்லாது வேறு
அபரிமிதமான விசேஷ சம்பாஷணை யொன்றும் அன்றிரவு
அவர்களுக்கிடையே நிகழவில்லை. மேலும் திருவேத குர்ஆன
பாராயணத்தைக் கேட்டானந்திக்கும் அவாவினால் முன்னம்
முதல் நம் சாவித்திரிக்கு மனத்துள் ஏற்பட்டிருந்த ஒருவித
தெய்வீகவசிய ஆவலானது சாவித்திரியின் தாய், பாலகிருஷ்
ணன் ஆகிய இருவரின் ஹிருதயத்துள்ளும் ஜனித்து சிறகச்
சிறகத் தாண்டவமாரம்பித்தது. நேற்றிரவேஇவ்வசியமானது
அவ்விருவரையும் வந்தணுகி யிருந்தது. ஆனால் பாலகிருஷ்
ணனும், சாவித்திரியின் தாயும் ஒரு சிறு அபிப்பிராயபேத
முடையவராதலின் தங்கள் மனப்பிராப்தங்களை அன்னார் தமக்
கிடையே வெளியிடத் துணியவில்லை. எனவே, நேற்றிரவு
அங்ஙனமே துயில்கொண்டு விட்டனர். இன்று பொழுது
புலர்ந்து விழித்தெழுந்ததும் நேற்றிரவு இவர்கள் உள்ளத்தே

ஜனித்துத் ததும்பிய தெய்விக எண்ணமே மீண்டும் சிறகச் சிறகக் குடையலாயின. இச்சிந்தனையில் இவர்கள் சற்றே ஆழ்ந்து உருகுங்கால் தாம் தற்போது முல்லாஜி சாஹிபுடைய அறைக்குள் வீற்றிருப்பதாயும், அவர் தங்களுக்கெதிரே அழகுடன் இனிய சாரீரத்தோடு குர்ஆன் ஷரீபை ஓதுவதை இவர்கள் கேட்டுக் கொண்டு மனம் பூரிப்பதாயும் விந்தையான மனோராஜ்ஜியமும் செய்து கொண்டு, வெறுமனே செவியைத் தாழ்த்தி குர்ஆன் வாசக எதிரொலியைக் கேட்பர். ஒரு சாரார் ஏதேனுமோர் விஷயத்தில் அபரிமிதமாய் ஆழ்ந்து சிந்தித்தால் அவ்விஷயம் தம்முன் தோன்றுவதாய் மனத்துள் புலப்படுவது சர்வ சாதாரணமே யாகும். உதாரணமாய் பகவத் தியானத்தில் தன் பருவுடலையும் மறந்து ஆழ்ந்துபோனவன் தன்முன் கடவுளே பிரசன்னமாய் காக்ஷித் தருவதாய் காண்பது ஒருதன்மை. அவ்வாறே தன் காதலர் சிந்தனையிலாழ்ந்த தம்பதியருக்கு தம்பதியர் உருவமானது எதிரில் தோன்றுவதாயும், அன்புடனினிய சம்பாஷணைப் புரிவதாயும் தோன்றுவது மற்றொரு தன்மை. இத்தன்மைக்கிணங்கவே அவ்விருவர்க்கும் காக்ஷியும், ஒலியும் புலப்பட்டன. ஆனால் பாலகிருஷ்ணன் ஆண் மகனாயிருந்ததால் குர்ஆன் வேத வசனமானது இவனிடத்தில் மற்றையதைவிட அதிக சக்தியைக் காட்டவில்லையாயினும், நிச்சயம் ஒரு மட்டோடு இருந்துகொண்டு அவன் உள்ளத்தை ஈர்ந்து கொண்டிருந்தது.

இன்று முல்லாஜீ சாஹிபின் ஓதற் சிகிச்சையால் ஏதேனும் சுகநலம் காணப்பட்டால் இனிமேலும் மீண்டும் அவர்பாலே சென்று சிகிச்சை புரிவோமென்று பாலகிருஷ்ணன் ஏற்கெனவே கூறியிருந்த வார்த்தைகள் நம் சாவித்திரியின் மனத்திலிருந்து கொண்டிருந்தன. நேற்றிரவு இவ்வாறே முல்லாஜியிடம் கூறிவிட்டு வந்ததும் மீண்டும் இவள் ஞாபகத்துக்கு ஓடிவந்தது. அவர்கள் எவ்வாறு எண்ணிக்கொண்ட போதிலும் முல்லாஜீயுடைய அமலால் (பரிகாரம்) சுகமும், சுகவீனமும் காணப்படுவது சாவித்திரியைப் பொறுத்திருக்கிறது. இவள்

இன்றுசவுக்கிய மடைந்தவளேபோல் இருந்தால்மற்றையோரும் இவள் ஆரோக்கிய மடைந்தாள் என்று கருதி கொள்வார்கள் என்றோ? ஆதலின் நமது மணவதி சாவித்திரி இன்று நேற்றைய முன் தினங்களைக் காட்டிலும் அதி உல்லாச உற்சாக ஒல்கிய ஒய்யார ஆரோக்கிய ஆரணங்கையாக மிளிர்ந்துகாணப் பட்டாள். நேற்றே அவள் தான் சுகமடைந்து விட்டதாய் கணவன் தாய் இவர்கள் முன் நடத்தி காட்டியிருந்தும்; இன்று முற்றுமே சுகவாழ்வு பெற்று விட்டவளேபோல் ஐயமறப் புலப்பட்டாள். நேற்றிரவுங் கூட தான் அவள் பள்ளிவாயி னின்று இல்லம் வந்தணுகிய பின் தானே தன் கணவனுக்கும் தனக்கும் குழந்தைக்கும் படுக்கை விரித்தாள். மற்றும் சிறு பணிவிடைகளை புரிந்து தான் சுகமடைந்து விட்ட தன்மை யைக் காட்டிக் கொண்டாள். இதற்கு முன்னெல்லாம் சாவித் திரி சுகவீன தேகியாயிருந்ததை முன்னிட்டு தன் பாட்டியின ருகே படுத்துக் கொள்வதை வழக்கமாய் கொண்டிருந்த தன் குழந்தையை தன்னருகே துயில வைத்துக் கொண்டாள். மேலும் குர்ஆன் வேத வசனங்கள் ஏற்கெனவே தன்னுள்ளத் தை வசீகரப் படுத்தியதைப்போல் சிறிதேனும் கணவன் தாய் இருவர் உள்ளத்தை ஊடுருவிப் பாய்ந்திருக்குமென்ற எண்ண முங் கொண்டாள். அவ்விஷயமாய் அவர்களிடம் வினவவாயை கிளப்பலாமென்று யோசித்தாள். ஆனால், அவ்வாறு கேட்ப தற்கு இதுதக்க சமயமல்ல வென்பதை யுன்னி விடுத்தாள்.

இந்த மூன்று பேர் வழிக்குமென்னமோ குர்ஆனைப்பற்றி அதிக வரலாறு எதையேனும் விசாரித்தறிய வேண்டுமென்ற ஆவலானது அதிகமாகவேஉள்ளத்தைக் குடைந்துகொண்டிருந் தது. ஆனால் அதை யொட்டி இம்மூவருள் ஒருவர் இக்காலை முதன் முதல் வாய்விட்டு பேசியிருந்தால் இந்த ஒருவருக்கு தமது ஹிந்து மதத்தில் நம்பிக்கையில்லை பக்தியில்லை என்ற பிரஷ்ட பட்டமும் அபவாதமுமே நிச்சயமாய் வாய்த்திருக்கு மென்பது திண்ணம். ஆதலின் மூவருமே தம்மனக் குரங் கின் சேஷ்டைகளை பலவந்தமாய் அடக்கி வைத்துக் கொள்ள வேண்டியவர்களாயினர். நம்முள் எவரேனும் முதலில் பேச்

சைத் தூண்டட்டும். பிறகு நாமும் சேர்ந்து விசாரித்துக் கொள்ளுவோமென்று மூவரும் எண்ணியவர்களாய் நேரத்தைக் கழித்தனர்.

இவர்கள் ஹிருதய விவகாரம் இவ்வாறு சிக்கலில் மாட்டிக் கொண்டிருந்தது. நம் சாவித்திரி பல திங்கட்களுக்கு முன்னர் இன்றைய நிலை சுகவீனத்தால் பீடிக்கப்படாமலிருந்த போது, எவ்வாறு வீட்டுக் குடித்தன வேலைகளி னெல்லாம் தாராளமாய் தலையிட்டு உழைத்துத் தன் ஆரோக்கிய ஸ்திதியைக் காட்டிக் கொண்டாளோ, அவ்வாறே தற்போதும் தான் சுகதேகியா யிருப்பதாயும், தனக்கு யாதொரு வியாதியும் இல்லையென்றும் காட்டிக் கொண்டாள். காலை நேரமும் கடந்து முற்பகலும் வந்தணுகியது. மணியும் பகல் பத்தடித்து விட்டது. இதுகாறும் சாவித்திரியின் சுக ஆரோக்கியத்தைப்பற்றியேனும், இனி முல்லாஜீயிடம் சென்று சிகிச்சைபெறும் விஷயமாக வேனும் யாதொரு சம்பாஷணையும் நிகழவில்லை. சாவித்திரிக்கு இது பெருத்த குழப்பத்தை விளைவித்தது. அவ்விஷயமாகத் தாய், கணவன் இருவர்களையும் எவ்வாறேனும் தூண்டிவிட்டு முல்லாஜீயின் சிகிச்சைவிவகாரத்தை ஒரு ஒழுங்கான முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென இவள் மனமும் குறுகுறுத்துக் கொண்டிருந்தது. அவர்களே இதைப்பற்றி பேசுவர் என்று இதுகாறும் காத்திருந்தாள். ஆனால், இன்னும் அவ்வகையில் எவரும் பேசாமையைக் கண்டு சாவித்திரி திகைத்தாள். எனவே ஒவ்வொரு விநாடியும் பகல் பத்து மணிக்குப் பின் அவளுக்கொரு யுகமாகக் காணப்பட்டது. இன்னும் மேன்மேலும் அவர்களால் அடக்கி வைத்துக்கொள்ள மனமிசையவில்லை. எனவே அவள் துணிந்து தன் அன்னையருகே யணுகி இவ்விஷயமாய் மெதுவாகத் தூண்டிப் பேசலானாள்.

சா-தாய்:—என் குழந்தாய்! ஆமாம் உன் நிலைமை நன்நிலையடைந்து மிளிர்வதை நான் நேற்றிரவு தொடுத்துக் கண்டு கொண்டு தான் வருகின்றேன். நேற்று நிசியில் நாம் முல்லாஜி சமுகம் சென்று பரிகாரந் தேடி

யதைப்போல் இன்னுஞ் சின்னுட்களுக்கு சிகிச்சைப் பெறு வோமானுல் இன்னும் உனது தேகக்கூறு பூரண ஆரோக்கிய மடையுமென்பது நிச்சயம். இது முல்லாஜீயின் சிகிச்சை யால்தான் உண்டானதென்பதும் திண்ணம்.

சாவித்திரி:—என் அம்மா! நேற்றிரவு அந்த முல்லாஜீ பெரியார் என்ன சிகிச்சைப் புரிந்தார்? அவர் எதையோ படித் துக் கொண்டிருந்தாரே அதென்ன? அதினின்றும் எனக்கு ஒரு சொல்லின் பொருளும் விளங்கவில்லையே.

சா-தாய்:—அவர் படித்துவிட்டு உன் மீது மந்திரித்து ஊதியது உண்மை தான். உனக்கு ஒரு பொருளும் விளங்கா தது போன்றே எனக்குங்கூட அர்த்தமாகவில்லை. ஆனுல், அவர் பாராயணஞ் செய்தது அவர்கள் மார்க்க வேத கிரந்த மென்பது மாத்திரம் தெரியும்.

சாவித்திரி:—ஓஹோ! அப்படியா.

என்று பேச்சை முடிப்பதற்குள் நமது யௌவன பால கிருஷ்ணன் புன்முறுவலோடு இவர்களிருக்குமிடம் வந்து சேர்ந்தான். உடனே அன்போடு தன் மங்கையை நோக்கி வினவலானுன்.

பாலகிருஷ்ணன்:—என்ன! எவ்விஷயத்தைப்பற்றி பே சிக் கொண்டிருக்கிறீர்கள்? ஏதேனும் முக்கிய விஷயமோ?

சாவித்திரி:—பதியே! அப்படி விசேஷச் செய்தி யொன் றுமில்லை. சென்ற இரவு நிகழ்ந்த விஷயத்தைப்பற்றி தான் சல்லாபித்துக் கொண்டிருந்தோம். இராத்திரி முல்லாஜீகுரு எதையோ கருணாகரத்தோடு பாராயணஞ் செய்தனரே அதெ ன்ன? வென்று தான் பேசினேம்.

பாலகிருஷ்ணன்:—அப்படியானுல் சற்று கூச்சலிடாமல் மெதுவாய் சம்பாஷியுங்கள். யாருமறியாது நாம் நிகழ்த்திய அவ்விஷயம் வேறெவர் செவியிலேனும் நுழைந்துவிடப் போ கிறது. சரி! அவர் படித்தது என்னவெனக் கேட்டதற்கு உன் அன்னையவர்யாது பதில் கூறினர்?

சாவித்திரி:—பதியே! அது முஸ்லிம் ஜாதியாருடைய "மதவேத வசனமெ"ன்று என் தாயார் கூறினுர்.

பாலகிருஷ்ணன்:—சரி நானும் அவ்வாறுதான் இவ்வினிய வசனங்கள் ஏதேனுமொரு மதத்தின் வேதமாகயிருக்குமெனக் கருதியிருந்தேன். ஆனல் அந்த கிரந்தத்தின் பெயர் என்னவோ? அதென்ன பாஷையோ தெரியவில்லை.

காதலனும் காதலியும் இவ்வாறு அளவளாவிப்பேசுவதற்கிடையே ஒரு கிழவியாகிய தான் குறுக்கிட்டுப் பேசுவது தகுதியல்லவென்று இதுகாறும் வாளாயிருந்த சாவித்திரியின் தாய், பாலகிருஷ்ணனுடைய வினவுக்கு விடையிறுக்க முன் வந்தாள்.

சா-தாய்:—அதன் நாமம் "குர்ஆன் ஷரீப்" என்றும் அது அரபி பாஷையென்றும், நான் லக்ஷ்மணபுரியில் கேள்வியுற்றிருக்கிறேன். ஒருக்கால் அவர் படித்தது அவர்கள் மத வேதமோ? வேறுயாதோ தெரியவில்லை.

பாலகிருஷ்ணன்:—அஃது அஃதா சுத்தானிருக்கலாம். அஃதிருக்கட்டும் அந்த கிரந்தத்தில் என்ன விஷயத்தைப்பற்றி போதிக்கப்பட்டிருக்கிறதென்பது உமக்குத் தெரியுமா? சாதாரணமாய் பொருட்தெரியாதிருந்தும் செவிசாய்க்கும் போதே அஃதுஅத்துணை மனமோஹனப் பொருளாய் காணப்பட்டதே.

சாவி-தாய்:—அந்த வேதத்தில் என்னென்ன தத்துவ விஷயங்களைப்பற்றி விவரிக்கப்பட்டிருக்கிறதென்பது எனக்கு அத்துணை விளக்கமாய்த் தெரியாது. ஆனல் அந்த கிரந்தத்தில் எண்ணிறந்த அருந்தத்துவங்களும் பாரமார்த்திகப் போதனைகளும், ஞானபரம ரகஸ்யங்களும், மானிட வாழ்க்கைக்குரிய பாங்குகளும் அதிக விளக்கமாய் போதிக்கப்பட்டிருக்கின்றனவென்று எங்களூர் முஸ்லிம்கள் கூறுகிற்பர். ஏன் அவ்வாறே அதில் அதை மிளிர்ந்திருந்தல் கூடா? உண்மையின் அங்ஙனமே இருக்கும் ஏனெனின் நாம் நேற்றிரவு முல்லாஜியிடமிருந்து அவ்வேத வசனங்களை செவி தாழ்த்திக் கேட்டுக்கொண்டிருந்த போது நம்மவர்க்கு மனத்துள் ஜனித்த பரமானந்தப் பிரீதியைப் பகரவும் பாங்குண்டோ? அதுகாலை நமக்கு வேறெந்த விஷயத்திலும் சிந்தைச் செல்லவில்லையே. நாம் இங்கு இருக்கிறோம்? என்ன செய்கின்றோம்? நேரம் எவ்வளவு கடந்து விட்

டது? என்பதொன்றும் தெரித்து கொள்ளமாட்டாது ஆழ்ந்து விட்டோமன்றோ? மேலும் முல்லாஜி பெரியார் தாமே ஓதுதலை நிறுத்திக்கொண்டிராவிடின் பொழுது புலர்ந்தபோதிலும் நாமும் அந்த பாராயண வசனமிர்தத்திலே வசியப்பட்டுக்கிடப்போமென்பதில் கிஞ்சித்தும் ஐயமில்லை. ஆதலின் அந்த கிரந்தம் சத்தியமானதென்பதற்கு நம் இந்நிகழ்வும் ஒரு சான்றாக அமைந்திருக்கிறதல்லவா? மேலும் அக்கிரந்தப்பாராயண மகத்துவத்தாலேயே நம் சாவித்திரிக்குநேற்றிருந்ததைக்காட்டினும் இஞ்ஞான்று நல்ல சுக நிலை அதிகம் ஏற்பட்டிருக்கிறதென்று கூறினும் மிகையாகாது.

சாவித்திரி:—ஆம். என் மாதா! தாங்கள் நவின்றவை யெல்லாம் உண்மையே; அந்தப் புத்தகத்தின் நன் வசனங்கள் அதிகம் போதிக்கப்பட்டிருக்குமென்று நானும் நம்ப முன் வருகிறேன். நேற்றிரவே எனக்கும் அதைப்பற்றி நல்லெண்ணமுண்டாய் விட்டது. மேலும் அவ்வேதத்தைப்பற்றிய சர்வ விருத்தாந்தத்தையுமா கேட்டுணர வேண்டுமென்ற பேரவாவும் என் மனத்தே ஜனித்துள்ளது.

தாயும் சேயும் கூறிய இப்புகழ் வசனமெல்லாம் முஸ்லிம்கள் விஷயத்தில் சற்றே குரோத குணம் பெற்ற பாலகிருஷ்ணனுக்கு அதிருப்தியை விளைவித்தது. எனவே அவன் தனது வாக்கு வாதத்தை வெளியிட ஆரம்பித்தான்.

பாலகிருஷ்ணன்:—நாம் ஹிந்துக்களாயிருந்தும் முஸ்லிம் வேதத்தை அத்துணை சிலாகித்துக் கூறுதல் சிறப்புடைத்தன்று. அஃது ஒழுக்கமுமன்று. இஃதென்ன விந்தை! முஸ்லிம்களுடைய மார்க்க வேதத்தில் நம் பூர்வ வேதாகமங்களில் மலிந்துள்ள அரும் நீதி தத்துவ போதனைகளைவிட அதிகமாகவா கூறப்பட்டிருக்குமென்று கருதுகிறீர்கள்? ஒருக்காலும் அங்ஙனமாகா. நேற்று நிசியில் நமக்கு நிகழ்ந்த மனமாறுதலெல்லாம் குர்ஆனுடைய மகத்துவத்தால் ஜனித்தவையன்று. ஆனால் அந்த ஹஜ்ரத் முல்லாஜீயுடைய குரல், இனியகோகிலகானசாரீரம்வாய்ந்ததுஅதனாற்றான அவர்ஓதியவசனங்கள்நமது உள்ளங்களைசர்ந்துமோகிகரச் செய்தது. இஃதேயல்லாமல் வே

ளென்றும் அக்கிரந்தத்திலிருக்குமென்பதற்கு ஏதுவில்லை. நம் ஹிந்து மத வேதாகம சாஸ்திர நூல்களில் எத்துணையோ நனி சிறந்த நீதி போதனைகளெல்லாம் மலிந்திலங்குகின்றன. அவற்றைப் போன்றதொன்று முஸ்லிம்கள் வேதமென்ன? வேறெந்த ஆகமங்களில் தேடிப் பார்த்த போதிலும் கிடையா தென்பது உண்மை!

ச-ாதாய்:—மருகா பாலகிருஷ்ண ! நீர் நவின்றவற்றை யும் நாங்கள் ஏற்றுக் கொண்டதாகவே பாவித்துக் கொள்க. மேலும் தற்போது ஹிந்து சமயத்தையே தழுவியேயுள்ள நாம் மூவருமே நமக்குள் சம்பாவித்துக் கொள்கின்றோம். இங்கு வேறெந்தபுறம் மதவாதியுமில்லை. எனவே நம் சமய போதனைக்கு சற்று விகல்பமாய் நாம் பேசிக் கொள்வதைக் கொண்டு நம்மில் எவரும் நம்மை குறை கூறலாகாது? மேலும் நான் இஸ்லாமிய விஷயங்களை நன்கென விளம்புவதைக் கொண்டு நான் இஸ்லாம் மார்க்கத்தையோ முஸ்லிம் மத வேதத்தையோ சிலாகித்து நன்னம்பிக்கை கொள்ளுகிறே னென்று கருதிக்கொள்ளக் கிஞ்சிற்றும் கூடாது. எனவே நம் ஹிந்துமத வேதங்களைப்பற்றிய ஒரு உண்மையான விஷயத்தை மாத்திரம், பக்ஷபாதமின்றி கூறவிரும்புகிறேன். அதாவது:—இதுகாறும் யான் பலரிடம் கேட்டும், உணர்ந்தும், படித்தும் ஆராய்ந்துமுள்ள மட்டில் நம் வேதங்களாகிய இருக்கு, தைத்திரியம், சாமம், அதர்வணம், முதலாய் நான்காகமங்களிலும், அநேகமாய், பசுக்கள், அவற்றின் பால், வெண்ணெய், இடையர்கள் வாழ்கதை, பழங்கதைகள், இவைகளைப்பற்றியும் சில நீதிகளைப்பற்றியுந்தான் போதிக்கப்பட்டிருப்பதாய்ப் புலப்படுகிறது. இஃதில்லையென்று எவராலும் மறுத்தல் முடியாது.

பாலகிருஷ்ணன்:—மாமி! நம் வேதங்களைப்பற்றி மாத்திரம் என் அங்கனம் கூறல் வேண்டும். இவ்வுலகின் ஒவ்வொரு சமயங்கள், வேத கிரந்த ஆகமங்களை எடுத்தாராய்ந்த போதிலும் நம் வேதத்திலுள்ளதைப்போன்ற அனுவசிய விஷயங்கள் தான் மலிந்து கிடக்கின்றன. ஆனல் முஸ்லிம்களுடைய வே

தத்தில் என்ன கூறப்பட்டிருக்கிறதென்பதை ஒரு சிறிதையும் நாம் உணர்ந்து கொள்ள இயலவில்லை. நமக்கு மாத்திரம் முஸ்லிம் வேத பாஷை தெரிந்திருந்தால் இராத்திரி முல்லாஜீ படித்த வசனத்திலிருந்தே அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதென்ற ஆந்திரத்தைத் தெரிந்து கொண்டிருக்கலாம்.

மேலும் இவர்களுடைய இத்தகைய வாக்கு வாதத்திலேயே காலம் சிறுகச் சிறுக கடந்து கொண்டிருந்தது. சாவித்திரிக்கு மாத்திரம் காலம் இங்ஙனம் வீண் போவது பெருத்த அதிருப்தியாய் காணப்பட்டது. ஏனெனின் இந்த தர்க்க வர்க்கத்தினரிடையே தனது மனப்பிராப்தம் எங்குநிறைவேறாமற் தவறிப் போகிறதோ என்று அவள் ஏங்கினாள். எனவே அவள் ஒரு சிறிது நேரமே பொறுத்திருந்து, தன் கோரிக்கையின் பக்கம் அவர்களுடைய சம்பாஷணைப் போக்கைத்திருப்ப பேச்சுக்கிடையே குறுக்கிட்டு தூண்டலானாள்.

சாவித்திரி:—அம்மா! எனக்குத்தான் இப்போது பூரண சுகம் ஏற்பட்டு விட்டதே இனி முல்லாஜீயிடம் போக வேண்டிய அவசியமில்லையே. அவர் விஷயமாய் நாமேன் இனி தர்க்கித்துக்கொள்ள வேண்டும்?

சா-தாய்:—குழந்தாய்! அங்ஙனமன்று முல்லாஜீயிடம் நாம் சென்று வரவேண்டிய ஆவசியக மின்னமிருக்கிறது, உனக்கு இன்னும் திருப்திகரமான பூரண ஆரோக்கியம் எற்படும் வரை நாம் முல்லாஜீயிடம் சென்று வேதப் பாராயண சிகிச்சைப் பெற்றுதான் வரவேண்டும். இதற்கிடையே அவர் சக வாசத்தை விட்டு விடுதல் கூடாது. மேலும் இன்னும்இரண்டு மூன்று மாதங்கள் வரை சிகிச்சை செய்து கொள்ள வேண்டுமென்று முல்லாஜி பெரியார் கூறியது வீணுக்காக கூறப்பட்டதல்ல. உனக்கு வந்து வாய்த்துள்ள தோஷம் அத்துணை விசேஷமானதென்பதை யெண்ணியே இத்தனை நாள்கெடுவிட்டார். இன்றேல் நெடுங்காலமட்டும் நம்மை சிரமத்துட்படுத்துவதால்அவருக்கென்னஅனுகூலம்எற்படப்போகின்றது? அதுவுமன்றி நம்மிடமிருந்து ஒருதம்பிடியும் பிரதிபலன்வாங்காதஅப்

புண்ணியர்வீணேநமக்காகவேண்டி இரண்டு மூன்று மாதங்கள் வரை சிரமமேற்கொள்ள அவருக்கென்ன தலைவிதியா?

சாவித்திரி:—எனதரும் அன்னையே! தாங்கள் கூறியவை உண்மையாயினும், இரண்டு மூன்று மாதங்கள் வரை அத்துணைக்காலம் தினமும் ஓயாது நாம் அவர் சமூகத்துக்குச் செல்வதென்பது முடியக்கூடிய காரியமா? இதன் பொருட்டு ஏற்படும் சிரம சங்கடம் ஒரு பக்கல் கிடக்க, எனது பத்தா அத்துணை நாட்கள்வரை இவ்விடமே இருப்பதென்பதுமுடிந்த காரியமா? இன்னும் இரண்டு மூன்று வாரம் இனியும் இங்கு தங்கியிருப்பாரோ இல்லையோ அதுவே சந்தேகமாயிருக்கிறது. உத்தியோக வேலையை விட்டுப் போட்டு வீட்டில் கிடப்பதென்பது ஆடவர்களுக்கு விருப்பமாகுமா? எனவே அவர் பம்பாய்க்குச் சென்ற பின் தாங்களும் தங்களிருப்பிடத்துக்குச்சென்று விட போகின்றீர். அதன் பின் நான் மாத்திரம் எங்ஙனம் முல்லாஜீயிடம் சென்று சிகிச்சைப் பெற முடியும். அதுவும், யாரும் அறியாவண்ணம் தனிமையாக இராக்காலத்தில் செல்ல வேண்டும். அஃது என்னுலாகக்கூடியதா? இல்லை.

சாவி-தாய்:—மகளே! உனது பத்தா பாலகிருஷ்ணன் உனக்குப் பூரண சுகாரோக்கியம் ஏற்பட்டாலல்லாது பம்பாய் செல்லமாட்டார் என்பது திண்ணம். ஏதோ அவசிய நிமித்தமாய் அவர் போய் விட வேண்டிய சந்தாப்பம் வந்து நேரிட்டாலும் உன்னை இந்த கேவல நிலைமையில் விட்டு விட்டுச் செல்ல நான் ஒருபோதும் துணிய மாட்டேன். இஃது உண்மை. இவை யாவும் ஒரு புற மிருக்கட்டும்.

(பாலகிருஷ்ணனை நோக்கி) நாம் இவ்வாறு தினமும் முல்லாஜீயிடம் சென்று வருவதால் மற்றையோர் நம் செயல்களில் சந்தேகங்கொள்ள இடமேற்பட்டு விடுமல்லவா? மேலும் நாம் மர்மமாய் செல்வதென்றாலும், எத்தனை நாட்களுக்கு நாம் நம் வீட்டிலுள்ளோர்க்குப் போலிக் காரணங்களை கூறி ஏமாற்றிச் செல்ல முடியும்? (கெட்டிக்கார் புளுகு எட்டு நாளில் தெரிந்துபோம் என்பது போல்) கால முழுவதும் நாம்

கூறும் சாக்குப் போக்குகளை மற்றையோர் உண்மை யென்று சதா நம்பி யிருப்பார்களா? இரண்டு மூன்று மாதங்கள் வரை முல்லாஜீயிடம் செல்ல வேண்டியதை ஒழித்த போதிலும் குறைந்தது பத்து, இருபது நாட்களுக்கேனும் அவருடைய சிகிச்சைப் பெற்றால்தான் சாவித்திரிக்கு பூரண சுகம் ஏற்படு மென்பதற்குரிய நம்பிக்கை யிருக்கிறது. தங்களுடைய யோசனை இவ்விஷயத்தில் எங்ஙன மிருக்கிற தென்பதை தெரிவியுங்கள்.

பாலகிருஷ்ணன்:—என் மனத்தின் நோக்கமாவது:—தற்போது சாவித்திரிக்கு பூரணசுகம் ஏற்பட்டு விட்டதென்றும், இனி முல்லாஜியிடம் போக வேண்டிய அவசியமில்லை யென்றும் அவளே கூறுகின்றாள். நானும் அந்த நோக்கத்தையே கொண்டுள்ளேன். மேலும் முல்லாஜீ ஏதோ ஓதிஊதுவதால் தான் இந்தச் சுகம் ஏற்பட்டதென்று நீங்கள் விவாதிக்கின்றீர்கள். எனக்கு அதில் நம்பிக்கை இல்லவேயில்லை! ஏனெனின் அவர் சமூகத்துக்குப் போவதற்கு முன்னரே சாவித்திரிக்கு சற்று குணம் உண்டாகி இப்போது பூர்த்தியான குணம் ஏற்பட்டிருக்கிறது. முல்லாஜீ செய்த அனுகூலம் என்ன இருக்கிறது? ஆனதுபற்றி யான் இன்று மாலையில் முல்லாஜீயிடம் சென்று 'இனி சாவித்திரியை இங்கு அழைத்துவர முடியாது' உமது சிகிச்சை இனி வேண்டியதில்லை' என்று கூறிவிட்டு வரப்போகின்றேன்.

சாவித்திரி:—(திக்பிரமை யடைந்தவளாய்) வேண்டாம் இப்படி மனத்தடுமாற்றமுற்று, அவ்வாறே முல்லாஜி பெரியாரிடம் கூறிவிடப் போகின்றீர்! ஒருகால் அந்த மஹானுக்கு மன அதிருப்தியுண்டாய் ஏதேனும் 'தலைகீழ்' மந்திர உச்சாடனம் செய்துவிட்டால் நம்கதி இன்னும் அதிகத்திண்டாட்டத்தில் வந்துவிடும்.

பாலகிருஷ்ணன்:—பெண்கள் அறிவிலிகளும் தைரியமற்ற சபலர்களுமாவர் எனக் கூறப்படுவது சரியாகவே இருக்கிறது. தலைகீழ் மந்திரம் செய்து விடுவாராம். பாதகம் ஏற்பட்

டுப்போகுமாம், ஹே! அந்த இஸ்லாமிய கிழவரால் என்ன செய்துவிட முடியும்?

சா-தாய்:—(சற்று சினந்து). என் இப்படி முன் பின் ஆராயாது உளரிக் கொண்டிருக்கிறீர்? இந்த வாய் பதஷ்டத்தால் என்ன காரியம் ஆகப்போகிறது அஃதொன்றுமில்லை. "நம்பிக்கை" என்பது தான் இவ்வுலகின் சகல காரியாதிகளுக்கும் பிரதானமாய் இருந்து வருகிறது. அந்த உத்தம முல்லாஜீ பெரியாருடைய சிகிச்சாசீர்வாதத்தால் தான் இத்துணை ஆரோக்கியமேனும் ஏற்பட்டிருக்கிறதென்பது சாவித்திரியுடையவும் என்னுடையவும் திடமான நம்பிக்கையுமாகும். மேலும் இந்த மஹானை இகழந்துகூறுவதை நீர் விட்டு விடுவீராக.

பாலகிருஷ்ணன்:—என்ன முல்லாஜீயுடைய சிகிச்சையாலா குணமுண்டானதென்கிறீர்கள்? அன்று, அன்று. சாவித்திரிக்கும் அவர் சிகிட்சையில் நம்பிக்கை இருப்பதாய் தெரியவில்லையே.

பாலகிருஷ்ணன் சாவித்திரியைநோக்கி 'என்? நான்சொன்னது சரி தானே' என்று வினவினன்.

தன் கணவன் இதுகாறும் பிறுத்தி வந்த விரும்பத்தகாத இவ்வசனங்களெல்லாம் சாவித்திரிக்கு அதிக மனத்தாங்கலை உண்டு பண்ணிற்று, தன் மனப்பிராப்தம் சீர்குலைந்து போகும் தன்மைக்கு நிலைமை வருவதைப்பற்றி அவள் பெரிதும் மனம் வெதும்பினுள், இதுகாறும் இல்லாத புதிய விசனத்துள் ஆழ்ந்தாள். மேலும் புருஷனுடைய வார்த்தைகளை ஆமோதித்து முல்லாஜீயுடைய சிகிட்சையில், தனக்கு நம்பிக்கையில்லையென்று கூறி விட்டாலோ, முல்லாஜீ மகானின் தரிசனபாக்கியமும்,குர்ஆன்வேத பாராயண ஆத்மார்த்த நற்சாதனமும்அற்றுப்போகுமோவென்று சஞ்சலங்கொண்டாள். இவ்வாறின்றி புருஷனின் வாக்கை மறுத்து அன்னையின் வசனத்தையேற்று முல்லாஜீயுடைய சிகிச்சையில் தான் சுகமுண்டானதென்று இவள் கூறினுல், தன் கணவனுக்கு மன அதிருப்தியுண்டாகுமே என்று பெரிதும் சித்தங்கலங்கினுள். எனவே

இருதலைக் கொள்ளி எறும்பேபோல் திகைத்தாள். ஆதலின் எவருடைய மனமும் கோணாவண்ணம் பாலகிருஷ்ணனின் கேள்விக்கு பதில் எவ்வாறு அளிப்பதென்று சிந்தித்தாள்.

தான் எதிர்பார்த்ததற்கு மாருக சாவித்திரி மௌனமாய் ஆழ்ந்த சிந்தாகுலத்தில் ஆழ்ந்திருப்பதை கண்டு பாலகிருஷ்ணன் மீண்டும் தன் அருங் காதலியை வினவலானன்.

பாலகிருஷ்ணன்:—என். பேசாமடந்தையைப்போலாய் விட்டாய்; கேட்கப்பட்ட வினவுக்கு விடை எங்கே? முல்லாஜியுடைய சிகிச்சையால் தான் உனக்கு சுகமுண்டானதா? அல்லது அதில்லாமல் சுயமே உன் தேகவாழ்க்கைச் சீர்பெற்று விட்டதா? உண்மைச் சொல்க.

சாவித்திரி:—(மிகவும் அஞ்சியவளாய் நிதானத்தோடு) தாங்கள் என் க்ஷேமத்தைக் கருதி முல்லாஜீயிடம் சென்று சிகிச்சைப்பெற வேண்டிய விஷயமாய் பேசி முடிவுசெய்து கொண்ட நாள்தொடுத்துத்தான் எனக்கு சௌக்கிய முண்டாய் வருவதாகத்தெரிகிறது. அதற்குமுன் இத்தகைய வேறுபாடு காணப்படவில்லை.

பாலகிருஷ்ணன்:—சரி அப்படியானல் நான் முதலாக முல்லாஜீயிடம் சென்று வந்த அன்றிரவு அவர் எதும் மந்திர சிகிச்சைப் புரியவில்லையே. வெறும் ஏற்பாடு மட்டும் தானே செய்து வந்தேன். அடுத்த தின இரவு தானே அவர் உனக்கு வேத மந்திர உச்சாடனம் செய்ய ஆரம்பித்தார். இதற்கு முன் தினமே உனக்கு சுகம் காணப்பட்டு வருவதாய் கூறுகின்ருயே இஃதெங்ஙனமாயிருத்தல் சாலும்? இஃது முல்லாஜீ செய்வதவசியமோ? அல்லது நீர்அவர்மீது கொண்டுள்ள திடநம்பிக்கையோ? சிகிச்சைக்கு முன்குணம் காணப்படுதென்றல், "எங்கோயோஅடித்து வாயில்பல்போச்சு!! என்ற கதையாகவன்றே இருக்கிறது. பெண்களும் ஒரு விந்தையான நடைப்பொம்மைகளாகவே இருக்கின்றனரே?

(இவன் இவ்வாறு மனத்தாங்கலை யுண்டுபண்ணும் முறையில் கூறிய ஒவ்வோர் உரையும் சாவித்திரியின் உள்ளத்தைக் குத்திச் சிதைத்தது. எனவே அவள் முகத்தைக் கோணிக்

கொண்டு அதிருப்தியோடு முணுமுணுத்து கூறத் தொடங்கினாள்.)

சாவித்திரி:—உங்களுக்கேன் இவ்விஷயத்தில் அத்துணை அதிருப்தியும் மனக்கிலேசமும்? சுகம் உண்டாகும்விஷயத்தில் திருப்தியும் அஃது நாடாத சிந்தனையும் தங்களுக்கு இனி எதற்கு? இனிமேல் நான் முல்லாஜீயிடம்வரவேமாட்டேன். அவர் சிகிச்சையும் வேண்டாம். எனக்குச் சுகமும் வேண்டாம்.

சாவித்திரியின் தாய் பேச்சுக்கிடையே குறுக்கிட்டு பாலகிருஷ்ணனை நோக்கி:—"பாலகிருஷ்ணு! உமக்கேன் முல்லாஜீ சிகிச்சை விஷயத்தில் இவ்வாறு மனவேறுபாடு நேரிட்டது? எப்போது குணம் ஏற்பட்டாலும் நம் சாவித்திரிக்கு சுகம் ஏற்பட வேண்டியது தானே முக்கிய நோக்கம். இதில் மீண்டும் உங்களுக்குள் வாதம் என்? இன்னும் சிலதினம்இடையூறுசெய்யாமுல்லாஜீயிடம் சென்று சிகிச்சைப் பெற்று சாவித்திரிக்கு ஆரோக்கியத்தை அளிப்பதே நமது கடன். ஆதலின் நீர் இசைந்திருப்பீராக" என்றுஇயம்பினாள்.

பாலகிருஷ்ணன்:—இவ்விஷயத்தில் எனக் கொன்றும் ஆக்ஷேபணையும் வாதமுமில்லையே. ஆனால் பிரதி இரவு தோறும் சாவித்திரியை அழைத்துக் கொண்டு நம்மை எவரும் கண்டு கொள்ளாவண்ணம் முல்லாஜீயின் சமூகத்துக்கேகித் திரும்புவது தான் மிகத்தொல்லையாகக் காணப்படுகிறது. அன்றிரவு நாம் சென்றுவர எடுத்துக் கொண்ட சிரமம் உமக்குத் தெரியாததன்று. நேற்று நிசித்தான் நாம் காளிக்கோயிலுக்குச் சென்று வருவதாய் நம் வீட்டிலுள்ளோரைஏய்த்துவிட்டுச் சென்றோம். இன்று நாம் எந்தக் காரணத்தை சொல்லிச் செல்வது?

சாவித்திரி:—(குறுக்கிட்டு) நேற்றிரவு சொல்லிச்சென்ற காரணத்தையே திருப்பிக் கூறிச் செல்வது.

பாலகிருஷ்ணன்:—அஃதெப்படி திருப்பிக் கூறுவது.

சாவித்திரி:—நாம் காளிகாதேவியை ஒருமாத காலம் தரிசித்து அர்ச்சனை செய்து வருவதாக நேர்ச்சை புரிந்து கொண்டோம் என்றும், இதற்காக தினமும் தேவியின் சன்னிதானத்

துக்குச் சென்று வரவேண்டுமென்றும் சொல்லி விடுவது வேறென்ன?

பாலகிருஷ்ணன்:—என்ன சொன்னாய்! ஒரு மாதகாலம் வரைக்கும் தினமுமா சென்று வரவேண்டும்.

சாவித்திரி:—அப்படிப் பொருள் கொள்ளற்க. ஒரு மாத காலமென்று தவணையிட்டால் அது வரை அவஸ்யம் போய் தான் தீரவேண்டுமென்ற கட்டாயமில்லை. இதற்கிடையே எனக்குப் பூர்ண சுகம் ஏற்பட்டுவிட்டால் முல்லாஜியிடம் செல்வதை நிறுத்திக் கொள்வோம். அப்படி சுகானுகூலம் சித்திப்பெறுவிடின் அந்த லயிலுக்கும் வரை சென்று தான் வரவேண்டும். இவ்வாறு நாம் நீண்ட நாட்கள் தவணையை முன் கூட்டியே கூறுமற் போய் நான்கு அல்லது ஐந்து நாட்களுக்கு மாத்திரம் அனுமதி பெற்று விடுவோமாயின் பிறகு சுகமேற்படாமல் போய் மீண்டும் சின்னாட்களுக்கு காளி தரிசனம் புரிய வேண்டுமென நம் பந்துக்களிடம்கூறமுன்வருவோமாயின் நம்மீது அவர்கள் சம்சயங் கொள்ளுதல்கூடும். ஆதலின் முன் ஜாக்கிரதையே நலம்.

பாலகிருஷ்ணன்:—சரி, அப்படியே ஆகட்டும். ஆனால் நேற்றே நாம் மூவரும் கோயிலுக்குச் செல்லுவதாய் அபிநயித்து புறப்பட்டபோது எனது தாயும் தங்கையும் சிறுவர்களும் உடன் வருவதாகக்கூறி வற்புறுத்தினர்களே, அவர்கள் இனியும் நாம் போகுந்தோறெல்லாம் நம்மை பின்பற்றி வருவதாக அடப்பிடித்தால் அதற்கு நாம் என்ன சமாதானத்தைக்கூறிச் செல்வது? தினமும் ஏமாற்றுவதென்பது முடிந்த காரியமா? இதற்கென்ன செய்வது?

சாவித்திரி:—என்னத்தை செய்து தொலைப்பது? முன்னர் சாதித்தபடி தான் நாம் தனியாகத்தான் கூட்டமின்றி போதல் வேண்டுமென்று அவர்களை உடன் அழைத்துச்செல்லாவண்ணம் பெரிதும் முயலவேண்டும். இதையும் மீறிஅவர்களும் கூட வருவதற்காக அடம் பிடிப்பார்களானால், அன்று முல்லாஜீயிடம் செல்வதை நிறுத்திக்கொண்டு காளிகா தேவா

லயத்திற்கு மாத்திரம் சென்று தரிசனம் செய்துகொண்டு திரும்பிவந்து விடவேண்டும். இவ்வளவுதான்.

பாலகிருஷ்ணன்:—(சற்று அதிருப்தியோடு)உன்னுடைய இத்தகைய சம்வாதத்தை யெல்லாம் சீர்தூக்கிபார்க்குமிடத்து, முல்லாஜீயிடமே சென்று சிகிச்சைப்பெறவேண்டுமென்றபிடிவாத பிராப்தம் உனக்கும், உனது தாயாருக்கு மாத்திரம்தான் இருக்கிறதாக எனக்கு நன்கு விளக்கமாகிறது.

சாவித்திரி:—(முகத்தைக் கோணி, கடுகடுத்த அபிநயங் காட்டிக் கொண்டு) தங்களுக்கு இதில்சற்றும் விருப்பம்இல்லை போல் தெரிகிறது. அப்படியானல், தங்கட்குத் திருப்திகாமில்லாத விஷயத்தில் எங்களுக்கும் விருப்பம் இல்லையென்று இனி நிர்ணயித்துக்கொள்ளுங்கள். இனி எனக்கு யாருடைய சிகிச்சையும் வேண்டாம். உங்களுக்காகவென்று இனி அந்த முல்லாஜீயுடைய உபகாரப் பேச்சையே எடுப்பதில்லை. இது நிச்சயம்.

பாலகிருஷ்ணன்:—(சற்று திகைத்து) காதலி, என்ன அதற்குள் இப்படி கோபித்துக்கொண்டாயே. உனக்குசிகிச்சை செய்வித்து குணம் உண்டாக்கக் கூடாதென்று நான் கனவிலும் எண்ணவில்லையே. உன்வாழ்க்கை களிக்கொண்டால் தானே என்வாழ்வும் களிபேறுவகைகொள்ளும். எனக்குஇத்தகைய வஞ்சக எண்ணம் இருக்குமாயின் உன்சுகசவுக்கியவிஷயத்துக்காக இத்துணை பிரயாசையை நான் மேற்கொண்டிருப்பேனு? நாம் ஹிந்துக்களா யிருந்தும் ஒரு முஸ்லிமிடம் சென்று உபகாரம் வேண்டிவந்தது உனது வாழ்வு நலத்துக்காகத்தானே. என் ஆரணங்கே! நீ இவ்வாறு பிணங்கிக்கொள்வது என் உள்ளத்தை வாட்டுகிறது. வேண்டாம்! மீண்டும் நீ இவ்வாறு மனவேறுபட்டு விஷயம் வெளிக்குத் தெரிந்துவிடுமாயின் நமது மானங்குலைவதோடு நமகு குலத்தார் நம்மனேரை எள்ளி நகையாடுவார்களென்பதில் ஐயமில்லை.

நமது நங்கை சாவித்திரியும் நாயகன் பாலகிருஷ்ணனும் இத்துணை அன்னியோன்யமாயும், பிணக்கோடும், அபிநயத்தோடும் இதற்கு முன் சல்லாபித்ததே கிடையாது. பண்புமிக்க

பாவையரான நம் சாவித்திரி தனது இச்சிறிய சாகசத்தால் தன் கணவனுடைய உள்ளக்கிடக்கை எம்முறையில் இருக்கிறதென்பதை பிரத்தியக்ஷப் பிரமாணமாய் தெரிந்துகொண்டாள். தன்னுடைய ஒரு சிறு முகக்கோணலாலும், பிணக்காலும் லயித்து தனக்கு சிறிதே வழிப்பட்டுப்போன பாலகிருஷ்ணனுடைய பான்மையைத் தெரிந்துகொண்டு, இதுவே தன் மனப் பிராப்தத்திற்கு சரியான அடிப்படை போடுவதற்குரிய சந்தர்ப்பமென்று அவள் திடங்கொண்டாள். எனவே மீண்டும் சற்று பிணங்கிக்கொண்டவளேபோன்றும், அதிருப்தியும்மனக் கிலேசமுற்றவளேபோன்றும் அபினயித்துக்கொண்டு, தன் காதலனை நோக்கி வெறுப்போடு கூறலானாள்:—

சாவித்திரி:—ஆமாம்! ஆண் பிள்ளைகள் பெண்கள் விஷயத்தில் மேலுக்கு உற்றவரேபோல் நடித்தாலும் உள்ளத்தில் மாத்திரம் பிரேம பூர்வமான விசுவாசத்தைக் கொள்ளமாட்டார்களென்பதும் தெரியாமலா இருக்கிறது. எனது தேக சௌக்கியத்திற்காக பிரயாசை தாங்கள் மேற்கொள்ள சற்றும் சம்மதிக்கிறீர்களில்லை. எனது அனுகூலத்தைத் தேடுங்கால உங்களுடைய ஜாதிக்கும் கௌரவத்துக்கும் மேன்மைக்கும் ஹானியுண்டாவதாகக் கூறுகின்றீர்கள். அப்படியானல் என் சுய நலத்துக்கென்று நீங்கள் அபவாதத்துக்குள்ளாக வேண்டிய அவசியமில்லை. உங்களுக்கு இத்துணை சங்கடத்தைக்கொடுத்து நான் இனி சிகிச்சைப்பெற விரும்பமாட்டேன். எனது தேகாரோக்கிய நிலைமை எப்படி கெட்டுப் பாழடைந்த போதிலும் உங்களுக்கு இனி சிரமத்தைத் தர விரும்பேன். என்பால் உங்களுக்கு இதுகாறும் இருந்த பற்று இப்போது உங்களுக்கு வெறுப்பாகி கசந்து போய்விட்டது போலும்! இது என் தலைவிதி! கடவுள் தான் இனித் துணை!

என்று சாவித்திரி இவ்வாறு பிரலாபிக்கத் தொடங்கினாள். இச்சந்தர்ப்பத்திற் கேற்ப அவள் அழகிய இரு விழிகளைக் கண்ணீர் சூழ்ந்து கலக்கியது. இரண்டொரு துளியும் சிந்தியதைப் பாலகிருஷ்ணன் கண்ணுற்றான். மேலும் சாவித்

திரி முற்றும் பிணங்கிக் கொண்டு சிரத்தை விட்டுப் விலகி இருந்த தன் முக்காட்டை மீண்டும் இழுத்துப் போர்த்தி புடவையில் முன்றானையால் கண்ணைத் துடைத்துக் கொண்டு சடக்கென்றெழுந்து தன் பள்ளி யறைக்குட் சென்று படுத்துக் கொண்டாள்.

சாவித்திரியின் அத்தகைய செயலின் காரணமாய் பால கிருஷ்ணனுடைய மனம் எவ்வண்ணம் நெக் குறுகிப் புண்பட்டிருக்கு மென்பதை, தம் காதலியோடு இத்தகைய சந்தர்ப்பத்தில் வாழ்க்கைப் பெற்றோரே உணர்வர். சின்னாட்களுக்கு முன் சாவித்திரியின் சுகவின்மைக்காகவென் றேற்பட்ட மனவஸ்தையானது மீண்டும் இவன் மனத்துள் புகுந்து கொண்டது. சாவித்திரி குத்தலாக சுட்டிக்கூறிய ஒவ்வொரு வார்த்தையும் இவன் உள்ளத்தை ஊடுருகச் செய்து விட்டது. எனவே அவனால் இதை சகித்துக் கொள்ள முடியவில்லை. தன் காதலியை எப்படியேனும் திருப்தியுறச் செய்ய வேண்டுமென எண்ணி இவனும் உடன் எழுந்து, மாமியார் எதிரில் வீற்றிருப்பதையும் பொருட் படுத்தாது சாவித்திரி நுழைந்த அறைக்குள் இவனும் பிரவேசித்தான்.

ஆங்கு சாவித்திரி மஞ்சத்தின் தலையணையில் தன் சிரசை குப்புற வைத்துக் கொண்டு, சேலையின் முந்தானையால் சந்திர வட்டம் போன்ற வதனத்தை மறைத்துக் கொண்டு பெண்கள் சுபாவப்படி விக்கி அழுதுக் கொண்டிருப்பதை நம் பால கிருஷ்ணன் கண்ணுற்றான். தன் உள்ளங்குழைந்த காதலி இந்நிலைமையி லிருப்பதை கண்ட காதலன் மனம் நெக்குறுகி நின்றான். என் நாம் இவ்வனிதையின் மனதை நோகச் செய்தோம் என்று அவன் உண்மையில் மனம் வெம்பினன். எனவே அவன் மனந்தாளா மாட்டாது, தன் அரிவையினருகே அணுகி அவள் சந்திர வதனத்தை மேகம்போல் மறைத்துக் கொண்டிருந்த துல்லிய முன்தானையை சற்றே விலக்கினன். அச்சயம் அவன் யாது கண்டான்? தன்னினிய துணைவி கண்ணீர் துளிகள் உதிர சற்றுத் தேம்பி யழுவதையே கண்டான். அவ்வணங்குமணியோ மேலும் தன் முகத்தை மூடிக்

58832

27-2-21

கொள்ள முன்றுனேயை இழுத்தாள். அது தன் பார்த்தாவின் கரத்தில் சிக்கி யிருந்தது. எனவே தன்னிருமலர் கரத்தையும் தன் முகத்தின் மீது கவிழ்த்து முகத்தை மறைத்துக் கண்ணை கசக்கிக்கொண்டு, சகிக்கொணு துக்கங்கொண்டவளே போல் தன் காதலனுக்கும் பின்வருமாறு விளம்பினுள்:—

சாவித்திரி:—சும்மா போங்கள்! என்னை தொந்தரவு படுத்தாதீர்கள்! எனக்காகவன்ரோ தாங்கள் இத்துணை சங்கடமடைவதாக கூறுகின்றீர்கள். எனக்கினி சிகிச்சையும் வேண்டாம், வேறெதுவும் வேண்டாம். நீங்கள் பம்பாய்க்குப் போய் விடுங்கள். தாங்கள் போகாவிடினும் உங்களுக்கு விருப்பமில்லாத முல்லாஜீயின் சிகிச்சையை நான் இனி எற்றுக்கொள்ளேன்.

பாலகிருஷ்ணன்:—என்னுள்ளமினிய வனிதா! நான் உன்னை என்ன செய்தேன்? என்ன சொன்னேன்? ஏன் நீஇவ்வாறு மனமொடிந்து வருந்துகின்றுய்? உன்னைவிட யார் எனக்குஇவ்வுலகில் வாழ்க்கைத் துணை? உன் துக்கம் என் துக்கமன்ரோ? நீ இவ்வாறு நிலைகுலைந்திருக்க நான் என் சுகவாழ்வைக் கருதுவதென்பது அடுக்காது: எனவே உன் சுகமே என் சுகம். ஆதலின் உன் சுகவாழ்க்கைக்காக எத்துணைசிரமமேற்கொள்ள வேண்டியிருப்பினும் பின்னடையேனென்பது திண்ணம். அன்பே! எனக்காறுதல் கூறு. மனதை வருத்தாதே.

சாவித்திரி:—(இன்னும் அதிகசாகசமாய்) இஃதெல்லாம் ஆண்பாலருடைய தந்திர வசனுமிர் தங்கள், போலும்! சரி போகட்டும். என் சுகத்துக்காக நம் ஆசார கண்ணியத்தை கெடுக்க துணியேனென்பது சத்தியம். முஸ்லிம் முல்லாஜீயுடைய சிகிச்சை வேண்டாம்.தம்குலாசாரம்கெடவும்வேண்டாம். எனக்கினிஎத்தகையசிகிச்சையும் வேண்டாம். தாங்கள் மனநிம்மதியோடுபம்பாய்சென்று ஆபீஸ்வேலையைபரிபாலியுங்கள்.நீங்களங்குஇல்லாத காரணத்தால் நிர்வாகம் கெட்டுக் குலைந்துபோகும்.

பாலகிருஷ்ணன்:—அன்புக்குரியாய்! ஏன் இங்ஙனம் அவ்வீண் வசனங்களேயே கூறி என் மனதை வாட்டுகின்றுய்? நான் தான் உன்னுடைய சுகவாழ்க்கைக்காகவேண்டி என் உடல், பொருள், ஆவி யாவையும் வேண்டுமாயின் அர்ப்பணம் செய்ய

முன் வருகிறேனென்று கூறி நிற்கிறேனே. குலப்பெருமையும், ஆசாரச் செருக்கும் எனக்கென்ன ஒரு பெரிதோ? இனி சத்தியமாகக் கூறுகின்றேன். உன் வாழ்க்கையை ஆரோக்கியப்படுத்தும் விஷயமாக உலகமுற்றும் என்னை தூஷித்தபோதிலும் சரியே இன்னுமெத்துணை அபகீர்த்தி வந்து வாய்ப்பினும் சரியே. எதற்கும் நான் இனி அஞ்சேன் என்பது உறுதி. காதலி! நீயும் சுகம்பெற்று, நானும் இன்புற்று நம் இருவர் வாழ்க்கை நலம்பெற்றோங்குவதே என் முக்கிய நோக்கம். மேலும் உன்னை இவ்வாறு சுகமின்மையிலும், விசனத்திலும் வைத்து வெறுமனே இருப்பதெனில், இனி என் உள்ளம் சகியா. ஆனல், உனது சுக வாழ்வுக்கு அனுகூலம் தேடும் வழியில் நாம் கூடியமட்டும் மர்மமாகவே இருக்கக்கடவோம். வரம்பை மீறவேண்டுமானதாயின் நாமும்துணிவோம்.

அத்தியாயம்—10.

சாவித்திரி:—ஆம்! ஆம்!! இவைகளும் ஆண்பாலர் பெண்களை ஏய்க்கும் சாகச வசனங்களில் இதுவுமொரு வகையாகும். இதெல்லாம் போலி அன்பே. பெண்கள் மனத்தை வசப்படுத்த ஆடவர்கள் இவ்வாறு ஆசை மொழிகள் சம்பாஷிப்பதும், காரியம் முடிந்தபின் கையை விரித்து ஏய்ப்பதும் அவர்களுடைய சுபாவங்கள். இதெல்லாம் வேண்டாம். என் ஒரு ஆத்மாவின் சுகத்துக்காகவேண்டி தங்களுடையவும் தங்கள்குடும்பத்தார்களுடையவும்ஆசாரமத கண்ணியத்தைபாழ்படுத்திக்கொள்ளும் காரியம் வேண்டவே, வேண்டாம். நம் குலம் கண்ணிய ஹீனப்படுவதற்கு முன் என் ஆத்மாவே இச்சடலத்தை விட்டும் நீங்கிப் பரலோக சாந்தியடைய வேண்டுமென்று நான் பகவானை கோருகின்றேன். உங்கள் மேன்மை குலைவதைவிட என் ஆத்மா குலைவதே எனக்கு மேனமையாய் காணப்படுகின்றது. இதோடு தாங்கள் இனிஇத்தகையவிண்வாதவிஷயங்களை முடிவு செய்து ஒழித்து விடவேண்டுமென்று கடவுள் சான்ருய் தங்களை வற்புறுத்துகின்றேன். மேலும் இப்போது எனக்கு எத்தகைய தோஷமுமில்லை. சுகவீனமுமில்லை. எவ

ருடைய சிகிச்சையும் அவசியமில்லை. எப்படிப்பட்ட வேத மந்திர உச்சாடனமும் வேண்டியதில்லை. தாங்கள் மனச் சமாதான மடைந்து பம்பாய் சென்று தங்கள் உலகவியலை கவனித்தலே போதும். இதற்காக என்னை க்ஷமியுங்கள்.

பாலகிருஷ்ணன்:—அணங்கே! மீண்டும் இவ்வாறெல்லாம் சொல்லம்புகளை எய்து என் உள்ளத்தை சிதைக்காதே. நான் என் மௌட்டீகத்தால் அறிந்துணராது உன்னை கடிந்து கூறியதற்கு இந்த தண்டனையே எனக்கு போதும். மேன்மேலும் என்னை வாட்டாதே, இதை என் தவறென்றே கருதி நீயே முதலில் என்னை மன்னித்து விட்டு நான் உனக்கு விருப்பமில்லாமற் கூறியவைகளை மறந்து விடு. என்பால் மீண்டும் முன் போல் அன்புகூர்ந்து கலந்துறவாடு. இனி நீ யாது கூறிய போதிலும் நான் அதை ஒரு சிறிதும் ஆக்ஷேபிக்காது முழுதும் சம்மதித்து உன் விருப்பத்துக்கிணங்கி நடப்பேனென்பது திண்ணம்.

சாவித்திரி:—என் ஆருயிரனைய பதியே! அங்ஙனம் கூறற்க. நான் தங்களின் அடியாள். குற்றேவல் புரியும் சேடி. சதா தங்கள் நலத்தை கருதி வாழ வேண்டிய வாழ்க்கைத் துணைவி. தங்கள் செயலுக்காக நான் கோபங்கொள்வதென்பதும், உங்களை நான் மன்னித்தருள்வதென்பதும், தெய்வத்துக்கடுக்காத துற்செயல். மனைவியை கண்டிக்கவும், புத்தி புகட்டவும், சீர்திருத்தவும், கணவன்மாருக்குப் பூரண சுதந்திரமுண்டு. தாங்கள் எனக்கொரு எஜமானர், நான் தங்களுக்கொரு ஊழியினி. நான் பெண்பால், தாங்கள் ஆண்பால். நான் அடிமை, தங்கள் கர்த்தா. தாங்கள் காலாலிடும் காரியத்தை நான் சிரசால் புரிய கடமைப் பட்டுள்ளவள். "பெண்டிற்கழகெதிர்ப் பேசாதிருத்தல்" என்ற மூதுரையை இனி யான் கடைப்பிடித்து தங்கள் மனம் வாட்டமுறத் தக்க எத்தகைய வசனத்தையும்மொழியத் துணியேனென்பது திண்ணம். ஆனால் என் வாழ்க்கரனுகூலத்தைக் கருதி இறுதிவரை நடந்து கொள்வீர்களென்றே நம்புகின்றேன்!

மங்கையும் மணாளரும் இதனால் மனமொத்துப் போய் விட்டனரென்று கூறலாம். அத்துடன் சாதுரியம் மிக்க சாவித்திரி வீசிய சாஹச வலைக்குள் அவள் கணவனான பால கிருஷ்ணன் முழுதும் சிக்குண்டு வயப்பட்டான் என்பதும் உறுதி. ஆனால் அவளொரு பெண் வர்க்கபரானதால் பெண் கள் இயற்கை சுபாவப்படி தன் சொந்தக் கணவனை இத்தகைய சாஹச மொழிகளாலும் செயல்களாலும் வசியப்படுத்தி தன் வழிக்கு கொண்டு வந்து விட்டாள். இதில் வெற்றியும் இவளே பெற்றாள். இவள் ஒரு உத்தம காரியத்துக்காகவே இச் சாஹசம் புரிந்ததால் இவளையொரு சத்திய உத்தமி யென்றே கூறவேண்டும். இதனால் அவள் தான் நெடுநாட்களாக உள்ளத்தில் கொண்டுள்ள ஓர் தெய்வீக பிராப்தத்தைச் செவ்வனே முடித்துக் கொள்ளத் தக்க பாதையையும் செப்பனிட்டுக் கொண்டாள்.

மேலும் தனது தந்திரச் செயலும், சாஹச மொழியும் தன் கணவன் பாலகிருஷ்ணன் விஷயத்தில் பூரண பிரயோஜனம் செய்து விட்டதென்பதை மங்கை சாவித்திரி தெள்ளற உணர்ந்து கொள்ளாமலில்லை. இனி தனது கோரிக்கைக்கு பாலகிருஷ்ணன் நிச்சயம் வழிபடுவானென்பதை அவள்நன்கு உணர்ந்தாள். அவனுடன் அன்போடு சம்பாஷித்து தன் கோரிக்கைக்கு ஆதாரணைப் பெறுவதற்கான சமயம் இதுவே என்றும் உணர்ந்து கொண்டாள். தன் கணவன் சிகிச்சை விஷயமாய் வார்த்தையாடுவா னென்பதையே அவள் எதிர் பார்த்தாள். அவ்வாறே அவள் அதிர்ஷ்டப்படி பாலகிருஷ்ணன் சாவித்திரியை நோக்கிக் கூறலானான்.

பாலகிருஷ்ணன்:—அன்புக்கினியாளே! நீ என் மனதை திருப்திப்படுத்தி இன்பந்தந்த சல்லாபத் தன்மைக்காகஉனக்கு நான் செய்ய வேண்டிய பிரதியனுகூலங்கள் பல விருப்பினும் உன் தேக சுகத்துக்குரிய சௌக்கியத்தையேமுதல்செய்யவிரும்புகிறேன். ஆதலின் நீ தயைகூர்ந்து முல்லாஜியிடம் சிகிச்சைப் பெறுவதை ஆக்ஷேபிக்காது ஏற்றுக் கொள்வாயாக. உனக்கு எதுகாறும் திருப்திகரமான பூர்ணசுகம் ஏற்படாதோ

அதுவரைக்கும் நான் இவ்வயோத்தியை விட்டும் வெளி எல்லைக்குஞ்செல்லேன் என்பது திண்ணம். உன் சுக நிலையை என் கண்குளிரக் கண்டு, இல்வாழ்க்கை இன்பத்தை உன்னி னின்றும் எய்துவதே என் பாக்கியமாகும்.

சாவித்திரி:—அன்பரே! அப்படியாயின் தங்கள் விருப்பத்துக்கு தலை தாழ்ந்த இவ்வடியாள் முழுதும் இசைகின்றேன். முல்லாஜீயிடம் சென்று திருவேத மந்திர சிகிச்சை பெறுவதைப்பற்றி இனி எனக்கு எத்தகைய ஆக்ஷேபணையுமில்லை. ஆனால் அந்த முஸ்லிம் ஜாதியாரிடம் சகவாசம் செய்வதால், நம் ஜாதிக்கும் ஆசாரத்துக்கும் ஹீனமுண்டாவதோடு பொது மக்களும் நம்பால் துவேஷங்கொள்வார்க ளென்பதை தங்களுக்கு அறிவிக்க விரும்புகிறேன்.

பாலகிருஷ்ணன்:—என்ஆசைப் பூவாய்! நீ யாதொன்றுக்கும் அஞ்சற்க. இவ்விஷயமாய் எத்தகைய அகௌரவமும் அபவாதமும் வந்து வாய்ப்பினும் அவற்றைப்பற்றி ஒரு எள்ளத்துணையும் எனக்கு இலக்ஷியமில்லை. முல்லாஜீயுடைய திரு மந்திரத்தால் தான் உனக்கு ஆரோக்கியம் ஏற்பட்டதென்பது எனக்குள் ஸ்பஷ்டமாய்விட்டது. எனவே அவரிடத்திலிருந்தே உனக்கு பூரண சுகத்தை கிரஹிக்க வேண்டுமென்று நான் உன்னை வற்புறுத்துகின்றேன். நீ இதை ஆட்சேபிக்க மாட்டாயென்றும் கருதுகிறேன்.

சாவித்திரி:—ஆருயிரனையீர்! அங்ஙனமேயாகுக. தங்கள் கட்டளைக்கு இனி முழுதும் கட்டுப்பட்டு நடப்பேன் என்பது திண்ணம்.

சற்று முன் அபிப்பிராய பேதம் ஏற்பட்டு பிணங்கிக் கொண்ட தம்பதிகள் இவ்வாறு மீண்டும் மனமொத்து இணங்கிப் போய் மனத்துள் ஆனந்த பூர்த்தி யெய்தினர். தம்பதியர், சிறு பிள்ளைகளேபோல் ஒரு நேரத்தில் பிணங்கி மனம் நொந்துருகுவதும், மறு நிமிடத்தில் காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவு பெற்று உயிரும் உடலும்போல் ஆய்விடுவதும் இல்லற வாழ்க்கையிலுள்ள ஓர் இணையில்லா அற்புதமாகும். இவ்வாறே பாலகிருஷ்ணனும் சாவித்திரியும் மனமொத்துப்

போனதால் ஏற்பட்ட அளவைக் கடந்த ஆனந்தத்தாற் றம்மையும் உணராது ஆலிங்கனம் செய்து கொண்டு இரண்டொரு முத்தாமிர்தத்தையும் வழங்கிக் கொண்டனர். இச்சல்லாப லீலையை எவரேனும் கண்டுவிடப் போகின்றனரோ வென பெரிதும் நாணி உடனே தம்மை விடுவித்துக் கொண்டனர்.

மேலும் பாலகிருஷ்ணன் தன் அருங் கற்பின்வதியான சாவித்திரியை அழைத்துக்கொண்டு அவ்வறையை விட்டு தன் மாமியார் சமுகத்தை யணுகினன். சாவித்திரி பசுவை யணுகும் இளங்கன்றேபோல் தன் தாயிடம் நெருங்கிக்கொண்டாள். பாலகிருஷ்ணன் தன் மாமியை நோக்கிக் கூறலுற்றான். மாமி! இன்றிரவுக்கும் மீண்டும் முல்லாஜி பெரியார் திரு சமுகத்துக்கு ஏகவேண்டும். சீக்கிரமே ஆகாராதிகளை முடித்துக் கொண்டு தயாராகிவிடுங்கள். நேற்று சென்றதே போல் தாமதஞ் செய்தல்கூடாது. காரியாதிகள் துரிதமாக ஆகட்டும்.

சா-தாய்:—(விந்தையான முகக்குறியோடு) என்ன! நீங்களிருவரும் மீண்டும் மனமொத்து முல்லாஜியிடம் செல்வதென்று முடிவு செய்துகொண்டு விட்டீர்களா?

சாவித்திரி:—(சற்று வெட்கியவளாய்) இல்லை! நான் அவ்விஷயத்தைப்பற்றி மறுத்துக்கொண்டு தானிருந்தேன். (பாலகிருஷ்ணனை சுட்டிக்காட்டி) அவர்கள்தான் முல்லாஜீயின் சிகிச்சைக்காக வற்புறுத்தினார்கள். ஆண்கள் கோருவதற்கு சம்மதப்படாமல் இருப்பது பெண்களுக்கு அழகாகுமா?

முன்னரே தாயுக்கும் மகளுக்கும் முல்லாஜீ விஷயத்திலும் அவர் சிகிச்சையிலும் அதிக நம்பிக்கையும் உறுதியும் பிடிவாதமும் இருந்தனவென்பது வெளிப்படை. அதைப்போல் பாலகிருஷ்ணன் சற்று முன் இசையாமல் பிணங்கிக் கொண்டு மறுத்தானன்றோ? எனவே சாவித்திரி வெகு தந்திரமாய் சாகசம் புரிந்து தன் பெண்வர்க்க சாதுரியத்திற்கேற்ப புருஷன் மனத்தை தன்வயப்படுத்தி இசையவும் செய்துகொண்டாள். இதை ஒருவாறு யூகித் தறிந்துகொண்ட சாவித்திரியின் தாய் முழுமனச் சமாதானமும் திருப்தியும் கொண்டாள்.

அதன் பின் சாவித்திரியும் அவள் அருமை அன்னையும் சமையற் கட்டிடத்துள் சென்று ஆகாரம் ஆயத்தப்படுத்தும் காரியத்தில் மிகத் துரிதமாய் ஈடுபட்டனர். மற்றொரு பக்கல் பாலகிருஷ்ணன், தனது தாயும் தங்கையும் சம்பாஷித்த இடத்துக்குச் சென்று அவர்கள் வார்த்தைக்கிடையே குறுக்கிட்டு மேற்படி சம்பந்தமான விஷயத்தையும் தங்கள் சம்பாஷணையில் நுழைத்துக் கூறலானான்.

"கேட்டீர்களா சங்கதியை. நம் சாவித்திரியை நாம் ஒரு மாதகால மட்டும் அனுதினமும் காளிகாதேவி திருக்கோயிலுக்கு அனுப்பிவைக்க வேண்டுமாம். தினமும்போய் தரிசித்து வருவதாகவேஅவள் விஷயமாய் பிரதிக்ஞைப் புரியப்பட்டதாம். நாமும் அப்படியே அவள் இஷ்டப்படி விட்டுவிட வேண்டியது தானே."

என்று பாலகிருஷ்ணன் கூறக்கேட்ட அவள் தாயும் தங்கையும் அதிகமாக ஒன்றும் அதை இலக்ஷியம் செய்து கொள்ளாமலும், அதன்பால் தமக்குள்ள அதிருப்தியை வெளியாக்காமலும் இருந்து கொண்டனர். அவ்வாறே பிரதிக்கினைப் புரிந்திருப்பார்களென்று பாலகிருஷ்ணனுடைய வாக்கியத்தினின்றும் இவர்களுக்கு நம்பிக்கை யுண்டானது. அதன்பின் இவர்களெல்லோரும் தம் தம் காரியாதிகளை கவனிக்கலாயினர்.

நேரமும் கழிந்துகொண்டே இருந்தது. முல்லாஜீயவர்கள் சமுகத்துக்குச் செல்ல வேண்டிய காலமும் நெருங்கிக் கொண்டே வந்தது. எனவே சாவித்திரியும் அவள் தாயும் பாலகிருஷ்ணனும் ஆகாராதிகளை முடித்துக்கொண்டு சர்வஆயத்தோடும் புறப்பட சித்தமாயினர். நேற்றைப் போலவே குழந்தை கிருஷ்ணனும் சிறுமி ஜோதிரீயும்கூட வருவதாய்முறையிட்டனர். ஆயினும் அவர்களை சமாதானப்படுத்தி விட்டு,மற்றைய மூவரும் துர்க்கை ஆலய தரிசனைக்குக்கேகுவதாய் பாவனைபுரிந்து விட்டு, முஸ்லிம்களின் பரிசுத்த பள்ளிவாயலை நோக்கிச் சென்றனர்.

அன்றிரவு அத்துணை அந்தகாரம் சூழ்ந்த நிசிமயமாய் இல்லாவிடினும் வீட்டிலுள்ளோர்க்குக் காட்டிக் கொள்வதன்

நிமித்தம் தம்முடன் கொண்டு வந்திருந்த கை (லாந்தர்) விளக்கை, பாலகிருஷ்ணன் தாங்கள் மஸ்ஜிதை வந்தணுகியவுடன் அணைத்து விட்டனன். பள்ளியின்வாயற் படியை கிட்டினர்.

ஹஜ்ரத் முல்லாஜீ பெரியார் தம் அறைக்கு வெளியே உட்கார்ந்திருந்தார். இம்மூவரையும் கண்டு உள்ளே அழைத்து தம் அறைக்குள் இடந்தந்து உபசரித்தார். இம்மூவரும் தங்கள் கைகளை கூப்பி நமஸ்கரித்து "ஸலாம்" செய்தனர். முல்லாஜீ பதில் வந்தனைப் புரிந்து வெகுநேரம் வரை சாவித்திரியின் தேகசுகாசுக நிலைமையைப்பற்றி விசாரித்தறிந்தார்.

பிறகு பாலகிருஷ்ணன் முல்லாஜீ பெரியாரை நோக்கி, 'மகானே! தங்களுடைய வேத மந்திர (அமல்) சிகிச்சையை செய்ய ஆரம்பியுங்கள். நேற்றையபோல் அதிக தாமதம் ஆய்விடுதல் கூடாது' என்று கூறினன்.

அவ்வண்ணமே அம்முஸ்லிம் பெரியார், ஏக தெய்வ ஆண்டவனாகிய அல்லாஹ்வின் பரிசுத்த திருமறையாகிய குர் ஆன் ஷரீபை மிக பயபக்தியோடு எடுத்து வைத்து ஓத ஆரம்பித்தார். நேற்றும் இவ்வாறே ஓதியபோது இஃதென்ன கிரந்தம். இதில் என்ன போதிக்கப்பட்டிருக்கிறதென்பதை தெரிந்து கொள்ளவேண்டுமென்று மனம் துடித்துக் கொண்டிருந்த பாலகிருஷ்ணன் முல்லாஜியை நோக்கி வினவினன்.

பாலகிருஷ்ணன்:—அய்யா! இஃதென்னவென்பதை முதலில் எனக்கறிவித்து வைக்க கோருகின்றேன்.

முல்லாஜி:—சோதர! அப்படியே ஆகட்டும். இஃது ஆண்டவனுடைய திருவசன வேதமாகும். இதன் பெயர் குர் ஆன் ஷரீப். இது எமது இஸ்லாம் மார்க்கத்தில் மஹாபரிசுத்தமான உண்மை திருமறையாயும், கண்ணிய—தெய்வீக சின்னமாயும் கருதப்படுகிறது.

பாலகிருஷ்ணன்:—ஓ அப்படியா! ஆனல் அந்த வேதத்துக்குள் என்னென்ன எழுதப்பட்டும் போதிக்கப்பட்டும் இருக்கின்றன.

முல்லாஜி:—நீவிர் கிளப்பியது ஒரு மகத்தான வினா. இதற்கு திருப்திகரமாய் பூர்த்தியான விடையளித்து விளக்குவ

தெனில் வெகு நேரஞ்செல்லும். சுருங்கச் சொல்லி விளங்க வைக்குமிடத்து இலௌகிக வாழ்க்கைக்கும் வைதீக பாரமார்த்திகத்துக்கும் மிக மிக அத்தியாவசியமான அரும்பெரும் நீதிகளெல்லாம் இதில் போதிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை தனித்தனியே பிரித்து வகுத்துக் கூற வேண்டுமாயின் பிரத்தியேகமான அவகாசம் வேண்டும். தற்போது வசதியில்லை. நாளை மறுதினமாகட்டும்.

பாலகிருஷ்ணன்:—என்ன கூறினீர்கள்! இந்த உங்கள் வேதத்தில் எங்கள் தர்ம வேதங்களில் போதிக்கப்படடிருப்பதைப் போன்ற இகபர நன்னீதிகளெல்லாமா போதிக்கப்பட்டிருக்கின்றன?

முல்லாஜீ:—அன்பரே! வியப்படைய வேண்டாம். உங்கள் வேதத்துக்கும் எங்கள் குர்ஆனுக்கும், ஒரு சிறு துளிக்கும். மாபெரும் கடலுக்குமுள்ள தாராதம்மிய மிருக்கிறது. அது எங்கே? இது எங்கே? உங்கள் வேதங்களை நம்மை போன்ற மனுஷ்யர்கள் சிருஷ்டித்துள்ளார்கள். எனவே அவற்றில் மானுஷ்ய சுபாவத்துக்கேற்ற வீண் விஷயங்களெல்லாம் மலிந்து கிடக்கின்றன வென்பது உலகறிந்த உண்மை. எங்கள் பரிசுத்த குர்ஆன் அங்ஙனமன்று. இதன் ஒவ்வோர் பதமும் சர்வேஸ்வரனுகிய அல்லாஹ்வின் திருவசனமாகும். ஞானேதய மூலமாய் (வஹியின் வாயிலாய்) எங்கள் மதத்தின் ஜகத் குருவான நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்) அவர்கள் திருச் சமுகத்துச்கு மன்பனைதகளின் விசிராந்திக்கென அனுப்பி வைக்கப்பட்ட திருமறையே குர்ஆன் ஆகும். சர்வ ஜகத்தையும் சிருஷ்டித்த சிருஷ்டி கர்த்தனே இதற்கு ஆக்கியோனுக இருப்பதால் இத்திருமறை சர்வ மானுஷ்ய கோடிகளுக்கும் அருளப்பட்ட விசுவ திருவேதமாகும். எனவே குர்ஆன் ஆண்டவன் சிருஷ்டியும், வேதம் மானிட சிருஷ்டியுமாகும்.

பாலகிருஷ்ணன்:—ஓ! அப்படியல்ல.நான்நம்பமாட்டேன். எங்கள் வேதமும் ஈஸ்வரனுகிய ஆண்டவனுல் தான் அனுப்பப்பட்டதாகும். இது உண்மை.

முல்லாஜீ:—ஆத்திரப் படாதீர்! அங்ஙனமே பாவித்துக் கொள்க. ஆனால் உங்களுடைய வேதம் கடவுளால் அனுப்பி வைக்கப்பட்டதா யிருந்தால் அதன் போதனை களெல்லாம் மிகப் பரிசுத்தமாயும் மன்பதைக்களுக்கு வழி காட்டியாயும் சத்தியத்தையே விளக்கக் கூடியனவாயும் இருக்க வேண்டு மென்றோ? அங்ஙனம் கிஞ்சித்தும் இல்லாது 'உங்கள் அவ் வேத மனுநீதி போதனையால் இத்தாரணியில் உண்டான ஜாதிப் பிணக்குகள் துவேஷ மனப்பான்மைகள் கட்சி பிரிவினைகள் போன்றவை வேறெந்த வேதத்தாலும் உண்டாகவில்லை யென்பது உலகமுணர்ந்த உண்மை.

பாலகிருஷ்ணன்:—ஐயா! தங்கள் உள்ளக் கிடக்கை யாது? எங்கள் வேதமெல்லாம் பரமாத்மாவால் சிருஷ்டிக்கப் பட்டதல்ல வென்றும், உங்கள் குர்ஆன் தான் கடவுளால் அனுப்பப்பட்ட தென்றும் வாதிப்பதே தங்கள் நோக்கமானால் தக்க ஆதாரங்களுடன் உண்மையைத் திரிக்காமல் எடுத்து விளக்குங்கள் பார்ப்போம்?

முல்லாஜி:—அன்பரே! கேளுங்கள். உங்கள் வேதப் புராணங்களை இயற்றியவர்கள் நம்போன்ற மானுஷ்ய வர்க்கத்தைச்சேர்ந்த ரிஷிகள், சாதுக்கள், துறவிகள், உலகம் தெரியாதவர்கள் தான் என்பதை எல்லா ஹிந்து மதவாதிகளும் ஏற்பர். இதற்கு உங்கள் வேதங்களிலேயே பல சான்றுகள் உண்டு. எனவே, உங்கள் இதிகாசம் புராணங்கள் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டவை யல்லவென்றும், ஞானோதயத்தால் வெளியானவையல்லவென்றும், தெய்வீகம் பெற்றவையல்ல வென்றும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கா நிற்கின்றன. மேலும் எங்கள் குர்ஆன் ஷரீப் கடவுளுடைய திருவசனங்கள் என்பதற்கும், மனிதரால் சிருஷ்டிக்கப்பட்டதல்ல வென்பதற்கும் பல ஆதாரங்கள் உண்டு. இவ்வேத வசனங்கள், சிறுகச்சிறுக இஸ்லாம் மதம் உதயமானதுமுதல், ஆண்டகையின் திருத்தூதராகிய முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் திருச்சமுகத்துக்கு உலகமக்களின் விசிராந்திக்கென சிறுகச் சிறுக வெளியாக்கப்பட்டதென்பதை உலகத்தோரனைவரும் இக்காலை

ஏற்றுள்ளனர். பதின்மூன்றரை நூற்றாண்டுகளுக்கு முன் அந்த இஸ்லாமிய வேதம் எந்த விதத்தில், எந்த தோரணையில் வெளியாக்கப்பட்டதோ அதே வண்ணம் ஒரு சிறு அக்ஷரமும் உச்சரிப்பும் மாற்றப்படா வண்ணம் உள்ளாளுள்ளபடி இருந்து வருவதே குர்ஆன் ஷரீப் சத்திய வேதமென்பதற்குப் போதிய சான்றாய் விளங்குகின்றது. இப்பரந்த உலகின் வடதுருவத்திலுள்ள ஒரு குர்ஆனையும் தென்துருவத்திலுள்ள மற்றொரு குர்ஆனையும் எடுத்து ஆராய்வோமாயின் ஆதியில் வெளியான வண்ணமே கிஞ்சிற்றும் மாறுதலடையாதிருக்குமென்பது திண்ணம். குர்ஆனின் சிறப்பிற்கு இதனினும் மேலான ஆதாரம் வேறு யாது வேண்டும்?

பாலகிருஷ்ணன்:—முல்லாஜீ! எங்கள் வேதமும் அப்படித்தான் கடவுளால் அருளப் பெற்றது. ஞானேயத்தால் உண்டானது. ஒரே தன்மை வாய்ந்தது. உலகாரம்பகாலந்தொடுத்து நீடூழிகாலம் இருக்கக்கூடியது. இதுவரைக்குளவரும் அதன் அமைப்பில் எத்தகைய மாறுதலையும் செய்யவில்லை. எங்கள் வேத உண்மைக்கு இச்சான்று போதாதா?

முல்லாஜீ:—நண்பரே! நான் உண்மையை கூறத் துணிவதற்காக வருந்த வேண்டாம். நீர் இதுகாறும் பேசி வந்த வசனங்களால் நீர் ஒரு பாமரர் என்பதும் உமக்கு உங்கள் வேத சம்பந்தமான உண்மைகளை சற்றும் தெரியாதென்பதும் நன்கு விளக்கமாகின்றது. நீர் வீணுக்கேனும் சாதித்து வாதிக்கின்றீர். உங்கள் வேதப்பூர்விகத்தைப்பற்றியும் அதன் மேன்மையைபற்றியும் இதுவரை நீவிர் கூறியதெல்லாம் உமது அபிப்பிராயமென்றே விளங்கிவருகிறது. உங்கள் மத தத்துவங்களை நீர் நன்குணர்ந்து ஆராயாது நுனிப்புல் நம்பிக்கை கொண்டிருப்பதாலேயே நீர் ஹிந்து மத வைதிக பக்தராய் நிற்கின்றீர்.

பாலகிருஷ்ணன்:—என்னை தாங்கள் அப்படி நினைத்து விடல் கூடாது. நான் எங்கள் வேதங்களை நல்லபடியாக படித்து ஆராய்ந்துள்ளேன். அதின் மந்திர தாத்பரியங்களைதெரிந்துள்ளேன். அப்படியிருந்தும் (தாங்கள் கூறுவதே போல்)

எங்கள் வேதம் கடவுளால் ஆக்கப்பட்டதல்ல வென்றாவது, அது பண்டைக் காலந்தொட்டு இருந்து வரவில்லை என்றாவது புலப்பட வில்லையே. எனவே தாங்கள் கூறுவது எனக்கு வியப்பைத் தருகிறது.

முலால்ஜீ:—சரி! அப்படியா? யான் உங்கள் வேத மந்திரத்தின் ஸ்லோகங்களைக் கொண்டே நான் கூறிவந்ததை மிக உண்மை யென்று ஸ்திரப்படுத்தினால், அதை தாங்கள் ஏற்றுக் கொள்வதோடு, என் வாதத்துக்கு இசைகின்றீரா?

பாலகிருஷ்ணன்.—ஓ! அப்படியே யாகட்டும். பெரியாரே! தாங்கள் மாத்திரம் எங்கள் வேத ஆதாரங்களை கொண்டே ருஜுப்படுத்தி விடுவீராயின் உங்கள் சொல்லுக்கு முழுதும் கட்டுப்பட்டு அடிமையாகி விடுகின்றேன்.

முல்லாஜீ:—அப்படியானால் உங்கள் பற்பல வேதங்களில் எந்த வேதத்திலிருந்து மேற்கோள்களை எடுத்துக் காட்டட்டும். கூறுங்கள்.

பாலகிருஷ்ணன்:—ஐயா! எந்த வேதத்திலிருந்தாயினும் சரியே, யெடுத்து விளக்குங்கள் பார்ப்போம்.

சகல கலைகளிலும் மிகத் தேர்ந்த நமது முல்லாஜீ ஹஜரத்அவர்கள் ஹிந்துமதத்தின்நான்குவேதங்களாகிய யஜுர்வேதத்தின் பதினேழாவதுஅத்தியாயம் நாற்பத்தைந்தாவதுசுலோகத்தையும்,ருக்வேதத்தின்ஆறாவதுமண்டலம்எழுபைத்தைந்தாவதுஸௌகிதம் பதினாறாவதுமந்திரத்தையும், சாமவேதத்தின் ஒன்பதாவது உத்தரார்ச்சிதப் பிரபாடகம் இருபத்திரண்டாவது அத்தியாயம், ஐந்தாவது வாக்கியத்தையும் அவ்வேத பாஷையிலேயே எடுத்தோதி, இச்சுலோகங்களுக்குப் பொருளென்ன வென்று பாலகிருஷ்ணனை வினவினர்.

அவற்றிற்றிற்கு பாலகிருஷ்ணன் நேரான பொருளை கூறத்தெரியாது தவறான கருத்தை மாத்திரம் பின் வருமாறு ஒருங்கே கூறினான்:—

"ஏ வில்வித்தையில் பராக்கிரமமுள்ள வேதவதியே! அதாவது வித்தையில் விற்பன்னர்களுடைய புகழையும்! சன்மார்க்கத்தையும் பெற்றுள்ள சேனாதிபதியின் மனைவியே நீ

எங்கள் விண்ணப்பத்துக்கிணங்கி வெகு தூரம் சென்று விரோதிகளைச் சிறைப்படுத்துவாயாக. இன்னும் அவர்களை வதைத்து வெற்றிப் பெறுவாயாக. மேலும் அந்த தூரதேயங்களில் மலிந்து கிடக்கும் விரோதிகளையெல்லாம் அடித்துக் கொல்லும் எவரையும் சும்மா விடாதே."

முல்லாஜீ:—(சாவித்திரியின் தாயை நோக்கி) அம்மையே! தாங்களும் வேத வசனப் பொருளை நன்குணர்வீர். மேலும் பாலகிருஷ்ணர் கூறிய கருத்து மொழிகளையும் செவியுற்றிருக்கிறீர். ஆகவே இவற்றை யெல்லாம் சீர்தூக்கி ஆராய்ந்து இவ்வேத மந்திரங்களிலிருந்து என்ன தாத்பரியம் விளக்கமாகிறதென்பதை வெளியிடுவீர்களாக.

சா-தாய்:—இஃதென்னமோ ஓர் புராதனசரித்திர சம்பந்தமான யுத்தச் சம்பவத்தைகுறிக்கக்கூடியதாய்காணப்படுகிறது. யாரோ ஒரு அரசன் யுத்த காலத்தில் தமதொரு தளகர்த்தனுடைய மனைவியிடம் முறையிட்டு சண்டையிற் சென்று விரோதிகளை வதைத்து வெற்றி பெற்று வருமாறு கூறிய அர்த்தமென்று நன்றாய் விளக்குகிறது. மேலும் அந்த வேத மந்திரத்துக்கு மற்றோர் விதமாகவும் பொருள்கொள்ள இடமுண்டாயிருக்கிறது. அதன் விவரம் கூறுகிறேன். கேளுங்கள்.

"அம்பெய்வதில் மகா பராக்கிரமம் வாய்ந்தவரே! சேனை வீரனுடைய கண்ணியத்தை பெற்றவரே! நீர் எம்மை விட்டும் தூரமேகி பகைஞர்கள் மீது பாய்ந்து விடுவீராக. மேலும் விரோதிகளுடைய முன்னிலையை போய் அடைந்து விடுவீராக. சித்திப் பெறுவீராக. அதாவது பகைவர்கள்மீது படையெடுத்துச் செல்வீராக. கண்களுக்குத் தென்படும் பகைவர்களுக்கிடையே எவரையும் உயிரோடு விடாமல் துகைப்பீராக."

சாவித்திரி:—(குறுக்கிட்டு) அந்த ஸ்வலோகத்துக்கு மற்றொரு விதமாகப் பொருள்கொள்ளவும் இடமிருக்கிறது. இவ்வாறுதான் அதன் கருத்துமிருக்கலாம். அப்பொருளைக் கூறுகிறேன், கேளுங்கள்:—

"வில் வித்தையில் தேர்ந்துள்ள பிரம்மாவிடமிருந்து வீரத்தைப்புரிந்து கொண்டும், பிறரை கொல்வதற்காக வென்று

கூரான அம்புகளை எய்து கொண்டும், கர்ஜனை புரிந்து கொண்டும், பகைவருடைய படையில் போய் விழுவாயாக. விரோதிகளையெல்லாம் பிடித்துக் கொல்வாயாக. அவர்கள் உடல் ஹிருதயம் முதலிய யாவற்றையும் குத்திச் சிதைப்பாயாக. அந்த விரோதிகளில் எவனையும் உயிரோடு விட்டு விடாதே. அதாவது ஒருவனுமே தப்பிப் பிழைத்துக் கொள்ளலாகாது.

பாலகிருஷ்ணன்:—(அதிக வெறுப்புற்று)இவர்கள்கூறிய தாத்பரியங்களெல்லாம் சரியானவை யன்று. நான் விளக்கியவையே உண்மையானதாகும்.

சாவித்திரியின் தாய்:—(எதிர்த்து) அப்படியல்ல. நான் கூறிய அர்த்தமே மிகச் சரியானதென்று மனசாட்சி கூறுகிறது. இது உண்மை.

சாவித்திரி:—(குறுக்கிட்டு) ஆளுக்காள் இவ்வாறு சாதித்தால் எது உண்மை யென்று ஏற்படுவது? இவற்றின் முடிவை முல்லாஜீ பெரியார் அவர்களே கூறுவார்களாக. ஆனால் இறுதியில் நான் கூறிய தாத்பரியமே மிகச் சரியானதென்று நான் நிச்சயமாய் கூறுவேன்.

முல்லாஜீ:—(சமாதானம் படுத்தும் முறையில்) சரி! அந்த தர்க்க வாதத்தை விட்டுத் தொலையுங்கள். இது உங்கள் தவறன்று. உங்கள் வேதப் பாஷையாகிய சமஸ்கிருதத்திடைய யோக்கியமாகும். அதன்ஒருபதத்துக்குப்பலரும்பலவிதம்அபிப்பிராயங்கொள்ள சிக்கலானதா யிருக்குமானால், அப்பாஷையின் ஊழல் தன்மையைப்பற்றி நான் விளக்க வேண்டியது அனுவசியம். மேல் நோக்காய்ப்பதப்பொருளைக்கொண்டு நாம் சம்வாதம் புரிய வேண்டுவதில்லை. அந்த கிரந்த சுலோகத்தின் உட்கருத்தை நோக்குவோம். எனவே அதில் வில் வித்தையில் தேர்ச்சிப் பெற்ற ஆசானிடமிருந்து புகழையும் ஞானத்தையும் பெற்று அவர்கள் வீரத்தைப்போல் யுத்தம் செய்யுமாறு போதிக்கப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. இதனால் வேதம் வெளியாவதற்கு முன்னால் யாரோ ஒரு வர்க்கத்தார் வில் வித்தையில் சிறந்திருந்ததாய் புலனாகின்றது. அங்ஙனமாயின் உலகமும், அதில் வதியும் மக்களும், வில் வீரர்க

ளும், இத்தரணியில் ஏற்பட்டதன் பின்னரே உங்கள் வேதமும் ஏற்பட்டதாக உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகிறது. இதனால், வேதம் பூர்வீகமானதென்றும் உலக உற்பத்திக்கு முன் உண்டானதென்றும் நீங்கள் கூறும் வாதமெல்லாம் அடிப் பட்டுப் போகின்றன. சரி! இந்த சுலோகத்தைப்பற்றிய ஆராய்ச்சியையும் விட்டு விடுவோம்.

இன்னமும் தைத்திரிய (யஜுர்)வேதத்தின் 34-வது அத்தியாயம் 49-வது மந்திரத்திலும், ருக் வேதத்தின் 10-வது மண்டலம் 130-வது சோகிதம் 13-வது மந்திரத்திலும் கூறப் பட்டுள்ளதன் தாத்பரியமாவன:—

ஏ! மனுஷ்யர்களே! கோச்சுவன் (ரதசாரதி) எவ்வாறு பரியின் கடிவாளத்தைப் பிடித்துக் கொள்ளுகின்றனோ அவ் வண்ணம், உங்களுக்கு முன்னிருந்த இச்சகத்தினோர்களுடைய வழியை பின்பற்றி சரியான மார்க்கத்தில் ஒழுகுவீர்களாக. மேலும் நீங்கள் அவ்வாறே அனுஷ்டித்து அம்மகாத்மாக்களு டைய மார்க்கத்தை தேடுவீர்களாக.

அன்பர்களே! இவ்வாக்கியத்திலுள்ளகருத்தினையும் சற்று சிந்தித்துப்பாருங்கள். உங்கள் இவ்வேதங்கள் உற்பத்திச் செய்யப்படுவதற்குமுன் இச்சகத்தில் பல வர்க்கத்தாரும் மகாத்மாக்கள் எனப்படுவோரும் இருந்திருப்பதாய் விளக்க மாகின்றது. எனவே எந்த வேதங்களை நீங்கள் பூர்வீகமான தென்றும். ஆதிமறை யென்றும் சாதிக்கின்றீர்களோ அவ்வேத மொழியை கொண்டே அஃது அநித்தியமானதென்றும், உலக ஜன சிருஷ்டிக்குப் பிறகே உருவகிக்கப்பட்டதென்றும் குன்றி லிட்ட தீபம்போல் நன்கு துலங்குகின்றது. உங்கள் வேதத் திலேயேவுள்ள இக்குறைகளை நீங்கள்ஏற்காமலிருக்கமுடியாது.

பாலகிருஷ்ணன்:—ஆம்! பெரியோரே! தாங்கள் அறை யும் வண்ணம் எங்கள் ஸமஸ்கிருதப் பாஷையின் ஒவ்வோர் பதத்துச்கும் பல்வேறு விதமான பொருள் கொள்ள இடமா கிறதென்பது உண்மையே. இதனால், அந்த வேதம் சிறந்த தல்லவென்று கூறலாமோ? இப்படி இருப்பது நல்லது தானே அந்த வேத மந்திரத்தை கொண்டு ஒரு சாரார் தர்மமான

முறையில் பொருள் கொள்வதைவிட்டு அதர்மமான விதத்தில் தாத்பரியம் கொண்டால் அதற்கு நாம் என்ன செய்ய முடியும்? இப்படிப்பட்ட சிக்கலான தாத்பரியமுடைய சுலோகத்தை தான் தாங்களும் மேற்கோளாய் எடுத்துக் கொண்டு வாதிக்கின்றீர் போலும்! எப்படியேனும் எங்கள் வேதம் மகாப் புராதனமானது. உலக உற்பத்திக்கு அநேக யுகத்துக்கு முன்னரே அது சிருஷ்டிக்கப்பட்டது. அது கடவுளால் செய்யப்பட்ட வேதம் என்றே நான் சாதிப்பேன். தாங்கள் என்ன ஆக்ஷேபித்தாலும் நான் நம்ப மாட்டேன்.

முல்லாஜீ:—சகோதரா! "கொடிய வாதத்துக்கு மருந்திருந்தாலும், பிடிவாதத்துக்கு மருந்தேயில்லை" என்பார்கள். அவ்வாறே உங்கள் வேதமே சிலாக்கியமானதென நீர் விதண்டா வாதம் செய்தால் அதை நான் எவ்வாறு தணிக்க முடியும்? உமது சமூகக்கொள்கையும் சம்பிரதாயமும் எவ்வாறேனும் இருந்து போகட்டும். அது தற்போது அவசியமில்லை. நாம் புரியும் சமய ஆராய்ச்சியில் எது சத்தியம், எது அசத்தியம் என்பதை கிரகிப்பதே முறையாகும். எனவே உங்கள் வேத மந்திரச் சான்றிலிருந்தே "உலகத்தின் உற்பத்திக்கு முன் உங்கள் வேதம் இருந்தில்லையென்பதும், அதற்குப் பின்னரே மனுஷ்யர்களால் சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறதென்பதும் அது கடவுளால் ஞானோதய மூலமாய் சிருஷ்டிக்கப்பட்டதல்லவென்பதும்" ஸ்பஷ்டமாய் விளங்குவதை நீர் ஏற்றுக் கொள்ளாமல் இருக்க முடியாது.

பாலகிருஷ்ணரே! இன்னொரு மந்திரத்தை எடுத்துக் காட்டுகிறேன். கேட்பீராக:—ருக் வேதத்தில் முதலாவது மண்டலம், 109-வது ஸோகிதம் இரண்டாவது மந்திரத்தில் கூறி யிருப்பதாவது:—

"உங்கள் இருவரைப்பற்றி, அதிகமாய் படைக்கக்கூடிய கலகக்கார மருகனிடமிருந்து கேள்வியுற்றேன். நல்ல யோக்கிய மருகனிட மிருந்தன்று-மைத்துனனிட மிருந்தும் கேள்வியுற்றுள்ளேன். இப்போது நான் சோமம் (ஒருவித யாகம்)

அருளுவதோடு உங்களிருவர்க்கும் புதுவிதமான மந்திரத்தை யும் சொல்லித் தருகிறேன்"

அன்பரே! இச்சுலோகத்தின் தாத்பரியம் சிக்கலாயிருப்ப தும், இதனால் மானுஷ்யர்களுக்கு ஒருவித பிரயோஜன மும் உண்டாகாதென்பதும் ஒருபுற மிருக்கட்டும். மேலும், ருக் வேதத்தின் மேற்படி மந்திரத்தினால் உங்களுடைய இரண் டுவாதம் மறுக்கப்படுகின்றன. ஒன்று வேதம் ஆதிசிருஷ்டி யென்பது, ஏனெனின் இவ்வேதம் உண்டாவதற்கு முன் இவ் வுலகில் மருகர்களும் மைத்துனர்களும் இவர்கள்போன்ற மனி தர்களும் இருந்திருப்பதாக இதனால் விளக்கமாகின்றது. இரண்டாவது இவ்வேதம் பரமாத்மாவால் சிருஷ்டிக்கப்பட்ட தென்பது. ஏனெனில் இந்த ருக்வேத மந்திரம் கடவுளால் அருளப்பட்டதாயிருப்பின் அதில் "கேள்வியுற்றேன்" என்ற பதம் நுழைக்கப்பட்டிராது. கடவுளுக்கு ஒருவரிடமிருந்து கேள்வியுறவேண்டிய அவசியமில்லை. பரமாத்மா சர்வமும் உணர்ந்த விற்பன்னராயிருத்தல் வேண்டும். மேலும் இவ் வேத மந்திரத்தில் மற்றோர் விஷயமும் விளக்கமாகிறது. அதாவது தற்போதுள்ள வேதம் பூர்த்திப் பெறாத அரை குறையான தென்பதேயாகும். ஏனெனின், உங்கள் வேதத்தில் மன்பதைகளுக்கு வேண்டிய அநீதங்களனைத்தும் போதிக்கப்பட்டிருக்குமாயின் "உங்களிருவருக்கும் புது வித மான மந்திரத்தை சொல்லித் தருகிறேன்" என்ற வாக்கியம் உபயோகப்பட்டிராது.

பாலகிருஷ்ணரே! இன்னமும் உண்மையை நல்லவித மாய் உய்த்துணர்ந்து பாருங்கள். உங்கள் வேதத்தில் காணப் படும் சிக்கல்களையும், குறைகளையும், அபரிமிதங்களையும் சீர் தூக்கிப் பார்க்குமிடத்து, "எங்கள் வேதத்தில் எத்தகைய பேதகமுமில்லை" யென்று நீவிர் கூறும் விதண்டாவாதம் மிகத் தவறான தென்றே நன்கு விளக்கமாகின்றது. எனவே நான் இவ்வாறு உண்மைகளை எடுத்து விளக்கியமைக்காக என்பால் க்ஷாத்திரங் கொள்ளாது, எது சத்தியமென்பதை ஆராய்ந்துத் தெளிந்து நன்மார்க்கத்தை கடைபிடித் தொழுகுவீர்களாக.

இவர்களுக்கிடையே கிளம்பிக் கொண்ட இத்தர்க்கவாத மானது ஓர் இடத்தில் முடிவடைவதை காணோம். இரவின் நேரமோ அதிகம் கழிந்து சென்றே செல்கின்றது. நடுநிசி யும் நெருங்கும்போல் காண்கிறது. சாவித்திரியும், அவள் தாயும் கூட ஒருவாறு அதிருப்தியடைய ஆரம்பித்தனர். அவ் விரு பெண்மணிகளும் முல்லாஜீயை நோக்கி, "பெரியோரே! நேரம் வீணாய் போகின்றது. விவாதத்தை இன்றுஇத்துடன் முடித்துக் கொள்ளுங்கள்" என்று கோரினர்.

பாலகிருஷ்ணனும் இதைஆதரித்து, "ஆம் பெரியோரே! இன்று இத்துடன் நிறுத்தி வைத்துக்கொள்வோம். எனக்கு வேதத்தை பற்றி அத்துணை அதிக ஞானம் இல்லையாயினும், நாளைக்கு சம்வாதத்துக்கு வேண்டிய மேற்கோள்களையெல்லாம் ஆயத்தப்படுத்திக் கொண்டு வருவேன். தாங்கள் இன்று விடு த்த வினாக்களுக்கெல்லாம் நாளைக்கு தகுந்த மறுப்பளிக்க காத்திருக்கின்றேன்."

முல்லாஜீ:—அன்பர்களே! அப்படி யாகட்டும். நான் உங் கள் மத வேத விஷயமாய் இத்துணை தூரம் வாதித்தது குரோ தத்தை மேற்கொண்டன்று. உமக்கு உண்மை தத்துவத்தை விளக்கவும், எனக்கு தெரியாததை உங்களிடத்தினின்றும் தெரிந்து கொள்ளவுமேயாகும். நான் இப்போது ஏதேனும் அதர்மமாய் கூறியிருந்தால் அதை க்ஷமித்தருள்வீராக. மனி தனால் தவறு உண்டாவது சகஜமேயாகும்.

பாலகிருஷ்ணன்:—முஸ்லிம் மகானே! தங்கள் மீது இத் தமியேன் க்ஷாத்திரங்கொள்ள என்ன முகாந்தா மிருக்கிறது? உள்ள உண்மைகளையும் அரும்பெரும் தத்துவங்களையுமேதாங் கள் எமக்கெடுத்துப் புகட்டினீர்கள். இதற்காக யாம் தங்களு க்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இவ்வாறு இவர்களுடைய தார்க்கவாதத்தில் நேரம் அதி கம் கழிந்து போகவே, இன்று முல்லாஜீ ஹஜரத்தவர்கள் பரிசுத்த குர்ஆன் வேதப்பாராயணம் செய்து சாவித்திரிக்குப் பரிகாரம் செய்யும் பாக்கியம் தவறிப் போயிற்று. இதற் காக நம் நங்கை சாவித்திரி தான் உள்ளுக்குள் மனமுரு

கினாள். பின்னர் பாலகிருஷ்ணன், சாவித்திரி இவளின் தாய் ஆகிய மூவரும் அம்முஸ்லிம் பெரியாரிடம்விடைபெற்றுக்கொண்டு தங்கள் இல்லத்தை நோக்கித் திரும்பி வந்து சேர்ந்தனர். நடுநிசி நெருங்கி வந்து விட்டமையால் இம் மூவரையும் நித்திரை வாட்டவாரம்பித்தது. எனவே தம்இல்லம் புகுந்ததும் தம் தம் பள்ளியறைக்குட் சென்று படுக்கையில் படுத்து நித்திரா தேவியின் வசம் சிக்கிவிட்டனர்.

அத்தியாயம்—11.

மறுதினம் மெய்யொளிச் சந்தியின் தருணம் பொழுது புலரவாரம்பித்தது. அழகிய பக்ஷி இனங்களெல்லாம் விழித்தெழுந்து தம்மினிய சாரீரக் குரலோசையால் கத்தி குவலயத்தோரை எழுப்பி குதூகலத்துள்ளாக்கின. இக்கோலாகலத்தினிடையே இளங் கதிரவனும் தன் ஜோதிக்கிரண த்தைவீசிக் கொண்டு கிழக்கு திசையினின்றும் மேல் நோக்கி வரத்தொடங்கினான். இப்பாஸ்கரனின் வருகையால் பொழுது நன்கு புலர்ந்தது. நம் பெண்ணுண்மணியான அழகிய நல்லாள் சாவித்திரியும் படுக்கை விட்டெழுந்து கண்ணை கசக்கிக் கொண்டு சர்வ சமயத்தாருக்கும் ஓரே கடவுளெனப்படும் பரலோக எம்பெருமானை வாழ்த்தி நின்று பக்தி பூர்வமாய் அதிகாலையில் தொழுதெழுந்தாள்.

நேற்றிரவு முல்லாஜீ சமுகத்தில் குர்ஆனைப்பற்றியும் வேதப் புராணங்களைப்பற்றியும் நிகழ்வுற்ற தர்க்கவாத மனைத்தும் அவள் மனக்கண்முன் காட்சிதர தோன்றின. முல்லாஜி கூறிய ஒவ்வோர் உண்மை மொழிகளும் அரிவையின் உள்ளத்தை ஊடுருவிப்பாய்ந்து சத்தியத்தின் பக்கம் இழுக்கலாயின. வேதங்களைப்பற்றி முல்லாஜீ பெரியார் வழுத்திய தர்க்கமும் ஆக்ஷேபனையும் உண்மையாயிருக்க வேண்டுமென்றே சாவித்திரியின் மனத்துள் ஆழப் பதிந்தன. இஃதல்லாது அப்பாவைநல்லாள் இதற்குமுன் பிரத்தியோகத்தில் தான் தங்கள் தர்மவேதங்களை எடுத்துவைத்துப் பாராயணம் செய்யுங்காலத்திலெல்லாம் வேதத்தின் உண்மைகளைப்பற்றி பலமுறை பல

த்த சமுசயங்கள் இவளுக்கு எற்பட்டிருக்கின்றன. மேலும் இவர்கள் வேதக் கிரந்தத்தில் சிலவிடங்களில் ஆந்தை கோட்டான் கருடன்போன்ற பக்ஷிவின்ங்களை வளர்த்துப் பூஜிக்க வேண்டுமென்று போதிக்கப்பட்டிருப்பதையும், வேறு இடங்களில், மனைவிமார்களுக்குத் தங்கள் கணவன் மார்களுடைய சுக்கிலத்தினின்றும் பிரஜா உற்பத்தி உண்டாகவில்லையானல் அத்தகையப் பெண்கள் தாராளமாய் அன்னியப் புருஷர்களுடன்கூடி சல்லாபித்து மக்களைப் பெற்றுக்கொள்ளலாமென்று ஸ்திரீ வர்க்கத்தாருக்கு போதிக்கப்பட்டிருப்பதையும், மற்றும் பகுதிகளில், கணவன்மார்கள்எவ்வாறு தங்கள் குழந்தைகளிடம் விசுவாசவாஞ்சை கொள்ளுகின்றனரோ, அவ்வாறே மனையாட்டிகளும்தங்கள் புருடர் மார்களிடம் பணிவிடைப் புரியக்கடவர் என்று போதிக்கப்பட் டிருப்பதையும், மற்றும் சில இடங்களில் வாயால் சொல்வதற்கே மகா அசூசிகரமும் ஆபாசமுமிக்க ஒழுக்க ஹீனமான பிரார்த்தனு முறைகளும் கற்பிக்கப் பட்டிருப்பனவற்றையும், இந்நங்கை நல்லாள் கண்ணுற்றறிந்திருந்தாள். எனவே பரம ஈஸ்வரனுல் அருளப்பட்டவேதாகமம் எனப்படும் இக்கிரந்தங்களில் இத்தகைய அற்பத்தனமான நீதிகள் போதிக்கப்பட்டிருப்பது தருமமாமோ? இவ்வேதம் எவ்வாறு சத்தியமாகுமோ? என்று அவள் மனத்துள் சந்தேகமுண்டானது. இவ்வேதம் ஒருபோதும் உண்மையாகாதென்றும் அவளுக்குள் உண்மை புலப்படுவதுண்டு.

இவைகளைவிட அதர்வணத்திலுள்ள ஒரு சிறிதும்ஒழுக்கமும் தர்மமுமேற்கொண்டில்லா ஆபாச ஸ்லோகங்களானது சாவித்திரியின் உள்ளத்தை அதிகம் அம்மறையின்பால் வெறுப்புக் கொள்ளச் செய்தது. மானுஷ்ய தவநெறிக்கு முரணுய் கற்பனை செய்யப்பட்டுள்ள அனர்த்தங்கள் சாவித்திரியின் ஞாபகத்துக்கு வருந்தோறெல்லாம், ஹிந்து மதமானது அஸ்திவாரமில்லா பொக்கணைச்(உள்ளொன்று மில்லாச்) சுவற்றின் மீதிருத்தப்பட்ட மேற்பூச்சானதேபோல் காணப்பட்டது! எனவே சாவித்திரியின் உள்ளக் கமலத்துள் பலவகைக் குழப்ப

ஸம்ஸயங்களெல்லாம் ஒன்றன் பின்னொன்றாய்க் கிளம்பி வாதித்துக் கொண்டிருந்தன.

நிற்க நேற்றிரவு நிகழ்வுற்ற ஆராய்ச்சி வாதமானது நம் இளைஞன் பாலகிருஷ்ணனுடைய உள்ளத்தையும், பேரினம் அம்மையாரான சாவித்திரியின் தாயுடைய சித்தத்தையும் ஊடுருவிக் கொண்டிருந்தது. மேலும் நல்ல ஞானம் வாய்ந்த முல்லாஜியவர்கள் விடுத்த சரியான வினைக்களுக்கு ஒழுங்கான பதிலளிக்க முடியாது போன பாலகிருஷ்ணனுக்கு தன் அவிவிவேகததனத்தால் முல்லாஜியின்பால் ஒரு விதமான வெறுப்பும் துவேஷமும் உண்டாய் விட்டது. ஆனால் சாவித்திரியின் மாதாவோ அங்ஙனம் குரோதங் கொள்ளத் துணியவில்லை. அதற்கு பதிலாய் முல்லாஜீ பகன்ற ஒவ்வொரு விஷயத்தின் மீதும் தமது தீக்ஷண்ய ஞானத்தை செலுத்தி உண்மை எது என்பதை ஆலோசிக்க ஆரம்பித்தார். அத்துடன் 'தம்பாலுள்ள ஊழலைப்போன்றே பிறரிடமுமிருக்குமெனக் கருதும்" ஒரு சிலர் சுபாவத்தைப்போல் இவ்வம்மையாரும், தங்கள் ஹிந்து மத வேதப் புராணங்களிலிருந்து முல்லாஜி எடுத்துக் காட்டிய ஊழல்களே போன்று, முஸ்லிம்களின் திருமறையாகிய குர்ஆனிலிருந்தும் குறைகளை எடுத்துக்காட்டமுடியுமென மனப்பால் குடித்தார். ஆனால் குர்ஆனின் பாஷை தமக்குத் தெரியவில்லை யென்று மாத்திரம் வருந்தினர். குர்ஆன் மொழி மாத்திரம் தெரிந்திருந்தால் நேற்றிரவே முல்லாஜியின் முன்னிலையிலேயே குர்ஆனின் ஊழல்களை எடுத்துக் காட்டி இருக்கலாம் என்னும் எண்ணத்தை நெடுக ஓட்டினர்.

மேலும் இம் மூவரும் தனித் தனியே தம் தம் சயனஸ்தலங்களில் விழித்திருந்தார்களாயினும், தங்கள் தங்கள் மனக் கிலேசத்துள் மிக ஆழ்ந்துகிடந்தனர். இதனால் பொழுது நன்கு புலர்ந்து பாஸ்கரன் தன் ஒளிகளை உலகத்தோர் பால்வீசி பரந்து நின்ற பின்னர் தான் இன்னோர் படுக்கையினின்று எழுந்து வெளியே வந்தனர். எனினும் இம் மூவருள் எவரும் பேச்சை ஆரம்பிக்கவில்லை. இதை யுணர்ந்து துணி

ந்த சாவித்திரியின் தாயார் பாலகிருஷ்ணனை நோக்கி மெது வாக சம்பாஷணையை கிளரலாயினர்.

சா-தாய்:—பாலரே! இன்று நாமெல்லோரையும் நித்திரா தேவி அதிகம் பாதித்து விட்டனள் போலும்! எம்மிருவரை காட்டிலும் உம்மிடத்திலே தான் அதிக சோம்பற் காணப்படு கிறது. பேசவும் இயலவில்லையோ?

பாலகிருஷ்ணன்:—மாமி! அங்ஙனமொன்றும் விசேஷ நித்திரையில்லை. நேற்றிரவு துயிலுறச்செல்ல வெகு நேரமாய் விட்டதல்லவா? அதனால் தான் இன்றுஅதிகம்தூங்கிவிட்டேன் இன்னும் தூக்கச் சோம்மல் ஒழியவில்லை.

சா-தாய்:—(சிரித்துதமாஷாய்) அப்படியானால், இன்னுஞ் சற்று நேரம் நித்திரைப் புரியுமே! இவ்வளவு அவசரமாய் அரை தூக்கத்தோடு எழவேண்டுமென்றென்ன அவசரம்? ஒரே அடியாய் தூங்கி பகல் போஜனகாலத்துக்கு விழித்தெ ழுந்தால் போகிறது.

அருகிலிருந்த சாவித்திரிக்கும் புன்சிரிப்புத் தவழ்ந்து தூக்கச் சோம்பலெல்லாம் போயிற்று. பாலகிருஷ்ணனும் தன் மாமியின் ஹாஸ்யத்தால் குலுங்க நகைத்து சோம்பலை போக்கிக் கொண்டான். மேலும் கூறலுற்றான்.

பாலகிருஷ்ணன்:—அன்னாய்! உங்கள் அகசிய சொற்க ளானது என்நித்திரா தேவியின் சக்தியையும் வெற்றிகொண்டு விட்டனவே. சரி போகட்டும். வேறேதேனும் விசேஷ செய்தியுண்டோ?

சா-தாய்:—அப்படியொன்றுங்காணோம். ஆனால் நேற் றிரவு அந்த முஸ்லிம் பௌராணிகரான முல்லாஜீ வாதித்த சம்வாதந்தான் மகா வியப்புக்குரியதாய் காணப்படுகிறது.பார்த் தீர்களா? அவரொரு முஸ்லிமாயிருந்தும் தம் ஹிந்து மத இதிகாசங்களைப்பற்றி எத்துணை விரிந்த ஞானம் படைத்தவரா யிருக்கின்றார்? அவர் ஒரு ஆலிமாயும் சர்வ மதமும் 'உணர்ந்த' மேதாவியாயுமிருப்பாரென்று நினைக்கிறேன்.

பாலகிருஷ்ணன்:—அவர் மே(ல்)தாவியாவது கீ(ழ்) தாவியாவது? என்னமோ கண்டதை கேட்டதை யெல்லா

அளந்து கொட்டினர். அவருக்கு நம் வேதங்களைப்பற்றி என்ன தெரியும்? மேலும் நமக்கு குர்ஆனுடைய பாஷை தெரியாதென்பதை அவர் உணர்ந்து தான் குர்ஆன் வாக்கியங்களை எடுத்துக்காட்டி நம்மை மிரட்டினர்.

சா-தாய்:—அன்பரே! வீணாக ஒருவர் மேல் க்ஷாத்திரங் கொள்வது தருமமாகாது. அவர் எடுத்துக்காட்டிய தத்துவாராய்ச்சியை நோக்குமிடத்து அவர் மேதாவியென்றே கூறலாம். மேலும் அவர் தங்கள் மத வேதத்தைப்பற்றி நேற்றிரவு அதிகமாய் ஒன்றையும் பிரஸ்தாபித்துக்கொள்ளவில்லையே. நம்வேதங்களைப்பற்றி தானே உண்மைகளை எடுத்து வாதித்தார்? மேலும் தாங்கள் ஹிந்து மதத்தில் பிறந்த வேதியருள் ஒருவராயிருந்தும் ஒரு அன்னிய மதஸ்தாநம் வேதத்தைப்பற்றி எடுத்துக்காட்டி வாதத்திற்கு தகுந்த பதில் அளிக்காமல் மழுப்பி வந்துவிட்டது பெரிதும் வருந்தத்தக்கதே யாகும்.

பாலகிருஷ்ணன்:—அவர் தம் குர்ஆன் வேதத்தை மேன்மைபடுத்திக்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன் தான் நம் வேதத்தைபற்றி குதற்கித்தார். அவர் கூறியதற்கெல்லாம் நாம் தலைசாய்த்து வந்துவிட்டதற்கு குர்ஆன் பாஷையை நாம் கற்றுக்கொள்ளாதிருந்துதானே காரணமாகும். நாம் அரபியைக் கற்றிருந்தால், அந்த முல்லாஜீ நம் இதிகாசப் புராணங்களிலிருந்து எடுத்துக்காட்டிய குறைகளைப்போன்ற ஆயிரக்கணக்கானவற்றை நாம் எடுத்துக் காட்டியிருக்கலாம்.

சாவித்திரி:—(குறுக்கிட்டு) வாய்வேதாந்தம் பேசுவதாலும், வெறுங்கை முழம்போடுவதாலும் பயனென்றுமில்லை. போகட்டும். பதியே! தாங்கள் நேற்றிரவு முல்லாஜீயிடம், "நாளைக்கு வேதம், குர்ஆன் இவற்றின் சரியான ஆதாரங்களைக் கொண்டுவந்து பதிலளிப்பதாய்" உறுதியிட்டுக் கூறி வந்தீர்களே, அங்ஙனம் இன்று ஆயத்தமாக்க வேண்டுமே, யாது செய்யப்போகின்றீர்கள்?

சா-தாய்:-(குறுக்கிட்டு)மகளேநீயும்அவ்விஷயத்தைபற்றி ஞாபகப்படுத்தியது நன்மைதான். (பாலகிருஷ்ணனை நோக்கி) அன்பரே! அப்படியானல், இன்று நீர் வெளிச்சென்றுவேறெம்

மேதாவிகளையேனும் அணுகி குர்ஆன் சம்பந்தமான தர்க்கவாதங்களைக்கேட்டுத் தெரிந்து வருவீராக. இங்ஙனம் உணர்ந்து வந்தால் தான் இன்றிரவுக்கு முல்லாஜீயிடம் நீர் சமமாக வாதித்தல் இயலும்.

பாலகிருஷ்ணன்:—ஆமாம். நீங்களிருசாராரும் கூறியது வாஸ்தவம் தான். எனினும் இவ்விஷயத்தில் உங்களுக்கு முன்னரே நான் ஜாக்கிரதையாகவே இருக்கிறேன். இதைப்பற்றி இராத்திரியே முடிவு செய்து கொண்டு விட்டேன். இதோ இப்போது ஸ்நானபானமெல்லாம் முடிந்தவுடன் அடுத்த ஊருக்குச் சென்று எனக்குத் தெரிந்துள்ள சில வேதிய வித்வான்களிடமும், புராணங்கற்ற பண்டிதர்களிடமும், காவியமுணர்ந்த சாஸ்திரிகளிடமும் குர்ஆன் வேதத்தைப்பற்றி வாதம் செய்ய வேண்டியதற்கான அம்ஸங்களை யெல்லாம் கேட்டுணர்வதோடு, நம் வேதங்களை மெய்யென்று ஸ்திரப்படுத்துவதற்குரிய தத்துவங்களையும் கேட்டு வரப்போகின்றேன்."

இது நிற்க, முதன் முதலாக குர்ஆன் ஷரீபின் இனிய பாராயண ஓசையானது சாவித்திரியின் செவியில் நுழைந்து உள்ளத்தைக் கவர்ந்து அவளையொருபுதுவித வாழ்க்கைக்குட்படுத்திய அற்புத நிகழ்காலந் தொட்டே நம்சாவித்திரிப் புனிதவதிக்கு "குர்ஆன் ஒரு சத்திய வேதம், அரும்பெரும் தத்துவ ஞானங்களால் பொலிந்ததெ"ன்பது நன்குஸ்திரமாய் விட்டது. அதனால்தான் தினமும்நன்குபாராயனஞ்செய்துஆராய்ந்துவரும் ஹிந்து தர்ம வேதங்களில் பல இடங்களில் காணப்படுவதைப் போன்றும், முல்லாஜீ எடுத்துக் காட்டியதைப் போன்றும், ஆக்ஷேபணைக்கிடமானதும், ஊழல்கள் மலிந்ததுமான வாக்கியங்கள் குர்ஆன் பல காணப்படாமலிராதென்று அவள் ஒருவாறு சந்தேகங் கொண்டிருந்தாள். இது உண்மையா தவறு என்று தெரிந்துணர வேண்டுமென்ற எண்ணமும் பல நாட்களாக இவள் மனத்துள் இருந்து வந்தது. அதனால் தான் இதற்கேற்ற சமயத்தைக் கை விடலாகாதெனக் கருதி தன் கணவன் பாலகிருஷ்ணனை குர்ஆனைப்பற்றிய தர்க்க வாதங்களைத் தெரிந்து வருமாறு தூண்டினாள். ஹிந்துக்கள் குர்

ஆனைப்பற்றி எடுத்து காட்டும் விவாதங்கட்கு முஸ்லிம்கள் எத்தகைய சமாதானங் கூறுவர் என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவல் அம்மங்கைக்கு இருந்து வந்தது. இக் கோரிக்கை சித்திப் பெற்று இன்றிரவு நிகழப்போகும் சம்வா தத்தில் வேதங்களைப் பற்றியும் குர்ஆனைப் பற்றியும் நல்ல ஞானம் உண்டாகுமென்று அவள் ஆறுதல் பெற்றிருந் தாள்.

பின்னர் இம்மூவர்களும் தம்தம் காலைக் கடன்களைப் பூர்த்திப்படுத்துவதில் பிரவேசித்தனர். எனவே பாலகிருஷ் ணன் ஸ்நானம் செய்து முடித்துச் கொண்டு தெய்வத்தை பஜித்து, ஆகாரம் புசித்து பிதகு தத்துவ வாதங்களைத் தெரிந்து வரவேண்டி வெளியேகிச் சென்றான். பாலகிருஷ் ணன் பண்டிதர்களையும் சாஸ்திரிகளையும் தேடிச் சென்றபின், சாவித்திரியும் அவள் அன்னையும் இது சம்பந்தமான சம்பா ஷணையில் ஈடுபடலாயினர்.

சாவித்திரி:—அம்மா, இராத்திரி முல்லாஜீயவர்கள் நம் புத்திக்கும் யுக்திக்கும் எற்றவாறு கூறியதனைத்தும் சத்திய மானதாகவே புலப்படுகின்றன. நம் மதவேத போதனைகளைப் பற்றிய உண்மைகளை ஓர்ந்து பார்க்குமிடத்து அதன் கற்பனு போதங்கள் பிரஜைகளுக்கு நிரானுகூலமானதாகவே புலப்படு கின்றன. அச்சுலோகக் கட்டளைபின்படி ஒழுகுவோர் இகபர சாதனத்தில் எத்தகைய வாழ்க்கை நலனையும் பெறமாட்டா ரென்பதும் தெள்ளற விளங்குகின்றது. தாயே! நான் என் மனதில்பட்ட உண்மையை அப்படியே எடுத்துக் கூறியுள் ளேன். தம் தம் மனசாக்ஷிபிற் பட்டதை வெளியிட எவருக் கும் உரிமையுண்டல்லவா?

சா-தாய்:—கண்ணே! நாம் ஹிந்து தர்மத்தைச் சார்ந்த வர்களாயிருந்தும், நம் வாயினின்று இத்தகைய வேத தூஷ ணப்பதங்கள் பிரவர்த்தியாவது பெருத்த அவிவேகமேயாகும். நம் தர்மவேதங்களை நாமே இழிவாய் கூறிக்கொள்வது பாதக மாகும். நம் புராண இதிஹாஸங்களை மேன்மைப்படுத்தி கண் ணியமென பாராட்டுவது நம் கடமையுமாகும். இவ்விஷயத்

தில் நம் மனக்கொள்கைகளை நம் மூதாதைகள் சம்பிரதாயப்படி வைத்துக்கொள்வதே சாலச்சிறந்ததாகும்.

சாவித்திரி:—அன்னையே! தாங்கள் கூறுவது சரிதான். ஆனால், நம் பண்டைக்கால தாதாக்கள் கொள்கையின்படியே நாமும் முழு மௌட்டியத்தனமாய் ஆழ்ந்துழல வேண்டுமென்பதற்கு நான்ஒருப்படேன். நம்மைப்படைத்த பரமாத்மாநமக்கு அரிய பகுத்தறிவைகொடுத்திருப்பதுஎதற்கு?சத்தியமின்னது? அசத்தியமின்னதென்றும்,தர்மா தர்மம்இவையிவை யென்றும் பகுத்துணர்ந்து நம்மன சாக்ஷியின்படி உண்மையான அறநெறியைகடைப்பிடித்தொழுகவேண்டுமென்பதற்கே யாகும்.தெய்வத்தின்இயற்கை நியதி இங்ஙனமிருக்க, மதவிஷயத்தில் நம்பகுத்தறிவை செலுத்தக்கூடாது.புராதனப் பௌராணிகர்கூறிப்போந்த மௌட்டீகக்கொள்கைகளிலேயே கிடந்துழல வேண்டுமென்ற வீண் கட்டுப்பாடு எதற்கு? வைதீக விஷயத்தில் அறிவை செலுத்தினால் மதம் போய்விடுமாம். இத்தகைய உறுதியற்றதும் மிரட்டக்கூடியதுமான மதத்தால் நமக்கென்ன பயன் விளைதல் கூடும்? எங்கெங்கு தர்மம் மிளிர்கிறதோ அதை மாத்திரம் நாம் கடைப்பிடித்துக்கொண்டு ஏனைய பௌராணிக காசாகூளங்களை எல்லாம் குப்பைத் தொட்டிக்குரியதாக்குவதே வேண்டற்பாலதாகும்.

சா-தாய்:—மகனே! உனக்கு உலகஅனுபவம்சற்றுமுண்டாகவில்லை. இதில், இளங்கன்றுபயமறியாது, என்பதற்கொப்ப அதனப் பிரசங்கித்தனமாய் வாதாடுகின்றாய். மேலும் நீ முல்லாஜியுடைய உபதேசங்களை கேட்டுவந்தது தொடுத்து நீ இப்படித்தான் நம் மூதாதைகளுடைய ஹிந்து தர்மத்தின்பால் வெறுப்புக்கொண்டு இழிவென அதை கருதிவருகின்றாய். ஹிந்து மத வேதங்களில் ஊழல்கள் இருக்கின்றன வென்று ஒரு பிற சமயத்தார் கூறினால் அதை நாம் உண்மை யென்று ஏற்றுக்கொள்வது தகுமா? இதிருக்கட்டும். முஸ்லிம்களுடைய வேதத்திலும் மதத்திலும் ஊழல்களே இல்லையென்று கருதிகொண்டாயோ? இது சரியன்று. இருமத வேதகொள்கை கோட்பாடு யாவற்றையும் சீர்தூக்கி பார்த்து ஆராய்ந்த பின்ன

ரே ஒரு முடிவுக்கு வருவது தகுதியாகும். இதற்குள் நீஆத்திரப்பட்டு தவறாய் முடிவுக்கு வருவதுவிரும்பத்தகாததாகும்.

சாவித்திரி:—அம்மா! தாங்கள் கூறும் சமாதானத்துக்கு நான் ஒருவாறு கட்டுப்படுகின்றேன். நமது ஹிந்து மதத்தைவிட முஸ்லிம்களுடைய இஸ்லாம் மதமே மேலென ஆராய்ந்து ஓர்ந்து பார்ப்பதற்கு முன் நான் நன்னம்பிக்கை கொண்டுவிட்டதாய் தாங்கள் கருதுவது வீணாகும். எதன்பாலும் நாம் பாரபக்ஷங்கொள்ளாது பொதுவாய் நோக்குமிடத்து ஹிந்துமத வேதங்கட்கும் சத்திய தர்மம் என்பதற்கும் வெகு தூரம் வேற்றுமை யிருப்பதாகப் புலனாகின்றது. பகுத்தறிவும் நல்ல ஞானமுமுள்ள எவரும் நம் வேதாகம போதகங்கள் பரமசாத்திய மானவையென கூறத் துணியார்க ளென்றே நான் கூறுவேன். ஏனெனில் தாங்களும் நம் வேத இதிஹாசப் புராணங்களை கற்றுணர்ந்திருக்கின்றீர்கள். யான் தங்களுக்கு ஒரு விஷயத்தைஅறிவிக்கவிரும்புகின்றேன். அதாவது, மானுஷ்ய கோடிகளின் சன்மார்க்கத்துக்கென்றும், அவர்கள்சத்தியம்அசத்தியம்இன்னவைஎன்பதைதெரிந்துகொள்வதற்கும்சர்வ பாபங்களினின்றும் விலகிபரிசுத்தவாழ்க்கைக கொள்ளுவதற்குமென நம் ஹிந்துமத இதிகாசங்கள் பரமேஸ்வரனால் அருளப் பெற்றனவாயிருப்பின் அவற்றில் மாந்தர்களின் விசிராந்திக்கும் தன் மாண்புக்கும் அவசியமான நீதி போதங்கள் மாத்திரம் தாமே எண்பிக்கப் பட்டிருத்தல் வேண்டும்? அங்ஙனமின்றி அனாவசியமான விஷயங்க ளெல்லாம் ஒரு கிரந்தத்தில் புகுத்தப்பட்டிருப்பின் அதை சத்தியமானதென்றும் பகவானால் சமர்ப்பிக்கப்பட்டதென்றும் எவ்வாறு கூறுதல் சாலும்?

மேலும் உதாரணமாக, அதர்வண வேதம் 3-வது காண்டம் 136-வது விருத்தம் 6-வது மந்திரத்தைப் படித்து அதன் பொருளை நன்கு சிந்தனைக்குட்படுத்திப் பாருங்கள். இவ்வேத விருத்தங்கள் பரமாத்மாவின் திருகரத்தால் எழுதப் பெற்ற பரிசுத்தமானவை என்று எவரேனும் கூறத் துணிவார்களா?

அத்துடன் அந்த அதர்வணவேதம் 6வது-காண்டம்101-வது விருத்தம் மூன்ருவது மந்திரத்தையும் சற்று பகுத்தறிவுக்குட்படுத்திப் பாருங்கள். அத்தகைய நிஷ்பிரயோஜனமானதும் இழிவானதுமான விஷயங்கள் சன்மார்க்கத்தின் வேதமெனப்படுவதிலிருப்பது தகுமாமா? இதைப்பற்றி நாம் என் நம்பிக்கை கொண்டுழல வேண்டுமென்றுதான் எனக்குப் புலப்படவில்லே. அம்மையே! நம் மூதாதைகள் கடைப்பிடித்துக்கிடந்தார்களென்றும், வேதியர்கள் கூறுகிருர்களென்றும், தாத்தாக்கள் இதோபதேசம் புரிந்தார்களென்றும் பகுத்தறிவுக் கொவ்வாத வேதங்களையும் மதங்களையும் நாம்வன் வீணுக வேனும் கடைப்பிடித் தொழுகல் வேண்டுமோ? தெரியவில்லே. தாதாக்கள் இட்டதெல்லாம் சட்டமோ? பௌராணிகர் படித்ததெல்லாம் வேதமோ? வேதியர் அமைத்த தெல்லாம் மதமோ? என்னமோ இவற்றை யெல்லாம் ஒப்புக் கொள்ள வேண்டுமென்ருல் யார் ஒருப்படுவார்கள்?

உதாரணமாய், வானத்தில் கருமேகம் படர்ந்துகொண்டும் இடியோசை முழங்கிக்கொண்டும், மின்னற் கொடிகள் ஜ்வலித்துக்கொண்டும், பெருமழை ஓயாது பொழிந்துக் கொண்டுமிருக்கும் சமயத்தில்-நாம் இவற்றை ஸ்பஷ்டப் பிரமாணமாய் உணர்ந்துள்ள சமயத்தில்-பௌராணிகப் புரோகிதர்களும் பண்டைக்கால தாதாக்களும் வந்து வானத்தில் மேகமுமில்லே இடியுமில்லே மின்னனுமில்லே மழையுமில்லே, சூரியன்நன்ருய்ப் பிரகாசிக்கின்ருன் என்று கூறினல் பகுத்தறிவுக்குத்தகாதஇவ் விதண்டாவாதத்தை யார் ஒத்துக்கொள்ளுவார்கள்? இப்படியே தான் ஹிந்து மத வேத மௌட்டியங்களைப்பற்றி நம் பௌராணிகப் புரோகிதர்கள் கூறும் வாதமும் இருந்து வருகிறது. வேத இதிகாசங்களில் அசத்திய போதனைகள் மலிந்து கிடக்க அவைகளே சத்தியமானதென்று ஒரு சாரார் மழுப்பத்துணிந்தால்எந்த பகுத்தறிவாளரும் எற்றுக்கொள்ளமாட்டார்களென்பது திண்ணம். பொதுவாய் ஆலோசிக்குமிடத்து உண்மையான தெய்வத்தால்அன்வயிக்கப்பட்டதர்மமதமென்பது உலகமாந்தர்களுக்கு இகபரவாழ்க்கையில் பரிபக்குவத்தையும் பர

லோக வாழ்வில் சாம்ராஜ்யப் பதவியையும் தெய்வத் திரு வருட் சகாயத்தையும் அளிக்கக் கூடியதேயாகும். இவ்வரிய சாதனத்தைக்கொண்டில்லாதது ஒருபோதும் உண்மை மதமாகாது. இம்முறையே ஹிந்து மதத்தைச் சாரும்.

பகுத்தறிவிற் சிறந்த நம் உத்தமியாம் சாவித்திரியின் இவ்விளக்க உரைகளைச் செவியுறவே, வைதீக பக்தி கொண்டவரான சாவித்திரியின் தாயாருக்குப் பெருத்த அதிருப்தி ஏற்பட்டது. ஆத்திரமும் பொங்கிற்று. சாவித்திரியையும் வெறுக்கப்பார்த்தார். சாவித்திரியின் ஆணித்தரமான வார்த்தையை மறுக்கவும் அப்பெரிய அம்மைக்கு ஆற்றல் இருக்கவில்லை. எனவே சாவித்திரி "முழுதும் ஹிந்து மதத்தை திரஸ்கரித்து விட்டாள்" என்ற விபரீத எண்ணம் இவ் வம்மையின் இருதயத்துள் புகுந்துக் குடையலானது. மேலும் முல்லாஜீயுடைய சிகிச்சா சகவாசத்தால் தான் இந்த விதமான மன நிகழ்ச்சி ஏற்பட்டதென்று கருதிக் கொண்டாள். ஆனால் இவ் வம்மையாருக்கு ஹிந்து மதத்தில் அவ நம்பிக்கை யில்லாமற் போயினும் இஸ்லாம் மத அருங்கோட்பாடுகளின்மீது மாத்திரம் நல்லெண்ணம் இருந்து தான் வந்தது. ஆனால் அதைத் தன் மகளின் முன் வெளியாக்கிக் கொள்ளத் துணியவில்லை. மேலும் தன் மகளை தர்க்க வாதத்திற்கழைத்து ஹிந்து தர்ம பக்தியை அவள் மனதில் புகட்ட வேண்டுமென்ற வீண் பிரயத்தனத்தோடு மீண்டும் குதர்க்கிக்கலானாள்:—

சா-தாய்:—சரி! நீ இங்ஙனம் கொள்கையை மாற்றிக்கொண்டு விட்டமைக்கு மூல காரணம் எனக்குத் தெரிந்து விட்டது. முல்லாஜீ நமது ஹிந்து மத வேத இதிஹாஸங்களை தாக்கிக்கூறி குதர்க்கவாதங்களையும், அவர்களுடைய குர்ஆனை மேன்மைபடுததிக் கூறிக் கொண்டவற்றையும் உண்மை யென்று நீ நம்பி விட்டதேயாகும். அத்துடன் நேற்றிரவு முல்லாஜீ பாலகிருஷ்ணனுடன் வேத சம்பந்தமாய் தர்க்கித்த போது இவர் பதில் கூற ஆற்றலில்லாது இருந்து விட்டதும் உன்னை இக் கதிக்குள்ளாக்கி வைத்து விட்டது. போகட்டும். இன்றிரவு நிகழப் போகும் குர்ஆன்

விவாதத்தினின்றும் குர்ஆனைவிட வேதமே மேன்மையானதென்பதையும், இஸ்லாமை விட ஹிந்து மதமே சிறந்ததென்பதையும் நீ சுயமே உணர்ந்து கொள்ளப் போகின்றாய். குர்ஆனைப்பற்றிய குறைகள் என்னென்னஇருக்கின்றனவென்பதை தெரிந்து வரவே பாலகிருஷ்ணன் இன்று வெளியே சென்றுள்ளார், மேலும் சந்திரனுக்கு மொரு கறையுண்டு பாஸ்கரனுக்குமொரு கிரணமுண்டு, எவருக்கும் ஒரு குறையுண்டு, என்பதற்கொப்ப ஒவ்வொரு மதத்திலும் பல ஊழல்களுமிருக்கும். அவ்வாறே முஸ்லிம்களுடைய இஸ்லாமிலும் பல குறைகள இல்லாமலிராது. ஒவ்வொரு மதத்திள் பிரஜைகளும் மௌடீகக் கொள்கைகளில் உழன்று கிடப்பர் என்பதும் உண்மை. இந்த வாதம் இன்றிரவு வேளிச்சமாகப் போய் விடப்போகின்றது என்று கூறி முடித்தான். இது நிற்க,

அத்தியாயம்—12.

குர்ஆனிலுள்ள குப்பைகளையும்அதைப்பற்றியதர்க்கவாத முறைகளையும் பண்டிதர்களிடம் சென்று கேட்டு வருவதற்கென்று அதிகாலையில் புறப்பட்ட பாலகிருஷ்ணன் அன்றெல்லாம் எவரெவரிடமோவெல்லாம் சென்றுஅன்னார்சொன்னதையெல்லாம் ஒருவாறு கேட்டுணர்ந்துமாலையில் வீடுவந்து சேர்ந்தான். அவனது முகத்தோற்றத்தை ஓர்ந்து நோக்குமிடத்து சென்ற காரியத்தைத் முன்னிட்டு இத்துணை காலம் பிரயாசைப் பட்டதின் பயனால், சித்தம் பூர்த்தி யடைந்தே வந்திருப்பானென்பது விளக்கமாயிற்று. அத்துடன் பாலகிருஷ்ணன் வீட்டை வந்தடைந்ததும் சற்று அகந்தையும் செருக்கு முற்றவனேபோல் களிமிளிரும் வதனத்தோடு தன் காதலி சாவித்திரியையும், அவள் அன்னையான தன் மாமியையும் அழைத்து பெருமைப்படக்கூறலானான்.

பாலகிருஷ்ணன்:—சரி! சரி! நான் சொன்னதே சரியாய முடிந்தது. முஸ்லிம்களுடைய வேதமான குர்ஆனிலும் எண்ணத் தொலையாத் தவறுகளும், குறைகளும் தர்க்கத்துக்கிடமான வாக்கியங்களும் மலிந்து கிடக்கின்றன. அவற்றையெல்

லாம் நான் நன்கு தெரிந்து கொண்டு வந்துவிட்டேன். இதை யொட்டி இன்று நான் கேட்க போகும் ஆணித்தரமான கேள்விகளுக்கு முல்லாஜி ஒரு சிறிதும் பதிலளிக்க மாட்டாரென்பது திண்ணம். குர்ஆனுடைய திரு வாக்கியங்களின் எத்தகைய தவறுதலுமிராதென்று அந்தக் கிழவர் பறை சாற்றியதெல்லாம் இன்று அடிப்பட்டுப் போகுமென்பதில் சந்தேகமில்லை, என்று ஆர்ப்பாட்டம் செய்து கூறினன்.

இவன் கூறிய வார்த்தகளில் சாவித்திரிக்கு ஒரு எள்ளத்தனையும் நல் அனுமானம் உண்டாகவில்லை. ஏனெனின்சர்வேஸ்வரனுன ஆண்டவனின் பரிசுத்த வேதமான குர்ஆன் ஷரீபில் விவாதத்துக்கிடமான அரை குறையான வாக்கியங்களிராதென்று அவள் உண்மையாகவே முழுதும் நம்பியிருந்தாள். உண்மையில் பாலகிருஷ்ணனே குர்ஆன் வாக்கியத்தின்மீது வீணுக்கேனும் இவ்வாறு குற்றங் கற்பித்து கூறலும் தகுமென்றும், இவ்வாருயின் சகலமும் கற்ற முல்லாஜி சரியான பதிலளித்து இவரின் விதண்டாவதத்தை அடக்கிவிடுவாரென்றும் திடமாய் கருதினள். இதனல் சாவித்திரி தானும் ஆக்ஷேபித்துக்கொள்ளாது தன் கணவன் பாலகிருஷ்ணன் குர்ஆனை இழித்துப் படாடோபமாய் கூறியவற்றை கேட்டும் மௌனித்துத் தலையாட்டினள்.

ஆனல், சாவித்திரிக் கிருப்பதேபோன்ற நன்னம்பிக்கை கொண்டில்லாத அவளுடைய தாயுக்கு பாலகிருஷ்ணன் பிதற்றியதனைத்தும் உண்மையென்றே புலப்பட்டது. தன் வாதத்துக்கு ஆதாரம் கிடைத்ததென்று அவ்வம்மையரும் சதிரு சற்றுத்திருப்தியும் சந்துஷ்டியும் கொண்டாள். அத்துடன் ஹிந்து மதவேத சாஸ்திரங்கள் மீதிருக்கவேண்டிய நம்பிக்கை தற்போது சாவித்திரிக்குக்குன்றி, குர்ஆனின்பால் பக்தியும் மனப்பான்மையும் லயித்துப் போயிருப்பது, பாலகிருஷ்ணனுடைய தற்க வாதத்தால் உடைபட்டுதிரும்பிதம்சுயஹிந்துமதத்தின்பக்கம்சார்ந்துவிடலாமென்றும்கருதி மேன்மேலும்சந்துஷ்டைந்தாள். எனவே பாலகிருஷ்ணனுடைய கூற்றலுக்கெல்

லாம் ஆம்! ஆம்! எனத் தாளங்கொண்டிவிட்டு மீண்டும் அவ்வம் மையார் கூறத் தொடங்கினர்:—

சா-தாய்:—ஆமாம்! நான் குர்ஆனின் பாஷையையோ அதன் சங்கிரஹத்தையோ கற்றுணர்ந்திலே யென்பதற்காக அதன் நன்மை தீமை முதலியவற்றில் எதையும் தெரிந்து கொள்ள முடியாதிருந்தோமென்பது உண்மைதான். நாம் தெரிந்து கொள்ளவில்லையென்ற காரணத்தினல் குர்ஆனில் குறையென்பதே ஒன்றுமில்லாது போய்விடுமோ? நம் வேதங் களினின்று முல்லாஜீ யெடுத்துக் கூறியதேபோன்ற குறை குர்ஆனில் இருக்குமென்பது உண்மையல்லவோ?

பாலகிருஷ்ணன்:—தாங்கள் கூறுவது சரியே. ஒவ் வொருவர்களும் "தன் குஞ்சு பொன் குச்சு" என்பதே போல் தங்கள் சமய மறையை மேலென்றே வாதித்துக் கொண்டு பிறமத வேதத்தைஎள்ளி இகழ்வரென்பதுஉண்மை. அவ்வாறு தான் முல்லாஜீயும் வாதித்திருப்பார். அஃதிருக் கட்டும். மேலும் இததிணை காலம் நான் எங்கு எதற்கு சென்றிருந்தே னென்பது உங்களுக்குத் தெரியவில்லையே? கூறுகிறேன் கேளுங்கள்:—இன்று நமது பழைய குலக்குரு வான பெரிய வித்வானைப் பேட்டி கண்டு வந்தேன். அவர் குர் ஆனைப்பற்றி குதர்க்க வாத முறைகள் பலவற்றை போதித் தார். ஆக்ஷேபத்துக்கும் விவாதத்துக்கும் இணக்கமான பல வேத வாக்கியங்களையும் சொல்லிக் கொடுத்தார். அவைகளை இதோ எழுதியும் கொடுத்திருக்கின்றார். இப்போழ் திதனல் முல்லாஜீயுடன் விவாதிப்பதற்கு போதிய சாதனங்கள் கிடைத்து விட்டன. இனி அந்த முஸ்லீம் புரோகிதரால் என்னை ஏமாற்றிவிட முடியாது. எனது கேள்விகட்கு ஒழுங் கான பதிலிறுக்கவு மியலாது. இது உண்மை.

சாவித்திரி:—(நயத்தோடு) ஆமாம்! தங்களின் தற்புகழ்ச் சுபாவம் எமக்குத் தெரிந்துதானே இருக் றது. சரி போகட் டும். அந்த வேதவித்வான் தங்களுக்குகுர்ஆனின்எவ்வாயத்துக் களை கற்பித்துக் கொடுத்தார்? அவற்றை எங்கள் முன்னிலை யில் கூறுவீர்களா?

பாலகிருஷ்ணன்:—ஓ! அவற்றை யெல்லாம் இதுகாலை எடுத்தோதுவதற்கு நேரமில்லை. யாவற்றையும் முல்லாஜீ சமுகத்தில் எடுத்து வாதிக்குங்கால் தெரிந்து கொள்ளுங்கள். இன்று வேலைகளை யெல்லாம் துரிதமாக முடித்துக் கொண்டு சீக்கிரம் புறப்பட வேண்டும் என்று கூறிமுடித்து எழுந்து விட்டான். சாவித்திரியும் அவள் அன்னையுங்கூட தம் அலுவல்களில் பிரவேசிக்கலாயினர்.

சாவித்திரியின் உள்ளக்கிடக்கை நமக்கு தெரிந்தது தானே? அவள் வழக்கப்படி முல்லாஜீ திருச்சமுகத்துக் கேகி பரிசுத்த குர்ஆன் பாராயணத்தையும் இன்று நிகழப் போகும் ஆராய்ச்சிச் சம்பந்தமான சம்வாதத்தையும் செவியுறுவதற்குரிய காலத்தை வெகு ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள். எனவேஉற்சாகத்தோடு சமைத்தல் முதலிய வேலைகளை யெல்லாம் துரிதமாகவே பூர்த்திப்படுத்தினாள். இதுகாறும் பாலகிருஷ்ணனோ, குதர்க்க விவாதத்துக்காகவென்று தான் கேட்டுக் கற்றுணர்ந்ததை யெல்லாம்பாடம் படித்து மனத்தில் பதிவு செய்து கொண்டிருந்தனன். ஆகாரம் தயாராகிப் புசிக்கும் வேளையுமானதும் எல்லோரும் எழுந்து உணவருந்தி விட்டு வெளியேகுவதற்கும் சித்தமடைந்தனர். எனவே வழக்கம்போல் மூவரும் புறப்பட்டு பள்ளிவாசல் முல்லாஜீ சமுகத்தை யடைந்து அவர் அறைக்குள் உத்திரவு பெற்றுப் பிரவேசித்தனர். அப்பெரியாரும் தம் வழக்காசாரப்படி இம்மூவர்களையும் வரவேற்றுபசரித்தின்பம் பேசி வீற்றிருக்கச் செய்தார். பின்னர் இவர்களுக்கிடையே சம்பாஷணையும் பின்வருமாறு நிகழலானது:—

முல்லாஜீ:—நண்பரே! நீவிர் நேற்று கூறிச் சென்ற வண்ணமே இன்று குர்ஆனைப் பற்றிய ஆக்ஷேப வாதங்களை யெல்லாம் கற்றுணர்ந்து வந்திருப்பீர்களென்று நம்புகின்றேன்.

பாலகிருஷ்ணன்:—ஆம்! சர்வ விவாத சித்தியோடு தான் வந்திருக்கிறேன்.

முல்லாஜீ:—வெகு சந்தோஷம். சரி முதலில் சாவித்திரிக்குச் சிகிச்சையை செய்து முடிக்கட்டுமா? அல்லது உமது விவாதத்தைப் பூர்த்திப்படுத்திக் கொள்ளலாமா? சொல்லுங்கள்.

சாவித்திரி:—(இடை நுழைந்து) முல்லாஜீ பெரியோரே! வீண் விவாதத்தை யெல்லாம் பிறகு வைத்துக்கொள்ளுங்கள். முதலின் குர்ஆன் வேதார்த்தச் சிகிச்சையைப் புரியுங்கள். இதற்காகவே தான் நாங்கள் இன்று வெகு சீக்கிரமாகவே வந்துள்ளோம்.

சாவித்திரி கூறியதற்கு அவள் கணவனும் அன்னையும் ஒருவாறு சம்மதித்தனர். முல்லாஜீயும் சாவித்திரியின் கோரிக்கைக்கிணங்கி, பரிசுத்த குர்ஆன்ஷரீபின் திருவாக்கியங்களை அழகுபெற பாராயணஞ் செய்ய ஆரம்பித்தனர். இத்தனை நாட்களாகப் புரிந்துவந்த பாராயண முறையைக் காட்டினும் இன்றுதான் முல்லாஜியின் குர்ஆன் வேத கிராஅத்தானது வெகு விஸ்வா ரகசியமாய்ப் பரிணமித்தது. அவர் வாயினின்று பிரவர்த்தியாகும் ஒவ்வொரு பதமும் ஆழ்ந்த தத்துவங்களுடையதாய், கேட்போர் மனத்தை வசீகரப்படுத்தக் கூடியதாயுமிருந்தது. இன்று அப்பெரியாரின் சாரீரமும் வெகு மனோஹரமுடையதாய் நிலவியது, ஆதலின் இம்மூவருடைய உள்ளமும் வேதப் பாராயணத்தின் கண் ஈடுபட்டு பரம இன்பம் பெறலாயின. சாவித்திரிடன் மனநிலையோ பன்னெடு நாட்களாகவே இத்தகைய வசீகரத்தில் சிக்குண்டு கிடந்ததாகும். எனவே இம்மகளிரின் ஹிருதயம் மற்றிரு சார்பினரின் மனக்கமலத்தைக் காட்டினும் அதிகமான மையலுக்குள்ளாகி நின்றமை வியப்பன்று. அத்துடன் பாலகிருஷ்ணன், சாவித்திரியின் தாய் ஆகிய இரு நிஷ்பக்தியுள்ளோரின் உள்ளமும் நெக்குருகி வழிவதெனின் வியப்பேயாகும். மேன்மேலும் முல்லாஜியவர்கள் மிக மிக பஸந்தான அழகிய தோரணையில் குர்ஆனைப் பாராயணஞ் செய்யுந்தோறெல்லாம் இம்மூவரின் உள்ளமுங் குழைந்து நேத்திர கமலத்தினின்றும் பிரீதி நீர் பிரவர்த்தித்துக்கொண்டே இருந்தது.

ஆதலின் இம்மூவரும் மாயைத்துறந்து மெய் மறந்து ஞானம் விரிந்து தெய்வீகத் திருமறையால் வசீகரிக்கப்பட்டு அசையாச் சிலைபோல் உருவாய் சமைந்தனர். குர்ஆனின் பதங்களெல்லாம் அன்னார்ச்செவிக்குட் டெவிட்டா வமுதை வார்த்துக்கொண்டிருந்தன. அவர்கள்செவிகள்பேரின்பமெய்து கொண்டிருந்தன. இங்ஙனமே நம் ஹஜ்ரத் முல்லாஜீ யவர்கள் குர்ஆன் மறையின் மூன்று நான்கு பிரிவு (ருகூஉ)களைஓதி முடித்து விட்டு ஓதலை நிறுத்திக்கொண்டார். எனினும் திருமறை கானத்திலாழ்ந்து மெயுணர்வுத்துறந்திருந்த மூவரும் சிறிது நேரம் மட்டும் மௌனதியானம்பூண்டவாறு மெய்மறந்திருந்தனர். எனவே முல்லாஜீ பாலகிருஷ்ணனை நோக்கிக் கூறலானார்:—

முல்லாஜீ:—மித்திரா! என் வேலை முடிந்தது, இனி தாங்கள் கேட்க மேண்டியதையும் கூற வேண்டியதையும் பிரஸ்தாபிக்கலாம்.

பாலகிருஷ்ணன்:-பெரியீர்! யான் எடுத்துக் காட்டவேண்டிய வாதாம்ஸங்கள் பலவுள.எனினும் நேற்றுத் தாங்கள் எங்கள் ஹிந்துமத வேதப் புராணங்களுள் பல குறைகளுள்ளனவென்று வேத மந்திரங்களை எடுத்துக்கூறாத ஓதி வாதித்தீர்கள். அத்துடன் கடவுளின் வேதமெனப்படுவதில்எத்தகைய குறைவுபாடு மிருத்தலாகாதென்றும், மேலும் மனுஷ்ய கோடிகளின் அறிவுக்கும் வாழ்க்கை முறைக்கு மொத்தில்லாதஅம்சங்களுடையது ஒருக்காலும் கடவுளின் திருமறையாகாதென்றும் விளக்கினீர்களல்லவா?

முல்லாஜீ:—நண்பரே! ஏக தெய்வத்தால் அருளப்பெற்ற உண்மைத் திருமறையில் இயற்கை அறிநெறிக்குஇடையூறான அம்ஸங்களிராதென்பதும் இருத்தலாகாதென்பதும் பிரசித்தமே. ஆனால் எவனேனுமொரு அவிஸ்வாஸி உண்மைத் திருமறை மீது குதர்க்க வாதம் புரிவானானால் அவன் துஞ்செயலால் அவ்வேதம் அபேதமாய் விடுமா? அன்று. அங்ஙனமே ஒரு சாரார், குர்ஆன் உண்மை வேதமாயிருந்தும் அதன்பால் குதர்க்கம் புரியத் தலைப்படின் குர்ஆன் பொய் மறையாகி விடு

மா? ஒருபோதும் ஆகாது. இதனுல் உண்மையான எங்கள் குர்ஆன் மீது ஆக்ஷேபங்களை எவரும்கிளத்தவேண்டாமெனயான் வழுத்துவதாய்கொள்ளற்க. தங்களுக்குப்பட்ட-குர்ஆனைப் பற்றிய ஆக்ஷேபார்த்தங்களை யெல்லாம் பிரஸ்தாபியுங்கள். அவற்றிற்கெல்லாம் தகுந்த சமாதானங்களை எடுத்து விளக்க சித்தமாயுள்ளேன். ஆனுல், எம்மால் கிளத்தப்படும் உங்கள் வேதப்புராண சரித்திர சம்பந்தமான ஆக்ஷேபாம்ஸங்களுக்கு மாத்திரம் சரியான சமாதானங்களை விளக்க நீங்கள் ஒருப்படமாட்டீர்களென்பதை அகந்தையன்றி யான் கூறத் துணிகின்றேன்' வேறு சம்பந்தவான ஆக்ஷேபணைக்கு உங்கள் வேதிய சாஸ்திரிகளுங்கூட பலர் பதிலிறுக்கவியலாது பின்னடைந்து சென்றுள்ளனர். ஆதலின், உங்கள் வேத சாஸ்திரங்கள் உண்மை தெய்வத்தால் உருவகுக்கப்பட்டதல்ல வென்பது நன்கு விளக்கமாகின்றது.

பாலகிருஷ்ணன்:—இவ்வாறு விதண்டாவாத முறையில் பீடிகை போட்டுக்கொள்ளுதல் எங்கள் போன்ருரை அமிழ்த்துவதற்குரிய கிரியைபோலும். சரி! அது ஒரு பக்கல் கிடக்கட்டும். உங்களால் பதிலிறுத்தவே முடியாத அத்தகைய குர்ஆனைபற்றிய ஆக்ஷேபாம்சங்களையும், குறையும் முரண் தன்மையுமிக்க குர்ஆன் வாக்கியங்களையும் நான் தற்போது எடுத்துக்காட்ட ஆற்றல் பெற்றவனு யிருக்கின்றேன். அங்ஙனம் அவற்றிற்கு உங்களால் சமாதானமும் பதிலும் கூற முடியாமற் போனுல் உங்கள் குர்ஆனும் தெய்வத்தினுல் அருளப்படாத பொய்யான வேதமென்பதை ஏற்றுக். கொள்ளுவீரா? சொல்லுங்கள்!

முல்லாஜீ:—பகுத்தறிவுக் கொத்ததாயும், உண்மையில் ஆக்ஷேபத்திற்கிடமானதாயும், விதண்டாவாத வகையற்றதாயுமான அம்சங்களை தாங்கள்எடுத்துக்காட்டிய பின் அவற்றிற்கு என்னுலும் என்போன்ற இதர ஆலிம்களாலும் பதிலிறுத்த முடியாது போமாயின் நாங்களெல்லோரும் உமது சம்மதப்படி பணிந்து விடுகின்ருேம். இஃதுண்மை.

பாலகிருஷ்ணன்:—பிறகு இவ்வுறுதி மொழியை புரட்ட மாட்டீர்களோ?

முல்லாஜீ:—நண்பா! அங்ஙனம் கருதிக் கொள்ளாதே. உண்மை முஸ்லிம் ஒரு முறை வாக்குறுதிச் செய்தால் தன் ஆவி போவதாயிருப்பினும் பிறழமாட்டார்களென்பது திண்ணமென ஓர்ந்து கொள்வீராக. இதுநிச்சயம். மேலும் உமது வாதா க்ஷேபத்தை தாராளமாய் வெளியிடுவீராக.

பாகிகிருஷ்ணன்:—பெரியாரே! "அல்லாவானவன் அவர்களுடைய ஹிருதயங்களின்மீதும், அவர்களுடையசெவிகளுன்மீதும், முத்திரையை போட்டுவிட்டான். அவர்களுடைய கண்களுக்கு முன்னே திரையையும் கிடத்தி விட்டான்" என்ற பொருளுடைய அம்சம் உங்கள் குர்ஆனின் இரண்டாவது அத்தியாயத்தின் ஏழாவது வாக்கியமல்லவா? இவ்வாறு உங்கள் ஆண்டவனே அடியார்களுடைய மனத்தையும் செவியையும் திருஷ்டியையும் அடைத்து மழுங்கச் செய்வதென்பதின் பொருளென்ன? இவ்வாறு செய்து விடுவதால் அத்தகைய மக்கள் நிகழ்த்தும் துஷ்கிருத்தியங்கள், சதிக்கிரியைகள் யாவற்றிற்கும் ஆண்டகைதானேபொறுப்புடையவனுவான்? அவ்வண்ணமிருக்கநன்மைதீமையாவற்றிற்கும்மனுஷ்யர்களே ஜவாப்தாரியர்களாவார்களென்றுஉங்கள் இஸ்லாமியஆண்டவன் நீதிவழங்குவதுதர்மநீதியாமா? இதனுல்ஆண்டவனேமக்களைவழிகெடுக்கின்ருனென்பதுவிளங்கவில்லையா? இங்ஙனமிருந்தும் குர்ஆனைப் பற்றியும்வேதத்தைபற்றியும் வேற்றுமை கிளத்துவதும் முஸ்லிம்,காபிர் என பிரிவினைப்போடுவதும்,ஒருசாராருக்கு சுவர்க்கலோகபதவியென்பதும், மற்றொரு சார்பினருக்கு நரகலோக வேதனையென்பதும் இஸ்லாமிய தெய்வீக பாரபக்ஷத்தனமேயல்லாது வேறென்னே? இங்ஙனம் மக்களைக்கெடுப்பது ஆண்டவனுடைய தொழிலாயின் உலகம் எவ்வாறு நிலவுவதோ? நபிமார்களும் நல்லோர்களும் இத்தாணியிலுள்ள மன்பதைகளுக்குப் பாரமார்த்திக நலனுக்கென அனுப்பப்படுவதன் உட்கருத்துதானென்னே? இவற்றை போதிக்கும் குர்ஆன் திருமறையாகுமா?

முல்லாஜி:—பாலகிருஷ்ணனே! உங்கள் மனத்திள்பட்டதையெல்லாம் கொட்டியளந்து தீருங்கள். அவற்றை யான் தடைசெய்யவில்லை. ஆனால் ஆண்டவன் உங்களுக்களித்துள்ள அறிவையும் ஊடே செலுத்தி நீங்கள் விவாதிக்கும்முறை செம்மையாவென்பதையும் ஓர்ந்துகொள்வீராக. அன்பரே! எங்கள் பரிசுத்த குர்ஆனும் உங்கள் வேதப் புராணங்களைப் போல் தானிருக்குமென கருதிக்கொண்டு நுனிபுல் மேய்வது சரியாகாது. குர்ஆனுடைய ஒவ்வொரு வாக்கியமும் ஆழ்ந்த அருந் தத்துவங்களை கொண்டதாகும். பிரிதோர் அம்சமும் முன் பின்னுக்குத் தொடர்புடையதாகும். தலையையும் வாலையும் விட்டுப்போட்டு ஒரு துண்டத்தை எடுத்துக்கொண்டு வாதிப்பது ஒழுக்கமாகாது. மேலும் நீவிர் எம் குர்ஆனிலிருந்து ஆட்சேபகரமானதென்று எடுத்துக்காட்டிய வாக்கியத்தின் முன் பின்னே உமது விதண்டாவாதத்துக்குத் தக்க மறுப்பாயும் சமாதானமாயும் இருக்கிறது. நீர் எடுத்துக்காட்டியது குர்ஆனுடைய ஒரு வாக்கியத்தின் ஒரு சிறு பகுதியேயாம். அம்முழு வாக்கியம் பின்வருமாறு:—

"உண்மையாக (சத்தியத்தின்பால் வன்மங் கொண்டு) மாறுபட்டுப்போனவர்களுக்கு(ஏ நபியே!)நீர் அச்சுறுத்தியபோதிலுஞ் சரியே, அச்சுறுத்தாவிடினுஞ் சரியே, ஒருபோதும் அத்தகையோர் நன்னம்பிக்கைக் கொள்ளவே மாட்டார்கள். ஆண்டவன் (அவர்கள் வங்நெஞ்சாரப் போனதாழ்) அவர்கள் ஹிருதயங்களின்பேரிலும் செவிகளின் பேரிலும்முத்திரையையிட்டுவிட்டான். மேலும் அவர்கள் பார்வைகளிலோ (அஞ்ஞானத்) திரை கிடக்கின்றது. எனவே அவர்களுக்குப் பெருத்த வேதனையே கதியாகும்." (குர்ஆன்)

இத்திரு வாக்கியத்தால் வெளியாகும் தாத்பரியம் யாதெனின், தேவ தூஷர்மர்கவாகவும், துஷ்கிருத்தியர்களாகவும் போய்,ஆண்டவனுடைய பக்தியையும் நம்பிக்கையையும் முற்றும் வெறுத்து நிராகரிக்கப்பட்டவர்களாய் போன தெய்வத் துரோகிகளைப்பற்றி இதில் குறிப்பிட்டிருக்கிறது. இத்தகையோர்க்கு எத்துணை இதோபதேசம் புரிந்த போதிலும் ஒரு

சிறிதும் சத்தியத்தின் பக்கம் திரும்ப மாட்டார்கள். ஆதலால் தான் அவர்கள் மனத்திலும், செவிகளிலும், கண்களிலும், ஆண்டவனது முத்திரையும் திரையும் விழுந்து விட்டன வென்று கூறப்பட்டிருக்கிறது. மேலும் ஆண்டவனுடைய முத்திரை யென்றால் நம் மாந்தர்கள் ஒரு பொருளை இறுகப் பிணைத்து அதன் தலைப்பில் அரக்கை ஊற்றி முத்திரை சீல் வைப்பதே போன்றதன்று. திரை யென்றால் உறுதியான போர்வையால் மூடி விடுவதுமன்று. ஆண்டவனது முத்திரை மனதில் விழுந்ததென்றால் ஒருவன் அளவுக்கதிகமாய்த் துஷ் கிருத்தியங்களில் உழன்று மனத்தை நாஸ்திக வஞ்சகத்துக் குட்படுத்திக் கொண்டால் ஆண்டவனுடைய அதிருப்தி அவனுடைய வந்நெஞ்சில் ஏற்படுகிறது. அதனால் அவன் அஞ்ஞானி, அவிவேகி, தூர்த்தன், யாதகன் இனி சன்மார்க்கத்திக்கு அருகதை யில்லாதவன் என்ற முத்திரையால் மனம் வரிக்கப்படுகின்றான். இதனால் ஆண்டவன் மானுஷ்யர்களுடைய மனத்தைக் கெடுத்துப் பாபத்தில் ஆழ்த்தி மாளச் செய்கின்றான் என்று கூறுவது தேவ தூஷணையே யாகும். மேலும் ஆண்டவனால் இடப்பட்ட இம்முத்திரை எவராலும் உடைக்க முடியாததன்று? அத்தகைய முத்திரை யிடப்பட்ட அடியான் தன் பாபத்திற்கு வருந்தி மன்னிப்புத் தேடிக் கொண்டு, ஆண்டவன்பால் இறைஞ்சுவானாகில் பரமாத்மாவுடைய அருள் அத்தாஸன் மேல் பொங்கி அவன் சன்மார்க்கத்துக்கு வந்து விடுதலும் சாலும். மேலும் விருக்ஷவினங்களில் ஒரு சிலகனிகளைத்தர வியலாத கொட்டணமாய்ப் போவதையும், பெண் மக்களுள்ளும் ஆண் மக்களுள்ளும் ஒரு சாரார் மலடுகளாகப் போவதையும், பக்ஷியினங்களில் சில எத்துணை கற்றுத் தந்தபோதிலும் ஒரு பதத்தையும் கிரகித்துக் கொள்ள இயலாமற் போவதையும், மிருகங்களில் பல எம்மட்டுப் பாடுபட்டு கற்றுக்கொண்டபோதிலும் ஒருசெயலையும் கற்றுக் கொண்டுள்ள ஒருப்படாமற் கெடுவதையும் நாம் உலகவியலில் கண்டு வருகின்றோம். (உதாரணமாய் "குக்கலைப் பிடித்து நாவிக் கூண்டினிலடைத்து வைத்து, மிக்கதோர்

மஞ்சட்பூசி மிகுமணஞ் செய்தாலுந்தான், அக்குலம் வேறதாமோ வதனிடம் புனுகுண்டாமோ, குக்கலே குக்கலல்லாற் குலந்தனில் வேறதாமோ'' என்னும் மூதுரையிலுள்ள மிருக இனத்தை சேர்ந்தவர்களே எத்தனை நற்போதம் புரியினும் சத்தியத்தை கிரஹித்துங் கொள்ளாத நயவஞ்சத்துரோகிகளாவர். இத் தத்துவத்தை மேற்கொண்டே மேற்கூறப்பட்ட வாக்கியத்தில் ஒரு சாராரை எண்பிக்கப்பட்டிருக்கிறது. இதனால் முத்திரை யென்பதின் பொருளை நன்கு விளங்கி கொண்டிருப்பீர். உமது வாதத்திக்குரிய சமாதான அம்சங்கள் திருமறையின் மற்றோர் வாக்கியத்திலும் மிக மலிந்து காணப்படுகிறது. அது வருமாறு:—

அவர்களுடைய நிராகரித்தல் (குபிர்) காரணமாக அன்னார் (ஹிருதயங்கள்) மீது ஆண்டவன் முத்திரை யிட்டு விட்டான். (குர்ஆன்)

இத்திரு வாக்கியத்தால் பகவானுக்கு வழிபடாதோர் துஷ்கிருத்தியங்களில் அதிகம் தலைகால் தெரியாது அமிழ்ந்து போய் விட்டதனால் தான் அன்னார் ஹிருதயங்களை ஆண்டவனுடைய அந்தகாரம் சூழ்ந்துகொள்ளவேண்டியதாயிருக்கிறது. பொதுவாய் மனத்தில் முத்திரை யிடுவதென்பது, பக்தர்களுடைய ஹிருதயங்களிலெல்லாம் பகவானுடைய பரமபிரகாசம் வியாபித் திருத்தலைவிடுத்து, துர்க்கிருத்தியங்களில் எவர்களேனும் தலையிட்டுக்கெடுவார்களானால் அவர்களுடைய ஹிருதயங்களை ஆண்டவனுடைய ஜோதிக்குப் பதிலாய் ஆண்டவனுடைய அந்தகாரம் சூழ்ந்து கொள்கிறதென்பதேயாகும். ஆதலின் பாலகிருஷ்ணரே! உமது குதர்க்கத்திற்கு நான் கூறியது சரியான சமாதானமாக விருக்குமென்றே நினைக்கின்றேன்.

பாலகிருஷ்ணன்:—சரிதான்! இந்த விவாவத்திற்குதான் ஒருவாறு சமாதானத்தைக் கூறி முடித்துவிட்டீர்கள். மற்றொரு வேத ஆயத்து இதினினும் சிக்கனதாயிருக்கிறதே, அதற்கு பதில் உம்மால் கூற முடியுமோ வென்று தான் சந்தேகிக்கின்றேன்.

முல்லாஜி:—அங்ஙனம் தாங்கள் சமுசயங்கொள்ளவேண்டிய அவசியமில்லை. அதென்னகூறுங்கள். என்னுலானமட்டும் சரியான சமாதான பதிலை யளிக்கின்றேன்.

பாலகிருஷ்ணன்:—அப்படியானுல் கூறுகின்றேன். உங்கள் ஆண்டவனே மனிதர்களை வழிகெடுத்து போடுவதாய் குர்ஆனில் கூறப்பட்டிருக்கிறதல்லவா? உதாரணமாய் "கணக்கற்றவர்கட்கு ஆண்டவன் நேர்வழியை காட்டுகின்ருன்" கணக்கற்றவர்களை வழி கெடுக்கச் செய்கிருன். (குர்ஆன்)

பெரியோரே இது குர்ஆன் வாக்கியமாகும். ஆகவே இவ்வாறு உங்கள் ஆண்டவனே மானிட வர்க்கத்தாரை வழி கெடுத்துக்கொண்டும், வழி காட்டிக்கொண்டு மிருந்து பிறகு நன்மை தீமை யாவற்றிற்கும் மனிதர்களே ஜவாப் தாரிகளாவர் என்று கூறுவது எத்துணை முரண்பட்டதாயிருக்கிறதென் பதை பாருங்கள். ஒரு சாராரை ஆண்டவனே துன்மார்க்கிகளாக ஆக்கிவிட்டால், அவர்களை சன்மார்க்கத்துக்கழைப்போர் யாவர்? ஆண்டவனுல் வழிகெடுக்கப் பட்டோரை நேர்வழிக்கு அழைப்பதென்பது மனுஷ்யர்களாளாகக் கூடிய காரியமா? இச்சிக்கலான வாதத்துக்குத் தாங்களென்ன விடையிருக்கப் போகின்றீரோ? மேலும் குர்ஆனில் இவ்வாக்கியத்தால், விளங்கும் மற்ருெரு தாற்பரியம் யாதெனில் வழிகாட்டவும், வழி கெடுக்கவும் ஆண்டவனே மூலகாரணமா யிருப்பதனுல், மனுஷ்ய சமூகத்தாரின் சன்மார்க்க போதத்துக்கென்று எத்தகைய மகான்களையும் சீர்திருத்தக்காரர்களையும் தீர்க்க தரிசிகளையும் இத்தரணிக்கு அனுப்பி வைக்க வேண்டிய அவசியமில்லை. அத்துடன் மனுஷர்கள் புரியும் எப்படிப்பட்ட பாதகங்களுக்கும் அவர்கள் ஜவாப்தாரியாகக் கூடாதவர்களாவரென்பதும் உண்மையல்லவா? இதற்கு பதில் கூறுங்கள்.

முல்லாஜீ:—அன்பரே! நீவிர் முதலிற் கூறிய வாக்கியத்தில் எவ்வாறு ஏமாற்ற மடைந்து போனீரோ அவ்வாறே இதிலும் ஏமாற்ற மடைந்திருக்கின்றீர். ஒரு வாக்கியத்தின் முன்னிலையையும், பின்னிலையையும் அறியாமையால் திரஸ்

கரித்து விட்டு மத்தியத்திலுள்ளஒருபகுதியைமட்டும்எடுத்து அதன் அர்த்தத்தை கற்றுக் கொண்டு உள்ளதையும் அனர்த்தப் படுத்துவதே உமது வழக்கமாய் விட்டது. இது தான் கூடாததாகும். மேலும். "அவர்களுள் பெரும்பாலோர்களை துன்மார்க்கிகளாகவும் செய்கிறான்" என்றுள்ள ஆயத்தின் முன் பின் அம்சங்களையே சற்று சேர்த்து தாத்பரியத்தை ஆழ்ந்து சிந்தனையில் கொள்ளுமிடத்து தகுந்த சமாதானம் அதிலிருந்தே கிடைத்துவிடும். மேலும் குர்ஆனின் மற்றொரு வாக்கியத்தின் பகுதியிலும் அதற்குரிய சமாதானமிருக்கிறது. அதாவது:—

"முழுதும் வழி விலகிச் சென்று துர்த்தர்களாய் போய் விட்டவர்களையே யல்லாது வேறெவர்களையும் ஆண்டவன் துன்மார்க்கத்தில் விட்டு வைப்பதில்லை." (குர் ஆன்)

இதுவும் நமது குதர்க்கத்திற்குப் போதிய மறுப்பாய் நிற்கின்றது. மேலும் இதனால் தெரிய வருவதுயாதெனில் மனிதர்கள் புரியும்துர்க்கிருத்தியங்களே அவர்களுடைய வழிகேட்டிற்கெல்லாம் காரணமா யிருக்கிறது. சன்மார்க்கச் சட்டப்படி முறை பிறழாது ஒழுகுபவன் ஒரு நாளும் எவ்வாறும் வழி கெடுக்கப்படமாட்டான். மேலும்'எந்த சமூகத்தாரும்சுயமேதங்களுடையநிலைமையை மாற்றிக் கொள்கிறார்களேயல்லாது எவர்களுடைய நிலைமையையும் ஆண்டவன் மாற்றுவதில்லை. (குர் ஆன்) அன்பரே! இவ்வாக்கியமும் உமது விவாதத்துக்குரிய சமாதானமாயிருக்கிறது. முடிவாய்க் கூறுமிடத்து, சகல நன்மைக்கும் புண்ணியத்துக்கும் சன்மார்க்கத்திற்கும் மனுஷ்யர்களே காரணகர்த்தராய் விளங்குகின்றனர். அவ்வாறே எல்லாவித தீமைக்கும் பாதகத்துக்கும் துன்மார்க்கத்திற்கும் அம்மானிடர்களே மூலப்பொருள்களாய்த்தெரிகின்றனர். மேலும் சகலமும் வல்ல ஆண்டவன் மனுஷ்யர்களுக்குச் சகல வசதியையுமளித்திருப்பதேபோல் அவர்கள் சன்மார்க்கத்தில்திகழுவதற்கும், துன்மார்க்கத்தில் கெட்டுழல்வதற்கு முரிய மூலசக்தியையும் இயற்கையாகவே அளித்துள்ளான்.மனிதன் தன்பகுத்

தறிவைக் கொண்டு எந்த மார்க்கத்தில் பிரவர்த்திக்கின்றானோ அதன் வழியே அவன் செல்ல வேண்டியவனாகின்றான். சர்வ இயற்கைத் தன்மைக்கும் ஆண்டவன் மூலப்பொருளாய் இருப்பதைமேற்கொண்டு வழி கெடுப்பவனும் ஆண்டவனென்று கூறுதல் அறிவீனமேயாகும். 'நன்மையும் தீமையும் ஆண்டவனைச் சார்ந்ததே' என்பது இயற்கைவிஷயத்தில்மாத்திரமே யாகும். செயற்கை விஷயத்தில் அவற்றை செயலில்கொண்டு வரும் மனிதரே யாவற்றிற்கும் ஜவாப்தாரிகளாவர். இதுவே சரியான சமாதானம்.

இன்னமும் கூறுகிறேன் கேளுங்கள்: சன்மார்க்கிகளை ஆண்டவன் துன்மார்க்கி களாக்குவதில்லை யென்பதற்கு குர்ஆனில் மற்றும் பல வாக்கியங்களுட காணப்படுகின்றன. அதாவது:—(1) "ஒரு சாராருக்கு ஆண்டவன் நேர்வழியை (ஹிதாயத்தை) காட்டித் தந்துவிட்ட பின்னர் அவர்களை ஒருபோதும் துன்மார்க்கி களாக்கு வதேயில்லை." (2) "ஆண்டவன் ஒரு திட்டத்தைச் செய்துவிட்டான். அதினின்றே சன்மார்கத்தை அளிக்கின்றான்." (குர்ஆன்) ஆண்டவன் தீமைக்கு உதவி புரிவதில்லையென்பது இவற்றால் நன்கு விளக்கமாகின்றது. ஆகவே ஆண்டவன்மீது குறை கூறுவதும்,குர்ஆனுடைய வாக்கியம் தவறென்பதும் கூடாதென்பதேயாகும். இவை இங்ஙனமிருக்கட்டும். தாங்கள் இங்குபுரிந்த குதர்க்க வாதத்திற்கு சான்றானதாய் உங்கள் ஹிந்துமத வேதாகமங்களில் யாது போதிக்கப்பட்டிருக்கிறதென்பதையும் இவன் குறிப்பிட்டுக் கூறாமல் இருக்கமுடியவில்லை. எனவே கேளுங்கள்.

"ஏ துஷ்டமனிதனே! நீ ஒருபோதும் சன்மார்க்கப்பிரகாசத்தை பெற்றுக்கொள்ளவே கூடாது" (யஜுர், 1-26.)

இவ்வாக்கியம் எத்துணை பாதகமானதாயிருக்கிறதென்பதை சற்று ஆலோசித்துப் பாருங்கள்! வேதத்தை யருளிய உங்கள் ஈஸ்வரனே அடியார்களை இங்ஙனம் முனிந்து சன்மார்க்கமே அவர்கள் அடையக்கூடாதென்று சபிப்பதா

னல் தீயவர்கள் நல்லவர்களாவது எங்ஙனம்? தீயோர்கள் நல்லறிவுப் பெறுவார்களாயின் அவர்களுக்கு சன்மார்க்க பாக்கியத்தையளிப்பது ஏகேஸ்வரனுடைய வேலையாயிருக்க, சன்மார்க்கமே அவர்கள் பங்கிலில்லாமலாக்கி விடுவது மிகவும் முரணானதேயாகும். இதை நோக்குமிடத்து குர்ஆனிலிருந்து தலை வாலில்லாது நீவிர் எடுத்துச்காட்டிய வாக்கியத்தைவிட உங்கள் வேதத்திலுள்ள இவ்விபரீத வாக்கியமே அதிக விவாதத்துக்குரியதாய் காணப்படுகிறது. ஆகவே நீர் விவாதித்தது சரியா? அல்லது நான் எடுத்து விவாதித்தது சரியாவென்பதை நீரே கூறுவீராக.

பாலகிருஷ்ணன்:—அவசரம் வேண்டாம்! பெரியோரே! உங்கள் குர்ஆனைப்பற்றி விவாதிக்க வேண்டுவதற்குரிய ஆதாரங்கள் இன்னும் பல என்னிடம் இருக்கின்றன. தாங்கள் கேட்ட கேள்விக்குப் பிறகு பதில் கூறுகின்றேன். மேலும் உங்களுடைய குர்ஆனில் மிகவும் ஆக்ஷேபத்துக்குரிய மற்றொரு வாக்கியமும் காணப்படுகிறது. அதாவது:—

"அவர்களுடைய ஹிருதயத்தில் பிணியிருந்தது. அப்பிணியை ஆண்டவன் அவர்கள் விஷயத்தில் அதிகப்படுத்தி விட்டான்" (குர்ஆன்)

பெரியோரே! பார்த்தீர்களா! இவ்வாக்கியத்தினின்று என்ன தாத்பரியம் வெளியாகின்றது? நாம் உலகவியலை நோக்குமிடத்து ஒரு பிணியாளன் ஒரு வைத்தியனிடம் சென்றால், அவ்வைத்தியன் பிணியாளியின் அந்நோயை சொஸ்தப்படுத்தி நன்னிலைபடுத்துகின்றான். வைத்தியனுடைய கடமையோ பிணியாளியை சுகசரீரியாக்குவதேயாகும். இஃதிங்ஙனமிருக்க அடியார்களுக்கெல்லாம் ரக்ஷகனாகிய ஆண்டவன் இந்தத் தத்துவத்துக்கு முற்றும் மாறாக நடப்பது அதர்மமேயாகுமல்லவா? ஹிருதயப் பிணியாளனாகிய அடியான் பரம வைத்தியனை ஆண்டவன் சன்னிதானத்தையடையுங்கால், அந்த வைத்தியன் பிணியாளியுடைய நோயை அதிகப்படுத்திவிடுவதானால் அது தெய்வ நியதியாகுமா? இப்படியே மக்களுடைய ஹிருதய அஞ்ஞானத்தையும் அவிவேகத்தை

யும் பகவானே அதிகரித்து இவனும் துன்மார்க்கததுக் குட்படுத்துவதானல் தெய்வத்தால் அடியார்களுக்கு என்ன நன்மை யுண்டாகப் போகின்றது? இவ்வாறு குர்ஆன் போதிப்பதின் கருத்தென்ன? குர்ஆனில் இஃதொரு வாக்கியமல்லவா?

முல்லாஜி:—பாலகிருஷ்ணரே! அவ்வாக்கியத்திலுள்ள உண்மை கருத்தை உணர்ந்துக் கொள்ள ஆற்றலில்லாது இங்ஙனம் கண்டபடி உளருவது சரியல்ல. சற்று ஆலோசனையை அதன் மீது செலுத்துவீராயின் தகுந்த சமாதானம் அதி இலேசில் உமக்கு சுயமே கிடைத்து விடும். ஆயினும் கூறுகிறேன் கேட்பீராக. உதாரணமாய்,பலபாதகங்களையும்புரிந்து மகா குற்றமிழைத்த ஒருவன் நீதிபதிக்குச் சற்றும் அஞ்சாது அவர் சமுகம் சென்று, 'இந்த அதிகாரி பொது ஜனங்களுக்கு அதிக தண்டனையை விதித்து அக்கிரமம் புரிகின்றான்; இவன் மகா தூர்த்தன்; நான் அவனையும் அவனுடைய கட்டளையையும் ஒரு சிறிதும் இலக்ஷியஞ் செய்ய மாட்டேன்' என்றுவிஷமத்தனஞ் செய்தால், அத்தகைய போக்கிரிக்கு நியாயாதிபதி முறைப்படி அதிக தண்டனை விதிப்பாரா? அல்லது அவன் முன் புரிந்த குற்றத்தையும் மன்னித்து விடுதலை செய்வாரா? இங்ஙனமே ஒரு சில பாதகர்கள் தெய்வத் துரோகிகளாய், ஈஸ்வர நாம கரணமே புரியாது அஞ்ஞான மாயையில் மூழ்கியிருப்பதோடு, அவர்களுவடய சன்மார்க்கத்துக்கென்று குர்ஆன் மூலம் நற்போதனைகள் பல அளிக்கப்பட்ட பின்னரும் தெய்வக் கட்டளையை லக்ஷியஞ் செய்து மேன்மேலும் துஷ்கிருத்தியங்களிலேயே உழன்று துன்மார்க்கத்தில் முனைவார்களாயின், அவர்கள்பால் தெய்வீத்தின் முனிவும் க்ஷாத்திரமும் உண்டாய் இன்னும் அதிகமானஅந்தகாரப்படுகுழியில் வீழ்ந்து கெடாதிருத்தல் முடியுமோ? இக்கருத்தை நீர் எடுத்துக்காட்டிய குர் ஆன் வாக்கியமே நன்கு விளக்கிக் காட்டுகின்றது.

மேலும் அவிசுவாசிகளின் மனப்பிணியை அதிகரிப்பதென்பது ஒருவித தெய்வத் தண்டனையாகும். மனுஷ்யன் தன் சிருஷ்டிகர்த்தனுடைய கட்டளையை சிறிதும் ஏற்காது

நடத்தல் பெருங்குற்றமாகும். அஞ்ஞானமெனும் மனப்பிணி யால்வாட்டுவதே அத்தகையோர்க்குரிய தண்டனையாய்கருதப்ப டும்.உண்மை இதுவேஅல்லாது ஒன்றுமறியா மனுஷ்யர்களுடை பிணியை அதிகப்படுத்துவ தென்பது உண்மையன்று.மனிதர் கள்தாங்கள் புரியும் துஷ்கிருத்தியத்தின் காரணமாகவே தீமை யை அனுபவிக்கின்றனர். பாலகிருஷ்ணரே! நீர் எடுத்துக் காட்டிய வாக்கியத்துக்கு சமாதானம் அதற்கு முன்னுள்ள ஒரு சிறு வாக்கியமே போதுமானதா யிருக்கிறது. அதா வது:—"அவர்கள் புரிந்த துஷ்கிருத்தியங்களுக்காகவே தண் டனைப் பெறுகின்றனர்" என்பதாகும். ஒரு துர்த்தன் மேன் மேலும் துஷ்கிருத்தியம் புரிந்தால் மேன்மேலும் தெய்வத் தின் தண்டனையை தான் பெறுவான். தீமை புரிந்தமைக்கு மனம் நொந்து சன்மார்க்கத்தையும் அதர்மத்தையும் கடைப் பிடிப்பானுபின் தெய்வத்தால் அவன் சன்மார்க்க நலனை அடையப்பெறுவான். மேலும் ஆண்டவன் குர்ஆனின் மற்றோ ரிடத்தில்,

"எவனேனும் ஒரு அணுவத்துணை நன்மை செய்தாலும் அதற்குரிய அநுகூலத்தைப் பெற்றுக் கொள்ளுகிறான். மே லும் எவனேனும் ஓர் அணுவத்துணை தீமையை இழைத்த போதிலும் அதற்குரிய பிரதிபலனை அடைந்து கொள் கிறான்." (குர்ஆன்)

"ஒரு அடியான் ஒரு நன்மையைச் செய்வானுகில் ஆண் டவனிடம் அதற்கென பத்து நன்மையை பெற்றுக் கொள்கி றான். ஒரு தீமையை இழைப்பானுபின் அதற்கென ஒரே தீமையை தான் அனுபவிப்பான்!" (குர் ஆன்)

பாலகிருஷ்ணரே! குர்ஆனில் ஆண்டவன் போதிக்கும் அரும் பெரும் நீதிகளை சீர் தூக்கிப் பார்ப்பீராக. இஸ்லாம் மார்க்கத்திலும் ஹிந்து மதத்திலும் என்னென்ன தர்மம் என் னென்ன அதர்மம் இருக்கின்றனவென்று நீர் பாரபக்ஷமின்றி ஆராய்ச்சிச் செய்திருப்பீராயின், இஸ்லாத்தின்பால் நீர் இத் துணை துவேஷங் கொண்டிருக்க மாட்டீரென்றே நம்புகின் றேன். இஸ்லாமிய அறநீதிகளை நீர் ஓர்ந்து பார்த்திருப்பின்

அது உமது மனதை பரவசப்படுத்தி பக்திமானுய் செய்திருக்கும். உமக்கு அதன்பால் நல்லநம்பிக்கையும் ஏற்பட்டிருக்கும். உண்மையை நோக்குமிடத்து குர்ஆனிலுள்ள இரண்டொரு மூடலான அர்த்தமுடைய வாக்கியங்களைக் கேட்டும் படித்துக் கொண்டும் என்னேடு தர்க்க வாதம் புரிய நீர் வந்திருப்பதாய் யூகிக்க வேண்டி யிருக்கிறது. குர் ஆனையும் இஸ்லாத்தின் நற்போதனைகளையும் தீர்க்காராய்ச்சி செய்தோர் ஒருக்காலும் விதண்டாவாதத்தில் தலைபிடாரென்பது அனுபவம். மேலும் நீவிர் உங்களுடைய ஹிந்து மதம், வேதம், புராணம் இவைகளைப்பற்றியே ஒன்றையும் நன்கு கற்றுணராதிருக்கின்றீர். ஆகவே இனியேனும் உங்களுடைய வேத போதனைகளை நன்காராய்ந்து விட்டு, இஸ்லாத்தின் தத்துவங்களைக் கற்றுந் தேர்ந்து சீர்தூக்கிப் பார்த்து இரண்டில் எது உத்தமமான நீதியைப் போதிப்பதென்பதை முடிவு செய்வீரென நம்புகின்றேன்.

பாலகிருஷ்ணன்:—பெரியாரே! உங்கள் இஸ்லாமைப் பற்றி நான் ஒருவாறு அறிந்துதானிருக்கிறேன். அத்துடன் எங்கள் வேத மதத்தைப்பற்றியும் பூரணமாய் தெரிந்து தான் இருக்கின்றேன். இன்னும் எப்படி நன்கு கற்றபின் உங்களுடன் தர்க்கம் புரிய வரவேண்டுமோ எனக்குத தெரியவில்லை. அதை நீவிரே தெரிவித்தல் வேண்டும்.

முல்லாஜீ:—இரு தர்மத்தின் உண்மையையும் ஆராயும் விஷயத்தில் ஆத்திரம் கொள்ளக்கூடாது. இன்னமும் எமது இஸ்லாம் மதமும் அதன் வேதபோதனைகளும் மிகமிக உத்தமமானவைகளென்பதை பாகுபடுத்தி உமக்கு இன்னும் நன்கு உணர்த்த விரும்புகிறேன். கேட்பீராக:—

இஸ்லாமென்பதும் முழுதும் சாந்தியைபோதிக்கும் ஒரு சன்மார்க்கமாகும். இகத்தில் விசிராந்தியும், பரத்தில்மோக்ஷமும் அளிக்கத் தக்க தர்மவழியாகும். இதன் தத்துவமெல்லாம் இயற்கைக்குப் பொருத்தமானவைகளே யாகும். இதன் மூலபலன்தெய்வபக்தியிலும்நல்லனுஷ்டானங்களிலும், நித்திய வணக்கத்திலும் உத்தம குணத்திலுமே அமைந்திருக்கிறது.

இதனைத்தும் உள்ளவனே உண்மை இஸ்லாத்தை கடைப்பிடிப்பவனாவான். உத்தம நடத்தை. யில்லாதோனுக்கு இஸ்லாத்தில் எத்தகைய அனுகூலமும் கிடைக்கமாட்டாது. ஜாதிப் பெருமை, குல உயர்வு, பொருட்பாக்கியக் கண்ணியம், ஆக்ஷி உயர்வு என்பன ஒன்றும் இஸ்லாத்தில் கிடையாது. அரிய தர்மங்களை கடைப்பிடித்து உத்தமனாய் ஒழுகுபவனே அரசனினும் சிறந்தவனாவான். இவைப்போன்ற அரும் போதனைசங்கள் இஸ்லாத்தில்பலவுள. ஆனால்உங்களது ஹிந்துதர்மமோ இவற்றிற்கு முற்றும் முரணான விஷயங்களையே மேற்கொண்டிருக்கிறது. ஜாதிப் பெருமையும், வகுப்பு வேற்றுமையும், உயர்வு தாழ்த்தி என்ற பாகுபாடும், மக்களுக்கிடையே உங்களது வேதம் தான் உண்டு பண்ணி யிருக்கிறது. உதாரணமாய் யஜுர் வேதம் போதிப்பதாவது:--

"ஏ ஈஸ்வரனே! இந்த ஜகத்தில் வேதப் பிரசாரத்துக்காக உயர்குல பிராம்மணர்களையும், அரசியல் ஆக்ஷிப்புரிவதற்காக க்ஷத்திரிய ரஜபுத்தர்களையும், வாணிபம் விவசாயம் புரிவதற்கு தாழ்ந்த வைசியர்களையும், இவர்களுக்கெல்லாம் குற்றேவல் புரிந்து துன்ப மனுபவிப்பதற்கான நீசச் சாதியாரான சூத்திரர்களையும் சிருஷ்டிப்பாயாக" என்று யஜுர் வேத 3-வது அத்தியாயம் 5-வது சுலோகம் போதிக்கின்றது.

பார்த்தீர்களா! இதனால் என்ன விளங்குகிறது? ஒரு சாரார் உயர்ந்தவர்களென்றும், மற்றொரு சார்பினர் தாழ்ந்தவர்களென்றும் வேறொரு நபர்கள் மிலேச்சர்களென்றும்தான் விளக்கமாகின்றது. ஆகவே ஜனங்கள் ஹிந்து மதத்தில் உயர்வு, தாழ்த்தி யெல்லாப் பிறப்பை பொறுத்ததாய் இருக்கிறது போலும்! இது எத்துணை அநீதம்! பாபம்! வருணாசிரமபேதச்சுமையானது சூத்திரர்களெனப்படும் நமது தாழ்ந்த (?) சகோதரர்களை அழுத்தி முன்னேற வொட்டாமல் பாதாளத்தில் ஆழ்த்துவதானது கொடிதினும் மகாக் கொடிதாகும். மனிதர்களை ஏன் நான்கு வகையாக வகுக்க வேண்டுமோ? அதிலும் பிராம்மணசாதியினரை மாத்திரம் ஏன் உயர்க்க வேண்டுமோ? நான்

காவது வர்க்கத்தாரை ஏன் ஒடுக்க வேண்டுமோ? என்னே ஹிந்து மதத்தின் பாரபக்ஷத்தன்மை?

உண்மையை நோக்குமிடத்து எல்லாம் பிராம்மண சாதியாருடைய ஆதிக்கமாகவே ஹிந்து மதம் விளங்குகிறது. ஏனெனின், ஹிந்து வேதம், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் ஆகிய மூச்சாதியினரும் பார்ப்பண வர்க்கத்தாருக்கே கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென்று ஆக்கிணையிடுகின்றது. இது மானுஷ்ய இயற்கை வாழ்க்கைக்கு ஒவ்வாத முறையாகும். இது நிற்க அதர்வணவேத்தின் மற்றோர் அம்சத்தை சற்றே சிந்திப்போமாக.

"பிராம்மணர்களை தூஷிக்கும் சாதியாரும் அவர்களை அவமானப்படுத்துவோரும், அல்லது அவர்களிடமிருந்து வருமானம் பெறுவோர்களும் இரத்த நரகத்தின்வேதனையைஅடைவார்கள்"! (அதர்வணம், 5-19-3)

"பிராம்மணன் ஒரு பொருளை கேட்டு அதை கொடுக்காமலிருந்து விடும் மற்றச் சாதியினருக்காகவே நரகம்படைக்கப்பட்டிருக்கிறது." (அதர்வணம் 12-4-45)

'பிரம்மாவுடையமுகத்தினின்றும் பிராம்மணர்கள் ஜனித்தார்கள், தோட் புயத்தினின்றும் க்ஷத்திரியர்களும், தொடையினின்று வைசியர்களும், பாதங்களிளின்று சூர்த்திரர்களும் உதித்தார்கள்.' (யஜுர்வேதம் 31-11.)

உங்களது ஹிந்து மத வேதத்தைத்தழுவி வருணாசிரம தர்ம மென்ற பெயரால் பிராம்மணர்கள் மாத்திரம் எத்துணை தூரம் உயர்த்தப்பட்டும், சூத்திரர்களெனப்படும் சகோதர ஜாதியார் எம்மட்டு தூரம் தாழ்த்தப்பட்டு மிருக்கிறார்களென்பதை விவரிப்பதாயின், அஃதொரு கம்பாரமாயணத்துச் செய்கிற வியாக்கியானக் குவியல்களாகவே முடியும். அவற்றை சுருக்கிக் கூறுவதாயினும் ஓர் அராபிக்கதைக்கும்குறைந்ததாய் விடாது. மனுஸ்மிருதியின் கிரந்தாசிரியரோ சமரச சகோதரத்வம் என்பதொன்றையும் மனத்தில் கொள்ளாது அதர்ம நீதிகளையே போதித் திருக்கின்றார். எல்லோரை விட பிராம்மணர்களையே வானமளாவ உயர்த்திப்புகழ்ந்துப் பேசியுள்ளார்.

அவற்றை யெல்லாம் உங்களுக்கு தற்போது விளக்குவதெனின் காலமும் போதாது, இது சமயமுமன்று. இதற்குமுன் யான் எடுத்துக் காட்டிய இரண்டொரு மேற்கோள்களிலிருந்தே, உங்கள் ஹிந்து சமயம் பிராம்மண குலத்தாரை எத்துணை ஏதேச்சைப் புருஷர்களாக்கி விட்டு, இதர ஜாதியார்களை எம்மட்டு இக்கட்டிலும் கட்டுப்பாட்டிலும் இழிவிலுமாக்கி வைத்திருக்கிறதென்பது உள்ளங்கை நெல்லிக் கனிபோல் நன்குபுலனாகின்றது. இதுமட்டுமோ? பிராம்மணர்கள் எத்தகைய பாதகச் செயல்களையும் புரியலாமாம். இதர குலத்தாரை எத்துணை தீமைக்குள்ளாக்கினும் அஃது அவர்களுக்குக்கூடுமாம். என்னே! பாலகிருஷ்ணரே! அதர்வணமானது உங்கள் ஹிந்து மதத்துக்கொரு சிறந்த வேதமெனக் கருதப்படுகிறதன்றோ? அக்கிரந்தத்தில் பிராம்மண சாதியினரை எம்மட்டு தூரம் உயர்த்தியும் இதரர்களை எங்ஙனம் தாழ்த்தியும் நீதி வழுத்தப்பட்டிருக்கிறதென்பதற்கு ஓர் சான்றைமட்டும் கூறுகின்றேன். அதாவது:—

"ஒரு பிராம்மண குலமல்லாத ஸ்திரீக்கு பத்துப் புருஷர்களிருந்தபோதிலும் சரியே, ஒரு பிராம்மணன் சென்று அந்த ஸ்திரீயை பிடித்தழைத்துக்கொள்வானாயின், அப்பெண் பிராம்மணனுக்கே சொந்தமானவளாய் விடுதல்வேண்டும்."

(அதர்வனம் 8-17, 8.)

அன்பரே! மனுஷ்ய வம்சத்தினரெல்லோரும் ஏகேஸ்வரனாகிய ஆண்டவனால் படைக்கப்பட்ட மக்களாவர். ஆதலின், மன்பதைகளெல்லோரும் தமக்குள் சகோதரர்களாவர். எல்லோரும் ஆண்டவனின் முன் ஒரேவிதமான பக்த கோடிகளேயாவர். தர்மமும், நீதியும் இயற்கைவிதியும் இங்ஙனமிருக்க, பிராம்மணர் மிக உயர்ந்தவர்களென்றும், க்ஷத்திரியர் வைசியர்களெல்லாம் அந்தணருக்கு சற்றே தாழ்ந்தவர்களென்றும், சூத்திரர்கள் மிலேச்சர்களென்றும் பிராமணருக்குக் குற்றேவல் புரியவே படைக்கப்பட்ட அடிமைச் சாதியினரென்றும் உங்கள் வேத இதிகாசங்கள் அறைந்திருத்தலே எத்தகைய நீதியென்பதோ தெரியவில்லை. இதுதானா தர்மம்.

பாலகிருஷ்ணன்:—முல்லாஜியே! முஸ்லிம் பெரியாரே! இங்ஙனம் மனுஷ்யர்களை நான்கு ஜாதியினர்களாய் வகுத்திருப்பதற்குக் காரணமுண்டு. உலக மனுஷ்ய கோடிகளெல்லோரும் ஒரே இனத்தவர்களாயும் ஏக தொழிலாளர்களாயுமிருப்பின் உலகவியல் சரிவர நடைபெருதென்பதை முன்னிட்டே பகவான் மனுஷ்ய வம்சத்தினரை நான்கு வருணத்தினர்களாகச் சிருஷ்டித்துள்ளார். இதுதான் உலக வாழ்க்கைக்குரிய அறம். மேலும் இஸ்லாம் மதத்திலும் நான்குவித மனுஷ்ய சிருஷ்டிகள் இருப்பனவாய் கூறப்பட்டிருக்கிறதே. உங்கள் அல்லா ஒரு சாராரை அக்கினிச் சுவாலையினின்றும் இன்னொரு சாராரை மண்ணினின்றும், வேறொரு சாராரை நீரினின்றும்,மற்றொரு சாராரை காற்றினின்றும் சிருஷ்டித்ததாய்கூறப்படுவது உங்கள் இஸ்லாமிய வேதமுழக்கமல்லவோ? நெருப்பினாலான தேவர்களென்னும் மலாயித்துகள் நம்மினுஞ் சிறந்தவர்களாய், வானலோகத்தில் சுவர்க்காதிபதிகளாய் வதிக்கின்றனராம். இதற்கடுத்தபடியா ஜின்னுத்துகளெனப்படுவோர்களும் நம்மினத்தை விட சிறந்தவர்களெனப்படுகின்றனர். பார்த்தீர்களா? உங்களிஸ்லாத்தின் கோட்பாட்டிலும் இத்சகைய ஜாதி பேதம் இல்லாமலில்லை. இப்படி வருணசிரம தர்மம் இருப்பதுதான் உலக வாழ்க்கைக்கு பொருந்தியதாகும்.

முல்லாஜீ:—இதெல்லாம் தவருன விவாதம். ஒருபோதும் இவை இஸ்லாத்தின் ஜாதிபேத தர்மமாகா. மனுஷ்ய கோடிகளுக்கும், மலாயிகத்து, ஜின்னுத் எனப்படும் சூக்ஷ்ம சரீரிகளுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. மனுஷ்யர்கள் சிருஷ்டிக்கப்பட்ட மூலம் பொருளினின்றும் அவர்கள் படைக்கப்படவில்லை யாதலால் அவர்களையும் மனிதர்களையும் சம்பந்தப்படுத்தி ஜாதிபேதம் பாராட்டுவது சரியாகாது. இஸ்லாத்திலும் ஜாதிபேத மிருக்கிறதென்பது உண்மையாயின், மலாயிகத்துகளுக்குள்ளோ, அல்லது ஜின்னுத்துகளுக்குள்ளோ, அல்லது மானிடவர்க்கத்துச்குள்ளோ தனித்தனி உயர்ந்தோர் தாழ்ந்தோர்-என பிராம்மணர், சூத்திரர்களுக் கிடையே இருப்

பதேபோன்ற-வேற்றுமையன்றோ இருத்தல்வேண்டும்? அங்ஙனமொன்று இஸ்லாத்திலில்லாமையால் வருணகுல பேதமேயில்லை யென்பது நன்கு விளக்கமாகின்றது. உண்மையில் எங்கள் இஸ்லாத்தில் எந்த வர்க்கத்தினர், எந்த நபர், ஆண்டவனுக்கும் அவனது தர்மத்துக்கும் முற்றும் கட்டுப்பட்டுபரம பக்தர்களாய் நடந்து கொள்ளுகின்றார்களோ அவர்களே மற்றோரைக் காட்டிலும் சிறந்தவராவர். பூர்வத்தில் இப்லீஸ்அல்லது ஷைத்தான் எனப்படுவன் சிறந்த தேவபக்தனும் பகவானுக்கு முற்றும் கட்டுப்பட்டவனுமிருந்தமையால் தேவர்களாலெல்லாம் அவன்சிறந்தவனாகக்கருதப்பட்டான். பின்னர் அவன் ஆண்டவனின் ஒரு கட்டளைக்கு மாறுசெய்து விடவே அவன் எல்லாப் பிறவியினும் கீழ்த்தரமாய் தூஷணைக்குரியவனானன். இதனால் எவரும் ஜாதியினால் உயர்ந்தவராகார் என்பது இஸ்லாத்தின் இச்சான்றால் நன்கு விளக்கமாகின்றது. இவ்வாறு உங்கள் ஹிந்து மத வேதத்திலும் பிராம்மணர் தங்கள் தெய்வ பக்த ஒழுக்கம் என்பதால் உயர்ந்தார்களென்றும், சூத்திரர் அஃதின்மையால் தாழ்ந்தவர்களென்றும் காணப்படாமல், பிறப்பினால் தான் உயர்ந்தவர்களென்றும் தாழ்ந்தவர்களென்றும் எண்பிக்கப் பட்டிருக்கிறது. இது ஒருபோதும் தர்மமாகாது. பக்திமான்கள் உயர்ந்தோர்களென்பதும், துஷ்கிருத்தியர்கள் தாழ்ந்தோர்களென்பதுவுமே உண்மை தர்மமாகும். இதல்லாது, பிராம்மணர்களெனப் படுவோர் எத்துணை பாதகத்தை இழைத்த போதிலும், அவர்கள் புண்ணியர்களேயென்றும், எங்ஙனமொழுகிலும் அவர்கள் உயர்குலத்தோரென்றும் கூறுவது தான் சுத்த ஈனத்தனமான வாதமாகும்.”

என்று முல்லாஜீ அவர்கள்கூறி விளக்கிவருங்கால்நேரம் அதிகமாய் விட்டது. ஆகவே இன்றைய சம்பாஷணையை இத்துடன் தற்காலிகமாக நிறுத்திக்கொள்வதென்று முடிவு செய்து கொண்டனர். பின்னர் பாலகிருஷ்ணன் முதலியோர் வழக்கம்போல் முல்லாஜீயிடம் விடை பெற்றுக் கொண்டு சலாம் கூறி அவ்விடத்தை விட்டு புறப்பட்டு தம் இல்லம்

நோக்கிச் சென்றனர். எனினும் ருசிகரமான விவாதம் நிரம்பிய சம்பாஷணைத் தாகம் இன்னும் பூர்த்தியாய் தணியாமைக்கு மனத்திருப்தியின்றியே வீடு போய் சேர்ந்தனர்.

அத்தியாயம்—13.

மறுநாளும் பாலகிருஷ்ணன், சாவித்திரி, இவளின் தாய் ஆகியோர் வழக்கப்படி முல்லாஜீயின் சமுகத்தையணுகினர். சாவித்திரிக்கு ஓதி-மந்திரித்து முடிந்ததும், நேற்று அரைகுறையாய் விடப்பட்ட சம்பாஷணை ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. எனவே முதலில் முல்லாஜீயவர்கள் குறைவான தம் விளக்கத்தைக் கூறலானார்:—

"பொதுவாய் ஹிந்து மதத்தையும் இஸ்லாம்மதத்தையும் சீர்தூக்கிப் பார்க்குமிடத்து, பிறப்பால்தான் மனிதர்கள் உயர்கின்றன ரென்ற ஹிந்து மத சம்பிரதாயத்திலுள்ளவேற்றுமையும், ஒவ்வொரு வர்க்கமும் தம் தம் நேர்மையான ஒழுக்கத்தினால் தான் மேன்பதவி யடைதல் முடியுமென்ற இஸ்லாம் மத சமத்துவமும் நன்கு விளங்குகின்றன. இஸ்லாம் மதம் எவர்களை சிறந்தவர்களென்றும், உயர்ந்தவர்களென்றும் கூறுகிறதோ, அவர்கள் ஒழுக்க முறையின் அதற்குரியவர்களாகவேயிருத்தல் வேண்டும். எவர்களை தூர்க்கர்களென்றும், இழிவானவர்களென்றும் கூறுகிறதோ அன்னார் ஒழுக்கஹீனர்களாகவும், பெரும் பாதகர்களாகவுமே இருப்பர். மேலும் மனிதர்கள் ஒழுக்கத்தினால் தான் மேம்பதவி யடைவர் என்பதற்கு குர்ஆனில் பல ஆதாரங்களுமுண்டு அவற்றில் ஒரு சிலவாவன:—

(1) "உங்களின் மிகச் சிறப்புடையவர்கள் யாரெனின் ஆண்டவனிடத்தில் மிக பக்திமான்களாய் பரிணமிப்பவர்களே யாவர்" (குர் ஆன்.)

(2) "மனுஷ்யர்காள்! (உங்கள் நல்லொழுக்கத்துக்குப் பிரதி பலனாக) ஆண்டவனின் அருளைக் கொண்டே ஏக சகோதரர்களாக சிறந்து விட்டீர்கள்" (குர் ஆன்.)

(3) "உங்கள் பொருள்களோ, உங்கள் மக்கள்களோ ஆண்டவனிடத்தில் மேம்பதவியை யளிப்பதற்குரிய சாதன மாகா. ஆண்டவன் மீது நன்னம்பிக்கைக் கொண்டு நற்கரு மம் புரிபவர்களே சிறந்தவர்களாவர். இவர்களுக்கு இவர்கள் புரிந்த நற்கருமத்தை கொண்டு இரட்டிப்பான பிரதி பலன் உண்டு" (குர் ஆன்.)

இவற்ருல் இஸ்லாத்தில் ஏக சகோதரத்துவம் எத்துணை சிறந்து விளங்குகிற தென்பதை நீங்கள் தெள்ளற உணர்ந்து கொண்டிருப்பீர்க ளென்றே நம்புகிறேன். இதில் ஏதேனும் ஆக்ஷேபனை யிருந்தால் அதையும் தாராளமாய் கேளுங்கள். சமாதானம் கூறுகின்றேன்.

சாவித்திரி:—(குறுக்கிட்டு) பெரியாரே! உண்மையாகவா குர்ஆன் இத்துணை அரிய தத்துவங்களை போதிக்கின்றது! பெற்ற மக்களும் உற்ற சொத்துக்களும் ஆண்டவன் சன்னி தானமடைய ஒரு சிறு சாதனமுமாகாதென்றும், அவரவர் நற்கருமங்களே ஏற்ற சாதனமாகுமென்றும் குர்ஆன் உண்மை யில் போதிப்பதாயின் அது சிறந்த வேதமென்பதுஉண்மையே யாகும்.

முல்லாஜி:—அம்மணி! மெய்யாகவே குர்ஆன் இவ்வாறு போதிக்கின்றது. அதன் பல்லாயிர நீதிமொழிகளில் இவை ஒரு சிலதேயாகும்.

சாவித்திரி:—பெரியாரே! அப்படியானல், மாதா-பிதா-கணவர்-மக்கள்-உற்ருர்-உறவின் முறையார் இவர்களைப்பற்றி குர்ஆன் போதிக்கும் இதர போதனைகளையும் எனக்கெடுத்து விளக்கக்கோருகிறேன்.

முல்லாஜி:—உத்தமப் புத்திரி! பரிசுத்த உள்ளத்தோடு நீ வினவியதற்கு பதில் விளக்க நான் கடமைபட்டிருக்கிறேன். ஆனல் கால நிலை அதிகம் விசாலித்திராமையால் ஒரு சிலவற் றைமாத்திரம் கூற விரும்புகிறேன்.

"எவர் நன்மை புரிகின்ருரோ அவர் தன் சொந்த ஆத்மா னுகூலத்துக்காகவே புரிந்துகொள்கின்ருர். தீமையை புரிவா ராயின் அதுவும் அவர் பங்கிலேயே சாரும்." (குர்ஆன்)

"ஆண்டவனுடைய தியானத்தை விட்டும் உங்கள் பொருட் பாக்கியங்களும், மக்கள்-சந்ததிகளும் உங்கள் நிலையை குலைத்து விடாதிருக்கட்டும்." (குர்ஆன்)

இவைகளால் உண்டாகும் படிப்பினை யாதெனில் மனிதர் தம் ஆத்மானுகூல பரம வாழ்க்கைக்காக சுயமாகவே நற்கருமத்தின் மூலமாய் நற்சாதனத்தைத் தேடிக்கொள்ள வேண்டுமென்பதும், மனுஷ்ய வர்க்கத்துக்கு மிகப் பிரியமான மக்களும், பொருளுங்கூட ஆண்டவன் சன்னிதானத்தில்தர்க்காப் பையளிக்காதென்பதிவுமாகும். மேலும் குர்ஆன் கூறுவதாவது:—

"உண்மையாய் மனுஷ்யர்கள் நன்னம்பிக்கைக்கொண்டு நற்கருமங்கள் புரியாவிடின் பெருத்த நஷ்டத்துக் குள்ளானவர்களேயாவர். நல்லொழுக்கம் புரிந்தோர்க்கு அளவற்ற நற்சாதனானுகூலங்களுண்டு." (குர் ஆன்)

"ஒவ்வொரு பிறவியும் அதன் இயற்கைத் தன்மையின் படியே ஜனிக்கின்றது." (குர்ஆன்)

"தொழுகையைக் கடைப்பிடியுங்கள். தர்மத்தை யளியுங்கள். உங்கள் ஆத்மாவுக்கென்று (பரமவாழ்க்கைக்கான) சாதனங்களை முன் கூட்டியே க்ஷேமித்தனுப்புங்கள். இதைத் தான் நீங்கள் ஆண்டவனிடமிருந்து பெற்றுக் கொள்வீர்கள். உண்மையாய் ஆண்டவன் சுவர்லோகத்தையும் ஆழ்ந்து நோக்கும் மகா அறிஞனாகை யிருக்கின்றான்." (குர்ஆன்)

அன்பரீர்! இவைகளால் விளங்கும் இஸ்லாத்தின் அரிய தத்துவங்களை நான் விளக்க வேண்டிய அவசியமில்லாமலேயே தெரிந்து கொண்டிருப்பீர்கள்.

பாலகிருஷ்ணரே! என்றால் காலம் வீணாய் கழிவதாய்த் தாங்கள் மனத்துள் கொள்ளும் அதிருப்தி உங்கள் முகத்தால் தெரியவருகிறது. மேலும் தாங்கள் திருப்தியுறுவதாயின், விரிவின்றி இரண்டொரு நிமிஷங்களில் நம்மானுஷ்ய தினசரி வாழ்க்கையில் காணப்படும் சாதகம் பாதகம் இவைகளைப்பற்றி எமது திருகுர்ஆன் ஷரீப் யாது கூறுகிறதென்பதைக் கூறத்

துணிகின்றேன். தங்களுக்குச் சிரமமாவதானல் நான் இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

சாவித்திரி:—(குறுக்கிட்டு) முல்லாஜீ! தாங்கள் தயங்காமல் தாராளமாய் கூறலாம். இவற்றையெல்லாம் இன்று கேட்டாராய வேண்டுமென்றே சீக்கிரமாய் இவண் வரலானேம்.

இவ்வாறு சற்று துடுக்குற்ற தனமாய் சாவித்திரி முல்லாஜீயிடம் கூறவே இவளின் தாயும், கணவன் பாலகிருஷ்ணனும் இவ்விள நங்கையை சினங்கொண்ட பார்வையால் சிறிது வெறிக்சுப் பார்த்தனர். ஆனல் அதை அவ்விளங்கன்று இலக்ஷியஞ் செய்து கொள்ளவில்லை. முல்லாஜீப் பெரியாரோ, சாவித்திரியின் வற்புறுத்தலுக்கிணங்கி மீண்டும் கூறலானர்:—

முல்லாஜீ:—அன்பர்களே! இஸ்லாத்தின் மேன்மைகளைப் பற்றியும் அதன் உன்னத அமைப்பைப் பற்றியும் இதுகாறும் உங்களுக்கு ஒருவாறு கூறி முடித்து விட்டேன். அதையே மீண்டும் விரித்து உரைக்க வேண்டிய அவசியமில்லை. ஆனல் மானிட வாழ்க்கைக்குரிய ஒழுக்கங்களைப் பற்றியும், வைதீக சத்கிரியைகளைப் பற்றியும் வேதம் எவ்வாறு கூறுகிறது? எங்கள் குர்ஆன் ஷரீப் எவ்வண்ணம் போதிக்கின்ற தென்பதை இரண்டொரு ஆதாரங்களைக் கொண்டெடுத்துக்காட்டுகிறேன்:-

உங்களது மனுதர்ம சாஸ்திரம் கூறுவதாவது:—"பிராம்மணாகள் தங்களது மேன்மையையும் கண்ணியத்தையும் குறிக்கக்கூடிய நாமங்களாகவே சூட்டிக் கொள்ள வேண்டும். க்ஷத்திரியர்கள் தங்கள் பராக்கிரமும் சக்தியும் வெளியாகக்கூடிய நாமங்களாய் வைத்துக் கொள்ளல் வேண்டும். சூத்திரர்கள் இவ்வாறின்றி தங்களுடைய மிலேச்சத் தனத்தையும் அடிமைத்தனத்தை குறிக்கும் பெயர்களையே சூட்டிக் கொள்ளல் வேண்டும்." (மனு, 2—31)

இம்மனு வாக்கியத்தில் எத்துணை பக்ஷபாதமும் குரோத எண்ணமும் ஜாதிச்செருக்கு மிருக்கிறதென்பதை நான் உங்களுக்கு எடுத்துக் காட்டாமலேயே நீங்களே விளங்கிக்கொள்ளலாம். ஆனல் எமது இஸ்லாத்தின் திருவேதமான குர்ஆன்

இவ்விஷயமாய் யாது போதிக்கிறதென்பதையும்தாங்கள் உணர்ந்துகொள்ளல் நலம். ஆகவே குர்ஆன் கூறுவதாவது:—

"உங்களெல்லோரையும் ஒரே இனத்தினின்றுச் சிருஷ்டித்த ஆண்டவனை பக்தி பூர்வமாய் வணங்குங்கள்" (குர்ஆன்)

"உங்களுக்குள் எவரும் எவரையும் இழிவானநாமங்களை கொண்டு அழைக்க வேண்டாம்" (குர்ஆன்)

"உங்களெல்லோர்க்கும் முஸ்லிம் (முழுதும் கட்டுப்பட்டு நடப்போர்) என்று தான் ஆண்டவன் நாமஞ்சூட்டி யுள்ளான்" (குர்ஆன்)

"உங்களுள் எவரும் 'அவன் என் அடிமை—அவள் என் அடியாள்' என்று கூற வேண்டாம். நீங்களெல்லோரும்ஆண்டவனுடைய அடிமைகளே யாவீர்கள், உங்கள் பெண் வர்க்கமெல்லாம் ஆண்டவனுடைய அடியாள்களே யாவார்கள். ஆதலின் உங்கள் அடிமைகளை 'என் சிறுவர்களே! என் சிறுமிகளே!' என்று அழையுங்கள்" (புகாரீ, ஹதீஸ்)

நண்பர்களே! பார்த்தீர்களா! இஸ்லாத்தின் போதனைகளாகிய குர்ஆனின் வாக்கியங்களும் திருநபியின் திரு மொழிகளும் எவ்வாறு சமரஸ சகோதரத்வத்தைப் போதிக்கின்றது? அடிமைகளையும் அடிமைகளே! என்று அழைக்கக் கூடாதென்று கட்டளையிட்டு, குழந்தைகளே! என்று அன்போடு அழைக்குமாறு குர்ஆனில் கூறப்பட்டிருப்பதையும், உங்கள் மனு வேதத்தில், ஜாதிக்குத் தக்கவாறு உயர்த்தியும் தாழ்த்தியும் இழித்தும் நாமங்களை சூட்ட வேண்டுமென்பதையும் சீர் தூக்கிப் பார்க்குமிடத்து இஸ்லாத்தின் மானுஷ்ய வாழ்க்கைப் போதனையே மிகச் சிறந்ததென்பது நன்கு விளங்குகின்றதல்லவா?

மேலும் இன்னொரு விஷயம்: நீதி ஸ்தலங்களிலோ பஞ்சாயத்துகளிலோ சாக்ஷியம் கூறுவோர்களிடம் பிரமாணம் வாங்குவது உலக வழக்கம். அத்தகையோரெல்லோரிடமும் ஒரே விதமாய் பிரமாணம் வாங்குவதே ஒழுங்காகும். ஜாதிக்குத் தகுந்த விதமாயும், பாரபக்ஷத்தோடும் பிரமாணம் வாங்குவது அநீதமேயாகும். இத்தகைய அறத்தை கடைப்பிடிக்

கப்பட்டே இஸ்லாம் மதத்தில் பிரமாணம் வாங்கப்படுகிறது. ஆதலால் சாக்ஷியங் கூறுவோர் எத்தகைய உயர்ந்த அந்தஸ்தி லிருந்தபோதிலும்-அல்லது பரமதரித்திரிய நிலையில் கிடந்த போதிலும் எல்லோரும் "யான் எனது ஆண்டவனும் ஈமா னும் சாக்ஷியாக உண்மையை உள்ளபடி கூறுகிறேன்" எனப் பிரமாணிக்கஞ் செய்வர். இது தான் இஸ்லாமிய அனுமதியு மாகும். இங்ஙனமிருக்க உங்கள் ஹிந்து மத ஆசாரங்களி லும், பிரமாணிக்க சாத்திரங்களிலும் வருணகுல பேதத்துக் கேற்றவாறு சாக்ஷியப் பிரமாணம் வாங்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. உதாரணமாக.

"பிரமாணம் பெறுங்கால் பிராம்மணர்களை நோக்கி 'உண் மையை கூறுவீர்களாக!' என்று சொல்ல வேண்டும். க்ஷத் திரியர்களாயிருந்தாலும் இவ்வாறே சொல்லலாம். வைசி யர்களாயிருந்தால் "நீ உண்மையைக் கூறு. இன்றேல் பசு வையும் தானியத்தையும், ஸ்வர்ணத்தையும் களவாடிய குற்றம் உன் மீது சாரும்" என்று கண்டித்துச் சொல்ல வேண்டும். சூத்திரனாயிருந்தால் "அடே நீ பொய்யை சொல்வாயானல் எல்லா பாதகங்களுடைய பாபங்களும் உன் மீதே வந்து சாரும்" என்று அழுத்தமாய் கூற வேண்டும். (மனு வேதம் 8-88)

என்று இவ்வாறு பெரிதும் அதர்மத்தனமாய் பக்ஷபா தத்தோடு போதிக்கப்பட்டிருக்கிறது. இதுமட்டுமா? நான்கு ஜாதியார்களும் ஒரே விதமான குற்றத்தைச் செய்திருந்தா லும், அல்லது பொய்யான சாக்ஷியத்தைக் கூறினாலும் நான்கு ஜாதியாருள் ஜாதிவுயர்வுக்குத் தக்கவாறும், இழிவுக்கேற்ற வாறும் தான் தண்டனை விதிக்க வேண்டுமென்று ஹிந்து மத மனு நீதி நூல் கூறுகின்றது. ஆனல் இஸ்லாத்தில் இத்த கைய விபரீதத்தனமான அநீதிகள் ஒரு சிறிதும் போதிக்கப் படவில்லை. இவ்வாறு அநீதி வழங்குதல் மகாக்கொடிதென் றே கூறப்பட்டிருக்கின்றது."

முல்லாஜீப் பெரியார் எடுத்துக் காட்டிய இத்தத்துவ நீதிகளை யெல்லாம் பாலகிருஷ்ணனும் சாவித்திரியும் அவளின்

தாயும் வெகு ஆழ்ந்த சிந்தனையோடு செவி சாய்த்தனர். பால கிருஷ்ணனுக்கு மாத்திரம் இதில் அதிருப்தி காணப்பட்டது. இவன் முகக்குறியை கண்டுக்கொண்டமுல்லாஜீ அவர்மனதை சமாதானப் படுத்துவான் வேண்டி பின்வருமாறு கூற லானார்:—

முல்லாஜீ:—சகோதரா! நேரம் அதிகமாகிறதென்று நீங் கள் பிரலாபிக்கின்றீர்கள் போலும்! அஃதுண்மை தான். உங் களுக்கு போதிக்க வேண்டிய முக்கிய விஷயங்கள் இன்னுஞ் சிலவேயுள. இத்தகைய தத்துவங்களையும் எடுத்துக் காட்ட இதுவே சமயமெனக் கருதுகிறேன். அத்துடன் நீங்களெல் லோரும் இன்னுஞ் சற்று சம்மதிப்பீர்களேல் எஞ்சியவற்றை யும் கூறத் துணிகிறேன். உங்களுக்கு என் உரைகளால்சிரம முண்டாகுமாயின் இத்துடன் நிறுத்திக் கொள்ளுகிறேன்.

சாவித்திரி:—(இதுகாறும் முல்லாஜியின் அரிய வசனங் களில் தனது முழு சிந்தனையை செலுத்தி செவி சாய்த்திருந் தாள். முல்லாஜீ தமது பேச்சை நிறுத்திக் கொண்டது அவ ளுக்கு மாத்திரம் சற்று அதிருப்தியே. ஆதலின் கூறலுற் றாள்,) பெரியாரே! நீங்கள் தயங்க வேண்டாம். உங்கள் சம் பாஷணையால் எங்கட்கு கிஞ்சித்தும் சிரமமில்லை. கூறவேண் டியவற்றைத் தாராளமாய் கூறுங்கள்.

பாலகிருஷ்ணன்:—முல்லாஜீ! தங்கள் அரிய சம்பாஷ ணையில் எங்களுக்குப் பூரணத் திருப்திதான். ஆனால், நேரம் அதிகமாகி விடுகிறதே என்றுதான் கவனிக்கவேண்டியிருக் கிறது.

சா—தாய்:—ஆம்! நேரம் அதிகமாய்விட்டது! வீட்டில் படுக்கையிலிருக்கும் குழந்தை கிருஷ்ணன் ஒருகால் விழித் துக்கொண்டு அலரி அழுவான். ஆதலின் நாங்கள் சீக்கிரம் செ ல்லவேண்டும்.

சாவித்திரி:—குழந்தை அழுதால் என்ன முழுகிப் போகிறது? அப்படி அழுதால் வீட்டிலிருப்பவர் தேற்றிவைக் கமாட்டரர்களா? (முல்லாஜியை நோக்கி) பெரியோரே! நீங்கள் கூறவேண்டியதை கூறலாம்.

இவ்வாறு துணிவுற்றுக் கூறிய கருவிழியாளை அவளின் அன்னையும் கணவனும் அதிருப்தியான கூரிய பார்வையால் நோக்கினர். அதை அப்பெண் பொருட்படுத்திக் கொள்ள வில்லை. நங்கையின் விருப்பத்துக் கிணங்கியும், மற்றையோ ரின் சம்மதத்தைக் கருதியும் முல்லாஜீ தமது தத்துவ சம்பா ஷணையை ஆரம்பித்தார்.

"நண்பர்களே! பொதுவாய் விவாஹம், இல்லறம் ஆகிய வைகளைப்பற்றி இஸ்லாத்தின் போதனையும் வேதத்தின் வியாக் கியானமும் எங்ஙன மிருக்கிறதென்பதையும் சற்றே கவனிப் போம். மனுஸ்மிருதி கூறுவதாவது:—"வருணாசிரம அபேதம் எந்த சரித்திரத்திலும் கூறப்படவில்லை. ஆதலின் எத்தகைய அவசியம் நேரிட்டபோதிலும் எப்படிப்பட்ட துன்பம் நிகழ்ந்த போதிலும் உயர் ஜாதியினனான பிராம்மணன் மிலேச்சரான சூத்திரஜாதிப் பெண்ணை மணந்துகொள்ளல் கூடாது" (மனு 3-)

"ஒரு பிராம்மணனோ அல்லது, க்ஷத்திரியனோ அல்லது வைசியனோ தன்னினும் தாழ்ந்த ஜாதியாரின் பெண்ணை மணந்துகொள்ளுவானாயின் அவனும் அவனது மக்களெல் லோரும் சூத்திரர்களாகவே போய்விடுவார்கள்." (மனு, 3-15)

பிராமணனொருவன் சூத்திரர்களுடைய மஞ்சத்தில் இரு ப்பதால் அவனும் அவன் மக்களும் பிராமணத்துவத்தினின் றும் பிரஷ்டம் செய்யப்பட்டுப் போகின்றார்கள்" (மனு 1-17)

ஒரு சூத்திரப் பெண்ணுடைய அதரத்தை ஸ்பரிசிப்பதா லும், அத்தகையவளுடைய வாய் காற்று ஒருவன்மீது படுவ தினாலும் இவனும் இவனது மகளும்என்றென்றும்சுத்தியாக முடியாத நீசராய் போகிறார்கள்." (மனு 3-19)

மனுதர்ம சாத்திரத்தின் இவ்வாக்கியங்களினால், ஒரு மேலான சாதியானெனப்படுவன் சூத்திரப் பெண்ணை மணப்ப தால் அவனும் சூத்திரனாய் போகின்றானென்றும், அவனு டைய மததர்மமே நாஸமாய் போகிறதென்றும், பிறகு எவ் விதத்திலும் அவன் பரிசுத்தனாக முடியாதென்றும், நன்கு விளங்குகிறது. இவை, மேல் ஜாதி யென்பான் கீழ் ஜாதி

யென்பாரை மணந்து கொள்வதாலுண்டாகும் விபரீதங்களாம். ஆனால் கீழ் ஜாதியிலரான சூத்திரர் மேல் ஜாதியாரை மணந்து கொள்வதால் யாது நேருமென்பது தான் குழப்பமான பிரச்சினை. "சூத்திர ஆடவன் சூத்திரப் பெண்ணைத் தான் மனைவியாக்கிக் கொள்ளல் வேண்டும். இதர ஜாதியினரை மணக்க அவர்களுக்கு (சூத்திரர்களுக்கு) உரிமையில்லை." என்று (மனுவேதம் 9-157-ல் கூறப்பட்டிருக்கிறது.

ஆனால், எங்கள் இஸ்லாம்மதம் மனுஷ்ய வர்க்கத்தாரெல்லோருக்கும் ஒரே விதமான அந்தஸ்தையே அளித்திருக்கிறது. சமரஸம் சகோதரத்துவம் சம வாழ்க்கை என்பதெல்லாம் இஸ்லாத்தில் தான் அதிகம் வியாபித்திருக்கின்றன. ஆண்கள் பெண்களுக்கோ, பெண்கள் ஆண்களுக்கோ அனுவசியமாய் அடிமைப்பட்டுக் கிடக்க வேண்டுமென்ற அனுசாரம் இஸ்லாத்தில் ஒரு சிறிதுமில்லை. யாராயிருப்பினும் சற்குணமும் நல்லொழுக்கமும் பூண்டிருப்பரேல் அவர்களே மனுக்களில் சிறந்தவர்களாவர். எத்தகைய ஜாதி பேதமும் குல மேன்மையும் இஸ்லாத்தில் கூடவே கூடாது. இவ்வவிவேகத்தை யெல்லாம் எமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முற்றும் விலக்கியுள்ளார்கள்.

இத்தகைய சமரஸ வாழ்க்கையை தமது அனுஷ்டான மூலமாகவும் உலகத்துக்கு விளக்கிச் சென்றார்கள். உதாரணமாய் ஜைத்பின் ஹாரிஸா என்பவர் நாயகம்(ஸல்) காலத்தின் ஓர்அடிமையாக இருந்தார். அடிமைகளை மிக தாழ்வாய் நடத்தும் வழக்கம் பண்டைய அராபியரிட மிருந்ததென்பது வெளிப்படை. அத்தகைய செருக்கை போக்கி, அத்தகைய வழியாய் ஜனித்த தமது தங்கை ஜைனப் என்ற பெண்ணரசியை ஜைத்பின் ஹாரிஸாவுக்கு நாயகமவர்கள் (ஸல்)மணமுடித்துக் கொடுத்திருக்கிறார்கள். இதனால் தீர்க்கதரிசியின் வம்சத்துக்கும். அடிமைகளின் குலத்துக்கும் யாதொரு தாரதம்மியமுமில்லை யென்பதை ஸ்திரப்படுத்திக்காட்டிவிட்டார்கள். எல்லோருமோர் இனம், எல்லோரும் ஓர் குலம் என்பதை ஸ்திரப்படுத்திக் காட்டினார்கள்.

இன்னமும், ஹஜ்ரத்பிலால் (ரலி) என்பார் ஒரு கருத்த (ஹபஷீ) நீக்ரோ ஜாதியினராவர். பரம ஏழையும் கதியற்ற வருமாவர். ஆனால் ஆண்டவனுடைய சன்மார்க்கத்துக்கும் குர்ஆனுக்கும் முழுதும் கட்டுப்பட்டு நடக்கக்கூடிய சத்தியரா வர். இவருக்கு விவாக அவசியம் ஏற்பட்டபோது அக்கால அரபித் தலைவர்களெல்லாம் தங்கள் தங்கள் புத்திரிகாரத்தினங் களை அவ் வடிமைக்கு மண முடித்துத் தருவதாய் முன் வந்த னர். இஸ்லாத்தின் இவ்வரிய சமரஸ நோக்கத்தை கொடிய அரபிகளிடம் பரத்தியவர் எமது நபிகள் நாயகம் (ஸல்) அவர் களேயாவர்!

மேலும், உங்களில் சூத்திரனென ஒதுக்கித் தள்ளப் பட்ட ஒருவன் எமது இஸ்லாம் மதத்தை தழுவிக் கொள்வா னாகில், அவன் இஸ்லாமிய மக்களிடையே சமசகோதரனாகவே கருதப்படுவான். அவன் சத் ஒழுக்கஸ்தனாகயிருப்பானாயின், ஒரு ஒழுங்கீன முஸ்லிம் அரசனைவிட அவனே மேலானவனா வான். எத்தகைய வேற்றுமையையும் அவனுடன் எவரும் பாராட்டல் கூடாது. இது இஸ்லாத்தின் தாராள நோக்கமா கும். இஃதிங்ஙனமிருக்க, உங்கள் ஹிந்து தர்ம ஆசாரமோ, இதர மதஸ்தர்களை யெல்லாம் அசுத்தர்களென்று விலக் கித் தள்ளுகிறது. பிறமதஸ்தன் ஹிந்து தர்மத்தைத் தழுவவும் அருகதையில்லாதவனென்று ஹிந்து மதம் செறுக்குறுகிறது, அத்திப் பூத்ததே போல் எங்கேனு மொரு புறசமயத்தினன் ஹிந்துவாய் மாறி விட்டாலோ, அவனை ஹிந்து ஆசாரம் கேவலப்படுத்தி தாழ்த்துவதிலோ அளவில்லை. ஆனால் இஸ்லாத்தில் எத்தகைய நீச்சாதியின னும் சேர்ந்து கொண்டாலும் எல்லோரைப்போ லொருவனாக வே ஆய்விடுவான். இதுவே இஸ்லாத்தின் சமரஸம்.

சாவித்திரி:—(ஆச்சரியப்பட்டு) முல்லாஜீ! அப்ப டியா இஸ்லாத்தைத் தழுவிக் கொள்ளும் அன்னியனை உங்கள் சம யத்தில் கேவலமாய் கருதுவதில்லையா? எங்கள் தர்மத்தில் அப்படி யில்லையே?

முல்லாஜீ:—பெண்மணி! உண்மைதான். இஸ்லாத்துக்குள் வந்துவிட்ட எவரையும் எவரும் தாழ்மையாய் கருதல் கூடாது. இஸ்லாத்தில் இவ்வழக்கமேயில்லை. சூத்திரனுயினும் உயர்குல பிராம்மணனுயினும், எவனுயினும் சரியே இஸ்லாமின் வரம்புக்குள் பிரவேசித்து விடுவானுயின் அவன் எல்லா முஸ்லிம்களுடைய சகோதரனே யாவான். ஒரு முஸ்லிம் அரசன் பக்கத்தில் நின்று தொழுவதற்கும், அவன் சமபந்தி போஜனம் புரிவதற்கும், சம்மதம் ஏற்படுமாயின் மன்னன் மகளை மணப்பதற்கும் இவனுக்குரிமையுண்டு.

இதை மிக ஆழ்ந்து செவி சாய்த்துக் கேட்ட சாவித்திரியின் மனம் பலவாறு சிந்தனைக்குள்ளானது. ஆனல் அவள் ஒன்றையும் வெளியிட்டுக் கொள்ள வில்லை. அவ்விஷயமாய் அதிகமாய் முல்லாஜீயைக் கேட்டால் தனது அன்னையும் கணவனும் தன் மீது அதிருப்தி கொள்ளுவார்களெனக் கருதி முல்லாஜியை வேறு விஷயமாய் தூண்டினுள்.

சாவித்திரி:—சரி! அதிருக்கட்டும். உலக வாழ்க்கையைப் பற்றி இஸ்லாம் கூறுவதை சற்று விளக்குங்கள்.

முல்லாஜி:—நண்பர்களே! சந்தோஷம். உலக வியலைப் பற்றி இஸ்லாம் என்ன போதிக்கிறது. உங்கள் வேதம் புராணங்கள் என்ன கூறுகின்றன என்பதை விளக்க விரும்புகிறேன். சற்று செவி சாயுங்கள். முதலாவது உங்கள் மனுஸ்மிருதி கூறுவதாவது:—

"மிச்சமாய் போன உணவையும் கந்தலாய் போன வஸ்திரத்தையும் கழிக்கப்பட்ட தானியத்தையும் தேய்ந்துப்போன பாத்திரத்தையும் தான் சூத்திரர்களுக்கு கொடுக்கவேண்டும்." (மனு 10-125)

இஸ்லாமிய கிரந்தம் போதிப்பதாவது:—"நபிகள் நாயகம் (ஸல்) திருவாய் மொழிந்தருளி யுள்ளதாவது:—நன்னம்பிக்கை கொண்டவர்காள்! நீங்கள் எதைப் புசிக்கின்றீர்களோ அதினின்றுமே பிறர்க்கும் அளியுங்கள். எதை உடுத்துகின்றீர்களோ அதினின்றுமே அன்னியர்க்களியுங்கள். நீங்கள்

விரும்புவதையே பிறரின் விருப்பமென்று அனுஷ்டியுங்கள்." (புகாரி)

இன்னும் ஹிந்துமத தர்ம நூல் போதிப்பதாவது:-"சூத்திரர்கள் ஆற்றலுடையவர்களாயினும் பொருள் சேர்த்தல் கூடாது" (மனு 10-129)

மேலும் "ஒரு சூத்திரன் பொருள் சேமித்து வைத்திருந்தால், வேண்டுமாயின் பிராம்மணன் அதை பலவந்தமாய் கவர்ந்து கொள்ளலாம்" (மனு 8-417)

இவ்விஷயமாய் இஸ்லாத்தின் வேதம் கூறுவதாவது:— "நீங்கள் நேசிப்பவைகளினின்றுமே பிறருக்கு அளிக்காதவரை நீங்கள் புண்ணியத்தைப் பெற்றுக் கொள்ளமாட்டீர்கள்" (குர்ஆன்)

"ஆண்டவன் உங்களுக்களித்துள்ள பொருள் பாக்கியத்தினின்றும் ஏழை எளியோர்கட்கு தானதருமஞ் செய்யுங்கள்" (குர்ஆன்)

இவற்றினின்றுமே இஸ்லாமியவேதம்பரோபகாரவிஷயத்தில் எத்தகைய அறத்தைப் போதிக்கிற தென்பதை உணர்ந்து கொள்ளலாம். இதைப்போன்று பல நீதிகளை இங்கெடுத்துக் கூற வசதியில்லை. மேலும் இன்னும் உங்கள் மனுநூல் கூறுவதாவது:—

"சூத்திரர்களை பிரம்மாவானவர் பிராம்மணர்களுக்கு குற்றேவல் புரிவதற்காகவே படைத்திருக்கின்றார். ஆதலில், சூத்திரன் எத்துணை தனபாக்கிய முடையவனுயிருந்த போதிலும் சுயேச்சை பெற்று வாழுவது கூடாது." (மனு 8-413)

"அடிமையாகிய சூத்திரனை அவனுடைய எஜமான் சுயேச்சை யாக்க விரும்பிய போதிலும் அவன் உரிமை பெற்றவனுகான். ஏனெனின், குற்றேவல் புரிவதும் கட்டுப்பட்டுக்கிடப்பதுவுமே சூத்திரனுடைய ஜாதீய தர்மமாகும்" (மனு 8-414)

இவ்வநீத துராசாரத்தை எமது தீனுல் இஸ்லாம் முழுதும் கண்டித்துத் தள்ளுகிறது. இதற்கு பதிலாய் சர்வ மக்களும் சம சுதந்திரத்தோடு ஒத்துவாழ வேண்டுமென்றும் போதிக்கின்றது. அத்துடன் முஸ்லிம்களையும் இஸ்லாத்தையும்

போர் புரியும் விரோத நாஸ்திகர்களுடனும் கூட, அவர்கள் இணங்கி விட்டால், அவர்களுக்கு அபயம் அளிக்க வேண்டுமென்றும், சிறையிற் பட்டோரை உரிமையுடன் விட்டுவிட வேண்டுமென்றும், குர்ஆன் பல இடங்களில் போதித்திருக்கின்றது. அதில் ஒரு வாக்கியம் பின்வருமாறு:—

"ஏ முஸ்லிம்காள்! மாறுபட்டுப் போன விரோதிகளுடன் எதிர்த்தும் அவர்களை சிதைத்து முறியடித்தும், அவர்கள்மீது உங்கள் பூரண ஆதிக்கம் ஏற்பட்டு வெற்றி உங்களுக்குக் கிடைத்த போதிலும் அவர்கள் தணிந்து போனால், ஒன்றிருக்கில் பூரண உரிமை யளித்து விட்டுவிடுங்கள், அல்லது தண்டம் பெற்றுக் கொண்டு ஏதேச்சை யளித்து விடுங்கள்" (குர்ஆன்-ஆயத்தின் கருத்து)

போர்க்களத்தில் தங்களை எதிர்த்து இரத்தத்தை ஓட்டிய விரோதிகளையுங் கூட யதேச்சையாய் விட்டு விடவும், தண்டம் பெற்று அனுப்பி விடவும் அத்துணை தயாளத்தன்மை மிகுந்து எமது இஸ்லாம் நீதி போதிக்கின்றது. இன்னமும் (பண்டைக்கால ஆசாரப்படி) விலைக்கு வாங்கிய அடிமைகளையும், குற்றேவல் புரிபவர்களையும் அதிகம் சிரமப்படுத்தக்கூடாதென்றும், இவர்களை பூரண உரிமையோடு யதேச்சையாய் விட்டு விடவேண்டுமென்றும் இஸ்லாத்தின் போதனை கூறுகிறது. ஹிந்து மதாசாரத்தில் சூத்திரர் என்று ஒரு வர்க்கத்தைப் பிரித்து ஒடுக்கி வரும் வழக்கம் எம் இஸ்லாத்தில் கூடவே கூடாது. விலைக்கு வாங்கிய அடிமைகளை உரிமையாக்கி விட்டு விடுவதில் அபரிமிதமான புண்ணியமிருக்கிறதென்று குர்ஆன் போதிக்கின்றது.

எமது நபிகள் பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர்களும் கூறிபிருப்பதாவது:—"எந்த உத்தமன் ஒரு அடிமையை உரிமையாக்கி விட்டு விடுவானோ அவனுக்கு ஆண்டவன் அபரிமிதமான புண்ணியத்தை அனுக்கிரகிப்பதோடு, உரிமை விடும் விஷயத்தில் ஆதாரமாயிருந்த அவயவங்களையும் ஆண்டவன் நாகலோக வேதனையை விட்டும் ரக்ஷித்து விடுகின்றான்."

(ஹதீஸ்)

மேலும் ஒருமுறை நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் சமுகத்தில் ஒருவர் விஜயம் செய்து "ஏ! ஆண்டவனின் திருத்தூதரே! பரலோக வாழ்வில் என்னை யாதோர் ஆக்ஷேபனையுமின்றி சுவர்க்க லோகத்திற் சேர்த்து வைக்கக் கூடிய நற்கருமமொன்றை எனக்குக் காட்டிக் கொடுங்கள்" என்று வினவினார். நாயகம் (ஸல்) அதற்கு பதிலாய் 'நண்பரே! அவ்வாறாயின் உன்னிடம் கட்டுப்பட்டுள்ள அடிமையை உரிமையாக்கி விட்டு விடுவீராக'. என்றுகூறினார்கள்.

இதிலும் மனுஷ்ய வர்க்கத்தார் பிறர் எத்தகைய சாதியினராயிருப்பினும் எல்லோருடனும் விசுவசகோதரத்வமுடையவராய் வாழ வேண்டுமென்று காணப்படுகிறது. இவ்விஷயமாய் குர்ஆன் இன்னமும் கூறுகிறதாவது:—

"மானிட வாழ்க்கையில் பரிபக்குவமடைவதற்கிடையே உள்ள கொடிய தடையை நீக்குதல் யாதென்பது உமக்குத் தெரியுமா? அது தான் அடிமைகளை உரிமையாக்கி விட்டுவிடுவதாகும். (குர்ஆன் ஆயத்தின் கருத்து)

இவ்வுலகில் சமத்திவம் சகோதரத்வத்தை ஏகமாய் போதிக்க அவதரித்த எமது நபிகள் நாயகம் (ஸல்) இன்னமும் "முஸ்லிம்களே! அடிமைகள் விஷயத்தில் ஜாக்கிரதையாயிருந்து கொள்ளுங்கள். அவ்வெளியோர்களை கடுமையாய் நடத்தாதீர்கள்." என்று கூறியிருக்கின்றார்கள்.

அன்பர்களே! இன்னமும் இப்படிப்பட்ட சகோதரத்வம் மிளிர்ந்திலங்கும் நன்னீதி போதனைகள் இஸ்லாத்தின் கொள்கை, வேதம், ஆசாரம், கிரந்தம், மார்க்கச் சட்டம் ஆகிய யாவற்றிலும் மிக தாராளமாய் எடுத்தோதப் பெற்றிருக்கின்றன. உங்களுக்கு நேரமாகிறதென்பதைக் கருதியே இரண்டொன்றை சுருக்கமாய் எடுத்துக் கூறத்துணிந்தேன். ஒவ்வொன்றையும் விளக்கமாயும் உதாரணங்களோடும் கூறவேண்டுமாயின் அதற்கிது நேரமில்லை. ஆதலின் இன்னும் கூடியமட்டும் சுருக்கமாக எமது இஸ்லாம் இலௌகிகத்தைப்பற்றி யாது கூறுகின்றது? உங்கள் வேதப் புராணங்கள் யாது கூறு

கின்றன? வென்பதையும் இக்காலே சற்று நீங்கள் செவி சாய்ப்பீர்களேல் கூறிவிட விரும்புகிறேன்.

சாவித்திரி:—பெரியோரே! இப்போது நேரம் அதிகமாய் விடவில்லை. ஆகவே கூறவேண்டியவைகளை சுருக்கமாயும் விளக்கமாயும் எங்களுக்குப் போதியுங்கள் என்று கூறினுள். இம்மங்கையின் ஆர்வத்தைத் தடுக்க முடியாதவர்களாய், விருப்பமில்லாத பாலகிருஷ்ணனும் சாவித்திரியின் தாயும் மௌனமாயிருந்து விட்டனர். எனவே முல்லாஜீ கூறலானுர்:—

"உயர்வு தாழ்வு என்னும் விஷயத்தில் எமது இஸ்லாம் எத்தகையோர் விஷயத்திலும் எள்ளத்துணை தாரதம்மியமும் வைக்கவில்லை. இஸ்லாத்தின் மக்களான அரசனும் ஆண்டியும் அடிமையும் அதிபனும் ஊழியனும் எஜமானும் எல்லோரும் ஏக அந்தஸ்தை யுடையவர்களே யாவர். எல்லோரும் ஒரேவித வரம்பையே கடைபிடிக்க வேண்டியவர்களாவர். இவ்வுலகில் இஸ்லாத்தின் ஜோதி ஏற்படாதமுன்னர்பண்டைச்சமூகத்தினரெல்லாம் சமத்துவமென்பதை கடைப்பிடியாது உழன்றுவந்தனர். தீயகாரியங்களைப்புரிந்துவிடும் குற்றவாளிகளைஅவர்கள் ஜாதிபேத ஆசார உயர்வு தாழ்வுக்கேற்றவாருக தண்டனையிடும் வழக்கம் அவர்களுக்கிடையே இருந்து வந்தது. தாழ்த்தப்பட்ட வகுப்பாரை மிருகத்தினும் அதிக கேவலமாகவும் நடத்துவர். இத்தகைய பக்ஷபாதகமான துற்வழக்கத்தை சமரஸம் சகோதரத்வம் சமத்துவம் என்னும் கோடாரிகளைக் கொண்டு எமது பரிசுத்த இஸ்லாம் தான் முதன் முதல் கெல்லி எறிய ஆரம்பித்தது. தீமையிழைத்தோரின் குற்றத்துக்கேற்றவாறே அவர்களுக்கு தர்மமான தண்டனை விதிக்கவேண்டுமென்ற சீரிய ஒழுக்கத்தை இஸ்லாமிய உலக மக்களுக்குப் போதித்தது. இது சம்பந்தமாய் குர்ஆனில் பின்வருமாறு ஒரு திருவாக்கியம் காணப்படுகின்றது. அதாவது:—

"ஆத்மாவைக் கொன்றவனிடம் ஆத்மாவைப் பழிவாங்கலாம். (அவ்வாறே) கண்ணுக்குக் கண்ணையும் நாசிக்கு நாசியையும் பற்களுக்கு பற்களையும் பகரமாக வாங்கலாம். ரணகாயங்கட்கும் பழியுண்டு." (குர்ஆன்)

குர்ஆன் ஷரீபின் இவ்வாக்கிளையானது ஒரு ஜாதியாருக்கு மட்டுமென்றில்லே. ஆனல், அரசனுயினும், ஆண்டியாயினும், படித்த மேதாவியாயினும், கல்லாத கசடனுயினும் எல்லோருக்கும் இந்த ஏகமான சட்டமானது சார்ந்ததாகும். ஒரு மன்னாதி மன்னன் ஒரு குற்றமிழைத்தால் கடவுளிடம் எத்தகைய தண்டனைக்காளாவனே, அதே தண்டனைக்கே அக்குற்றமிழைத்த பரமதரித்திரியனும் இலக்காவான். இச் சமரஸமான ஐக்கவரம்பே மக்களெல்லோரையும் சமத்துவத்திலாக்குவதற்கு போதிய சாதனமாய் அமைந்திருக்கிறது. இஸ்லாத்தின் தீர்க்கதரிசியான எமது நபிகள் எம்பெருமானர் (ஸல்) அவர்களும் புராதனப் பெரியார்களும் இத்தகைய சமத்துவ சட்டங்களையே கடைப்பிடித்து சமரஸமாய் இவ்வுலக வாழ்க்கையை நடாத்திச் சென்றுள்ளார்கள். இத்தகைய சம நிகழ்ச்சிகளில் இரண்டொன்றை இங்குகுறிப்பிடுகின்றேன்:—

(1) ஒருமுறை குரைஷ்வகுப்பார்களில் ஒருசிலர்மூர்க்கத்தனமாகியும், நபிகள்பெருமானரை (ஸல்) வம்புக்கிழுத்தலான நோக்கங் கொண்டவர்களாகியும் நபிநாயகத்தின் திருச்சமுகத்துக்கேகி “ஏ! நபியே நாங்களெல்லாம் திருடினல், தூற்றினல், துன்புறுத்தினல், துஷ்கிருத்திய மிழைத்தால், அதற்குரியவாறு தண்டனை விதிக்க வேண்டுமென்று கூறுகின்றீரே? இச்சட்டம் எங்களுக்கு மாத்திரம் தானு? உங்களைச் சார்ந்தோருக்குக் கூடவா? என்று கடாவினர். அதற்கு லோக குருவாகிய நம் நபிகள் திலகமவர்கள் (ஸல்) வெகு சாந்த வதனத்தோடு, இச்சட்டம் எல்லோருக்கும் பொதுவானதே யாகும், எனக்கும் அதுவே. இன்னமும் “ஆண்டவன் மீது பிரமாணஞ் செய்து கூறுகின்றேன். நீங்கள் போற்றும் முஹம்மதின் (என்) அரிய புத்திரியாகிய பாதிமா களவு புரிந்து விடுவாளாயின் சமூகாசாரப்படி அவளது கரத்தை தரித்து விடவும் நானே உத்திரவிடுவேன்” ஆகவே இச்சட்டம் எவராயினும் எல்லோருக்கும் சமமானதே யாகும்” என்று பதிலிறுத்தார்கள். (ஹதீஸ்)

(2) ஒரு முறை அபூமஸ்ஊத் அன்ஸாரி யென்ற நாயகத் தோழர் தமது அடிமையை அதிகமாய் அடித்துக் கொண்டிருந் தார். அக்காலே:—'ஏ! அபூமஸ்ஊதே! அந்த அடிமையைஇவ் வாறு தண்டிக்க எவ்வளவு உரிமை உமக்கிருக்கிறதோ,அதைக் காட்டினும் உம்மை இதற்காக கடினமாய்தண்டிக்க அதிகமான உரிமை ஆண்டவனுக்கிருக்கிற தென்பதை மனதிலிறுத்திக் கொள்வீராக' என்ற சப்தம் பிறகே யிருந்து கேட்டது.

அபூமஸ்ஊத் திரும்பிப் பார்த்தார். உலகத்துக்கு நபி யான ரஸூல்லாஹ் (ஸல்) அவர்கள் நின்று கொண்டிருந்த னர். எனவே அந்த நாயகத் தோழர் மிகவும் அஞ்சியவராய் பகவத் பயம் மேலிட்டு நபிகள் பிரானை நோக்கி "ஆண்டவ னின் தூதரே! தாங்கள் போதித்தது உண்மையே. ஆண்டவ னுக்காகவென்று இந்த என் அடிமையை உரிமையாக்கிவிட்டு விடுகிறேன்" என்று கூறி அந்த அடிமையைஅனுப்பிவிட்டார். இதற்காக நபிகள் நாயகம் (ஸல்) அந்த அபூமஸ்ஊதை ஆசிக் கூறி வாழ்த்தி, நண்பரே! இத்தயாள சிந்தைக்காகவும் தர்மத் தை கை கொண்டதற்காகவும் ஆண்டவன் உமக்கு சுவர்க்க லோகப் பதவியை அளித்தருள்வானாக!" என்று பிரார்த் தித்தார்கள். (அபூதாவூத்)

(3) நபிகள் எம்பெருமானார் திருத்திலகமவர்களது திரு ச்சமுகத்தில் பல தோழர்களும், கலீபா உமர் (ரலி), ஹஜ்ரத் பிலால், முதலியவர்களும் கூடியிருந்த சமயத்தில் உமர் (ரலி) அவர்கள் ஹஜரத் பிலால் (ரலி) அவர்கள்மீது ஏதோ காரணத் தின் நிமித்தம் சினந்து "ஏ பிலாலே! நீ நீக்ரோஜாதி (ஹபஷீ) க்குப் பிறந்தவனும் ஒரு அடிமையுமல்லவா?" என்று இகழ்ந்து கூறினர். இக்கொடும் பதத்தைச் செவியுற்ற உலக தயாளர் தீனபந்து நபிகள் நாயகமவர்கள்அதிருப்தியடைந்து 'ஏ உமரே! இத்தகைய அவிவேகத்தனமான வார்த்தைக்காக ஆண்டவன் பால் பாபமன்னிப்புத் தேடிக் கொள்வீராக. அடிமையாயினும் ஒருமுஸ்லிம் சகோதரரை இவ்வாறு கூறுதல் தகுமா?" என்று கண்டித்தனர். பகவத் பக்தியிற் சிறந்த உமர்பாரூக் (ரலி) அவர்கள் மிகவும் மெய் சிலிர்த்தும் பதறிப் போனர்கள்.

ஆகவே ஆண்டவனைப் பணிந்து மண்மீது வீழ்ந்து வெகு நேரம் வரை அங்ஙனே கிடந்தார்கள். எழுந்திருக்குமாறு பலர் கூறியும், என்னால் தூஷிக்கப்பட்ட பிலால் என்னை அவர் தம் காலால் தட்டினால்தான் நான்எழுவேன்என்றுகூறினார்கள். அப்படிவாதத்துக்காக பிலால் (ரலி)யும் அவ்வாறே செய்யவேண்டியவரானார். என்னே! பெரியார்களின் சமத்துவ நோக்கம்!

(4) அபூஷஹமா என்பவர் ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய செல்வப் புதல்வராவர். இவர் ஒரு முறை மதுபானம் செய்த குற்றஞ் சாட்டப்பட்டு கலீபாவான தந்தை உமரிடம் கொண்டு வரப்பட்டார். நீதி வழுவா செங்கோல் செலுத்துவதில் சிறந்தவரான கலீபா உமர் (ரலி) இஸ்லாத்தின் புராதனச் சட்டப்படி பாரபக்ஷம் பாராட்டாது தமது கரத்தாலேயே சாட்டை கொண்டு அபூஷஹ்மாவுக்கு100 அடிகள்கொடுத்தார். முதலில்ஐம்பது அடிகள் ஓயாது விழவே அப்புத்திரன்நிலைமை பேதப்பட்டு பரிதபிக்கக்கூடியதாய் விட்டது. அக்காலைதந்தை உமர் (ரலி) தமது தனயனை நோக்கி துக்கமேலீட்டால் கூறலானார்:—“மைந்தா! ஆண்டவனுடைய சட்டத்துக்கும் சன்மார்க்கத்துக்கும் நான் கட்டுப்பட்டு நடக்கின்றேன். நீ கலீபாவின் புத்திரனாயிருக்கிறாய் என்ற தாக்ஷிண்யத்துக்காக உனக்கென்றொரு தீர்ப்பைப் பிறப்பிக்கஇயலாதவனாயிருக்கின்றேன். ஆதலின் நீயும் இச்சட்டத்துக்கு சிரஞ்சாய்ப்பாயாக!என்று எஞ்சிய சாட்டை யடியையும் மைந்தன் மீது பிரயோகித்தார். அந்தோ! இத்துணை அடிகளை தாங்கமாட்டாத இளமைந்தன் ஆவியை நீத்துப் பரகதி யடைந்தான். என்னே! பண்டைப் பெரியார்களின் மார்க்க பக்தி!

அன்பர்களே! இங்கொரு கருத்தை கவனிப்போமாக. கலீபா உமரோ சர்வாதிக்கமும் பெற்று, அரபியர்களுக் கெல்லாம் சிறந்த குடியரசுத் தலைவராய் விளங்கியிருந்தார். இவர் தமது மைந்தரை தண்டிக்காமல் மன்னித்து விட்டாலும் கேட்பார் ஒருவருமில்லை. ஆனால், சமரஸமான இஸ்லாமிய சட்ட திட்டங்களுக்கு அபகீர்த்தியும் தன்மீது வசைபாணமும் நேரக்கூடாதென்பதை பெரிதாய் கருதியே தமது கடமையை பூர்த்

திப்படுத்தலானார். வைதிக சாம்பிரதாயத்துக்காக தம் புதல்வரின் ஆவியையும் அர்ப்பணம் செய்தார். ஆகவே இவற்றால் இஸ்லாத்தின் சமரஸம் சகோதரத்வம், சமத்துவம் என்பன நன்கு விளங்குவதை கிரகித்துக் கொள்வோமாக.

நண்பரீர்! இஸ்லாமிய சமத்துவ சம்பிரதாயத்தை இதனால் நன்குணர்ந்துகொண்டிருப்பீர்கள்.உங்கள் இந்துமதவேத தர்மங்கள் இவ்விஷயத்தை யொட்டி எங்ஙனமிருக்கிற தென்பதையும் சற்றே தெரிந்து கொள்ளுவீர்களாக.

"பிராம்மணர், க்ஷத்திரியர், வைசியர் ஆகிய முச்சாதிகளில் எவரையேனும் ஒரு சூத்திர ஜாதியான் தூஷித்து வைவானாயின், அவனுடைய நாக்கை அறுத்துப் போடுதல் வேண்டும். ஏனெனின் இவன் பிறப்பால் எல்லா ஜாதியாரைவிட கேவலமானவனாவான்" (மனு 8-270)

நீசச்சாதியான் பிராம்மணரையோ க்ஷத்திரியனையோ,வைசியனையோ எந்த அவயவத்தால் அடிக்கின்றானோ அவனுக்கு அவ்வயவத்தை துண்டித்து போடுதலே அதற்குரிய தண்டனையாகும்" (மனு 8-279)

"நீசச் சாதியைச் சேர்ந்த ஒருவன் உயர் ஜாதியினர் மீது காரியு மிழ்வானாயின் அந்த நீசனுடைய இரு கரங்களையும் துண்டித்து விடுதல் வேண்டும். மூத்திரத்தை மேல் ஜாதியாரின்மீது போடுவானாயின், அந்த நீசனுடைய மர்மஸ்தானத்தை அறுத்தெறிதல் வேண்டும். மலத்தை அள்ளி எறிவானாயின் அவனதுமலத்துவாரத்தை துண்டித்து விடுதல் வேண்டும்" (மனு 8-282)

வெட்கம்! வெட்கம்! இத்தகைய மூர்க்கத்தனமானவும், நீசத்தனமானவும் கூற்றுகள் ஹிந்துமத மனுநீதி நூலிலும், வேறு புராண இதிகாசங்களிலும் காவியங்களிலும் ஏராளமாய் கணக்கற்று மலிந்துள்ளன. அவற்றை யெல்லாம் இங்கெடுத்துக் கூறுவதெனில் காலமும் போகாது. நிற்க, அவைகளினின்று வெளியாவது, தாழ்த்தப்பட்ட ஜாதியாரின் பரிதாப கதியும், உயர்ந்த ஜாதியாரெனப்படுவரின் பாரபக்ஷ கட்டுப்பாடும் வைதிக சாகசமும் தான்.ஹிந்துமதம்மட்டும்தான்தாழ்ந்த

வகுப்பாரை மிருகத்தினும் அதிக கேவலமாய் பாவித்து வருகின்றது. ஒவ்வொரு சாராரையும் பிரித்து வருண பேதத்தை உண்டாக்கி பிணக்குப்படுத்துவதே அதன் நோக்கம் போலும்.

• • •

முல்லாஜி அவர்கள், தாம் கூறுவதை யெல்லாம் கேட்டுக் கொண்டு ஆக்ஷேபிக்க வகையற்று அருகேவீற்றிருந்த பாலகிருஷ்ணனை நோக்கி, அன்பரே! உம்மை யொரு அபிப்பிராயம் கேட்க விரும்புகிறேன். நான் ஒருவாறு எடுத்துக் காட்டிய இத்துணை ஊழல்களும்மலிந்த ஹிந்துமத ஆசாரத்தையும், உலக மக்களுக்கெல்லாம் மெய்ஞ்ஞான கலங்கரை விளக்கமாய்ஒளிரும்இஸ்லாத்தின்சமத்துவ நல்லாசாரத்தையும் சீர்தூக்கி நோக்குமிடத்து எந்த மதம் சத்தியமானதாயிருக்குமென்று கருதுகின்றீர்? இரண்டில் எது மானுஷ்ய தர்மவாழ்க்கைக்கு முரண்பட்டதா யிருக்கிறது? நண்பரே! நீர் பகுத்தறிவுடைய புத்திசாலியாய் இருக்கின்றீர்! ஆண்டவன் உமக்கு போதிய கல்வியையும் தீக்ஷண்ய ஞானத்தையும் அளித்துள்ளான். மேலும் சத்தியம் இது. அசத்தியம் இது, சன்மார்க்கம் இது, துன்மார்க்கம் இது, என பகுத்தறிந் துணர்ந்து ஒழுகி இகத்திலும் பரத்திலும் பரிபூரண விமோசனத்தை யடைய வேண்டுமென்பதற்கே வழிகாட்டியாக அறிவு நமக்கு ஆண்டவனால் அருளப்பட்டுள்ளது. ஆகவே ஹிந்து மதம்-இஸ்லாம் மதம் இவ்விரண்டில் மானுஷ்ய வாழ்க்கைக்குஅவசியமானது எதுவென்பதை நீங்கள் மூவரும் இதுகாலை ஐயமறத் தெரிந்து கொள்ளாதிருத்தல் முடியாது. மேலும் இதுகாறும் நான் நெடுக பிரஸ்தாபித்தவற்றுள் எள்ளத்துணையும் என்சொந்த உள்ளத்தினின்று கற்பனை செய்து கூறியதல்ல வென்பது முக்காலும் முழுதும் திண்ணம்.

அன்பர்களே! இன்னமும் உங்களுக்கு ஒரு விஷயம் கூற விரும்புகிறேன். இதுகாறும் நான் கூறியதில் ஏதேனும் இட்டுக் கட்டியவை இருக்குமென உங்களுக்கு சமுசய மேற்படுமாயின் நானல்லாத வேறு இஸ்லாமிய மேதாவிகள்-உலமாக்களிடம் சென்று தீர விசாரித்தும் அறிந்தும் கொள்ளுங்கள்.

இன்னும் எமது மத விஷயமாய் ஏதேனும் அதிகமாய்த் தெரிந்துகொள்ள விரும்புவீர்களாயின், என்னாலானமட்டும் தாராளமாய்த் தெரிவிக்கவும், அதற்கான வேறு ஏற்பாடுகளைச் செய்யவும் முழு சம்மதத்தோடு காத்துக்கொண்டிருக்கின்றேன். ஆனால், இரண்டில் ஒன்றில் சத்திய சன்மார்க்க மிதுவென தீர்க்கமாய்த் தெரிந்துகொள்ளாது நீங்கள் வெறுமனே இரண்டின் மீதும் வெறுப்புக்கொள்ளக் கூடாதென்றும் வேண்டிக்கொள்ளுகிறேன். இம்மட்டே இப்போது நான் உங்களுக்குக் கூறவேண்டியவை."

அத்தியாயம்—14.

முஸ்லிம் மேதாவியான முல்லாஜியவர்கள் கூறிவந்த அரிய தத்துவாம்சங்களையெல்லாம், நம் தீக்ஷண்ய ஞானவதியான சாவித்திரி மிக ஆழ்ந்து கேட்டுக்கொண்டு வந்தாள். அவளையும் அறியாது இயற்கையாகவே அவளுக்கு இஸ்லாத்தின் மீதும், அல்லாஹ்வின் மீதும், முஹம்மத் நபி நாயகம் (ஸல்) அவர்கள்மீதும் பரிசுத்த குர்ஆன் ஷரீபின்மீதும் அபரிமிதமான பக்தி விஸ்வாசம் ஜனித்துப் பிரவகித்தது. எனவே முல்லாஜி அவர்களின் வாயினின்று அல்லாஹ்வின் திருநாமமும் முஹம்மத் நபி முதல் இதர நபிமார்கள் பெயர்களும் உச்சரிக்கப்படுங்கால் மிகவும் மரியாதையோடு பக்தி பூர்வமாய் சிரஞ்சாய்த்துக் கொள்வாள். மனத்தினுள்மட்டும் அந்நாமத்துடையோர்க்கு வந்தனையும் புரிவாள். ஒரு சில சந்தர்ப்பங்களில் கண்ணீர் வடித்து மனதை பக்தியின் பக்கம் ஈர்த்துச்செல்வாள். மேலும் முல்லாஜீ அவர்கள் தமது அரிய சம்பாஷணையை முடித்துக்கொண்டதும், இளநங்கையாம், நம் சாவித்திரி முல்லாஜியை நோக்கி துணிவுடன் தனது உள்ளக்கிடக்கையை வெளியிடத் தொடங்கினாள்.

சாவித்திரி:—எனது ஞான குருவான முல்லாஜீ அவர்களே! தாங்கள் இதுகாறும் கூறிவந்த மிக சத்தியமான விஷயங்கள் உண்மையென்று யார் ஏற்றுக்கொண்டாலும் கொள்ளாவிடினும், அவை முற்றும் மிக சத்தியமான

வைகளே என்பதை நான் என் பிரமே பூர்வமாய் ஒப்புக்கொள்ளுகிறேன். மேலும் முல்லாஜீயவர்களே! எங்கள் மதமான ஹிந்து தர்மத்தின் வேதப் புராண இதிகாசங்கள் பலதையும் நான் என்னுலானமட்டும் ஆராய்ச்சி செய்திருக்கிறேன். ஆகவே, தாங்கள் இதுபோழ்து போதித்தவைகளிலிருந்து அவ்வேத இதிகாசங்களைக் காட்டினும் உங்கள் இஸ்லாமிய திருவேதமான குர்ஆனே மிகமி உயரிய விதமாக போதிக்கின்றதென்பதையும் முழுமனதுடன் ஏற்றுக் கொள்ளுவேன். மேலும் பெரியாரே! எனது ஒரு ஆவலை தாங்கள் பூர்த்தி படுத்துவீர்களென நம்புகிறேன். அதாவது:—எல்லா வேதத்திலும் சிறந்த வேதமான குர்ஆன் ஷரீபை என் கரத்தில் கொடுங்கள். அதை என் கண்களிலும் இருதயத்திலும் பூர்ண பக்தியோடும் ஒத்திக் கொள்ள விரும்புகிறேன்.

(இதுகாறும் எதிர் பார்த்திராதபடி சாவித்திரியின் வாயினின்றும் வெளிப் போந்த இவ்வசனங்களைக் கேட்ட பால கிருஷ்ணனும் அவன் மாமியாரும் திக்பிரமை அடைந்து விட்டனர். சாவித்திரியின் முகத்தை விழித்து விழித்து பார்த்தனர். சாவித்திரியின் புத்தி ஸ்வாதீனமற்றுப் போய் விட்டதாகவும், அவளது அறிவு புரண்டு விட்டதாகவும், இதுகாறும் சிறுகச் சிறுக இருந்து வந்த பைசாச தோஷ சேஷ்டையானது இன்று வரம்பைக் கடந்து விட்டதாகவும் தவறாக கருதி கொண்டனர். மேலும் சாவித்திரி தனது ஹிந்து மத தர்மத்தை அவமரியாதை செய்து குர்ஆனுக்கும் இஸ்லாத்துக்கும் மரியாதை புரிந்தாள் என்று அவள் மீது தாயும் புருஷனும் உள்ளுக்குள் சினந்து கொண்டனர். முல்லாஜீ எதிரில் இருந்தமையால் ஒன்றையும் அவர்கள் வெளியிட்டுக் கொள்ளவில்லை.)

முல்லாஜீ:— (சாவித்திரியை நோக்கி) அம்மணி! குர்ஆன் ஷரீபை நீவிர் உமது கரத்தால் ஸ்பரிஸிப்பதில் ஆக்ஷேபணையில்லை. ஆனல், நீவிர் சரீர சுத்தியோடு இருக்கின்றீரா? உமது கரங்கள் சுத்தமாய் இருக்கின்றனவா? குர்ஆனை தொடுவதற்கு பரிசுத்தமே மிகவும் வேண்டியதாகும்.

சாவித்திரி:—ஆ ஹா! என் சரீரமும், உடையும், கரங்களும் மிகவும் சுத்தமாகவே இருக்கின்றன. நான் தினமும் ஸ்நானஞ் செய்து சுத்தமான உடை உடுத்ததன் பின்னரே இங்கு வருவது வழக்கம்.

நமது மகா அறிஞரான முல்லாஜீயவர்கள் சாவித்திரியின் உள் நிலைமையை நல்ல விதமாகவே இதுகாறும் யூகித்தறிந்து கொண்டு வந்துள்ளார். மேலும் சாவித்திரியின் உள்ளத்தில் இஸ்லாத்தின் பக்தியும், குர்ஆனின் விசுவாசமும், தன் ஹிந்து மத புராணம் புளுகு முரண் பக்ஷ பாதம் இவற்றின் மீதுஒருவாறுவெறுப்பும், இருந்துவந்ததைஅவர்அவளதுமுகக் குறிப்பாலும் வாசா முறையாலும் நன்குஅறிந்துவந்துள்ளார். மேலும் சாவித்திரி தமது சமூகத்துக்கு வருந்தோறெல்லாம் குர்ஆனையும், தம் வாயினின்று வெளிவரும் குர்ஆன் வாக்கிய பத உச்சரிப்பையும், மிக ஆவலாகஎதிர்நோக்கிக்கொண்டுவந்ததோடு, ஆழ்ந்த செவிசாய்த்ததையும், தம் முன்மிகப்பணிவோடும் சத்திய வதனம் பூண்டும் பக்தியோடும் வீற்றிருந்து வந்ததையும் முல்லாஜீ அனுதினமும் கண்டுக்கொண்டு வந்துள்ளார். மேலும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய திருநாமம் உச்சரிக்கப்படுந்தோறெல்லாம் பக்தி பூர்வமாக சாவித்திரி தன் சிரஞ் சாய்ப்பதையும் அவர் கண்டுள்ளார். ஆகவே, முல்லாஜீ அவர்கள் சாவித்திரியின் விருப்பத்துக் கிணங்கி, ஆண்டவனின் திருவேதமாகிய குர்ஆன் ஷரீபை இரு கரத்தாலும் எடுத்து சாவித்திரியின் பக்கம் நீட்டினர். பலநாள் பேராவல் பூண்டிருந்த சத்திய உத்தமியான திரு சாவித்திரி சற்றே எழுந்து இரு முட்டிக் காலும் மண்டியிட்ட வண்ணம் மிகப்பக்தியோடு இரு கரங்களை ஆவலோடு ஏந்தி முல்லாஜீயால் அளிக்கப்பட்ட பரிசுத்த திருக் குர்ஆன் ஷரீபைபெற்று பேரானந்தத்தோடு சிரசின் மீது வைத்துக்கொண்டாள். இரு நேத்திரங்களிலும் ஒத்திக் கொண்டாள். அதரங்களாலும் அன்போடு முத்திட்டுக்கொண்டாள். ஹிருதயத்தோடு ஆவலாய் அணைத்துக்கொண்டாள். பின்னர் கூறலானாள்:—

சாவித்திரி:—முல்லாஜீ யவர்களே! இது நிச்சயமாய் சுத்த சத்திய திருவேத மென்பதில் எனக்கு கிஞ்சித்தும் சந்தேகமில்லை. ஏகேஸ்வரனாகிய அல்லாஹ்வினால்அருளப்பட்ட உண்மை வேதம் இதுவென்றே நான் மனப்பூர்வமாய் நம்புகின்றேன். மேலும் இதில் வரையப் பெற்றிருக்கும் போதனைகளெல்லாம் தாங்கள் எடுத்துக்காட்டிய இரண்டோர் அம்சங்களிலிருந்தே சத்திய மிருந்தனவா யிருக்குமென்று நம்புகின்றேன். இந்நல்லெண்ணம் எனக்கு இப்போது தான் உதித்ததாக தாங்களெல்லோரும் கொள்ளற்க. முதன்முதல்எங்கள்வீட்டு மாடியிலிருந்து குர்ஆன் வேத இனிய வசனங்களை செவியுற்ற அந்த க்ஷணம் தொடுத்தே என் மனம் இஸ்லாமியவேதத்தின்பால் வசியமாக்கப்பட்டு சத்தியபக்திப்பிரவாகத்தால்உருகி வழிந்தோடத் தொடங்கிற்று. ஆனால் நான் அப்பிரவாகத்தை இதுகாறும் மௌனம் என்ற அணையால் தடுத்து வைத்திருந்தேன். ஆனால் இன்று அவ்வணை அபரிமிதமான பக்தியால் தகர்க்கப்பட்டு என் உள்ளக்கிடைக்கையை பகிரங்கத்துக்கு கொண்டு வர செய்துவிட்டது. ஆதலின் என் மனத்தில் இனி இஸ்லாத்திற்கு மாத்திரம் தான இடமிருக்கின்றது. பகுத்தறிவுக் கொவ்வாத நிராசார விக்கிரபாச போதனை மிக்க எனது பூர்வ ஹிந்து மதத்துக்கு இன்று தொடுத்து என் மனத்தில் சிறிதும் இடமென்பதில்லை. இதனால் எனக்கு என்றென்றும் என்போன்ற ஹிந்துமதவாதிஎவர்க்கும்கிடைத்தில்லாத இகபர பேரானந்த சாதனம் இன்றே எனக்கு சித்தித்து விட்டது. இனி எனது மனச் சாக்ஷியை எவருடைய தாக்ஷிண்ணியத்துக்காகவும் ஒளித்து வைக்க மாட்டேன். ஆகவே இனி எனக்கு எவராலும் எத்தகைய பாதகம் நேருவதாயினும் அதை இலக்ஷியம் செய்யாது என் மன எண்ணத்தை உங்கள்பால் கூறி விடுகின்றேன்.

"இந்த க்ஷணம் தொடுத்து நான் ஒரு உண்மை முஸ்லிமாக ஆகி விட்டேன். இனி என் மதம் ஹிந்து தர்மமல்ல; சுத்த சத்திய தீனுல் இஸ்லாமே யாகும். சர்வலோகத்துக்கு அதிபனானவன் ஏகேஸ்வரனாகிய அல்லாஹுத்த ஆலா

எனப்படும் ஒரே ஆண்டவனவான். எனது இகபர மார்க்க குரு முஹம்மத் முஸ்தபா ரஸூல் நபிநாயகம் ஸல்லல்லா ஹு அலைஹிவஸல்லம் அவர்களே யாவார்கள். இவருக்கு முன் இத்தரணியின்கண் ஆங்காங்கு அவதரித்து ஆண்டவ னின் சன்மார்க்கத்தை பரத்திச் சென்ற எல்லா நபிமார்களை யும் மனப்பூர்வமாய் நம்புகின்றேன். திரு குர்ஆன் ஷரீபாகிய இப்பரிசுத்த வேதத்தைக் கொண்டே எனது நன்னம்பிக்கை (ஈமான்) இனி ஒத்து ஒழுகும்."

இன்னமும் ஒரு வார்த்தை இச்சந்தர்ப்பத்தில் கூறிவிட விரும்புகிறேன். எனது இந்நிலை மாற்றத்தால் என்னை ஈன்ற மாதா பிதாக்களுக்கும்,என்னை மணந்த பர்த்தாவுக்கும் மற்றும் இனபந்து ஜனங்கட்கும் அடக்கமாட்டாத ஆத்திரமும் ரோஷ மும் உண்டாகுமென்பதை நான் நம்புகிறேன். ஆனால் இவ்வு லக வாழ்க்கைக்கு வேண்டற்படும் சுற்றத்தார் சகாயத்தைவிட பரலோக பரம வாழ்க்கைக்கு அத்தியாவசியமான உண்மை சன்மார்க்க ஒழுக்கத்தையே அதிக சிலாக்கியமானதென தேர் ந்தெடுத்துக் கொள்ளுகின்றேன். மேலும் மாதா பிதா கண வன் சுற்றத்தார் இவர்களை விட்டு நீங்கி இஸ்லாமிய நம்பிக்கை கொள்வல் கூடாதென்று இஸ்லாம் மதம் கூறி என் வரவைத் தடை செய்யுமோவென்று கருதினேன். ஆனால், பெற்றோர் உடன் பிறந்தோர், மணந்தோர், தமக்கு பிறந்தோர் எல்லோ ரைக் காட்டிலும் பரலோக வாழ்க்கையில் அதிகம் உதவக்கூடி யது சத்திய சன்மார்க்க இஸ்லாம் தான் என்பதை மிக மிகச் சிலாக்கியமானதென்பதற்காக எல்லாவற்றையும் உதகரித்துத் தள்ளிவிட்டு இனி இஸ்லாத்தையே நான் கிரகித்துக் கொள்ளு கின்றேன். இன்னமும் "நான் ஹிந்து மதத்தை விட்டு இஸ் லாத்தில் சேர்ந்த ஒரு முஸ்லிம் மாதாக மாறத் துணிந்துவிட் டேன்" என்பதையும் முஸ்லிம் பெரியாராகிய தங்களுக்கும் இங்கு என் எதிரே வீற்றிருக்கும் என்னையீன்ற என் அருமை த்தாயாருக்கும், என்னை அன்போடு மணந்த உத்தம கணவரு க்கும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இன்னமும் எனக்கு ஏகபராபரன் நல்லருள் பாலித்தது போல் எனது பர்த்தாவுக்கும் அன்னைக்கும் சுற்றத்தாருக்கும் சன்மான விமோசனத்தை அருள்பாலித்து அவர்களும் தமது ஹிந்து தர்மத்தை விட்டு விலகி, இஸ்லாத்தை தழுவி விசிராந்தியும் பரிபக்குவமும் அடைய வேணுமாறு பகவானை முழு மனத்தோடு பிரார்த்தித்துக் கொள்ளுகின்றேன். அவர்கள் தமது பகுத்தறிவை சத்திய மார்க்கம் எது? என்ற விஷயத்தில் செலுத்துவார்களாக.

உத்தம யுவதியான நமது சாவித்திரி தன் பரிசுத்த உள்ளத்திலிருந்த இஸ்லாமிய பக்தியை எவருக்காகவும் ஒளித்து வைக்காமல் வெளியிட்டு தான் மனப்பூர்வமாய் முஸ்லிமாகி விட்டதை தெரிவித்துவிடவே இவளின் தாயாரும்கணவன்பால கிருஷ்ணனும் "தாமொன்று நினைக்க தெய்வமொன்று நினைத்தது" என்பதற்கொப்ப காரியம் வெகு விபரீதமாய் முடிந்து விட்டமையையுணர்ந்து பெரிதும் திக்பிரமை யடைந்து போயினர். இனி என்ன செய்வதென்று அவர்களுக்கு ஒன்றும் புலனாகவில்லை. கற்சிலைகளேபோல் குந்தியிருந்தனர். சாவித்திரியின் தாயைவிட பாலகிருஷ்ணனே இவ்விபரீதத்தை யுன்னி மனங்குழம்பினான். தன் இல்லத்துணைவியான காதலி இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டமையால் என்னென்றும் அந்நல்லாளை விட்டுப் பிரிந்திருக்க வேண்டுமே யென்று பெரிதும் சஞ்சலமுற்றான். இந் நிலைமையில் சுத்த சத்திய தீனுல் இஸ்லாத்தின் உயர்வும் மஹத்துவமும் தன் உள்ளத்தை ஊடுருவி இயக்குங்கால், தன் காதலியைப்போல் தானும் இஸ்லாம் மதத்தை ஏற்றுக் கொள்ளவும் மனத்துள் துணிந்து விடுவான். ஆனால் தான் மனமுவந்து இஸ்லாத்தைத் தழுவியிருந்தாலும் மனையாட்டியின் ஆசையால்கேவலம் மதம் மாறிப்போனானே என்று ஊராரும் உற்றாரும் தூற்றுவாரே என்றும், அவ்வாறு தானும் மத மாறிவிடின் தனது பாட்டன் தந்தை வாயிலாய் தனக்கு கிடைக்கவிருக்கும் பிதுரார்ஜித சொத்துக்களெல்லாம் கிடைக்காது போகுமே என்றும் ஏங்கினான். ஆகவே "இவன் இருதலை கொள்ளியிற்

பட்ட" எறும்பேபோல் தத்தளித்தான். இவன் எண்ணமெல்லாம் ஒரு நிலையற்று உதறினது. கண்களில் இருள் கம்மியது. சற்று நேரம் ஆழ்ந்த சிந்தனையுளாழ்ந்தான்.

சாவித்திரியின் அன்னையான் பெரியம்மையின் மன நிலையும் இல்வாறே புயலிற்பட்ட துரும்பேபோல் அல்லல் பட்டுக் கொண்டிருந்தது. இஸ்லாம் மதமே சத்தியமானது. மானுஷ்ய இகபர வாழ்க்கைக்கு அதுவே உரியது. இலௌகீக பரிபக்குவத்தையும் ஆத்மீக விமோசனத்தையு மளிப்பதில் அச்சமயத்தினுஞ் சிறந்தது வேறெதுவுமில்லை யென்பதை அவ்வன்னை ஐயமற நன்குணர்ந்திருந்தாள். ஆனால், இவருக்கும் இனபந்து உற்றாரின் வாஞ்சையும் குடும்ப விவகாரமும் சுமையும் இவரை மதமாறுவதை விட்டும் இழுத்துப்பிடித்துக் கொண்டிருந்தன. மூதாதைகள் பன்னெடுங்காலம் வதிந்து வந்த ஹிந்து மதத்தை எவ்வாறு திரஸ்கரிப்பது' என்று சிக்கலான சிந்தனையில் இவ்வம்மணியாரின் உள்ளமும் ஊடாடிக் கொண்டிருந்தது. ஆகவே பாலகிருஷ்ணனைப்போல் இவ்வம்மையும் சற்று நேரம் மௌன விரதம் பூண்டு சித்தாகுலத்திலாழ்ந்திருந்தாள்.

இங்ஙனம், இருவரும் பேசாச்சிலைகளாயிருப்பதைகண்ட நங்கை சாவித்திரி இவர்களை நோக்கிக் கூறலானாள்:—

சாவித்திரி:—என்ன யோசித்துக் கொண்டிருக்கின்றீர்கள்? நான் யாதொரு பலாத்காரமுமின்றி என் மனப்பூர்வமாய் சுயமே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருப்பதால், இனி உங்களின் வற்புறுத்தலுக்காகவோ, அச்சுறுத்தலுக்காகவோ, துன்பத்துக்காகவோ அஞ்சி அதை அணுவளவும் நழுவ விடத் துணிய மாட்டேன். நீங்களும் என்னைப்போல் நான் வந்த வழியே வந்து விட்டாலல்லாது ஒருபோதும் உங்களுடன் இணங்கி வாழ்க்கைப் புரியத் துணியேன். நான் இனி மீண்டும் ஹிந்து மதத்தை நோக்கி வருவேனென்பதை கனவிலும் கருதற்க. எனது ஒரு இறுதி சுவாசம் எஞ்சியிருக்கும்வரையும் அம்மூச்சையும் இஸ்லாத்திலிருந்து வெளியாக்கியே என் ஆவியை துறப்பேன். எனது இறுதி மதம் இஸ்லாம் தான்.

பாலகிருஷ்ணன்:—(தனது மனச் சஞ்சலத்தை யெல்லாம் அடக்கி ஒளித்துக் கொண்டு) ஏ! துரோகி, இஃதுனக் கடுக்குமா? நீ என்ன பைத்தியக்காரியாகவா ஆய் விட்டாய்? நீ கற்ற கல்வியும் ஞானமும் எங்கே போயின? சரி! இனி ஒரு க்ஷணத்தில் நீ மீண்டும் இஸ்லாத்தைவிட்டு பழையபடி ஹிந்து தர்மத்தை தழுவினல் தப்பினய். இன்றேல் உன்னை இலேசில் விடமாட்டேன். உன் விஷயத்தில் பரிதபிக்கத் தக்க கதி வந்து வாய்க்கு மென்பதை நன்கு ஞாபகத்திலிறுத்திக் கொள்.

சாவித்திரி:—ஆம்! நான் பைத்தியக்காரி தான், துரோகி தான், ஞானமில்லாதவள்தான். இனியும் என் கடைசி மூச்சு வரை இவ்வாறே புதிய விதத்தில் இருக்க வேண்டுமென்றே சர்வமும் வல்ல ஆண்டவனிடம் பிரார்த்தித்துக் கொள்கிறேன். தாங்களும் நான் இவ்வாறே இருக்க வேண்டுமென்று பிரார்த்தித்தருள்வீர்களாக. மேலும் நான் இனி மேல் இஸ்லாத்தை விட்டு ஹிந்து மதத்துக்கு மீண்டும் வருவேனென்பதை பகற் கனவிலும் காணுதீர்கள். கிழக்கே உதயமாகும் பாஸ்கரன் மேற்கே உதயமாயினும், மேற்கே அஸ்தமிக்கும் தினகரன் கிழக்கே ஆழ்ந்து போயினும், வானமிடிந்து என் உச்சிமீது வீழ்ந்த போதிலும் ஒருகாலும் நான் பரிசுத்த இஸ்லாத்தைக் கைவிடேன்; புறக்கணியேன். இது திண்ணம். இதற்காக நீங்களெல்லோருங்கூடி எனக்கு எவ்வித தண்டனையை விதித்த போதிலும், எத்துணை இடர்களிழைத்தபோதிலும் ஆண்டவன் திருநாமத்தை ஜபித்துக் கொண்டு அவற்றை யெல்லாம் சகித்துக்கொள்ள நான் சித்தமாயிருக்கின்றேன். இதுவே எனது இறுதி அபிப்பிராயம்.

சா-தாய்:—மகளே! வேண்டாம் நாங்கள் சொல்வதைக் கேள். உனது இவ்விபரீதச் செயலுக்காக என் உள்ளம் துணுக்குற்றுப் போயிற்று. "பெற்ற மனம் பித்து பிள்ளை மனங் கல்லு" என்பதற்கொப்பாக நிகழ்ந்தது போலும்! சரி! எ[illegible] மீது தான் உனக்குக் கொஞ்சமேனும் வாஞ்சையென்ப தி[illegible]து வற்றிப் போயிற்று. நீ தவமிருந்து நொந்து பெற்ற

குழந்தை கிருஷ்ணனுக்காகவேனும் மனங்கசிந்து நீ நன்னிலைக்கு வரக்கூடாதா?

சாவித்திரி:—அஃதொருபோதும் முடியாது. நான் ஈன்ற என் குழந்தை உங்களைப்போல் ஹிந்து மதாதீனத்தில் கிடந்துழலும் வரை அதன் மீதும் நான் வாஞ்சை கொள்ளாதவளாயிருப்பேன். அக்குழவி உங்களாதிக்கத்தைவிட்டு என்னைப் பின்பற்றி நான் தழுவிய இஸ்லாத்துள் வந்துவிடுமாயின் என்னுயிரினும் மேலாய்ப் பாவிப்பேன். இஸ்லாத்திலில்லாதவரை எவரையும் நான் விசுவாசிக்கமாட்டேன். இவ்வுலக வாழ்வு சாதனங்களான பெற்றார் உற்றார் மணந்தார் பிறந்தார் எல்லோரைக்காட்டினும் ஆன்ம சாதனத்திற்கு வேண்டிய மோக்ஷமளிக்கும் இஸ்லாம் மதம் ஒன்றுதான். எனதிற்றார்களே! இந்நிராதரமான உலக வாழ்க்கை நிலைத்திருப்பது ஒருபோதுமில்லை. நாம் எத்துணை ஆண்டுகள் சுகபோகமாய் வாழினும் ஒரு நாளைக்குமாண்டு இறைவனடி சேரவேண்டியது இயற்கை தெய்வவிதி. அக்காலை நமக்கு வேண்டற்பாலது ஆத்ம விமோசனமே, இக்காயமோ இன பந்து ஜனங்களோ பெற்றெடுத்த பாலகரோ பாடுபட்டுத் தேடியபொருட் பாக்கியங்களோ ஒரு சிறிதும் உதவாதென்பது பிரசித்தம். அவரவர் இத்தரணியில் இழைத்த நன்மை தீமைக்கேற்ற பலா பலனையே பெற்று இன்ப துன்ப மடைவர். ஆதலின் நீங்கள் உங்கள் பகுத்தறிவைச் சற்றே சன்மார்க்கத்தின் பக்கல் செலுத்துவீர்களாக.

பாலகிருஷ்ணன்:—எங்களுக்கு உன்னுடைய உபதேசங்கள் தேவையில்லை. இன்னமும் இனி நீ எங்களுடன் மேற்படி விஷயமாய் யாதொன்று பேசவுங்கூடாது. இன்றேல் இதன் பயன் சாதகமாய் முடியாது.

சாவி-தாய்:—மகளே! நாங்கள் சொல்வதைக்கேள். இவ்விதமான எண்ணங்களை விட்டுவிடு. அவைகள் உனக்கு தீமையைதான் விளைவிக்கும். அது வெளிப்படை. உனது இந்த நடத்தையால் பண்டிதராமகோபாலருக்கு இவ்வுலகமெல்லாம்

அபகீர்த்தி ஏற்படும். இன்னமும் உனது தாய் தந்தை இரு பேருடைய நற்பெயரும் கெட்டுப்போகும்.

சாவித்திரி:—சன்மார்க்கத்தை யுத்தேசிக்குமிடத்து அவ்வித அபகீர்த்தியான பேச்சுகள் எனக்கொரு பொருட்டா யில்லை. ஆகவே உங்களுடைய சன்மார்க்கம் உலகைத்தின் கண் நற்பெயரும், செல்வமுமாகவே யிருக்கிறது. ஆனால் எனக்கு சன்மார்க்கம் எதுவெனின் சத்தியமே யாகும். இந்த அழிந்துபோகும் உலகத்தின்கிலேபற்ற சம்பந்தங்கள் எனக்கு அற்பமாகக் கூடப் புலப்படவில்லை. ஆகவே நஷ்டத்தைப் பற்றி நீங்கள் என்னை அச்சப்படுத்துவது வீணான காரியமே யாகும். இன்று எனக்கு சன்மார்க்கத்துடையவும் உலகத்துடையவும் சகல பாக்கியங்களும் கிடைத்துவிட்டன வென்பதை யான் நன்குணர்ந்துள்ளேன்.

சாவி-தாய்:—சாவித்திரி! நீ தப்பானகாரியம் செய்கின்ருய்! நீ,ஆயிரக்கணக்கானரூபாய் பெறும்படியானநகைகளை இழந்துவிடத் துணிகின்ருய். நீ ஒரு பெரிய நில சுவாதீனத்துக்கு சொந்தக்காரியாக இருந்தாய். ஆனல் "தன் காலில்தானே கோடாலியை அடித்துக்கொண்டதற் கொப்பாக ஆய்விட்டாய். ஆகவே அவைகள் உனக்கு இப்போது கிடைக்கமாட்டாது.

சாவித்திரி:—நான் சத்தியம் செய்து சொல்வதாவது:— இந்தப் பொருட்கள் எனக்கு கிஞ்சித்தும் அவசியமே யில்லை. சன்மார்க்கத்துக்கு எதிரிடையாய் இந்தப் பொருட்கள் மீது எனக்கு கிஞ்சித்தும் தேவை யிருந்திருக்குமாயின், யான் நீங்கள் தற்போது இருக்கும்படியான அந்தகாரத்தில் தான் நானும் இருந்திருப்பேன். ஆனல்,இஸ்லாத்தின் ஏகமான ஆண்டவனுக்கு எல்லாப் புகழும் உண்டாவதாகுக. அவனே எனது மனத்தை விட்டும் அத்தகைய அற்பமான எண்ணங்களை முற்றும் எடுத்துத் தூய்மையாக்கி விட்டான்.

பாலகிருஷ்ணன்:—சரி! அப்படியானல் இப்போது நீ அணிந்து கொண்டிருக்கும்படியான நகைகளையும் கழற்றி எங்களிடம் கொடுத்துவிடு. இவற்றில் எதுவும்உன்னுடையதல்ல

சாவித்திரி:—இந்த நகைகள் உங்களுக்குச் சொந்தமானதாயிருந்தால் நிச்சயமாக கழற்றிக் கொடுத்திருப்பேன். இன்னமும் இவற்றை உங்கள் வீட்டினின்று அணிந்து கொண்டு கூட வந்திருக்கமாட்டேன். ஆனல் இந்த நகைகள் எனது தாய் தகப்பனுருக்குச் சொந்தமானவைகளாகும். ஆகவே எனது தாயார் இவற்றை என்னிடமிருந்து வாங்கிக் கொள்ள விரும்பினல் உடனே யான்கழற்றிக்கொடுத்து விடுகின்றேன்.

பாலகிருஷ்ணன்:—அவைகள் எங்களுக்குடையவை அல்லவென்பதற்கும் உனது தாய் தந்தைக்கு சொந்தமானதெ ன்பதற்கும் என்ன ஆதாரமிருககிறது?

சாவித்திரி:—ஆதாரம் என்னவென்ருல், நான் உங்களுடைய வீட்டின் நகைகளை அணிந்துவரவேண்டுமென்று நாடியிருப்பேனுயின் எல்லா நகைகளையும்அணிந்துகொண்டுவந்திருப்பேன்.ஆனல் நான் அவ்விதம்செய்யாமல், எனதுதாய்தகப்பனுருடைய வீட்டினின்று கொண்டு வந்திருந்த நகைகளை மட்டும் தான் அணிந்து கொண்டு வந்திருக்கின்றேன். இரண்டாவதாக எனது தாயார் தமக்குரியதான நகைகளின் அடையாளங்களை நல்லவிதமாக அறிந்துள்ளார்கள்.

பாலகிருஷ்ணன்:—இந்த பேச்சுகளெல்லாம் ஆதாரமாகாது. நீ இந்த நகைகளை கழற்றிக் கொடுத்து தான் தீர வேண்டும். இவ்விதம் நீ கழற்றிக் கொடுக்காமலிருந்து விடுவாயானல், யான் பலவந்தமாககழற்றிக் கொண்டு விடுவேன்.

சாவித்திரி:—முடியாது. இனி உமக்கும் எனக்கும் எத்தகைய சம்பந்தமுங் கிடையாது. மேலும் நீர் என் மீது கை வைப்பதும் கூடாது. ஏனெனின் எந்த நேரத்தில் யான் இஸ்லாத்தை ஒப்புக கொண்டேனே அது முதல் என்னுடையவும் உம்முடையவும் சம்பந்தம் அறுபட்டுப்போய் விட்டது.

சாவித்திரி கூறிய இந்தபதிலைக்கேட்டதும் பாலகிருஷ்ணனுக்கு அதிக ஆத்திரம் வந்து விட்டது. எனவே கோபத்தின் மதிமயக்கத்தினல், மஸ்ஜிதின் (பத்ன) செம்பு பாத்திரத்தை யெடுத்து சாவித்திரியின் தலையை நோக்கி வீசி எறிந்தான். அது சாவித்திரியின் நெற்றியில்பட்டு நெற்றியைப்

பிளந்து விட்டது. இதனால் கடுமையான காயமுண்டாய் விட்டது. அக்காயத்திினின்று இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. இவ்விதம் செய்த பின்னருங்கூட பாலகிருஷ்ணனின் கோபம் தணியவில்லை. அவன் இன்னும் ஆத்திரப்பட்டு எழுந்து சென்று சாவித்திரியின் மெல்லிய கரத்தைப்பற்றினன். அவளது கரத்தைப் பிடித்து தறதறவென வெளியே இழுத்துச் செல்லலானன். பாலகிருஷ்ணன் தேக திடமுள்ளவனுகவும் வாலிபனுகவுமிருந்தான். எனவே சாவித்திரியை இழுத்துக் கொண்டே முல்லாஜீயின் அறையை விட்டு கதவு வரைக்கும் இழுத்துக் கொண்டு சென்ருன். இந்த அகோரச் சம்பவத்தைக் கண்ட முல்லாஜீவுக்கு வந்த ஆத்திரத்தை அடக்கிக் கொள்ள முடியவில்லை. எனவே இவர் இருபேருக்கு இடையே புகுந்து சாவித்திரியை பாலகிருஷ்ணனுடைய பிடியைவிட்டும் விடுவித்து விட்டனர். மேலும் பாலகிருஷ்ணனை நோக்கிப் பின்வருமாறு கூறலானர்:—

முல்லாஜீ:—பாலகிருஷ்ண! நீ அதிக்கிரமமாகசண்டைப் போடுகிருய். எப்போது அவள்முஸ்லிமாகிவிட்டாளோஅதன் பின் நீர் அவள் மீது எத்தகைய கொடுமைப் புரியவும் உரிமையற்றவனுகி விட்டாய். இஸ்லாமிய சட்டத்தின்படி நீர் இனி அவளுடைய சரீரத்தின் எந்த அங்கத்தையும் கையால் தொடவும் கூடாது. இனி சாவித்திரி உன் முன் பர்தா செய்யக் கடமைப்பட்டுள்ளாள்.

பாலகிருஷ்ணன்:—பெரியவரே! நிறுத்துங்கள் போதும். இஃதெல்லாம் நீர் இட்டு கொள்ளியினல் நேர்ந்தவைகளே யாகும். மேலும் நீர் புருஷன் மனைவியாகிய எங்கள் விவகாரத்தில் தலையிட வேண்டாம்.

பாலகிருஷ்ணன் இரக்கமில்லாமல் சாவித்திரியை வாயற்படி வரை முரட்டுத்தனமாய் இழுத்து வந்ததினல் அந்த உத்தமி சாவித்திரியின் சரீரத்தில் ஆங்காங்கு தோல் பிய்ந்து காயம்பட்டன. இதினின்று இரத்தம் அதிகமாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. இது ஒருபக்கமிருக்க நெற்றியில்

பட்ட பெரிய காயத்தின் காரணமாக அவள் துடித்துக் கொண்டிருந்தாள்.

நிற்க, பாலகிருஷ்ணன் முல்லாஜீயை நோக்கி "புருஷன் மனைவியாகிய எங்கள் விஷயத்தில் நீர் ஒன்றுஞ் சொல்ல வேண்டாம்" என்று கூறிடதும் சாவித்திரி கூறியதாவது:—

சாவித்திரி:—எவ்விதம் மனைவி? யான் தற்போது உம்முடைய மனைவியாயில்லை. நீயோ ஹிந்துவாயிருக்கிறாய். நானோ முஸ்லிம். எனக்கும் உமக்கும் எவ்வித சம்பந்தமுங் கிடையாது.

முல்லாஜீ:—பாலகிருஷ்ணரே! நீவிர் இங்கிருந்து போய் விடுவது தான் சரி. இது மஸ்ஜித். நீவிர் இங்கு சண்டைச் சச்சரவுப்போட்டுக்கொண்டிருக்க இது எவ்விதக் கடைத் தெருவுமில்லை.

பாலகிருஷ்ணன்:—நான் ஒருபோதும் போகமாட்டேன். அப்படிப் போவதானல் சாவித்திரியை அழைத்துக் கொண்டு தான் போவேன்.

சாவித்திரி:—யான் உங்களுடன் ஒருபோதும் வரவே மாட்டேன். ஆனல் நீங்களும் முஸ்லிமாகி விடுவீர்களானல் இஸ்லாமிய சட்டப்படி உம்முடன் விவாகம் ஆனபிறகு தான் உங்களுடன் இருக்க சம்மதிப்பேன். இன்றேல் உலக முடிவு காலம்வரைக்கும் சம்மதிக்க மாட்டேன்.

முல்லாஜீ;—ஆம்! இது முற்றும் வாஸ்தவம்தான்.

இச்சமயத்தில் சாவித்திரியின் தாயுடைய நிலைமை சொல்லக்கூடாததாகிவிட்டது. ஏனெனின் சாவித்திரி அந்த தாயால் அருமையாய் பெற்று வளர்க்கப்பிட்ட ஏக புதல்வியாவள். அந்த தாய் தான் எவ்வளவோ சிரமப்பட்டு கஷ்டப்பட்டும் அப் பெண்ணை வளர்த்து மங்கைப் பருவத்துக்குக் கொண்டு வந்தாள். இங்ஙனம் செல்வமாய் வளர்க்குங்கால் மறந்துங்கூட கோபப் பார்வையால் சாவித்திரியை பார்த்ததும் கிடையாது. இப்படிப்பட்ட செல்வப் புதல்வி காயப்பட்டு இரத்தம் வழிய அவஸ்தைய்படுவதைக் கண்டு தாயின் மனம் எப்படி ருக்குமென்று சொல்லவும் வேண்டுமோ? சாவித்திரி காயத்

தின் வலியினால் முணங்குவதைக் கண்ட அவள் தாய் உயிர் பதறலாயிற்று. என்ன செய்வதென்று தோன்றாமல் சிக்கலில் இருந்தாள். தனது செல்வப் புத்திரியின் நோவினையை நீக்கித் தேற்றுவதற்கு தன்னாலானதைச் செய்ய அத்தாயின் மனம் துணிந்தது. எனினும், இவ்விதம் ஆதரவு புரிந்தால் தானும் சாவித்திரியுடன் சேர்ந்துகொண்டு சகாயம் புரிகிறேன் என்று பாலகிருஷ்ணன் எங்கு சந்தேகித்துக் கொள்வானோ என்று அப்பெரிய அம்மைப் பின்னடைந்தாள்.

பால கிருஷ்ணனின் இக்கொடுமையான செயல்கள் சாவித்திரியின் தாயின் தாயுக்கு பெரிதும் மனக்கசப்பை யளித்தது. இதற்கு முன்னர் இங்ஙனம் பாலகிருஷ்ணன் சாவித்திரியின்மீது இவ்விதக் கொடுமை புரிந்திருந்தால், இப்போது சாவித்திரியின் தாய் பாலகிருஷ்ணனுடைய முகத்தைக் கூடப் பார்க்க மன மொப்பியிருக்க மாட்டாள். ஆனால் தற்போதிய நிலைமையோ சிக்கலானதாயிருந்தது. வாயினால் யாதொன்றைக் கூறவும் சந்தர்ப்பமில்லாததாயிருந்தது. அவ்வளவு கொடுமையைப் புரிந்துங்கூட பாலகிருஷ்ணன் சாவித்திரியின்மீது மேன் மேலும் கொடுமைப் புரியலானான். பாலகிருஷ்ணன் மீது கோபப் பைசாசம் பிடித்துக் கொண்டிருக்கிறதென்பதை சாவித்திரியின் தாய் உணர்ந்தாள். பாலகிருஷ்ணனுக்கு சாவித்திரியின்மீது தானே இரக்கம் உண்டாக வேண்டுமென்று வாளாயிருந்தாள்.

நிற்க. சாவித்திரியானவள் மாபெரும் நஷ்டத்தை யுண்டாக்கியிருந்தாலும் அது பாலகிருஷ்ணனுக்கு கவலையை உண்டாக்கியிருக்காது. ஆனால் சாவித்திரியானவள் பாலகிருஷ்ணனுடையஆன்மாவே புண்பட்டு விடத்தக்கவிதமாய் நடந்துகொண்டாள். இவ்வித நடத்தையை எத்தகைய பிரியமுள்ள கணவனும் சகித்துக் கொள்ள மாட்டானென்பது திண்ணம். பாலகிருஷ்ணனுக்கு அவளுடைய நகைகளைப்பற்றி யாதொரு லக்ஷியமுமில்லை. இந்த நகைகளெல்லாம் தொலைந்து போனாலும் சிறிதும் கவலையிராது. ஆனால் அவள் இதுபோழ்து இருவர்க்கும் சம்பந்தமே கிடையாதென்று அவனுடைய மன

த்தை முறித்ததுதான் விபரீதமான விஷயமாகும். ஆகவே தான் சாவித்திரியின் தாய் தன் முன் பாலகிருஷ்ணன் தன் மகள் சாவித்திரியை தின்புறுத்தியதைப் பார்த்துக் கொண்டு சும்மாயிருந்தாள்.

இவ்விதமான சிக்கலான எண்ணங்களில் சாவித்திரியின் தாய் வெகுநேரம்வரைஅகப்பட்டுக்கொண்டிருந்தாள். மேலும் அவளுடைய மூளையிற்பற்பலவிதமானஎண்ணங்கள் தோன்றிக் கொண்டிருந்தன. மேலும்சாவித்திரிசெய்தவைகளும் முற்றும் சரியானவைதானென்றும், இஸ்லாம் உண்மையான ஓர் நல்ல—சத்திய மார்க்கம்தானென்றும், ஆனல் சாவித்திரிஇந்த விஷயத்தில் அளவுக்கதிகமான அவசரப்பட்டு நடந்து கொண்டாளென்றும் சாவித்திரியின் தாய் யோசித்துக் கொண்டிருந்தாள்.

நிற்க, பாலகிருஷ்ணனுக்கும் முல்லாஜீவுக்கும் தர்க்க வாதம் நடந்து கொண்டிருக்கும்போது சாவித்திரியின் தாய் பாலகிருஷ்ணனை நோக்கி பொறுமையாய் பின்வருமாறு கூறலானாள்.

சாவி-தாய்:—லால்ஜி! போனது போகட்டும் விட்டுவிடுங்கள். சாவித்திரி விஷயத்தில் பொறுமையைப் புரியுங்கள். அவள் தானிழைத்தவற்றின்பலாபலனைப்பெற்றுக்கொள்வாள். இச்சச்சரவைக் கொண்டு ஏதேனும் புதிய விபரீதச் சம்பவம் நிகழாமலிருப்பதே நல்லது. ஏனெனின் இதுகாலேஅரசாங்கமானது முஸ்லிம்களுடைய ஆதீனத்தில் தானிருக்கின்றது.

பாலகிருஷ்ணன்:—அப்படியல்ல அம்மணீ! எந்தப்பேச்சு வருவதாயினும் யான் சிறிதும் அஞ்சமாட்டேன். சாவித்திரியை என்னுடன் அழைத்துக் கொண்டு போய் தான் தீருவேன்.

முல்லாஜீ:---நண்பரே! இம்முரட்டுத் தனத்தையும், பிடிவாதத்தையும் விட்டு விலகுவீராக. இன்னமும் வற்புறுத்தி சாவித்திரியைக் கூடவே அழைத்துப் போவோமென்றஎண்ணத்தை விட்டொழிப்பீராக. அனுவசியமாக இவ்விபரீதத்தை வளர்த்திக்கொண்டு போகவேண்டாம்.

பாலகிருஷ்ணன், நமது முல்லாஜீயை மற்ற மஸ்ஜிதுக ளிலிருக்கும் சர்வ சாதாரணமான முல்லாவென்று கருதிக் கொண்டிருந்தான். இன்னமும் தனக்குள்ள இளமைப்பிராய த்தையும், சரீர பலத்தையும் கருதி செருக்கடைந்து கொண்டி ருந்தான். எனவே முல்லாஜீ மேற்படி வாக்கியத்தைக் கூறி யதும் தனது சட்டைக் கைகளை உயர்த்திக்கொண்டு ஆத்திரத் தோடு சண்டைக்குத் துணிந்தான். முல்லாஜீயைதூக்கி வாறி அப்படியே எறிந்துவிடுவோமென்றும், இங்ஙனம்முல்லாஜீகிழ வர் வீழ்ந்து மூர்ச்சித்து விட்டால் சாவித்திரியை பலவந்தமாக அவ்விடத்தைவிட்டு இழுத்துக் கொண்டு சென்றுவிடலாமென் றும் மனோராஜ்ஜியங்கொண்டுமுல்லாஜீமீது பாய முயன்றான்.

முல்லாஜீ இந்த வாலிபப் பயலின் மூர்க்கத்தனத்தை யுணர்ந்து, ஜாக்கிரதை! ஜாக்கிரதை என்று கூறிக்கொண்டே யிருந்தார். எனினும் அவன் முல்லாஜீ மீது பாய்வதற்கு இரண்டோர் அடி எடுத்து வைத்தான். இதைக் கண்ட முல் லாஜீ, பாலகிருஷ்ணனால் விபரீதம் நேரிடாதிருக்க வேண்டு மென்று துணிந்து அவனிரு கரங்களையும் சிறுபிள்ளையின் கரங்களைப் பிடித்துக் கொள்வதைப்போல் இறுக்கமாய் பிடித் துக் கொண்டார். பாலகிருஷ்ணன் எவ்வளவோ காலையுங் கையும் உதறிக்கொண்டு விடுபட முயன்றான். எனினும் முல்லாஜியின் இரும்புப் பிடியினின்று அவன் ஒரு சிறிதும் தன்னை விடுவித்துக் கொள்ள முடியவில்லை. முல்லாஜீ இந்த சமயத்தில் எண்ணியிருப்பாரானால் பாலகிருஷ்ணனை நல்ல விதமாய் உதைத்து காலந்தமுறுக்கிப் புத்திப் புகட்டியிருப் பார். ஆனால் முல்லாஜீ பெரியார் அவ்வித விபரீதம் புரிய வில்லை. பாலகிருஷ்ணன் முல்லாஜீயின் பிடியைவிட்டும் தன்னை விடுவித்துக்கொள்ள தன் சக்தியையெல்லாம் பிரயோ கித்துப் பிரயாசைப்பட்டதால் அவன் அயர்ந்து விட்டான். எனவே அவன்மீது இரக்கங்கொண்டு தாமே அவன் கரங்களை விட்டு விட்டார். மேலும் கூறலானார்:—

முல்லாஜி:—அப்பா! இவ்வளவு அதிகமாக கோபித்துக் கொள்ளாதே. இரவு நேரம் அதிகமாகி வருகிறது. ஆகவே உங்கள் வீட்டுக்குச் சென்று சுகத்துடன் தூங்கி யெழுங்கள்.

பாலகிருஷ்ணன் தன் சக்தியால் முயன்றும் வயோகிதர் முன்னிலையில் தோல்வி யடைந்ததற்காக வெட்கமடைந்தான். மனினும் அவனது வெட்கத்தோடு ஆத்திரமும்அதிகம்பொங்கிற்று. எனவே அவன் முல்லாஜீயை அவமரியாதை செய்தான். இன்னமும் வாய்க்கு வந்தவாறு திட்டி தூஷிக்கவும் தலைப்பட்டான். மேலும் கூறலானன்:—

பாலகிருஷ்ணன்:—யான் சாவித்திரியைகூட அழைத்துக் கொள்ளாமல்இங்கிருந்துபோகவேமாட்டேன். இனிஎங்களுக்கு இடையில்நீவிர்வந்து ஏதேனும்குறுக்குச்சொல் கூறுவீராயின் உமக்கும் சரியானபுத்திபுகட்டிவிடுவேன். நீஒருமோசக்காரன். ஜனங்களுடைய பெண்களை ஏமாற்றி மோசம் செய்கிறாய்.

முல்லாஜீ:-சிறுவனே! என்னை நீர் இதைவிடகடுமையான சொற்களால் தூஷித்துக் கொண்டாலும் எனக்கொன்றும் கெடுதி ஆய்விடவில்லை. ஆனால் அவசர புத்தியினால் நீர் ஏதேனும் வம்புத் தொல்லையில் அகப்பட்டுக் கொள்ளுவீரே என்று தான் அச்சமாயிருக்கிறது.

அத்தியாயம்—15.

முல்லாஜீ அறையின் விளக்கு மினுக்கு மினுக்கென்று சிறு ஒளி வீசி எரிந்து கொண்டிருந்தது. போாத்திரங் கொண்டிருந்த பாலகிருஷ்ணன் முல்லாஜீ யறையின் தீபத்தை அணைத்துவிட்டு அவ்விருட்டில் புகுந்து சாவித்திரியை பலாத்காரமாய் அவ்வறையை விட்டு வெளியேற்றிக் கொண்டு போய் விட வேண்டுமென்று துணிந்தான். இதில் ஏதேனும் தடங்கல் ஏற்படுமாயின் கூச்சல் போட்டு ஜனங்களை அழைத்தால் மஸ்ஜிதை யடுத்துள்ள தன் வீட்டினின்று ஜனங்கள் துணைக்கு வந்து விடுவார்களென்று எண்ணித்தேறினான்.

இங்ஙனம் ஆலோசனைப் புரிந்து விட்டு உடனே சென்று முல்லாஜீ அறையின் விளக்கை அணைத்து இருட்டாக்கி விட்

டான். இதைக் கண்டதும் முல்லாஜீயவர்கள் வேறு விதமாய் எண்ணிக்கொண்டனர். அதாவது, கோபங்கொண்டபாலகிருஷ்ணன் சாவித்திரியை இன்னும் அதிகமாய் துன்புறுத்துவதற்காகத்தான் விளக்கை நூர்த்திருக்கலாமென்று எண்ணிஞர். பாலகிருஷ்ணன்சாவித்திரியைஅறையைவிட்டும்வெளியேற்றிக் கொண்டுபோய் விடுவதற்குத்தான் அறையின் விளக்கை அணைத்து இருட்டாக்கினன் என்று முல்லாஜீமனத்தில்அச்சமயம்தோன்றவில்லை. அவர்தவருகஎண்ணியபடிபாலகிருஷ்ணன் சாவித்திரியை மேன்மேலும் துன்புறுத்துவானென்றெண்ணி, சாவித்திரியை அத்துன்பத்தினின்று காக்க சாவித்திரி நின்றிருந்தஇடத்துக்கருகே விரைந்து சென்ருர்.

இவ்விருட்டில் சந்தடி செய்யாமல்சாவித்திரியைகொண்டுபோய் விடுவதென்று துணிந்த பாலகிருஷ்ணன் சாவித்திரியின் கரத்தைப் பிடிக்கச் சென்ருர். அதற்குள் முல்லாஜியும் விரைவில் சென்று பாலகிருஷ்ணனுடைய இரு கரங்களையும் இரும்புப் பிடியாய் பிடித்துக் கொண்டனர். உடனே அப்பாலகிருஷ்ணனை தனதறையை விட்டும் வெளியே இழுத்துக் கொண்டு வந்தார். முல்லாஜீயின பிடியை விட்டும் விடுபட்டு தான் எண்ணிய காரியத்தை சாதித்து முடித்து விடவேண்டுமென்று அந்த பாலகிருஷ்ணன் எவ்வளவோ முண்டி முரடி முரட்டுத்தனம் செய்துபார்த்தான். கால் கரங்களை உதரிக்கொண்டான். முல்லாஜீயை தலையாலும் காலாலும் இடித்தும் பார்த்தான். ஒன்றும் அம்முல்லாஜீயின் பால் பலிக்கவில்லை. முல்லாஜீயோ பாலகிருஷ்ணனைப் பிடித்த பிடியை சிறிதும் தளர்விடாமல் வெளியே இழுத்துக் கொண்டு வந்தவுடன், (உள்ளிருந்த) சாவித்திரியின் தாயையும் வெளியே அழைத்துக்கொண்டார். அப்பெரியம்மை வெளியே வந்ததும் முல்லாஜீ சாவித்திரியை தமது அறைக்குள்ளவே விட்டுவைத்து கதவை இழுத்துமூடி கபாடமிட்டு தலைவாயற்படியில் தடையாக நின்றுக்கொண்டார். அவரை அப்புறப்படுத்தி கதவைத்திறந்து உள் செல்வதென்றின் பாலகிருஷ்ணனல் ஒரு சிறிதும் முடியவே முடியாது.

தனது எண்ணம் மண்ணுகி காரியம் விபரீதமாக மாறிய தைக்கண்ட பாலகிருஷ்ணன் செய்வதின்னதென்றறியாணுய் சிறிதுநேரம் ஸ்தம்பித்துநின்ருன். பின்னர் உடனே, "ஆபத்து! ஆபத்து!! துணைக்கு வாருங்கள்! ஓடி வாருங்கள்" என்று கத்தி காது செவிடுபட அபயக்கூச்சல் போட்டான். இப்பேரிரைச்சலைக் கேட்ட அக்கம் பக்கத்திலிருந்த ஹிந்துக்கள் ஏராளமாக வந்து கூடி விட்டனர்.

அம்மஸ்ஜிதைச் சூழ்ந்து நாலுபக்கமும் ஏராளமாக ஹிந்துக்கள் தான் வசித்து வந்தார்கள். இச்சம்பவம் நடந்த காலம் தற்காலத்தைப்போல் சங்கடன் இயக்கமும் ஆரிய சமாஜக் கோஷ்டியினர்களும் பெருத்த குரோத எண்ணமும்விரோதப் பான்மையும்கொண்டிருக்கும்கொடுங்காலமாயிருக்கவில்லை.எங்கேனுமொரு தனி முஸ்லிம் அவ்விந்துகட்கிடையே அகப்பட்டுக்கொண்டால் அவ்வெளியவரை சித்திரவதைச் செய்து கொன்றுப்போட்டு விடுவரோ என்னும் அச்சமுண்டாகும்படியான தற்காலத்தைப்போலு மிருக்கவில்லை. ஆனல்அக்காலமானது முஸ்லிம்களுடைய அரசாக்ஷி நடைபெறும் அமைதி மிகுந்த காலமாயிருந்தது. ஆகவே ஹிந்துக்கள் முஸ்லிம்கள் மீது கை வைக்கவும் துணியாமல் அச்சப்பட்டுக்கொண்டிருந்தனர்.

இங்ஙனம், பாலகிருஷ்ணனுக்கும்முல்லாஜீக்கும்மல்லாட்டம்நிகழ்ந்தஇடத்துக்குவெளியிலிருந்து ஏராளமானஹிந்துக்கள்வந்துகூடிவிட்டார்களெனினும், இங்கு என்னகாரணத்தை முன்னிட்டு விபரீதச் சம்பவம்நிகழ்ந்ததென்பதைவிசாரித்தறிந்து புத்திசாலித்தனமாக அவ்விடத்தை விட்டும் பேசாமல் நழுவிச் சென்று விட்டார்கள்.

பாலகிருஷ்ணன் போட்ட அபயக் கூச்சலைக்கேட்டுஅவனின் மாமனுரான பண்டித ராமகோபாலரும் இவ்விடத்துக்கு வந்து சேர்ந்தார். ஆனல் இவர் பெருந்தன்மைக்காரரானதால் கண்ணியமாய் நடந்துகொண்டார். முல்லாஜீயிடம் அனுமதிப் பெற்றுக் கொண்டு அக்கும்பலில் வந்து சேர்ந்தார். மாமனுர் மஸ்ஜிதுக்குள் வந்துற்றதைக் கண்ட பாலகிருஷ்ணன் அவர் கரங்களைப் பிடித்துக்கொண்டு கண்ணீர் வடித்து அழுதுக்

கொண்டே நடந்தவைகளைக் கூறி முல்லாஜீயின் நடத்தை மீதும் குரோதம் புகட்டினன்.

வைதீக பிராம்மணத் தலைவரான பண்டிதர் இவ்விபரீதத்தை யுணர்ந்து தலையில் இரு குட்டுக்குட்டிக் கொண்டு "சிவ சிவா"என்று மிக வருத்தப்பட்டுக் கூறி, தரை மீதுட்கார்ந்து கொண்டார்.

ராம கோபாலர் சிறிது நேரம் ஒன்றுந் தோன்றாது மௌனமா யிருந்துவிட்டு, பிறகு மனத்தைத் தேற்றிக் கொண்டு, முல்லாஜீயை நோக்கி மிகவினயமாய் "பெரியவரே! உங்கள் இந்தச் சச்சரவில் யானும் குறுக்கிட்டு இரண்டொரு பேச்சுக்கூற தயை கூர்ந்து அனுமதி யளியுங்கள்" என்று கேட்டுக் கொண்டார்.

முல்லாஜீயும் இதற்குச் சம்மதித்துக் கொண்டார். பண்டித ராம கோபாலரிடம் கைலாந்தர் இருந்தமையால் ஆங்கு போதிய வெளிச்சமிருந்தது. எனவேமுல்லாஜீயவர்கள் ராம கோபாலரை அழைத்துக் கொண்டு சாவித்திரி பூட்டப்பட்டிருந்த தமது அறையைத் திறந்தார். தான் உட்செல்லாமல் உள்ள நிலைமையை வந்த பண்டிதரே கண்டுணர்ந்து கொள்ளட்டுமென்று முதலில் லாந்தர் வெளிச்சத்தினூடே அவரையே உள்ளே அனுப்பி வைத்தார்கள். இவர் உள்ளே சென்றார்.

அங்கு அறைக்குள் சாவித்திரி தரையின் மீது படுத்து வீழ்ந்து கிடந்தாள். பாலகிருஷ்ணன் தாக்கியதால் நெற்றியினின்று வழிந்த இரத்தமானது அவளது மிருதுவான கன்னங்கள் மீது வழிந்து உறைந்து போயிருந்தது. சரீரகாயத்தினின்று பெருகிய இரத்தத்தால் அவளது பிடவை இரத்த மயமாய்சிகப்புவர்ணந்தேய்ந்ததேபோல்காணப்பட்டது. இக்காக்ஷிகளையும், சாவித்திரி வலியினால் முணங்கித் தேம்பி யழுதுக் கொண்டிருந்ததையும் ராம கோபாலர் கண்டு திக்பிரமையடைந்தார். பின்னர் சாவித்திரியை நோக்கி கேட்கலானார்:—

ராம கோபாலர்:—புத்திரி! உன்னுடைய நிலைமை என் இப்படி இருக்கின்றது? உன் மீது என் இங்ஙனம் இரத்தம் வழிந்திருக்கின்றது?

சாவித்திரி ராம கோபாலர் வினவிய இச்சப்தத்தைக் கேட்டதும் சட்டென எழுந்து தன் உடலைப் பேணி நல்ல விதமாய் உட்கார்ந்து கொண்டாள்.

தனது கேள்விக்கு பதில் கிடைக்கப் பெருத ராம கோபாலர் சாவித்திரியை நோக்கி மீண்டும் வினவலானுர்:—

ராமகோபாலர்:—சாவித்திரி! இங்கே ஏன் இங்ஙனம் வீழ்ந்து கிடக்கின்ருய்? இந்த நிலைமை உனக்கு எப்போது நிகழ்ந்தது?

சாவித்திரி:—நான் முஸ்லிமாவாகஆய் விட்டேன். உமது புத்திரர் என்னை இவ்வித நிலைமைக்குள்ளாக்கி விட்டார்.

ராமகோபாலர்:—நீ முஸ்லிமாகி விட்டாயா? எப்போது? ஏன் முஸ்லிமானுய்?

சாவித்திரி:—ஆம்! இன்றுதான் முஸ்லிமாகி விட்டேன். நான் முஸ்லிமானதற்குக் காரண மென்னவெனின், "இஸ்லாமானது ஒரு சத்தியமான மதமாகும். அதன் போதனையானது உலகத்தின்கண் நாம் தூய்மையான வாழ்க்கையை மேற்கொள்ளும்படி போதிக்கின்றது. மேலும், இஸ்லாம் கூறுவதாவது, இவ்வெல்லா உலகத்தினையும்சிருஷ்டித்தது ஒரே ஆண்டவன்தானென்றும், அவனுக்கு யாரும் இணை துணைகிடையாதென்றும் இஸ்லாம் போதிக்கின்றது" என்பதாகும்.

ராமகோபாலர்:—அப்படியானுல் ஹிந்து மதம் உண்மையானதில்லையா? ஹிந்து மதத்தில் நீ என்னென்ன தீமைகளைக் கண்டாய்?

சாவித்திரி:—ஹிந்து மதம் சத்தியமானதாயிருந்திருக்குமாயின், யான் இஸ்லாத்தை ஒத்துக்கொண்டிருக்கமாட்டேன். வேதங்களை யான் பன்முறைப்படித்து அதில் பல குறைகளைக் கண்டுள்ளேன். வேததர்மமானது இவ்வுலகத்தில் ஆயிரக் கணக்காகவும், இலக்ஷக்கணக்காகவும் தேவதைகளும் கடவுள்களுமிருக்கிறதென்று கூறுகிறது. இவைகள் நம்மனிதர்களுடையகரத்தினுல்செய்யப்பட்டனவுமாம். அவ்விதக்கற்சிலையின் முன்னிலையில் சிரம் பணிய வேண்டுமென்று வைதிக தர்மம் தான் போதிக்கின்றது. அரச மரத்தை வணங்க வேண்டு

மென்பதும் ஹிந்து மதத்துடைய கொள்கையாகவே யிருக்கின்றது. ஆனால், இஸ்லாம் சன்மார்க்கமானது ஒரே ஆண்டவனுக்குமட்டுமேசிரம்பணிந்து 'ஸிஜ்தா'செய்யவேண்டுமென்று போதிக்கின்றது. இதுதான் பகுத்தறிவுக்கொத்த விஷயமாயிருக்கின்றது. மனிதனுடைய வாழ்க்கை நிலைமையை கவனிப்போமானால், உலகத்திலுள்ள ஒரு அற்ப சொற்ப அரசன் கூட தனது அரசாங்கத்தில் வேறொரு அன்னிய அரசனுடைய ஆதீனத்தை ஒரு சிறிதும் விரும்புவதில்லை யென்பதையும், அப்படியே ஓர் அரசனுக்குரிய அரசாங்கத்தில் வேறொரு அரசனும் ஆதிக்கங்கொள்ள வேண்டுமென்றுத் துணிவானால், இவன் எத்தகைய வனாயிருப்பினும் சுதேச அரசாங்க அரசனுக்கும் இவனுக்கும் கடும் போர்த்தொடுத்து இரண்டில் ஒருவர் தாழ்வுறுகின்றனர் என்பதையும் கண் கூடாகக் காணுகின்றோம். மனித வர்க்க அரசர்களுக்குள்ளவே இங்ஙனம் கூட்டு உதவாதென்று, அரசாங்கவிவகாரத்தில் ஏகாதிபத்தியம் ஏற்பட்டிருக்கும் போது, "எல்லா உலகத்தையும் சிருஷ்டித்து எல்லா வஸ்துக்களின் மீதும் ஆதிக்கம் பெற்றுள்ள மகாப் பெரிய அரசனாகிய ஆண்டவன் தன்னுடைய தெய்வீக அரசாக்ஷியில் லக்ஷக் கணக்கான தேவதைகளாகியவற்றின் கூட்டை ஒத்துக்கொள்வா னென்பதுதான் விந்தையினும் விந்தையாயிருக்கின்றது. ஆகவே ஒரே ஆண்டவனை வணங்கும் சத்திய மார்க்கஇஸ்லாமே உண்மையானதாகும்.

ராமகோபால்:—புத்திரி! இக்காரியத்தில் நீ பெரிதும் அவசரப்பட்டு விட்டாய். நீ முஸ்லிமாவதற்கு முன்னடியாக என்னிடம் நீ அதைப்பற்றி ஆலோசனைக் கேட்டிருந்திருப்பாயாயின் மிக நல்லதாயிருந்திருக்கும்.

சாவித்திரி:--இனி இத்தகைய பேச்சுகளைக் கூறிக்கொண்டிருப்பது வீணேயாகும். நானே மேற்படி விவகாரத்தின் மீது ஆழ்ந்து ஆலோசனை செய்துகொண்ட பின்னரேதான், இஸ்லாம் மதத்தைத் தழுவிக்கொள்ளத் துணிந்து விட்டேன். யோசனையின்றி எக்காரியத்தையும் செய்துவிட வில்லை.

பண்டித ராமகோபாலர், சாவித்திரியின் வார்த்தைகளைக் கேட்டுப்பெரிதும் வியாகூலமடைந்தார். எனவேமனங்குழைந்து முல்லாஜீயின் அவ்வறையை விட்டும் பெருந் தன்மையுடன் வெளிவந்து விட்டார். நேரே பாலகிருஷ்ணனருகில் சென்று அவனை நோக்கி "இனி நாம் அவளிடம் செல்வதும், கேட்பதும்ஒன்றும்பயன்படமாட்டாது. அவள்தன்னுடைய தற்போதிய எண்ணத்தை விட்டுப்பிறழவேமாட்டாள். அதுவுமில்லாமல்;மதம் மாறிஅசுத்தமானவைகளாய் போய்விட்டஅன்னவளை இனி நம் ஆசாரத்தில் சேர்த்துக் கொள்ளுவதென்பதும்கூடாத காரியமாகும். ஆகவே நாம் இனி இங்கு இருப்பதில் பயனில்லை. புறப்படும், வீட்டுக்குப்போவோம். அவளை இன்றோடு கைக்கழுவி தொலைத்து விடுவோம் என்று கூறினர்.

ராமகோபாலர் மிக சடைந்து மனங் குழம்பியவராய் கூறிய இச்சொற்களைக் கேட்ட கணவன் பாலகிருஷ்ணனுடையவும், சாவித்திரியின் தாயுடையவும் கண்களில்நீர்பெருகிற்று. "மதம் மாறியதால் அசுத்தமானவளாய்விட்ட அவளை இனி ஹிந்துதர்மத்தில் சேர்த்துக்கொள்ளமுடியாது" என்றுபண்டித ராமகோபாலர் தீர்மானமாகக் கூறிவிட்டதைக் கருதி கணவன் பாலகிருஷ்ணன் பெரிதும் மனம்உடைந்தவனகி, இனிஎன்ன செய்தும் பயனில்லை. உடைந்துபோன மனத்தைத் தேற்றிக் கொண்டு வீடுபோய் சேர்வது தான் சரியென்று துணிந்தான். ஆனல் அவன் ஒரு விஷயத்தை அவசியமாக எண்ணினன். அதாவது, இராக்காலத்தில் சாவித்திரியை முல்லாஜீயின் அறையில் தனிமையாய் விட்டுச் செல்லக்கூடாதென்பதேயாகும். இவன் இங்ஙனம் ஏதோ விபரீதமாய் எண்ணிக் கொண்டு ஏதோ சொல்ல வாயெடுப்பதற்குமுன், அவனது முகத்தோற்றத்தை கண்டுள்ளத்திலுள்ளதை யுணர்ந்து கொண்ட முல்லாஜிபெரியார், பண்டிதரை நோக்கிப் பின்வருமாறு கூறலானர்:—

முல்லாஜீ:—பண்டிதரே! யான் தங்களிடம் சொற்ப சகாயம் பெற விரும்புகிறேன்.

ராமகோபாலர்:—அதென்ன ?

முல்லாஜீ:—யான் தங்களிடம் கோரிக் கொள்வதாவது, தாங்களும் யானுமாகச் சேர்ந்து இப்போழ்தே சாவித்திரியை எங்களது பைஜ்ஆபாதுக்கு அழைத்துச் சென்று விடுவோம். அங்குள்ள காஜியாருடைய இல்லத்தில் சாவித்திரியை பாது காப்பாக ஒப்படைத்து விட்டு வருவோம். அவரது வீட்டில் பல உத்தமிகளிருப்பதால் சாவித்திரியும் அங்குநல்லவிதமாய்-பாதுகாப்புடன்-இருந்து வருவாள். பிறகு நடக்க வேண்டிய காரியத்தைப் பார்த்துக் கொள்ளுவோம்.

முல்லாஜீ கூறிய இவ்வாலோசனை பண்டிதருக்கு மிகத் திருப்தி யளித்தது. பாலகிருஷ்ணனும், சாவித்திரியின் தாயுங் கூட அவ்வாலோசனைக்கு சம்மதித்துக் கொண்டு, பண்டிதரை நோக்கி, "ஆம்! இங்ஙனம் சாவித்திரியை நம்பிக்கையான ஓர் இடத்தில் பாதுகாப்பாய் வைப்பது அத்தியாவசியமானதே யாகும். ஆகவே இக்காரியத்தை அதிசீக்கிரம் செய்து முடிப் பது நல்லது" என்று மேலும் கூறினார்கள்.

இம்முடிவான ஆலோசனைப்படி காரியஞ் செய்யத்துணிந் தனர். முதலில்சாவித்திரியின் தாயாரை அவரதுவீட்டில்கொண்டு போய்விட்டு வந்தார்கள். பின்னர் பாலகிருஷ்ணன், பண்டி தர், முல்லாஜீ ஆகிய மூவர்களும் ஏகமனதாய் சாவித்திரியை அழைத்துக்கொண்டு பைஜ்ஆபாதுக்குப் புறப்பட்டு விட் டார்கள்.

நிற்க, சாவித்திரியின் தாயார் சாவித்திரியை விட்டுப் பிரிந்து செல்லும்போது அவ்வம்மையின் கண்களினின்று ஜலம் சொட்டிக்கொண்டேயிருந்தது. ஆனால் அவளது நாவி னின்று எத்தகைய வார்த்தையும் சொல்ல முடியாதவளா யிருந்தாள். உண்மையில் அவ்வன்னை சாவித்திரிக்காகவேண்டி அர்ப்பணமாகி விடவும் தயாராக யிருந்தாள். சாவித்திரியோ ஒருபக்கல், தன் சரீரத்திற்பட்ட காயங்களினால் பெரிதும் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தாள். மற்றொரு பக்கல் இவ ளது தாய் மிகவும் துக்கித்து மனமுடைந்து கண்ணீர் விட்டுச் செல்வதைக் கண்டு பெரிதும் சஞ்சலமடைந்தாள்.

முல்லாஜீ, ராமகோபாலர், சாவித்திரி ஆகியோர் டாங்கா குதிரை வண்டியில் ஏறிச்சென்று இரவு 12 மணிக்கு பைஜ் ஆபாத் போய்ச் சேர்ந்தார்கள். போய்ச்சேர்ந்ததும், அங்கர் காஜீசாஹிபுடைய வீட்டுக்குச்சென்று, கண்டுசம்பாஷித்தனர். முல்லாஜீவுக்கு காஜி சாஹிபுடன் நல்ல பரிச்சயமும் நேசமும் உண்டு. எனவே சாவித்திரி இஸ்லாம் மதத்தைத் தழுவிக் கொண்ட வரலாற்றை ஆதிமுதல் அந்தம் வரையில் விபரமாய் கூறிமுடித்தார். பிறகு காஜி சாஹிபை நோக்கி "இனி சொற்பகாலம் வரை சாவித்திரியை உங்கள் சமுகத்திலேயே வைத்திருங்கள். அவளுக்குபரிசுத்தகுர்ஆன்ஷரீபைப்படித்துக் கொடுங்கள்" என்று கூறினர். முதலில் காஜீ சாஹிபவர்கள் சாவித்திரியின்காயங்களுக்குமருந்திட்டுசிகிச்சைசெய்தார். காஜீ சாஹிப் மிகவும் நல்ல சுபாவத்தினரும், ஆண்டவனது பக்தியாளரும், கருணைக் குணமுள்ளவருமான உண்மை முஸ்லிம் பெரியாராவர். மேலும்இக்காஜீசாஹிப்சாவித்திரியைதமதுமனைவிமக்களுள்ள அந்தப்புரத்துக்கு அனுப்பிவைத்தனர். அவளைப் பற்றி யாதொரு விசாரமுமில்லாதிருங்கள் என்று முல்லாஜீ முதலியோருக்கு மனத்தேருதல் கூறி அனுப்பினர்கள்.

அத்தியாயம்—16.

இரவு மணி சுமார் 2 இருக்கும். இப்போது தான் பாலகிருஷ்ணன், ராமகோபாலர், முல்லாஜீ ஆகியவர்கள் அயோத்தியாவுக்குத் திரும்பி வந்து சேர்ந்தார்கள். மேற்படிச் சம்பவமானது பாலகிருஷ்ணனையும், ராமகோபாலரையும் பெரிதும் உறுத்திக் கொண்டிருந்தது. எனவே அன்னோர், பிணத்தைக் கொண்டு போய் புதைத்து விட்டுத் திரும்பி வந்தவர்களேபோல் காணப்பட்டனர். பாலகிருஷ்ணன் இரவு முழுதும் கடுமையான விசாரத்தினல் நல்ல தூக்கமில்லாமல் புரண்டு கொண்டிருந்தான். இதேவிதமாகவே ஆங்கு சாவித்திரியுமிருந்தாள். இரவு கழிந்து பொழுதுவிடிந்தது. எனினும் காலை எட்டுமணி வரைக்கும் பாலகிருஷ்ணன் எழுந்திராமல் படுக்கையிலேயே கிடந்தான். அவனது சரீர அவயவங்களை

ல்லாம் அவனை விட்டுப் பிரிந்து விட்டனவேபோல் அவனுக்குப் புலப்பட்டது. மேலும் அவனை பற்பலவிதமான எண்ணங்கள் உறுத்திக் கொண்டிருந்தன. அவனது மனத்தை விட்டு அமைதியும் சமாதானமும் எடுபட்டுப்போய் விட்டன. சாவித்திரியின் உருவமும், அவள் சம்பந்தமான சர்வசம்பவங்களும் பாலகிருஷ்ணனுடைய மூளையில் ஒன்றன் பின் ஒன்றாய் ("படக்காட்சி"போல்) தோன்றி அவனை பல்விதமான எண்ணங்களுக்குட்படுத்திற்று.

இவ்வாறேதான்சாவித்திரியின்தாயாரும் பல்விதமானமன விசாரத்தில்கிடந்துழன்றனள். பொழுது விடிந்துங்கூட சாவித்திரியின் தாயுடைய மனது உடலைபடுக்கைவிட்டு எழுந்திருக்க விடாமல்ஈர்த்துகொண்டிருந்தது. ஆகவே அவளும்பாலகிருஷ்ணனைப்போல்-பொழுது புலர்ந்து வெகு நேரமாகியும் இழுத்துப் போர்த்திக் கொண்டு படுக்கையிலேயே கிடந்தனள்.

சாவித்திரியின் தங்கையான ஜோத்திரி அதிகாலையிலேயே விழித்தெழுந்து விட்டனள். இவள் எழுந்ததும் குழந்தை கிருஷ்ணனுடைய முகம் கரம் முதலியவற்றைக் கழுவித் துடைத்தனள். கிருஷ்ணனுக்கு வயது மூன்றரை பூர்த்தியாகியிருந்தது. ஆகவே அவன் தாயை நல்ல விதமாய் அறிந்துணரும் அறிவுடைய சிறுபிள்ளையா யிருந்தான். அன்று காலை வீட்டில் தன் தாய் சாவித்திரி இல்லாமையை யுணர்ந்து இக்கிருஷ்ணன் அழுதுப் புலம்பலானான். சிறுமி ஜோத்திரி அக்குழந்தையைத் தேற்றி சமாதானப்படுத்த எம்மட்டோ முயன்றும் அவன் அழாமலிருக்கவில்லை. ஜோத்திரிக்கும், சாவித்திரி எங்கு சென்றாள்? அவளைப்பற்றி என்ன நிகழ்ந்தது? என்பதொன்றும் இதுகாறும் தெரியவேயில்லை. சாவித்திரி இல்லாமைக்காக குழந்தை எவ்வாற்றாலும் சாந்தப்படாமல் அழுது வம்புச் செய்யவே இவள் தாய் அன்னையிடம் சென்று "அக்காள் சாவித்திரி எங்கே அம்மா" என்று கேட்கலானாள். எனவே சாவித்திரியின் தாயார், ஜோத்திரியின் கேள்விக்கு எவ்விதம் பதில் சொல்வதென்று தயங்கினளாயினும், பின்வருமாறு கூறினாள்:—

சா-தாய்:—உனது அக்காள் சாவித்திரி முஸ்லிமாகி விட்டாள். ஆகவே அவள் முஸ்லிம்களுடன் சேர்ந்துப் போய்விட்டாள். இனி அவள் ஒருக்காலும் இவ்விடத்து வரமாட்டாள்.

ஜோத்திரி:—என்ன அது? இனி அக்காள் வரவே மாட்டாளா? அவளது முகத்தை நான் இனி பார்க்கவே முடியாதா? அப்படியானல் குழந்தைக் கிருஷ்ணனை சமாதானப் படுத்தி வளர்ப்பது யார்? இவன் ஒரு சிறிதும் அழுகையை ஓயாது வம்பு செய்கின்றானே, என்றாள்.

சாவித்திரியைப்பற்றி அன்னைகூறிய விபரீதச் சமாச்சாரத்தைகேட்டு ஜோத்திரி பெரிதும் மனசஞ்சலம் அடைந்தாள். அநேகவருடம் அவளுடன் இருந்து விளையாடியதை ஜோதிரி எவ்விதம்சாவித்திரியைமறந்துவிடமுடியும்? யாரேனும் ஒருவர் விதிமுடிந்து மரணித்து விட்டால் சாதாரணமாக மற்றையோர் சிறிது துக்கித்து பொறுமை பூண்டு உலக இயற்கை யென்று இருந்து விடுவர். ஆனல், சாவித்திரியோ அவ்வாறில்லை. இவள் இன்னும்ஜீவித்துக்கொண்டுதானிருக்கிறாள். ஆகவேசாவித்திரியை கைநழுவவிட்டு மறந்து பொறுத்து இருந்துவிடுவதுமுடியாதகாரியமாயிருந்தது. குழந்தை கிருஷ்ணன் அழுதுகொண்டிருந்தது ஒரு பக்கலிருக்க, ஜோத்திரியுடம் குழந்தையைபோலவேவெகு நேரம் வரை அழுதுப் புலம்பிக் கொண்டிருந்தாள்.

இவ்வழுகை சப்தத்தைக் கேட்டு பாலகிருஷ்ணன் தன் படுக்கையை விட்டெழுந்து வந்தான். குழந்தை கிருஷ்ணன் அழுதுக் கொண்டுருப்பதைக் கண்டு மனந்தாளாமல் அக்குழந்தையை தூக்கி மடி மீது இருத்தி சமாதானப்படுத்திக் கொண்டிருந்தான்.

குழந்தை கிருஷ்ணன் முகத் தோற்றத்திலும், உருவ வனப்பிலும் சாவித்திரியின் பிரதிபிம்பமாகவேயிருந்தான். ஆகவே பாலகிருஷ்ணன் இத்தகைய குழந்தை மீது அளவிறந்த வாஞ்சைப் பூண்டிருந்தான். மேலும் பாலகிருஷ்ணன் தன் குழந்தை கிருஷ்ணனின் அழுகையை அடக்கிசமாதானப் படுத்த எம்மட்டோ முயன்றும் பயன் ஒன்றும் ஏற்படவில்லை.

இங்ஙனம் அழுகைக் குரலும், சமாதான முயற்சியின் சப்தமும் போராவாரமாய் விடவே இவ்விரைச்சலைக் கேட்டு பாலகிருஷ்ணனின் தாய், அவனுடைய தங்கை முதலியோரும் விழித்தெழுந்து இங்கு வந்து சேர்ந்து விட்டனர். நடந்த விஷயமென்னவென்று விசாரித்தனர். எனவே ராமகோபாலர், நேற்றிரவு நிகழ்ந்த சம்பவமனைத்தையும் ஒரு கதைப்போல் சொல்லி முடித்தார். ஆனால் அவர்களுடைய குறுகிய-குரோத சுபாவத்திற்கு இலக்காகாத விதமாக பேச்சுகளில் கூட்டுதல்-குறைத்தல் படுத்திக் கூறினர்.

இவற்றைக் கேட்ட பாலகிருஷ்ணனின் தாய் கோபித்தவளாய், "பார்த்தீர்களா! அந்த விஷயமெல்லாம் பைசாச தோஷத்தால் ஏற்பட்டதல்லவென்று முன்னமே யாங்கள் கூறவில்லையா? ஆமாம்! மஸ்ஜிதிலிருந்த முல்லாஜீயின்மேல் அவளுக்கு ஆசை யேற்பட்டுவிட்டது. அதனால் தான் அவள் அவருடன் சேர்ந்துக்கொண்டு வாழ முஸ்லிமாகி விட்டனள். இப்படிப்பட்ட விபரீதம் நேருமென்று யான் எற்கெனவேதெரிந்துகொண்டுதானிருந்தேன். ஆகவேதான் அவள்மேல்மாடிக்குப் போகக் கூடாதென்று தடைசெய்து வந்தேன். நம் மகள் பார்வதிகூட அவளை கண்டித்து எவ்வளவோ புத்திசொல்லி வந்தாள்." என்று கூறினள்.

இங்ஙனம் தாயும் மகளும் கூறத்தொடங்கிய வார்த்தைகளைக்கேட்ட பாலகிருஷ்ணனுக்கு பெருங் கோபம்வந்தது. ஏனெனின், சாவித்திரி கற்புற்ற நன்னடத்தை யுள்ளவளென்பதையும், அவள் தன் மனப்பூர்வமாகவே இஸ்லாம் மதத்தைத் தழுவிக் கொண்டாளென்பதையும், மேலும் குர்ஆனின் பரிசுத்த சக்தியினலேயே அவள் வசியப்பட்டுப்போனளென்பதையும் அவன்நன்கு நிச்சயமாக உணர்ந்திருந்தான். பாலகிருஷ்ணனுடைய தாயுந் தங்கையும் சாவித்திரிமீது தூஷணையாய் கூறிய வஞ்சொற்கள் சாவித்திரியின் தாய்க்குதான் அதிகமான மனவருத்தத்தைக் கொடுத்தது. ஆனல் இச்சந்தர்ப்பமோ அவ்விடத்தில் எதிர்த்து-மறுத்துப் பேசுவதற்கு முடியாததா

கவே யிருந்தது. ஆகவே பாலகிருஷ்ணனும், இவன் மாமியாரும் பதில் சொல்லாமல் மவுனமா யிருந்துவிட்டனர்.

சாவித்திரி முஸ்லிமாகிவிட்ட செய்தியானது வெகு துரிதமாக அவர்களைச் சேர்ந்த சுற்றத்தார்களுக்கெல்லாம் தெரிந்துவிட்டது. இன்னமும் லக்னோவிலிருந்த (சாவித்திரியின்) தகப்பன், சகோதரர் முதலியோருக்கும் தெரிந்துவிட்டது. இச்செய்தியை இவர்கள் கேள்விப்பட்டதும் உடனேபுறப்பட்டு அயோத்தியாவுக்கு வந்து சேர்ந்தனர். இங்கு வந்து சேர்ந்ததும் பாலகிருஷ்ணனையணுகி சாவித்திரியிருக்குமிடத்துக்குச் சென்று அவளைக் கண்டு பேசவேண்டுமென்று தங்கள் விருப்பத்தைத் தெரிவித்துக் கொண்டனர். ஆனால் பாலகிருஷ்ணன் இவர்களுடைய விருப்பத்தைப் பொருட்படுத்தாமல் அலக்ஷியஞ் செய்துவிட்டனர். எனவே இன்னோர் மௌனமாயிருந்து விட்டனன்.

மேலும் சாவித்திரியின் தாய் தனது கணவரை, நோக்கி, தாங்கள் ஜோத்திரியை கூடவே அழைத்துக் கொண்டு செல்லுங்கள், குழந்தை கிருஷ்ணன் சாவித்திரியின் எண்ணத்தைவிட்டு அவளை மறக்கும் வரைக்கும் யான் இங்கு அயோத்தியாவில் இருக்கவேண்டும் என்று கூறினள். இதன்படியே அப்பெரியவரும் தனது இளையகுமாரத்திஜோத்திரியைலக்னோவுக்கு அழைத்துக்கொண்டு போய்விட்டார்.மேலும் குழந்தைக் கிருஷ்ணன் தன் தாயின்மீது கொண்டிருந்த பெருவாஞ்சையினால்அழுதுஅழுதுபெரிதும் இளைத்து நலிந்துவிட்டான். பாலகிருஷ்ணனும் சாவித்திரியைப் பிரிந்தமையால் வியசனம் அதிகரித்தவனாக இருந்தானெனினும் ஒருவிதமான சுயேச்சைப்பெற்றவனாய்காணப்பட்டான். சாவித்திரியின்தாயுடையநிலைமைதான்எல்லாரை விட மிக வருந்தற்குரியதாயிருந்தது. (பெற்றமனம் பித்து, பிள்ளை மனம் கல்லு-எனனும் பழமொழி ஈண்டு நன்கு பொருத்தமாயிருந்தது) சாவித்திரியின் தாய் தன் புதல்வியின் பிரிவாற்றாமையினால் பெரிதும் சஞ்சலமடைந்து இதே வியசனத்தால் மூப்படைந்த கிழவியாய் விட்டாள்.

இது இங்ஙனமிருக்க, பைஜ் ஆபாதில் காஜீ சாஹிபு டைய வீட்டில் சாவித்திரியின் காயங்கட்கு நல்லவிதமாக மரு ந்திட்டு சிகிச்சை செய்யப்பட்டு அது ஆறிக்கொண்டு வந்தது. அவ்வீட்டுப் பெண்கள் சாவித்திரி மீது அதிக நேச விசுவாச முடையவர்களாய், நல்லவிதமான உணவு முதலியன அளித்து திருப்திகரமாய் பாராட்டி வந்தார்கள். அடிக்கடி சாவித்திரி யிடமிருந்து க்ஷேம லாபத்தினை விசாரித்து வேண்டியவற்றை யளித்து சுகம்-துக்கத்தை நன்கு கவனித்துவந்தார்கள். ஆனால் சாவித்திரி, தனது இனபந்து ஜனங்களெல்லோரையும் விட்டுப் பிரிய நேர்ந்ததற்கு பெரிதும் வருந்திக்கொண்டு தானிருந்தாள். மேலும் அவளுடைய உள்ளத்திலும் கண் முன்னும் குழந்தை க்கிருஷ்ணனுடைய சாயலும் தோற்றமும் தான் பிரதி பிம்பித் துக் கொண்டிருந்தன.

நிற்க. காஜீ சாஹிபுடைய வீட்டாரிடம் சாவித்திரி, தனக்கு குர்ஆன் ஷரீபை தாத்பரியத்துடன் கற்பித்துக் கொ டுக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டாள். அவ்வாறே காஜீ சாஹிபுடைய மனைவியார் நம் சாவித்திரிக்கு குர்ஆன் ஷரீபை சிறுகச்சிறுக அருத்தத்துடன் சொல்லிக் கொடுத்துக் கொ ண்டு வந்தனர்.

இவ்விஷயம் இவ்வாறிருக்க, "பண்டித ராமகோபாலரு டைய மருகி-சாவித்திரி-என்பாள் இஸ்லாம் மதத்தைத் தழுவி முஸ்லிமாகி விட்டனள்" என்று கேள்வியுற்ற பைஜ்ஆபாத் முஸ்லிம்களில் அநேகர் இது உண்மைதானா என்பதை விசாரி த்துத் தெரிந்துகொள்ள காஜீ சாஹிபிடம் வந்து விசாரித்து ப்போய் கொண்டிருந்தனர். இன்னமும் சாவித்திரி மிகவும் அழகுடைய சுந்தரியா யிருக்கிறாளென்ற பேச்சு அவ்வூர் ஜன ங்களிடையே உலவிக் கொண்டிருந்தது. எனவே இவற்றினை யுணர்ந்த பைஜ்ஆபாதின் பிரபல முஸ்லிம்தனவந்தக் கனவான் வீட்டுயௌவனப்பிரமுகர்ஒருவர்காஜீசாஹிபையணுகி, "சாவி த்திரி இஸ்லாத்தில் நிகாஹ் செய்துகொள்ள இஷ்டப்பட்டால் அதற்கு தான் தயாராக யிருப்பதாய்" தமது விருப்பத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

இம்முஸ்லிம் பிரமுக வாலிபர்தெரிவித்துக்கொண்ட விருப்பத்தை காஜீ சாஹிபவர்கள் தக்க சந்தர்ப்பத்தில் சாவித்திரியினிடம் தெரிவித்தனர். 'அதற்கு சாவித்திரி சம்மதிக்காதவளாய்இதுசமயம்இவ்வித விஷயத்திற்கு யான்செவி கொடுக்க தயாராகயில்லை என்று ஆக்ஷேபித்து பதில் கூறி விட்டனள். இவ்வாறேலக்னே, அன்னவு, ராயபிரேலிஆகியவூர்களினின்றும் வேறு சில முஸ்லிம் தனவந்தக் கனவான்கள் சாவித்திரியுடன் கலியாணஞ் செய்து கொள்ள இஷ்டப்படுவதாய் தங்கள் விருப்பங்களை காஜீ சாஹிபிடம் தெரிவித்துக் கொண்டனர். இவ்விருப்பங்கள் யாவற்றிற்கும் சாவித்திரியின்சம்மதமின்மையை தெரிவித்து அவ்விஷயத்தில் தமக்கு அதிகாரமில்லை யென்று கூறி யிருந்து விட்டார்.

நிற்க, சாவித்திரியின் சரீரத்தின் காயங்களெல்லாம் ஆறி சொஸ்தமாகி விட்டன. காஜீ சாஹிப் சாவித்திரியை தம் புத்திரியைப்போல் அதிக விசுவாசத்துடன் அக்கரையாய் கவனித்து பரிபாலித்து வந்தமையால், சாவித்திரி தனக்குரிய கவலைகளை யெல்லாம் ஒருவாறு மறந்து சந்தோஷமாகவே வாழ்ந்திருந்து வந்தாள்.

பைஜ்ஆபாத் பிரமுகர் சாவித்திரியை மணந்து கொள்ள முன் வந்த விஷயமும் அவளைப்பற்றிய இரகச் செய்திகளும் நமது பாலகிருஷ்ணனின் செவிக்கும் வந்து எட்டி விட்டது. இதனை யுணர்ந்த பாலகிருஷ்ணன் அடைந்த மனச் சஞ்சலத்துக்கோர் அளவேயில்லை. நிற்க, குழந்தைக் கிருஷ்ணனே சென்ற 15, 20 நாட்களாக அழுதுக்கதறியும்தாயைப்பெருது விசாரததினால் நோய்வாய்ப்பட்டு விட்டனன். இதன் காரணமாகவும் பாலகிருஷ்ணன் தீராச்சஞ்சலமுடையவனானன்.

மேலும்பாலகிருஷ்ணன் தன்உள்ளத்தில்வாஸ்தவமாகவே, இஸ்லாமானது ஓர் உண்மையான சன்மார்க்கம் தானென்பதை நன்கு நிச்சயித்துக்கொண்டு தானிருந்தான். எனவே இவன் நெடுக யோசித்து விட்டு, "தானும் முஸ்லிமாகி சாவித்திரியுடன் போய்ச் சேர்ந்து கொள்ளலாமா?" என்றும் மனத்தில் ஒருவாறு எண்ணினன். ஆனல் பாலகிருஷ்ணன்

இங்ஙனம் துணிந்து மதம் மாறி விடுவானுபின், இவனது பெற்றோர்களுடைய பிதுரார்ஜித சொத்தை இழக்க நேரிடுமே என்றும் எங்கினன். ஏனெனின் இவன் பம்பாயில் புரிந்து வந்த வியாபாரத்தினுல் சொற்பவருவாய்மட்டுமே தான் ஊதிய மாய்கிடைத்துவந்தது. இஃதல்லாமல், இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டு வெளியேறி விடுவதாயின் எல்லா பந்துமித்திரர்களை யும் விட்டும் (பிரஷ்டம் செய்யப்பட்டு) பிரிய வேண்டுமேயென் றும் நெடுக யோசித்துப் பார்த்தான் ஆனுல் குழந்தைக் கிரு ஷ்ணன் "பசு முகங்காணுக் கன்றை"ப்போல் சாவித்திரியின் பிரிவாற்றுமையால் நோய்வாய்பட்டு நலிவதையும், சாவித்திரி யை மணந்து கொள்ள பைஜ் ஆபாத் பிரமுகர் முன்வந்த விஷ யத்தையும் நம் பாலகிருஷ்ணன் எண்ணிப் பார்க்கவே அவன் மனம் குழம்பிற்று. ஆகவேஅவன், காரியம் எவ்வாருயினும் தானும் இஸ்லாமாகி சாவித்திரியுடன் சேர்ந்து வாழ்வதே சரி யென்று முடிவு செய்து கொண்டான். இதற்கிடையே ஒரு சந் தேகமும் அவனது மனத்தை உறுத்தியது. அதாவது, தான் இஸ்லாமகிய பின்னர் சாவித்திரி தன்னுடன் இஸ்லாமாசாரப் படியும் மணந்து கொள்ளமாட்டேன் என்று ஆக்ஷேபித்துவிட் டால் என்ன செய்வது? என்பதே. சின்னுட்கட்கு முன் மூல் லாஜீ அறையில் தான் அவ்வெளிய சாவித்திரியை துன்புறுத் திக் காயப்படுத்தியதற்காக அவள் தன் மீது அடங்காக் கோப மும் விரோதமும் கொண்டிருப்பாள் என்று பாலகிருஷ்ணன் கருதிக் கொண்டிருந்தான். இவ்விதம் பல எண்ணத்தாலும் சமுசயத்தாலும் மனவேதனைப்பட்ட பாலகிருஷ்ணன் நெடுக யோசித்து, சரி! இஸ்லாமாவதற்கு முன்னடியாக சாவித்திரி யைக் கண்டு இவ்விஷயமாய் அவளுடையசம்மதா சம்மதத்தை விசாரித்துணர்ந்து கொள்வதென்ற முடிவுக்கு வந்து ஆறுதல் அடைந்தான்.

இங்ஙனமிருக்க சாவித்திரியின் தாயுடைய தேக, மன நிலைமையோ பாலகிருஷ்ணனுடைய நிலையை விட வெகு திண் டாட்டத்திலிருந்து வந்தது. தன் அருந்தவப் புதல்வியின் பிரிவாற்றுமையினுல் இவ்வம்மை மிகவும் உடல் நலங்குன்றி

ஏக்க முற்றவளானாள். இதுவுமல்லாமல்குழந்தைக் கிருஷ்ண னுடைய ஏமாந்த ஏக்கமுற்ற முகத்தைக்காணுந்தோறும் இவ் வன்னையின் துக்கமும் ஏக்கமும் அதிகரிப்பது வழக்கம். இன் னுஞ் சிலனாள் குழந்தைக் கிருஷ்ணன் தாய்-சாவித்திரியின் முகத்தைப்பார்க்கப் பாக்கியம் பெறாது போவானானால் நிச்சய மாக இக்குழந்தை உலகத்தில் ஜீவித்திருக்க முடியாதென்று அவ்வம்மை நிச்சயங்கொண்டாள்.

இவ்விதமெல்லாம் எண்ணி யெண்ணி மனம் புண்ணான சாவித்திரியின் தாய் ஒரு தினம் மனந்துணிந்து குழந்தை கிருஷ்ணனை இடுப்பில் தூக்கிக் கொண்டு எவருக்குஞ் சொல் லிக்கொள்ளாமல் வீட்டை விட்டும் புறப்பட்டு விட்டாள். எங் குந் தங்காமல் நேரே மஸ்ஜிதுக்குட் போய் முல்லாஜியின் அறையை யணுகினாள். முல்லாஜியைத் தரிசித்து, தன்னு டையவும், குழந்தை கிருஷ்ணனுடையவும், பாலகிருஷ்ணனு டையவும் தற்போதிய சஞ்சலம் நிறைந்த நிலைமையை எடுத்து விளக்கினாள். மேலும் கூறியதாவது:—

சாவி-தாய்,—முல்லாஜி! இஸ்லாத்தைப்பற்றி யான் ஆதி முதலாய் கொண்டுள்ள நன்னம்பிக்கையை தங்கள் முன் எடுத் துக்கூறிவிட விரும்புகிறேன். எனது திடமானநம்பிக்கை யா தெனின், "இஸ்லாமானதுபரிசுத்தமும், சத்திய வாழ்க்கைநீதி யும்நிறைந்த ஒரு சன்மார்க்கமாகும். இங்ஙனமிருந்தும் யான், சில சிக்கலான நிர்ப்பந்தங்களை முன்னிட்டு இஸ்லாத்தைத்தழு விக் கொள்ளாதிருந்து வந்தேன். இப்போழ்தோ, எனதரிய புதல்வி இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டும், எங்கள் நிலைமை யெல்லாம் பெரும் பேதப்பட்டுமுள்ள இனி, சாவித்திரியின் சகவாசமில்லாமல் யான் ஒரு க்ஷணமும் உயிர் வாழ விருப்ப மில்லை. ஆகவே யானும் தங்கள் சமுகத்தில் பரிசுத்த இஸ்லாம் மதத்தைத் தழுவிக்கொள்ள விரும்பித் துணிகின்றேன்."

முல்லாஜீ:—(மிகவும் மனம்பூரித்தவராய்)ஆ! அப்படியா! தாங்கள் மனப்பூர்வமாக இஸ்லாத்தைத் தழுவிக் கொள்ள விரும்புகிறீரா? அல்லது சாவித்திரியின் வாஞ்சையைக் கருதி

யும், கிருஷ்ணனின் க்ஷேமத்தைக் கருதியும் முஸ்லிமாவாக ஆய்விட விரும்புகிறீரா?

சா-தாய்:—பெரியவரே! இஸ்லாம் சத்திய சன்மார்க்கமென்று யான் வெகு நாட்கட்கு முன்னரே தெரிந்துள்ளேன். அதுவுமல்லாமல் சாவித்திரியின் நிலைமையை போலவே இஸ்லாத்தின் தெய்வீக சக்திகள் என்னையும் வசியப்படுத்தியிருக்கிறது. யான் மனப் பூர்வமாய் இஸ்லாத்தை தழுவுவதற்கு இதுவே காரணமாகும். இதில் இதரநன்மையுமில்லாமலில்லை.

முல்லாஜீ இவ்வாக்குறுதியைக் கேட்டு அதிசம் களிப்படைந்தார். உடனே அவ்வம்மையின் விருப்பப்படி பரிசுத்த இஸ்லாத்தின் "கலிமா" கற்றுக் கொடுத்தார். இன்னும் இஸ்லாமிய சம்பந்தமான இதரபல அவசிய மார்க்கச் சட்டங்கள், ஆசார ஒழுக்கங்கள் முதலியவைகளையும் அவ்வம்மையாருக்கு எடுத்தோதினர்.

சாவித்திரியின் தாய் இங்ஙனம் பகிரங்கமாக இஸ்லாத்தைத் தழுவி முஸ்லிமாவாக ஆய்விட்டபின், சாவித்திரியைப் போய் பார்க்க வேண்டுமென்று முல்லாஜீயிடம் வேண்டிக் கொண்டனள். அவ்வாறே முல்லாஜீயும் சம்மதித்து சாவித்திரியின் தாயையும் குழந்தை கிருஷ்ணனையும் அழைத்துக் கொண்டு பைஜ் ஆபாதுக்குச் சென்றார். நேரே இம்மூவரும் பைஜ் ஆபாதுக்குப் போய் சேர்ந்து, காஜீ வீட்டுக்குட் சென்றனர். சாவித்திரி தனது தாயையும் அன்புருவான குழந்தைக் கிருஷ்ணனையும் கண்டு அடைந்த ஆனந்தத்திற்கும் அடைந்த குதூகலத்துக்கும் அளவேயில்லை. எல்லா சந்துஷ்டியைவிட தன் தாயும் இஸ்லாத்தில் சேர்ந்து கொண்டது தான் அவளுக்கு பேரின்பத்தை யளித்தது.

இச்சம்பவம் இங்ஙனம் சுபமாய்முடிந்தது. ஆனால்அயோத்தியாவில் பாலகிருஷ்ணனோசாவித்திரியின் தாயையும்குழந்தை கிருஷ்ணனையும காணமல் முதலில் ஏதோஎண்ணிக்கொண்டு, வெளியில்சென்றவர் வரக்கூடும்என்று வெகு நேரம் காத்திருந்தான். எண்ணமெல்லாம் வீணாயிற்று. உடனே அவனுளளத்தில்வேறோர் எண்ணம் உதித்தது. தன் மாமிகுழந்தையை தூக்

இக்கொண்டு முல்லாஜீயிடம்தான் சென்றிருக்கக் கூடுமென்ற முடிவுக்குவந்து, இவனும் வெளியிற் புறப்பட்டான்.

பாலகிருஷ்ணன் நேரே மஸ்ஜிதுக்குட் சென்ருர். அங்கு முல்லாஜீ ஆஜரா யிருந்தனர். அவரிடம், தனது மாமியும் குழந்தைக்கிருஷ்ணனும்எங்கே?என்று வினவினன். முல்லாஜீ அவர்கள், நடந்த விருத்தாந்த மனைத்தையும் கூறி, சாவித்திரி யின் தாயும் மனப்பூர்வமாய் இஸ்லாத்தைத் தழுவிக்கொண்ட தையும், இவர்கள் தம்மால் சாவித்திரியிடம் கொண்டுபோய் விடப்பட்டதையும் விபரமாய் கூறிவிட்டார்.

பாலகிருஷ்ணன் தானும் இஸ்லாத்திற் சேர்ந்துகொள்வ தற்கு மாமியாருடையவும், குழந்தையுடையவும் சம்பவத்தை ஓர் ஆதாரமாகக் கொண்டான். மேலும் தானும் இஸ்லாத்தைத் தழுவிக் கொள்வதென்று முடிவு செய்தான். இனி தன்னை மணந்துகொள்ள சாவித்திரி யாதொரு ஆக்ஷேபனையுங் கிளத் தமாட்டாளென்று திடமாய் நம்பினன். இவ்வாறெல்லாம் முடிவுசெய்து, முல்லாஜீயை நோக்கி:—

பாலகிருஷ்ணன்:—பெரியீரே! யான் மனப்பூர்வமாக இஸ்லாம் மதத்தைத் தழுவிக் கொள்ளுகிறேன். பிறகு யான் சாவித்திரியுடனும், குழந்தையுடனும் ஒன்றுசேர்ந்து ஏககுடும் பமாயிருக்க தாங்கள் உதவி செய்வீர்களா என வினவுகிறேன்.

முல்லாஜீ:—அன்பரே! உமக்கு எத்தகைய கவலையும் வேண்டாம். சாவித்திரியின் நிக்காஹ் உம்முடனேயே நிச்சய மாய் நிறைவேறுமென்று யான் சாவித்திரியின் சார்பாக உ றுதி கூறுகிறேன். பைஜ் ஆபாதில் பற்பல பிரமுகர்கள் மண ந்துகொள்ள முன்வந்தும் சாவித்திரி உதாசீனம் செய்துவிட் டாள். அப்பாக்கியம் உனக்கே கிடைக்குமென்பது முக்காலும் திண்ணம். இஸ்லாத்தைத் தழுவிக் கொள்ளும் விஷயத்தில் நீ வீர் மாறுபடுவீராயின் உமது உயிருள்ளளவும் சாவித்திரியை இனிபார்க்க பேறுபெற மாட்டீரென்பது திண்ணம்.

இம்முடிவான பேச்சைக் கேட்ட பாலகிருஷ்ணன் மௌனமாகி ஒரு நிமிஷ நேரம் யோசித்து ஏதோ முடிவு செய்து கொண்டு, முல்லாஜீயிடம் சிறிது நேரத்திற்கு விடை

பெற்றுக்கொண்டு அவ்விடத்தைவிட்டு வீட்டை நோக்கி துரிதமாய் சென்றான்.

வீட்டுக்கு வந்ததும் தன் பெற்றோர், உடன் பிறந்தாள் ஆகிய யாவருக்கும் தெரிவிக்காமல், தனக்குசொந்தமான நகைகள், ரொக்கப் பணம், பாண்டு பத்திரங்கள் ஆகியவைகளை தன் கைவசப்படுத்திக் கொண்டு மீண்டும் முல்லாஜீ சமுகத்தை வந்து நண்ணினன். பாலகிருஷ்ணன் முல்லாஜீ எதிரில் மிகக் களிப்படைந்தவனாய் பிரவேசித்து, "பெரியீர்!என்னையும் உடனே முஸ்லிமாக்கிக் கொள்ளுங்கள்" என்று கோரிக் கொண்டான். அவனது மனப் பூர்வமான விருப்பப்படியே முல்லாஜீயவர்கள் பாலகிருஷ்ணனுக்கும் இஸ்லாத்தின் பரிசுத்த கலிமாவை சொல்லிக் கொடுத்து முஸ்லிமாக்கி விட்டனர். மேலும் இஸ்லாத்தின் சட்ட திட்ட போதனையும் விரித்துப் புகட்டினார்.

பாலகிருஷ்ணன் சிறிதும் தாமதிக்காமல் உடனே தன்னையும் பைஜ் ஆபாதுக்கு அழைத்துச் சென்று தன் மனைவி, மாமியாருக்கு அறிமுகப்படுத்தி வைக்க வேண்டுமென்று முல்லாஜீயிடம் வேண்டிக் கொண்டான். அவன் விருப்பப்படியே முல்லாஜீ பைஜ் ஆபாதுக்கு அழைத்துச் சென்று காஜீயார்வீட்டிலிருந்த சாவித்திரிக்கும்,அவளது தாயுக்கும் 'பால கிருஷ்ணனும் மனமுவந்து இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டான்' என்ற சுபச் செய்தியை தெரிவித்தனர். இம்மங்களச் செய்தியை கேள்வியுற்ற சாவித்திரி பன்னாளாய் தான் வேண்டிய பாக்கியம் தனக்குக் கிடைத்து விட்டதென என்றுமில்லாப் பூரிப்பும் குதூகலமுமடைந்து சந்தோஷத்தை அடக்கமாட்டாது ஆனந்தப் பாஷ்பமும் சொரிந்தனள். என்றேனும் ஒருநாளைக்கு தன் கணவன் பாலகிருஷ்ணனும் இஸ்லாத்தைத்தழுவி முஸ்லிமாகியே வருவாரென்ற திடஎண்ணங் கொண்டுதான், நம் சாவித்திரி எந்த முஸ்லிம் பிரமுகரையும் மணந்துகொள்ள ஒருப்படாது பொறுத்திருந்தனள் போலும்! என்னே அப்பெண்ணின் நற்பாக்கியம்!! அல்ஹம்து லில்லாஹ்!!!

அயோத்தியாவின் பிரபல பிராம்பணக் குடும்பத்தினரில் சிறந்து விளங்கிய பிரதமஸ்தர்கள் மனமுவந்து இஸ்லாத்தைத் தழுவிக்கொண்ட விஷயம் பைஜாபாதின் ஒவ்வொரு பிரஜை யுடையவும் வாய்ப் பேச்சாயிருந்துவந்தது. இதையொட்டி நன்கு தீர்க்காலோசனை செய்துபார்த்த ஹிந்துவர்க்க அறிஞர் கள் பலர் இஸ்லாத்தின் சத்தியத்தையும், உண்மையையும் ஒரு வாறு உணர்ந்து கொள்ளலாயினர். பொதுவாக பைஜ் ஆபா த், அயோத்தியா ஆகிய இரு இடத்து ஹிந்துக் குடிகளின் உள்ளத்தில் இஸ்லாத்தைப்பற்றியகண்ணியமும் மதிப்பும்ஜனி த்திருந்தது.

இன்னமும்முஸ்லிமாகிவிட்ட தம்பதிகளையும்வேறுநிகழ்ச்சி யையும் காணுவதற்காகவென்று பொதுஜனங்கள் கூட்டங்கூட் டமாக காஜீ சாஹிபுடைய வீட்டுக்குவந்து கூடியிருந்து செல் வதாயினர். இங்ஙனம் தினமும் கூட்டங் கூடுவதும் கலைவது மாயிருந்தது. ஜனங்களின் போவலைக் கவனித்த காஜீ சாஹிபவர்கள் ஒருநாள் பொதுஜனங்கள் முன்னிலையில் வந்து பெருந் தொனியில் பகிரங்கமாக கூறியதாவது:— "அன்பர்களே! பரிசுத்த இஸ்லாம் மதத்தைத் தழுவிக் கொண்டு முஸ்லிமாகி விட்ட சாவித்திரி-அதாவது-தற்போது "ஸாலிஹா" என அழைக்கப்படும் நங்கைக்கும், அவளது பழைய கணவரான பாலகிருஷ்ணன்-அதாவது, "பண்டித அப் துர் ரஹ்மான்"என்று அழைக்கப்படும் கனவானுக்கும் இன்று மாலை எனது கிரகத்தில் பகிரங்கமாக இஸ்லாமிய ஆசாரப்படி புதிய விவாகம் நடைபெறப்போகின்றது. அதுசமயம் நீங்க ளெல்லோரும் அக்காக்ஷியை கண்டு களிக்கலாம்" என்ப தாகும்.

மேற்படி காஜீ சாஹிபின் அறிக்கை நகர் முழுதும் வியாபித்து விட்டது. அன்று மாலை காஜீ சாஹிபின் பெரிய வீட்டின் விசாலமான முற்றத்தில் ஆயிரக்கணக்கான ஜனங் கள் ஏராளமாக ஹிந்துக்களும் முஸ்லிம்களுமாய் வந்துகுழு மிவிட்டனர். குறிப்பிட்ட நேரத்தில் அச்சபை நடுவே அமை க்கப்பட்டிருந்த தனி இடத்துக்கு ஸாலிஹா, அப்துர் ரஹ்

மான், ஸாலிஹாவின் தாய் ஆகியோர் விஜயம் செய்திருந்த னர். இந் நவ் முஸ்லிம் மாதுசிரோன்மணி இஸ்லாமிய கோஷா முறைப்படி நிறைந்த முகமூடி அணிந்து கொண்டு சபை நடுவே நின்று "நான் என் முஸ்லிமானேன்?" என்பதுபற்றி இஸ்லாத்தின் சத்தியம், குர் ஆனின் தெய்வ சக்தி, இஸ்லாத் தின் சிறப்பு, உயர்போதனை, வசீகரம் ஆகியவைகளைப்பற்றி இனியதொரு அரியசொற்பொழிவாற்றி ஜனங்களை மகிழ்வு றச் செய்தனள். பின்னர் அச்சபையின்கண் காஜிசாஹிபால் நிகாஹ் முடித்து வைக்கப்பட்டது. பொதுஜனங்கள் நவ்முஸ் லிம் தம்பதிகளையும் இதரர்களையும் மனமார வாயார வாழ்த்தி ஆசீர்வதித்தனர். இறுதியில் "அல்லாஹு அக்பர்! இஸ் லாம் வாழ்க!! நவ் முஸ்லிம் தம்பதியர் நீடூழிவாழ்க! வல்லாஹு அக்பர்!" என்ற பேராரவார சந்தோஷக் கோஷத்தோடு அக் கூட்டம் இனிது கலைந்தது.

முற்றிற்று.

" ஸைபுல் இஸ்லாம் "

வார இருமுறைப் பத்திரிகை

நண்பர்காள் !

" ஸைபுல் இஸ்லாம் பத்திரிகையானது 1910-ம் ஆண்டு முதல் நம் மார்க்கத்திற்கு ஒப்பற்ற தொண்டாற்றி வருவதோடு, முஸ்லிம் சமூகம், கல்வி, கைத் தொழில், வியாபாரம் முதலிய துறைகளிலும் தேசிய ராஜீயத் துறைகளிலும் முன்னேற்றமடைவதற்கு அரும்பாடுபட்டு வருகிறதென்பதை எவரே மறுக்க வல்லார்? மக்கா, மதீனா, துருக்கி, ஈரான், ஆப்கானிஸ்தான் முதலிய முழு இஸ்லாம் உலக உண்மைச் சமாச்சாரங்களையும் இஸ்லாம் மார்க்க நற்போதனைகளையும் "ஸைபுல் இஸ்லாத்"தில் காணலாம். ஐரோப்பா, அமெரிக்கா முதலிய மேல் நாடுகளுடையவும் இந்தியா சிலோன் முதலிய உள்நாடுகளுடையவும் புதிய சமாச்சாரங்களையும் தேசிய ராஜீய விஷய விபரங்களையும் வியாபார நிலவரம் முதலிய விபரங்களையும் ஸைபுல் இஸ்லாத்தின் மூலமாக அறியலாம்.

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாடுகளுக்கு

1 வருஷத்திற்கு	ரூ.	10	0	0
6 மாதத்திற்கு	,,	5	8	0
3 மாதத்திற்கு	,,	3	0	0
சென்னைக்கு தனி பிரதி		0	1	0

சிங்கப்பூர், பினாங்கு முதலிய வெளி நாடுகளுக்கு

1 வருஷத்திற்கு	ரூ.	12	0	0
6 மாதத்திற்கு	ரூ.	6	8	0

ஹஜ்ஜு யாத்திரை

இந்நால் "ஸைபுல் இஸ்லாம்" பத்திரிகை ஆசிரியர் அவர் தமிழ் பாஷை தெரிந்த ஹஜ்ஜு யாத்திரைகளின் நன் யக் கருதி இயற்றப்பெற்றது. இந்நாலில் ரயில்,கப்பல் ணம் செய்யவேண்டிய ஜாக்கிரதைப்பற்றியும் ஹஜ்ஜு திரையின் செலவு விபரங்களைப்பற்றியும் ஹாஜிகள் ஹஜ் உமரா முதலிய கடமைகளை நிறைவேற்றுவதிலுள்ள லு, வாஜிபு, சுன்னத்து, முஸ்தஹபு, ஹராம், மக்ருஹு தலிய சகல ஹுக்முகளும் ஒவ்வொரு புண்ணிய ஸ்தலங் ளிலும் ஓதவேண்டிய துஆக்களும் விபரமாகக் கூறப்பட்டுள் ன.

இதன் கிரயம் 4 அணு.

வஸியத்லா

இந்நால் "ஸைபுல் இஸ்லாம்" பத்திரிகையாசிரியர் அவர் களால் இயற்றப்பெற்றது. இதில் ஒவ்வொரு முஸ்லிமும் தனது அந்திய காலத்தில் தனக்குப்பின் வார்ஸீன்கள் நடந்து கொள்ளவேண்டிய விஷயங்களாகவும் சொத்துக்களைச் செய்ய வேண்டிய விஷயமாகவும் வார்ஸின்களுக்கு சொல்ல வேண்டிய சகல விபரங்களும் கூறப்பட்டுள்ளன. தனது ஜீவிய காலத்தில் செய்ய தவறிப்போன ஹஜ்ஜு தொழுகை, நோன்பு, ஸக்காத்து முதலியவைகளுக்கு அவன் செய்ய வேண்டிய வஸியத் விபரமும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் கண்டுள்ள சட்ட திட்டங்கள்படி வஸியத்து செய்யவே ண்டியது ஒவ்வொரு முஸ்லிம் மீதும் கடமையாகும்.

இதன் கிரயம் 3 அணு.

ஸைபுல் இஸ்லாம் புக் டிபோ

நமது புக் டிபோவில் இஸ்லாமிய நூல்களும் இதர சக புத்தகங்களும் கிடைக்கும் விபரம் தெரிய விரும்புகிறவர்க ஒரு அணுஸ்டாம்பு அனுப்பி நமது புக் கேட்லாக்கை தரு த்[illegible]த்துகொள்ளலாம்.

இப்படிக்கு
மானேஜர்.
ஸைபுல் இஸ்லாம். புக் டிபோ
சென்